
# 2004 அவ்யக்த முரளி



<u>பொருளடக்கம் - 10</u>

**18.01.2004** உலகிற்கு அதிகாரியாக விளங்குபவரின் நேரடிக் குழந்தை -இந்த நினைவில் இருந்து சர்வ சக்திகளையும் கட்டளைப்படி நடத்துங்கள்!

**02.02.2004** மூதாதையர் (பூர்வஜ்) மற்றும் பூஜைக்குரியவர் (பூஜ்ய) என்ற சுவமானத்தில் இருந்து உலகத்தின் ஒவ்வொரு ஆத்மாவையும் பாலனை செய்யவும், ஆசீர்வாதம் கொடுத்து ஆசீர்வாதம் எடுக்கவும்!

**17.02.2004** சிவராத்திரி பிறந்த நாள் உற்சவத்தின் விசேஷ சுலோகம் -அனைவருக்கும் சகயோகம் (ஒத்துழைப்பு) கொடுங்கள் மேலும் சகயோகியாக மாற்றுங்கள். அகண்ட பண்டாரா (யக்ஞம்) தொடர்ந்து நடந்து கொண்டிருக்கட்டும்!

**05.03.2004** பலவீனமான சம்ஸ்காரங்களுக்கு, ஈமச்சடங்கு செய்து முடித்து, உண்மையான ஹோலிப் பண்டிகை கொண்டாடுங்கள், அப்போது தான் உலக மாற்றம் உண்டாகும்!

**20.03.2004** இந்த ஆண்டை விசேஷ ஜீவன் முக்தி ஆண்டாக கொண்டாடுங்கள். ஒற்றுமை மற்றும் மனதை

ஒருமுகப்படுத்துவதன் மூலம் தந்தையை பிரத்யக்ஷம் செய்யுங்கள்!

**15.10.2004** ஒருவரைப் பிரத்யக்ஷம் செய்வதற்காக, ஏக்ரஸ் ஸ்திதியில் இருங்கள். ஸ்வமானில் இருங்கள். எல்லோருக்கும் மரியாதை கொடுங்கள்!

**02.11.2004** சுயம் உபகாரியாகி, அபகாரம் செய்பவர்களுக்கும் உபகாரம் செய்யுங்கள். சர்வ சக்தி, சர்வ குணம் நிறைந்தவராகி, மரியாதை வள்ளல் ஆகுங்கள்!

**30.11.2004** இப்போது தன்னுடைய நடத்தை மற்றும் முகம் மூலம் பிரம்மாபாபா சமான், அவ்யக்த ரூபத்தை காண்பியுங்கள், சாக்ஷாத்தார் மூரத் ஆகுங்கள்!

**15.12.2004** பாப்தாதாவின் விசேஷ விருப்பம் -ஒவ்வொரு குழந்தையும் ஆசீர்வாதம் கொடுக்க வேண்டும் மேலும் ஆசீர்வாதம் பெற வேண்டும்!

**31.12.2004** இந்த ஆண்டு ஆரம்பத்திலிருந்தே, 'பேகத்' (எல்லையற்ற) வைராக்கிய விருத்தியை எழுச்சியுறச் செய்யுங்கள். இது தான் முக்திதாமின், நுழைவு வாயிற்கதவைத் திறக்கும் சாவியாகும்!

ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

# 18.01.2004 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# உலகிற்கு அதிகாரியாக விளங்குபவரின் நேரடிக் குழந்தை -இந்த நினைவில் இருந்து சர்வ சக்திகளையும் கட்டளைப்படி நடத்துங்கள்!

இன்று நாலாபுறங்களிலும் உள்ள அனைத்து குழந்தைகள் அன்பு அலைகளில் மூழ்கியிருக்கின்றனர். அனைத்து குழந்தைகளின் உள்ளத்தில் விசேஷமாக பிரம்மாபாபாவின் நினைவு இருக்கின்றது. அமிர்தவேளையிலிருந்து -சாகார பாலனை அடைந்த ரத்தினங்கள் மற்றும் அலௌகீக பாலனை அடைந்து கொண்டிருக்கும் ரத்தினங்கள் -இருவரின் உள்ளப்பூர்வமான நினைவின் மாலைகள் பாப்தாதாவிடம் வந்து சேர்ந்து விட்டது. அனைவரின் உள்ளத்தில் பாப்தாதாவின் நினைவு என்ற சித்திரம் தென்பட்டுக் கொண்டிருக்கிறது மேலும் தந்தையின் உள்ளத்தில் அனைத்து குழந்தைகளின் அன்பு நிறைந்த உள்ளம் நிறைந்திருக்கிறது. அனைவரின் உள்ளத்திலிருந்து அன்பு நிறைந்த ஒரே பாட்டு ஒலித்துக் கொண்டிருக்கிறது -என்னுடைய பாபா! தந்தையின் உள்ளத்தில் என்னுடைய இனிமையிலும் இனிமையான குழந்தைகள் என்ற பாட்டு தான் ஒலித்துக் கொண்டிருக்கிறது. தானாக ஒலித்துக் கொண்டிருக்கும் இந்த எல்லையற்ற பாட்டு எவ்வளவு பிரியமானதாக இருக்கிறது! நாலா புறங்களிலும் உள்ள குழந்தைகளின் அன்பு நிறைந்த நினைவிற்கு கைமாறாக பாப்தாதா உள்ளப்பூர்வ அன்பு நிறைந்த ஆசீர்வாதம் பல மடங்கு கொடுத்துக் கொண்டிருக்கின்றார்.

இப்பொழுதும் உள்நாட்டில் மற்றும் அயல்நாட்டில் குழந்தைகள் அன்புக்கடலில் மூழ்கியிருப்பதை பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கின்றார். இந்த நினைவு நாள் விசேஷமாக அனைத்து குழந்தைகளையும் சக்திசாலியாக ஆக்கக் கூடிய நாளாகும். இன்றைய

நாள் பிரம்மாபாபாவின் மூலம் குழந்தைகளுக்கு முடிசூட்டும் நாளாகும். பிரம்மாபாபா குழந்தைகளை நிமித்தமாக உலக சேவைக்கான பொறுப்பு கிரீடம் அணிவித்தார். சுயம் குப்தமாக ஆகி, சாகார சொரூபத்தில் குழந்தைகளை நிமித்தமாக ஆக்கி நினைவு என்ற திலகம் இட்டார். தனக்குச் சமம் அவ்யக்த ஃபரிஸ்தா சொரூபத்தின், ஒளிக் கிரீடத்தை அணிவித்தார். சுயம் செய்விப்பவராக ஆகி குழந்தைகளை செய்யக் கூடியவராக ஆக்கினார். ஆகையால் இந்த நாள் நினைவு நாள் மற்றும் சக்திசாலியான நாள் என்று கூறப்படுகிறது. நினைவு மட்டுமின்றி நினைவின் கூடவே சர்வ சக்திகளையும் குழந்தைகள் வரதானமாக அடைந்திருக்கின்றனர். பாப்தாதா அனைத்து குழந்தைகளின் அனைத்து நினைவு சொரூபத்தை பார்த்துக் கொண்டிருக்கின்றார். மாஸ்டர் சர்வ சக்திவான் சொரூபத்தை பார்த்துக் கொண்டிருக்கின்றார், சக்திவானாக அல்ல, சர்வ சக்திவானாக! இந்த சர்வ சக்திகள் தந்தையின் மூலம் ஒவ்வொரு குழந்தைக்கும் வரதானமாக கிடைத்திருக்கின்றது. தெய்வீக பிறப்பு எடுத்தவுடனேயே சர்வ சக்திவான் பவ என்ற வரதானம் பாப்தாதா கொடுத்து விட்டார். இது ஒவ்வொரு பிறந்த நாளுக்கான வரதானமாகும். அடைந்த இந்த சக்திகளை வரதானத்தின் ரூபத்தில் காரியத்தில் பயன்படுத்துங்கள். ஒவ்வொரு குழந்தைக்கும் கிடைத்திருக்கிறது ஆனால் காரியத்தில் பயன்படுத்துவதில் வரிசைக்கிரமம் ஏற்பட்டு விடுகிறது. ஒவ்வொரு சக்தியின் வரதானத்தை நேரத்திற்கு தகுந்தாற் போன்று கட்டளையிடுங்கள். வரதாதாவின் வரதானத்தின் நினைவு சொரூபமாக ஆகி நேரத்திற்கு தகுந்த போன்று எந்த ஒரு சக்தியையும் கட்டளையிட்டால், ஒவ்வொரு சக்தியும் ஆஜார் ஆகியேத் தீரும். அடைந்த வரதானங்களுக்கு அதிகாரி என்ற நினைவு சொரூபத்திலிருந்து நீங்கள் கட்டளையிட்டு, சக்தி தகுந்த நேரத்தில் காரியத்தில் பயன்படவில்லை -இவ்வாறு இருக்கவே முடியாது ஆனால் அதிகாரி, மாஸ்டர் சர்வ சக்திவான் என்ற இருக்கையில் செட் ஆகியிருக்க வேண்டும். இருக்கையில் செட் ஆகாமல் யாரும் கேட்க மாட்டார்கள். பாபா, நாம் உங்களை நினைவு செய்யும் போது நீங்கள் ஆயிரம் மடங்காக ஆகி விடுகிறீர்கள். நீங்கள் என் முன் ஆஜராகி விடுகிறீர்கள் என்று குழந்தைகள் கூறுகிறீர்கள். பகவானே ஆஜராகி விடும் பொழுது சக்திகள் ஏன் ஆஜராக முடியாது! விதிப்படி ஆதிகாரியாக ஆகி கட்டளையிடுங்கள், போதும். இந்த சர்வ சக்திகள் சங்கம யுகத்தில் பரமாத்மாவின் விசேஷ சொத்தாகும். சொத்து

யாருக்காக இருக்கிறது? குழந்தைகளுக்காகத் தான் சொத்துக்கள் இருக்கிறது. எனவே அதிகாரியாக நினைவு சொரூபத்தின் இருக்கையில் இருந்து கட்டளையிடுங்கள். ஏன் கடின உழைப்பு செய்ய வேண்டும். கட்டளையிடுங்கள். உலகிற்கு அதிகாரியாக விளங்குபவரின் நேரடிக் குழந்தையாக இருக்கின்றேன் -இந்த நினைவிற்கான போதை சதா வெளிப்படையான முறையில் இருக்க வேண்டும். உலகில் சர்வ வல்லமை படைத்தவரின் அதிகாரி ஆத்மா என்ற நினைவு இயற்கையாகவே இருக்கிறதா? என்று தனக்குத்தானே சோதனை செய்யுங்கள். இருக்கிறதா? அல்லது அவ்வப்பொழுது இருக்கிறதா? இன்றைய நாட்களில் அதிகாரம் அடைவதில் தான் சண்டை போட்டுக் கொள்கின்றனர் ஆனால் உங்கள் அனைவருக்கும் பரமாத்ம அதிகாரம், பரமாத்ம சக்திகள் பிறப்பு எடுத்த உடனேயே கிடைத்து விட்டது. எனவே தனது அதிகாரத்தின் சக்திகளில் நிலைத்திருங்கள். தானும் சக்திசாலியாக இருக்க வேண்டும் மேலும் அனைத்து ஆக்மாக்களுக்கும் சக்தி கொடுங்கள். இந்த நேரத்தில் அனைத்து ஆத்மாக்களும் சக்திகளை யாசித்துக் கொண்டிருக்கின்றனர். உங்களது ஜடச் சித்திரத்திற்கு முன் சென்று யாசித்துக் கொண்டிருக்கின்றனர். ஆக தந்தை கூறுகின்றார் -ஹே சக்திசாலி ஆத்மாக்களே! அனைத்து ஆத்மாக்களுக்கும் சக்தி கொடுங்கள், பலம் கொடுங்கள். இதற்கு ஒரே ஒரு விசயத்தில் மட்டும் ஒவ்வொரு குழந்தையும் கவனம் செலுத்துவது அவசியமாகும் -அதைப் பற்றி பாப்தாதா தூண்டுதலும் கொடுத்திருக்கின்றார். பாப்தாதா ரிசல்ட் பார்க்கின்ற பொழுது அதிகபட்ச குழந்தைகளின் சங்கல்பம் மற்றும் நேரம் வீணாகிக் கொண்டிருக்கிறது. எவ்வாறு மின்சார வயர் சிறிது லூசாக இருந்தால் லைட் சரியாக எரியாது. ஆக இந்த வீண் ஆக்குவது என்ற லீக்கேஜ் சக்திசாலி ஸ்திதியை சதா காலம் நிலைத்திருக்க விடுவது கிடையாது. ஆகையால் வீணானவைகளை (வேஸ்ட்) நல்லதாக (பெஸ்ட்) மாற்றுங்கள். பட்ஜெட் உருவாக்குங்கள்- முழு நாளும் எவ்வளவு வீணாகியிருக்கிறது? எவ்வளவு பயனுள்ளதாக ஆகியிருக்கிறது? 40 சதவிகிதம் வீணாகியிருக்கிறது, 20 சதவிகிதம் வீணாகியிருக்கிறது எனில் அதை சேமியுங்கள். சிறிது தானே வீணாகிறது, மற்ற அனைத்தும் சரியாக இருக்கிறது என்று நினைக்காதீர்கள். வீண் ஆக்கக் கூடிய இந்த பழக்கம், நீண்ட கால பழக்கமாக இருக்கின்ற காரணத்தினால் கடைசி நேரத்தில் ஏமாற்றி

விடும். வரிசைக்கிரமமாக ஆக்கி விடும். நம்பர்-1 ஆக விடாது. ஆதியில் பிரம்மாபாபா சுய சோதனை செய்யும் பொருட்டு தினமும் இரவில் சபை (தர்பார்) கூட்டினார். எந்த தர்பார்? குழந்தைகளின் சபை அல்ல, தனது கர்மேந்திரியங்களின் சபையை கூட்டினார். கட்டளையிட்டார் -ஹே மனமே! முக்கிய மந்திரியே! உனது இந்த நடத்தை சரியில்லை. கட்டளைப்படி நடந்து கொள். ஹே சன்ஸ்கார், கட்டளைப்படி நடந்து கொள். ஏன் ஏற்ற இறக்கம் ஆகின்றாய்? காரணம் கூறு? நிவாரணம் செய்து கொள். ஒவ்வொரு நாளும் அலுவலக முறையில் சபையைக் கூட்டினார். அதே போன்று தனது சுய ராஜ்ய சபையை (தர்பார்) கூட்டுங்கள். சில குழந்தைகள் பாப்தாதாவுடன் இனிமையிலும் இனிமையாக உரையாடல் செய்கின்றனர். தனிப்பட்ட முறையில் உரையாடல் செய்கின்றனர், சொல்லட்டுமா? நான் என்ன ஆகப் போகிறேன்? என்று எனது எதிர்கால சித்திரத்தை எனக்கு காட்டுங்கள் என்று கூறுகின்றனர். ஆதி ரத்தினங்களுக்கு நினைவிருக்கும் ஜெகதம்பாவிடம் அனைத்து குழந்தைகளும் நாம் எப்படி இருந்தோம்? என்று தங்களது சித்திரத்தை கேட்டனர். ஆக பாப்தாதாவிடமும் உரையாடலில் தனது சித்திரத்தை கேட்கின்றனர். உங்கள் அனைவருக்கும் கூட நமக்கும் சித்திரம் கிடைத்தால் நன்றாக இருக்கும் என்று மனதில் தோன்றுகிறது ஆனால் பாப்தாதா கூறுகின்றார் -பாப்தாதா ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரு விசித்திரமான கண்ணாடி கொடுத்திருக்கின்றார். எந்த கண்ணாடி? நிகழ்காலத்தில் நீங்கள் சுய ராஜ்ய அதிகாரிகள் அல்லவா? இருக்கிறீர்களா? சுய ராஜ்ய அதிகாரிகள் தானே? அதிகாரிகள் எனில் கை உயர்த்துங்கள். சுய ராஜ்ய அதிகாரிகளாக இருக்கிறீர்களா? சிலர் கைகள் உயர்த்தவில்லை. சிறிதளவு இருக்கிறீர்களா என்ன? நல்லது. அனைவரும் சுய ராஜ்ய அதிகாரிகளாக இருக்கிறீர்கள், வாழ்த்துக்கள். ஆக சுய ராஜ்யத்திற்கான சார்ட் உங்களது எதிர்கால முகத்தை காட்டும் கண்ணாடி ஆகும். இந்த கண்ணாடி அனைவருக்கும் கிடைத்திருக்கிறதா? தெளிவாக இருக்கிறது தானே? எந்த கருப்பு கறை படியவில்லை தானே! நல்லது. கருப்பு கறை படியவில்லை, ஆனால் சில நேரங்களில் சூடான நீரின் ஆவி மூடுபனி போன்று கண்ணாடியில் படிந்து விடுகிறது. மூடுபனியைப் போன்று கண்ணாடியில் ஏற்பட்டு விடுகிறது. அப்போது கண்ணாடி தெளிவாக காட்டுவது கிடையாது. குளிக்கின்ற நேரத்தில் அனைவருக்கும் அனுபவம் இருக்கும். ஆக உங்களது ஒரு கர்மேந்திரியம் இன்று வரை

உங்களது கட்டுப்பாட்டில் இல்லையெனில், கட்டுப்பாட்டில் தான் இருக்கிறது ஆனால் அவ்வபோது இருப்பது கிடையாது. கண் அல்லது வாய் அல்லது காது அல்லது கால்கள், கால்களும் சில நேரங்களில் கெட்ட சகவாசத்தை நோக்கி சென்று விடுகிறது எனில் காலும் கட்டுப்பாட்டில் இல்லை அல்லவா! குழுவிலும் அமர்ந்து விடுவார்கள், இராமாயணம் மற்றும் பாகவதத்தின் தலைகீழான கதைகளை கேட்பார்கள். ஆக எந்த ஒரு கர்மேந்திரியமும் சங்கல்பம், நேரம் சகிதமாக ஒருவேளை கட்டுப்பாட்டில் இல்லையெனில் இதை வைத்து சோதனை செய்யுங்கள். சுய ராஜ்யத்தில் கட்டுப்படுத்தும் சக்தி இல்லையெனில் உலக ராஜ்யத்தில் எப்படி கட்டுப்படுத்துவீர்கள்? பிறகு ராஜாவாக எப்படி ஆவீர்கள்? அங்கு அனைத்தும் மிகச் சரியாக இருக்கும். கட்டுப்படுத்தும் சக்தி, ஆட்சி செய்யும் சக்தி அனைத்தும் தானாகவே சேர்ந்தே இருக்கும் -முயற்சி மற்றும் பிராப்தியைப் போன்று. ஆக சங்கம யுகம் அதாவது நிகழ்காலத்தில் கட்டுப்படுத்தும் சக்தி, ஆட்சி செய்யும் சக்தி குறைவாக இருந்தால் முயற்சி குறைந்து விடும். பிறகு என்ன பிராப்தி கிடைக்கும்? கணக்கு பார்ப்பதில் புத்தசாலிகள் அல்லவா! எனவே இந்த கண்ணாடியில் தனது முகத்தைப் பாருங்கள், தனது தோற்றத்தை பாருங்கள். ராஜா தென்படுகிறதா? ராயல் குடும்பத்தினரின் தோற்றம் தென்படுகிறதா? ராயல் பிரஜையாக தென்படுகிறதா? சாதாரண பிரஜையாகத் தென்படுகிறதா? எந்த தோற்றம் தென்படுகிறது? சித்திரம் கிடைத்து விட்டதா? இந்த சித்திரத்தின் மூலம் சோதனை செய்ய வேண்டும். தினந்தோறும் சோதனை செய்ய வேண்டும். ஏனெனில் நீண்ட கால முயற்சியினால் நீண்ட கால ராஜ்ய பாக்கியத்தை பலனாக அடைகிறீர்கள். கடைசி நேரத்தில் எல்லையற்ற வைராக்கியம் வந்து விடும் என்று நீங்கள் நினைக்கலாம் ஆனால் கடைசி நேரம் வரும் போது நீண்ட காலமாக இருக்குமா? அல்லது குறுகிய காலமாக இருக்குமா? நீண்ட காலம் என்று கூற முடியாது அல்லவா! எனவே 21-பிறவிகளுக்கு முழு ராஜ்ய அதிகாரியாக ஆக வேண்டும், அரியணையில் அமராமல் இருக்கலாம் ஆனால் ராஜ்ய அதிகாரிகளாக இருக்க வேண்டும். நீண்ட கால முயற்சிக்கும். நீண்ட கால பிராப்திக்கும் தொடர்பு இருக்கிறது. ஆகையால் சோம்பலுடன் இருக்காதீர்கள். இப்போது விநாசத்திற்கான தேதி நிர்ணயிக்கப்படவில்லை. தெரியாது. 8-ஆண்டுகள் ஆகலாம், 10-ஆண்டுகள் ஆகலாம், தெரியாது, வரக் கூடிய கால கட்டங்களில் ஆகி

விடும் என்று கடைசி காலத்தை சிந்திப்பதற்கு முன் தனது பிறவியின் கடைசி நேரத்தை சிந்தியுங்கள். உங்களிடம் நிர்ணயிக்கப்பட்ட தேதி இருக்கிறதா? இந்த தேதியில் எனக்கு மரணம் ஏற்படும் என்று யாருக்காவது தெரியுமா? யாரிடத்திலாவது இருக்கிறதா? இல்லை அல்லவா! உலக விநாசம் ஏற்பட்டே தீரும், சரியான நேரத்தில் நிகழ்ந்து விடும் ஆனால் அதற்கு முன் தனது கடைசி நேரத்தைப் பற்றி சிந்தியுங்கள். ஜெகதம்பாவின் சுலோகனை நினைவு செய்யுங்கள் -என்ன சுலோகன்? ஒவ்வொரு நேரத்தையும் கடைசி நேரம் என்று புரிந்து கொள்ளுங்கள். எதிர்பாராமல் திடீரென நடந்து விடும். தேதி கூறப்படமாட்டாது. உலகத்தில் உங்களது கடைசி நிலைக்கான தேதி அனைத்தும் எதிர்பாராமல் திடீரென்று நடக்கும் விளையாட்டாகும். ஆகையால் தர்பார் (சபை) கூட்டுங்கள். ஹே ராஜாக்களே! ராஜ்ய அதிகாரி ராஜக்களே! தனது தர்பார் கூட்டுங்கள். கட்டளைப்படி நடத்துங்கள். ஏனெனில் சட்டம் மற்றும் ஒழுங்கு இருக்கும் என்று எதிர்காலத்திற்கு மகிமை பாடப்பட்டிருக்கிறது. இயற்கையாகவே இருக்கும். அன்பு (லவ்) மற்றும் சட்டம் (லா) இரண்டுமே சம நிலையில் இருக்கும், இயற்கையாக இருக்கும். ராஜா எந்த சட்டத்தையும் இது தான் சுட்டம் என்று உருவாக்கமாட்டார். இன்றைய நாட்களில் சட்டம் உருவாக்குகின்றனர் அல்லவா! இன்றைய நாட்களில் காவல்துறையினரும் சட்டத்தை மீறி விடுகின்றனர் ஆனால் அங்கு இயற்கையாகவே அன்பு மற்றும் சட்டம் சமநிலையில் இருக்கும்.

ஆக இப்பொழுது சர்வ சக்திவான் என்ற இருக்கையில் செட் ஆகி விடுங்கள். பிறகு இந்த கர்மேந்திரியங்கள், சக்திகள், குணங்கள் போன்ற அனைத்தும் உங்களது கட்டளைகளை ஏற்கும் ஏமாற்றி விடாது. ஏற்றுக் கொள்ளும். ஆக அனைவரும் என்ன செய்யப்போகிறீர்கள்? அடுத்த நினைவு நாளன்று எந்த விழா கொண்டாடுவீர்கள்? ஒவ்வொரு மண்டலத்தைச் சார்ந்தவர்களும் விழா கொண்டாடுகிறீர்கள் அல்லவா! கௌரவிக்கும் விழா அதிகம் கொண்டாடி விட்டீர்கள். இப்போது ஒவ்வொரு சங்கல்பம் மற்றும் நேரத்திற்கான வெற்றி விழா சதா கொண்டாடுங்கள். இந்த விழா கொண்டாடுங்கள். வீணானவைகளை அழித்து விடுங்கள். ஏனெனில் நீங்கள் வெற்றி மூர்த்தி ஆவதன் மூலம் ஆத்மாக்களுக்கு திருப்தி என்ற வெற்றி கிடைத்து விடும். நாலா புறமும் நிராசையிலிருந்து சுப ஆசைகளின் தீபம் ஏற்றப்படும். ஏதாவது வெற்றி

கிடைத்து விட்டால் தீபம் ஏற்றுகின்றனர் அல்லவா? இப்பொழுது உலகில் ஆசைகளின் தீபத்தை ஏற்றுங்கள். ஒவ்வொரு ஆத்மாவிற்குள் ஏதாவது நிராசை இருக்கவே செய்கிறது. நிராசைகளின் காரணத்தினால் குழப்பத்தில் இருக்கின்றனர். மன உளைச்சலில் இருக்கின்றனர். எனவே ஹே அழிவற்ற தீபங்களே! இப்பொழுது ஆசைகளின் தீபங்கள் நிறைந்த தீபாவளி கொண்டாடுங்கள். முதலில் சுயம் பிறகு அனைவரும், கேட்டீர்களா! மற்றபடி பாப்தாதா குழந்தைகளின் அன்பைப் பார்த்து குஷியடைகின்றார். அன்பு என்ற பாடத்தில் சதவிகிதம் நன்றாக இருக்கிறது. நீங்கள் இவ்வளவு முயற்சி செய்து இங்கு எதற்காக வந்திருக்கிறீகள்? உங்களை அழைத்து வந்தது யார்? புகை வண்டி அழைத்து வந்ததா? விமானம் அழைத்து வந்ததா? அல்லது அன்பு அழைத்து வந்ததா? அன்பு என்ற விமானத்தினால் வந்து சேர்ந்து விட்டீர்கள். ஆக அன்பு என்ற விசயத்தில் அனைவரும் தேர்ச்சி பெற்று விட்டீர்கள். இப்போது சர்வ சக்திகளில் மாஸ்டர் -இதில் தேர்ச்சி பெற வேண்டும். பிறகு இந்த இயற்கை, இந்த மாயை, இந்த சன்ஸ்காரம் அனைத்தும் உங்களுக்கு தாசிகளாக ஆகி விடும். ஒவ்வொரு நேரத்திலும் -எஜமானரே, எனக்கான கட்டளை என்ன என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கும். பிரம்மாபாபாவும் அதிகாரியாக ஆகி உள்ளுக்குள்ளேயே சூட்சும முயற்சி செய்தார். அவர் முழுமை நிலை எப்படி அடைந்தார்? என்பது உங்களுக்குத் தெரியும். பறவை பறந்து விட்டது. சிறை கதவு திறக்கப்பட்டு விட்டது. சாகார உலகின் கணக்கு வழக்கு, சாகார உடலின் சிறை திறக்கப்பட்டு விட்டது. பறவை பறந்து விட்டது. இப்போது பிரம்மாபாபாவும் குழந்தைகளிடம் மிக அன்புடன் சீக்கிரம் வாருங்கள். இப்பொழுதே வந்து விடுங்கள், இப்பொழுதே வந்து விடுங்கள் என்ற அழைத்துக் கொண்டிருக்கின்றார். இறக்கை கிடைத்து விட்டது அல்லவா! அனைவரும் ஒரு விநாடி தனது உள்ளத்தில் இந்த டிரில் செய்யுங்கள், இப்பொழுதே செய்யுங்கள் - அனைத்து சங்கல்பங்களையும் சமாப்தி செய்து விடுங்கள். இந்த டிரில் மட்டும் செய்யுங்கள் -ஓ பாபா, இனிமையான பாபா, அன்பான பாபா, நாங்கள் உங்களுக்குச் சமமாக அவ்யக்த ரூபதாரியாக ஆகியே விட்டோம். (பாப்தாதா டிரில் செய்வித்தார்).

நல்லது. நாலா புறங்களிலும் உள்ள அன்பான மற்றும் சக்திசாலி குழந்தைகளுக்கு, நாலா புறங்களிலும் உள்ள சுய ராஜ்ய அதிகாரி

மற்றும் விஷ்வ ராஜ்ய அதிகாரி குழந்தைகளுக்கு, நாலா புறங்களிலும் உள்ள மாஸ்டர் சர்வ சக்திவான் என்ற இருக்கையில் செட் ஆகியிருக்கும் தீவிர முயற்சியாளர் குழந்தைகளுக்கு, சதா எஜமானராக ஆகி இயற்கை, சம்ஸ்காரம், குணங்களுக்கு கட்டளையிடக் கூடிய உலக ராஜ்ய அதிகாரி குழந்தைகளுக்கு, பாப்சமான் சம்பூர்ண நிலையை, சம்பன்ன நிலையை நெருக்கத்தில் கொண்டு வரக் கூடிய உள்நாடு, அயல்நாட்டின் ஒவ்வொரு இடத்திலும் உள்ள குழந்தைகளுக்கு சக்திசாலியான நினைவு நாளுக்காக, பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே. இப்பொழுது பாப்தாதாவிற்கு விசேஷமாக எந்த நினைவு வந்து கொண்டிருக்கிறது? ஜனக் குழந்தை (தாதி ஜானகி). நான் சபையில் அவசியம் ஆஜராவேன் என்று செய்தி அனுப்பியிருக்கின்றார். ஆக லண்டனில் இருப்பவர்கள், அமெரிக்காவில் இருப்பவர்கள், ஆஸ்திரேலியாவில் இருப்பவர்கள், ஆப்பிரிக்காவில் இருப்பவர்கள், ஆசியா மற்றும் பாரதம் என்று ஒவ்வொரு தேசத்தில் இருக்கும் ஒவ்வொரு குழந்தையின் பெயர் மற்றும் விசேஷதா சகிதமாக அன்பு நினைவுகள். உங்களுக்கு எதிரில் அன்பு நினைவுகள் கிடைத்துக் கொண்டிருக்கிறது அல்லவா! நல்லது.

**சேவைக்கான வாய்ப்பு மகாராஷ்டிரா, ஆந்திர பிரதேசம்: (5000-பேர் வந்திருக்கின்றனர்)**. நல்லது. மகாராஷ்டிரா என்றால் அனைத்தையும் விட மகான். எவ்வாறு நாடு மகான் ஆக இருக்கிறதோ, அதே போன்று ஆத்மாக்களும் மகான்களாக இருக்கிறீர்கள். பாப்தாதா ஒவ்வொரு குழந்தையையும் மகான் ரூபத்தில் தான் பார்க்கின்றார். சேவைக்கான பலனும் கிடைத்திருக்கிறது. புண்ணியம் சேமிப்பாகி விட்டது மற்றும் பலமும் கிடைத்திருக்கிறது. இவ்வளவு பிராமண ஆத்மாக்களின் துணை கிடைத்திருக்கிறது. ஒருவரையொருவர் பார்த்து மகிழ்ச்சி அடைகிறீர்கள். ஒருவருக்கொருவரின் அன்பின் பலம் குறைந்தது கிடையாது. ஆக பலனும் கிடைத்திருக்கிறது, பலமும் கிடைத்திருக்கிறது. நடிப்பு நன்றாக நடித்திருக்கிறீர்கள். பாப்தாதா சதா நல்லது, நல்லது, நல்லது என்று கூறி முன்னேற்றத்தில் பறக்க வைக்கின்றார். ஆக சேவைக்கான வாய்ப்பு நன்றாக இருந்தது அல்லவா! மிகவும் நன்றாக இருந்தது. நெருக்கத்தில் வருவதற்கான வாய்ப்பு. சேவைக்கான உடனடிப் பலன் கிடைத்திருக்கிறது. நன்றாக இருக்கிறது. இப்போது ஏதாவது மகான் காரியம் செய்து காண்பிப்பீர்கள் அல்லவா!

மகாராஷ்டிரா என்றால் மகான் காரியத்திற்கு நிமித்தமாகவும் ஆவீர்கள். நன்றாக சேவை செய்யுங்கள் ஆனால் சேவை மற்றும் சுயம் இரண்டும் இணைந்திருக்க வேண்டும். எவ்வாறு பாப்தாதா இணைந்திருக்கின்றனர் அல்லவா! ஆத்மா மற்றும் சரீரம் இணைந்திருக்கிறது அல்லவா! இவ்வாறு சுய ஸ்திதி மற்றும் சேவை இரண்டும் இணைந்திருக்க வேண்டும். சதவிகிதத்தில் எந்த குறையும் இருக்கக் கூடாது. சில நேரம் சேவையின் சதவிகிதம் அதிகமாக, சில நேரம் சுயத்தின் சதவிகிதம் அதிகம் என்று இருக்கக் கூடாது. சதா சமமாக இருக்க வேண்டும். உங்களது சம நிலையின் (பேலன்ஸ்) மூலம் உலக ஆத்மாக்களுக்கு ஆசீர்வாதம் (பிளஸ்சிங்) கிடைத்துக் கொண்டே இருக்கும். ஆக இப்பொழுது உலக ஆத்மாக்களுக்கு ஆசீர்வாதம் தேவைப்படுகிறது. உழைப்பு தேவைப்படுவது கிடையாது, ஆசீர்வாதம் தேவைப்படுகிறது. எனவே உங்களது சமநிலையானது தானாகவே ஆசீர்வாதம் கொடுத்து விடும். நல்லது.

இன்று மதுவனத்தில் இருப்பவர்களையும் நினைவு செய்தார். இவர்கள் முன்னால் வந்து அமர்கின்றனர் அல்லவா! மதுவனத்தில் இருப்பவர்கள் கை உயர்த்துங்கள். அனைவரும் மதுவனத்தின் புஜங்கள் ஆவர். மதுவனத்தில் உள்ளவர்களுக்கு விசேஷமாக தியாகத்தின் பாக்கியம் சூட்சுமத்தில் பலனாக கிடைக்கின்றது. ஏனெனில் இருப்பது பாண்டவ பவனில், மதுவனத்தில், சாந்திவனத்தில் ஆனால் சந்திப்பவர்களுக்கு வாய்ப்பு கிடைக்கிறது. மதுவனத்தில் உள்ளவர்கள் சாட்சியாக இருந்து பார்த்துக் கொண்டிருக்கின்றனர் ஆனால் உள்ளத்தில் மதுவனத்தில் உள்ளவர்களின் நினைவு சதா இருக்கிறது. இன்று உங்களது குரூப் (கோலக் சகோதரரின் குரூப்) டோலி பெற்றுக் கொள்ள வாருங்கள். உழைப்பு செய்கிறீர்கள் அல்லவா! மதுவனத்தில் உள்ள அனைவரும் அனைத்து புஜங்கள் சகிதமாக மிக நன்றாக உழைப்பு செய்கிறீர்கள். உழைப்பின் மதிப்பெண் மிக நன்றாக இருக்கிறது. இப்பொழுது நம்பர்-1 ஆவதில் மதிப்பெண் எடுக்க வேண்டும். மதுவனத்தில் இருக்கும் ஒவ்வொருவரும் நம்பர்-1 மகான்கள் ஆவர், இந்த கோஷம் போடுங்கள். வீணானவைகளின் பெயர், அடையாளம் மதுவனத்திலிருந்து அழிந்து விட வேண்டும். சேவையில், ஸ்திதியில் அனைவரும் மகான்களாக இருக்கிறீர்கள். சரி தானே! மதுவனத்தில் உள்ளவர்களை மறப்பது கிடையாது ஆனால் மதுவனத்தில் உள்ளவர்களுக்கு தியாகத்திற்கான

வாய்ப்பு கொடுக்கின்றேன். இவ்வாறு அனைவரும், அனைத்து மண்டலத்தைச் (ஜோன்) சார்ந்தவர்களும் சேவையில் மிகவும் முன்னேறிக் கொண்டிருக்கின்றனர். அனைவரும் நிகழ்ச்சிகள் செய்திருக்கிறீர்கள், மிகவும் நன்றாக செய்திருக்கிறீர்கள். போபாலும் நன்றாக செய்திருக்கிறது. ஒவ்வொரு இடத்தின் விசேஷதாவும் தனிப்பட்டது. போபாலில் உள்ளவர்களுக்கு இயற்கை எவ்வளவு உதவி செய்திருக்கிறது பாருங்கள்! ஒரே ஒரு நாள் மழை, காற்று, பனி நின்றது, உங்களது காரியம் முடிவடைந்த பிறகு ஆரம்பமாகி விட்டது. ஆக இயற்கை உதவி செய்திருக்கிறது. இவ்வாறு இயற்கையை வென்றவர்களாக ஆகியே தீர வேண்டும். நீங்கள் ஆகவில்லையெனில் வேறு யார் ஆவார்கள்! ஆகியேத் தீர வேண்டும். நல்லது.

தாதிஜீயிடம்: அதிக உழைப்பு செய்கின்றீர்கள். களைப்படைந்து விடுகின்றீர்கள். நல்லது. மிகவும் நல்லது. ஆதி ரத்தினங்களில் அலங்காரமாக இருக்கின்றீர்கள். ஆதி ரத்தினங்களைப் பார்த்து பாப்தாதாவும் குஷியடைகின்றார். நல்லது.

**தாதா நாராயணனிடம்:** அனைவரும் நன்றாக இருக்கிறீர்கள். நினைவு மற்றும் மனசேவை செய்து கொண்டே இருங்கள். இதே காரியத்தில் பிசியாக இருங்கள். பாபாவை மறந்து விட முடியாது. குஷியாக இருங்கள். ஒருபோதும் குஷியை இழந்து விடக் கூடாது.

**அக்கௌவுண்ட் குரூப்பைப் பார்த்து:** யாரெல்லாம் சேவை செய்து கொண்டிருக்கிறீர்களோ, அனைவரும் என்னுடையது என்று புரிந்து கொண்டு மிகவும் நன்றாக செய்து கொண்டிருக்கிறீர்கள். இதற்கு வாழ்த்துக்கள். சேவை செய்தாலும் டபுள் லைட்டாக இருக்க வேண்டும். எந்த சுமையும் தன்மீது வைத்துக் கொள்ளாதீர்கள். பிரம்மாபாபாவிடம் எவ்வளவு பொறுப்பு இருந்தது! இருப்பினும் டபுள் லைட்டாக இருந்தார். இவ்வாறு தந்தையைப் பின்பற்றுங்கள். எந்த சுமையாக இருந்தாலும், தந்தையிடம் கொடுத்து லேசாகி விடுங்கள். சுமைகளை எடுத்துக் கொள்வதற்காகவே தந்தை வந்திருக்கின்றார். ஆக சுமைகள் கொடுக்க வருகிறதா தானே? சுமைகள் கொடுத்து விட்டு டபுள் லைட் ஆகி பறந்து கொண்டே இருங்கள். நல்லது. ஓம்சாந்தி.

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺
✺✺✺✺✺✺✺

# 02.02.2004 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# மூதாதையர் (பூர்வஜ்) மற்றும் பூஜைக்குரியவர் (பூஜ்ய) என்ற சுவமானத்தில் இருந்து உலகத்தின் ஒவ்வொரு ஆத்மாவையும் பாலனை செய்யவும், ஆசீர்வாதம் கொடுத்து ஆசீர்வாதம் எடுக்கவும்!

இன்று பாபா நாலா புறங்களிலுமுள்ள சர்வ சிரேஷ்ட குழந்தைகளை சந்திக்கிறார். ஒவ்வொரு குழந்தையும், பூர்வீகமானவர்கள், பூஜிக்கத்தக்கவர்கள். எனவே, நீங்கள் அனைவரும் இந்த கல்ப மரத்தின் 'வேரும்', 'தண்டும்' ஆனவர்கள். ஆக நீங்கள் அனைவரும் தங்களை சிரேஷ்ட ஆத்மா, முழு மரத்தின் பூர்வீகமானவர்கள் என்று புரிந்துள்ளீர்களா? எப்படி பிரம்மா கிரேட் கிரேட் கிராண்ட் ஃபாதர் என்றழைக்கப்படுகிறாரோ அவருடைய துணையானவர்களான நீங்களும் மாஸ்டர் கிரேட் கிரேட் கிராண்ட் ஃபாதர் ஆக இருக்கின்றீர்களா? பூர்வீக ஆத்மாக்களின் எவ்வளவு சுவமான் இருக்கிறதோ அந்த போதையில் இருக்கின்றீர்களா? முழு உலகின் ஆத்மாக்களில், அவர்கள் எந்த மதத்தைச் சார்ந்த ஆத்மாக்களாய் இருந்தாலும் சரி, ஆனால் அனைத்து ஆத்மாக்களுக்கும் கிளைகளின் ரூபத்தில் ஆதார மூரத், பூர்வீக மானவர்கள். எனவே நீங்கள் பூர்வீகமானவர்கள் மற்றும் பூஜிக்கத் தக்கவர்கள். பூர்வீகமானவர்களின் மூலம் ஒவ்வொரு ஆத்மா விற்கும் ஒளியும், சக்தியும் சதா தானாகவே கிடைத்துக் கொண்டிருக்கிறது. மரத்தைப் பாருங்கள். தண்டு மூலம் வேர் மூலம் கடைசி இலை வரை சக்தி கிடைத்துக் கொண்டேயிருக்கிறது. பூர்வீகமானவாகளின் காரியம் என்ன? பூர்வீகமானவர்களின் காரியம் அனைவருக்கும் பாலனை தருவது

லௌகீகத்தில் கூட பாருங்கள், பூர்வீகமானவர்களின் மூலமாகவே சரீர சக்தியின் பாலனை, ஸ்தூல படிப்பு மூலம் சக்தியை நிரப்பிக் கொள்ளும் பாலனை கிடைக்கிறது. பூர்வீக ஆத்மாக்களாகிய உங்களின் பாலனை அனைத்து ஆத்மாக்களுக்கும், பாபாவின் மூலம் கிடைத்துள்ள சக்திகளின் வாயிலாக பாலனை செய்ய வேண்டும். தற்கால சமயப் பிரகாரம் சர்வ ஆத்மாக்களுக்கும் சக்திகளின் மூலம் பாலனை செய்யும் அவசியம் உள்ளது. இந்நாட்களில் ஆத்மாக்களின் மீது அசாந்தி, துக்கத்தின் அலைகள் பரவியுள்ளன. பூர்வீக மற்றும் பூஜிக்கத்தக்க ஆத்மாக்களாகிய உங்களுக்கு உங்கள்

வம்சாவளியினர் மீது இரக்கம் வருகிறதா? ஏதேனும் விசேஷமாய் அசாந்தியின் சூழ்நிலை உருவாகும் காலத்தில் விசேஷமாய் இராணுவம் மற்றும் காவல் துறை சேனை தயாராகி விடுகின்றனர்.. இதேபோன்று இன்றைய சூழ்நிலையில் பூர்வீகமான விசேஷ சேவைக்காக உங்களை முழு உலகின் ஆத்மாக்களுக்கும் நிமித்தமானவர்கள் என உணர்கின்றீர்களா? முழு உலகின் ஆத்மாக்களுக்கு உங்களின் சகாஷ் (சக்தி) தேவைப்படுகிறது. இப்படி எல்லையற்ற உலகின் பூர்வீக ஆத்மாக்களாக உங்களை அனுபவம் செய்கின்றீர்களா? விஷ்வ சேவை நினைவிருக்கிறதா? அல்லது உங்கள் சென்டரின் நினைவு இருக்கிறதா? பூர்வீக தேவ ஆத்மாக்களாகிய உங்களை அழைத்துக் கொண்டிருக்கின்றார்கள். அனைவரும் தங்களுக்கு பற்பல தேவி, தேவதைகளைக் கூப்பிட்டுக் கொண்டிருக்கின்றார்கள் -வாருங்கள், மன்னியுங்கள், கிருபை காட்டுங்கள். பக்தர்களின் கூக்குரல் உங்களுக்கு கேட்கிறதா? இல்லையா? எந்த மதத்தைச் சார்ந்த ஆத்மாக்களாய் இருந்தாலும் அவர்களை சந்திக்கும் போது அனைத்து ஆத்மாக்களுக்கும். பூர்வீகமானவர்கள் என புரிந்து கொண்டு நடக்கின்றீர்களா? இது கூட பூர்வீகமானவர்களாகிய உங்களின் கிளைகள் இவர்களுக்கும் சக்தி ஒளி தரக்கூடிய நீங்கள் பூர்வீகமானவர்கள். உங்களின் கல்ப விருக்ஷ படத்தை முன்னே கொண்டு வாருங்கள். நீங்கள் எங்கிருக்கின்றீர்கள் எனப் பாருங்கள். வேரிலும் நீங்கள், தண்டிலும் நீங்கள் தான் இருக்கிறீர்கள். ஆக பரந்தாமத்திலும் பாருங்கள். பூர்வஜ்

# 2004 அவ்யக்த முரளி

ஆத்மாக்களாகிய உங்களின் இடம் பாபாவின் கூடவே அருகில் இருக்கிறது. அறிவீர்கள் இல்லையா?

இதே போதையில் எவ்வித ஆத்மாக்களை சந்திக்கும்போது, அவர்கள் உங்களை இவர் நம்மவர்கள் நம்முடையவர்கள் என்ற பார்வையோடு நினைப்பர், அதே பூர்வீக ஸ்மிருதி (நினைவு) திருஷ்டி மூலம் சந்தித்தால் அவர்களுக்கும் நம்மவர்கள் என்கிற உணர்வு ஏற்படும். எனவே நீங்கள் அனைவரின் பூர்வீகமானவர்கள். அந்த நினைவுடன் சேவை செய்தால் இஷ்ட தேவதைகள், பூர்வீகர்கள், இவர்கள் நமது மூதாதையர்கள் நம்மோடு மீண்டும் சந்திக்கின்றனர் என்கிற அனுபவம் செய்வர்.

பிறகு பூஜிக்கத்தக்கவர்கள் நிலையைக்கூடப் பாருங்கள். எவ்வளவு பெரிய பூஜை நடக்கிறது. எந்த தர்மாத்மாவிற்கும், மகாத்மாவிற்கும் தேவி, தேவதைகளாகிய உங்களுக்கு சமமாய் எவ்வளவு விதிப்பூர்வமாக கீர்த்தனை, ஆரத்தி செய்கின்றனர்.
இப்படிப்பட்ட பூஜிக்கத்தக்கவர்களாக, பூர்வீகமான நீங்கள் தான் ஆகிறீர்கள். உங்களை இவ்வாறு நீங்கள் உணர்கிறீர்களா? இப்படிப் பட்ட போதை (நஷா) உள்ளதா? நாம் பூர்வீகமான ஆத்மாக்கள் என்கிற நினைவு யாருக்கு உள்ளதோ அவர்கள் கையை தூக்குங்கள். அம்மாதிரி இருப்பதனாலேயே கைதூக்குகிறீர்கள். நல்லது. இந்த போதை சதா உள்ளதா? அடுத்த கேள்வி, இது சதா இருக்கிறதா?

பாப்தாதா குழந்தைகளாகிய உங்கள் அனைவரையும் பார்த்து ஒவ்வொரு பிராப்தியிலும் அவினாசியாகப் பார்க்க விரும்புகிறார். அவ்வப்போது அல்ல, பதில் மிக புத்திசாலித்தனமாக கூறுகிறார்கள். இருக்கிறோம்தாம்! நன்றாகத் தான் இருக்கிறோம் ஆனால் எப்போதாவது கம்மி (குறைவு) ஏற்பட்டு விடுகிறது என சற்று மெதுவான தொனியில் (குரலில்) கூறுகின்றனர் பாபாவும் அவினாசியானவர், ஆத்மாக்களாகிய நீங்களும் அவினாசியானவர்கள், பிராப்தியும் அவினாசி, ஞானம் அவினாசியின் மூலம் அவினாசி ஞானம், ஆக தாரணையும் எப்படி இருக்க வேண்டும்? அவினாசியா? அல்லது அவ்வப்போதா?

பாப்தாதா தற்போது அனைத்து குழந்தைகளையும் சமயம், சூழ்நிலைக்குத் தகுந்தாற்போல் எல்லையற்ற சேவையில் சதா பிஸியாக (சுறுசுறுப்பாக) இருக்க விரும்புகிறார். ஏனெனில் சேவையில் பிஸியாக இருப்பதன் காரணமாக அனேக விதமான குழப்பங்களிலிருந்து காக்கப்படுகிறோம் ஆனால் சேவை செய்யும்போது திட்டம் தீட்டுகிறீர்கள், திட்டத்தின்படி நடைமுறையில் வருகிறீர்கள். வெற்றியும் அடைகிறீர்கள், ஆனால் பாப்தாதா ஒரே சமயத்தில் மூன்று சேவையும் சேர்ந்தே நடக்க வேண்டும் என விரும்புகின்றார். வெறும் பேச்சு மட்டுமல்ல, மனசேவையும் வேண்டும். சொல் சேவையும் வேண்டும், கர்மனா அதாவது தொடர்பு சம்பந்தத்தில் வரும்போதும் சேவை, சேவையின் லட்சியம் சேவை பாவனையாக இருக்கட்டும். இச்சமயத்தில் சொல் மூலமான சேவை அதிகமாக உள்ளது. மன சேவை உள்ளது, ஆனால் சொல்லின் சதவீதம் அதிகமாயுள்ளது ஆனால் ஒரே சமயத்தில் மூன்று சேவையும் கூடவே இருப்பின் சேவையில் வெற்றி அதிகம் கிட்டும்.

இந்த குரூப்பிலும் விதவிதமான பிரிவினைச் சார்ந்துள்ளவர்கள் வந்துள்ளனர் எனக் கேள்வியுற்றார். சேவையின் திட்டங்களை நன்கு தீட்டுகின்றனர் ஆனால் மூன்று வித சேவையும் சேர்ந்திருந்தால் சேவையின் வேகம் மற்றும் விருத்தி அதிகம் ஏற்படும். நாலா புறங்களிலுமுள்ள அனைத்து குழந்தைகளும் வந்து சேர்ந்துள்ளனர். இதனைப் பார்த்து, பாப்தாதாவிற்கும் மிகுந்த குஷி ஏற்படுகிறது. புதுப்புது குழந்தைகள் உற்சாகம் ஆர்வத்துடன் வந்து சேர்ந்து விடுகின்றனர்.

தற்போது பாப்தாதா அனைத்து குழந்தைகளையும் சதா தடைகளற்ற சொரூபத்தில் காண விரும்புகின்றார் ஏன்? நிமித்தமாயுள்ள ஆத்மாக்களாகிய நீங்கள் தடைகளற்ற ஸ்திதியில் இருக்கிறீர்களோ. அப்போதே உலகின் ஆத்மாக்களை அனைத்து பிரச்னைகளிலிருந்தும் விடுவிக்க முடியும். இதற்கு விசேஷமாய் இரண்டு விஷயங்களில் கோடிட்டு வையுங்கள். செய்கிறீர்கள்தானே! மேலும் கோடிடுங்கள். ஒன்று ஒவ்வொரு ஆத்மாவையும் ஆத்மீக திருஷ்டியுடன் பாருங்கள், ஆத்மாவின் ஓரிஜினல் சம்ஸ்காரத்தின் சொரூபத்தில் பாருங்கள், எப்படிப்பட்ட ஆத்மாவாக இருந்தாலும் சரி, உங்களுடைய சுப பாவனை,

சுப ஆசை, பரிவர்த்தனைக்கான சிரேஷ்ட பாவனை, அவர்களது சம்ஸ்காரங்களை சிறிது காலத்திற்கு மாற்றி அமைக்க முடியும். ஆத்மீக பாவனையை வெளிப்படுத்துங்கள்! எப்படி ஆரம்ப காலத்தில் கூட்டாக இருந்து கொண்டே ஆத்மீக திருஷ்டி, ஆத்மீக விருத்தி, ஆத்மா ஆத்மாவோடு சந்திக்கிறது பேசுகிறது. இந்த பார்வையோடு அஸ்திவாரமானது எவ்வளவு உறுதியாகி விட்டது. இப்போது தான் சேவையின் விஸ்தாரத்தில், சேவையின் விஸ்தாரத்தின் சம்பந்தத்தில் ஆத்மீக பாவனையுடன் நடப்பது, பேசுவது, தொடர்பில் வருவது அனைத்தும் அடியில் சென்று விட்டது. முழுமையாக முடிவடையவில்லை ஆனால் இணைந்து விட்டது. ஆத்மீக சுவமான், ஆத்மாவிற்கு எளிதில் வெற்றியைத் தருகிறது. ஏனெனில் நீங்கள் அனைவரும் யார் வந்து கூடியிருக்கிறீர்கள்? அதே முந்தைய கல்பத்தின் தேவ ஆத்மாக்கள், பிராமண ஆத்மாக்கள் ஒன்றாகக் கூடியுள்ளீர்கள். பிராமண ஆத்மாக்களின் ரூபத்திலும் அனைவரும் சிரேஷ்ட ஆத்மாக்கள், தேவ ஆத்மாக்களின் கணக்குப்படியும் சிரேஷ்ட ஆத்மாக்கள். அதே சொரூபத்தோடு சம்பந்தம் தொடர்பில் வாருங்கள். ஒவ்வொரு சமயத்திலும் சோதித்துப் பாருங்கள். தேவ ஆத்மா, பிராமண ஆத்மாவின் சிரேஷ்ட சேவை என்ன? ஆசீர்வாதம் கொடுப்பதும், ஆசீர்வாதம் எடுப்பதும், உங்களின் ஜட சித்தித்திரங்கள் என்ன சேவை செய்கின்றன? எப்படிப்பட்ட ஆத்மாவாக இருந்தாலும் சரி ஆசீர்வாதங்களை எடுக்கச் செல்கிறார்கள். ஆசீர்வாதம் பெற்று வருகிறார்கள். மேலும் எவருக்கேனும் புருஷார்த்தம் செய்வதில் கடினமாக உணர்ந்தால் அதற்கான எளிய வழி, நாள் முழுவதும் திருஷ்டி, விருத்தி, பேச்சு பாவனை மற்றும் அனைவரிடமிருந்தும் ஆசிர்வாதத்தை எடுக்கவும் வேண்டும். கொடுக்கவும் வேண்டும். உங்களுடைய பட்டம், வரதானமே மகாதானி, சேவா செய்து கொண்டே காரியத்தில் சம்பந்தம் தொடர்பில் வந்து கொண்டே இந்த காரியம் செய்யுங்கள். அதாவது ஆசீர்வாதம் கொடுங்கள் மற்றும் எடுங்கள். இது கஷ்டமா? அல்லது எளிதா? எளிது என்று நினைப்பவர்கள் கை தூக்குங்கள் எவரேனும் உங்களுக்கு எதிராக செய்தால்? அப்போது கூட ஆசீர்வாதம் கொடுப்பீர்களா? உங்களிடம் அவ்வளவு ஆசீர்வாதங்களின் இருப்பு (ஸ்டாக்) உள்ளதா? எதிர்ப்பு என்பதிருக்கும், ஏனெனில் எதிர்ப்பு தான் நல்ல நிலைக்கு எடுத்துச் செல்லும். அனைவரிலும் அதிகமான எதிர்ப்பு பிரம்மாபாபாவிற்கு ஏற்பட்டது. ஏற்பட்டதல்லவா? மேலும்

நெம்பர் ஒன் பதவி யாருக்குக் கிடைத்தது. பாபா தான் அடைந்தாரல்லவா? என்ன ஆனாலும் சரி, பிரம்மாபாபாவிற்குச் சமமாக ஆசீர்வாதம் தர வேண்டும். பிரம்மாபாபாவிற்கு முன் வீணானவைகளைச் செய்பவர்கள். பேசுபவர்கள் இல்லாமலா இருந்தனர்? ஆனால் பிரம்மாபாபா ஆசீர்வாதம் தந்தார். எடுத்தார், தன்னுள் அடக்கிக் கொள்ளும் சக்தியை பிரயோகித்தார். குழந்தை, மாறி விடுவார்! அவ்வாறே நீங்களும் இதே கண்ணோட்டத்தோடு பாருங்கள், இவர்கள் கல்ப முன்னரான நமது குடும்பத்தைச் சார்ந்தவர்கள், பிராமண குடும்பத்தை சார்ந்தவர்களே! நானும் மாறி இவர்களையும் மாற்ற வேண்டும். இவர் மாறினால் தான் நான் மாறுவேன், அப்படியல்ல! நான் மாறி மாற்ற வேண்டும். எனது பொறுப்பு அப்போதே ஆசீர்வாதம் வெளிவரும், ஆசீர்வாதம் கிடைக்கவும் செய்யும்.

தற்போது காலம் விரைவாக மாற்றத்தினை நோக்கி மேலும் சென்று கொண்டிருக்கிறது ஆனால் காலம் மாறுவதற்கு முன்னர் உலக மாற்றம் செய்யும் சிரேஷ்ட ஆத்மாக்கள் சுய மாற்றத்தின் மூலம் அனைவரின் மாற்றத்திற்கு ஆதாரமாகுங்கள். நீங்களும் உலகின் ஆதார மூரத், உத்தார மூரத் (உயர்த்துவோர்) ஆவீர்கள். ஒவ்வொரு ஆத்மாவும் லட்சியம் கொள்ளுங்கள் நான் நிமித்தமாக வேண்டும். தன்னுள் மூன்று விஷயங்கள் சங்கல்ப மாத்திரத்தில் கூட இருக்கக்கூடாது. இந்த மாற்றத்தைக் கொண்டு வாருங்கள் குஒன்று பரசிந்தன். இரண்டாவது பாதர்ஸன், மூன்றாவது பரவழி (கெட்ட சகவாசம்) சிரேஷ்ட துணையிலிருங்கள், ஏனெனில் கெட்ட துணை மிகவும் நஷ்டத்தை ஏற்படுத்துகிறது. ஏற்கனவே பாபா கூறியிருக்கிறார், பரோபகாரியாகுங்கள், ஆனால் இந்த மூன்று பர விஷயங்களை அகற்றி விடுங்கள் -பர தர்ஸன், பர சிந்தனை, மற்றும் பரமத். பர என்னும் வீணான துணைகள். பரோபகாரி ஆகுங்கள், அப்போதே ஆசீர்வாதங்கள் கிட்டும் மேலும் ஆசீர்வாதங்களைத் தருவீர்கள். யார் என்ன தந்தாலும் சரி, நீங்கள் ஆசீர்வாதங்களைத் தாருங்கள். அவ்வளவு தைரியம் உள்ளதா? தைரியம் இருக்கிறதா? ஆக அனைத்து பக்கங்களிலுமுள்ள சென்டர்களிலுமுள்ளவர்களுக்கு கூறுகிறார்: குழந்தைகள் நீங்கள் அனைவரும் தைரியம் வைத்தால், யார் என்ன தந்தாலும் நாம் ஆசீர்வாதமே தர வேண்டும். இந்த ஆண்டு அதிகப்படியான இந்த தைரியத்திற்கு பாப்தாதா உதவி அளிப்பார் ஆனால் ஆசீர்வாதம் தந்தால்

தான்! இதில் கலப்பு ஏதும் செய்யக் கூடாது. பாப்தாதாவிடம் அனைத்து ரிக்கார்டு வருகிறதல்லவா? சங்கல்பத்தில் கூட ஆசீர்வாதத்திற்குப் பதிலாக வேறு எதுவும் கூடாது. ஆக, கைத்தூக்குங்கள். செய்து தான் ஆக வேண்டும். வெறும் கைமட்டும் உயர்த்தினால் போதாது, செய்தாக வேண்டும். செய்வீர்களா? மதுபன் வாசிகள், டீச்சர்கள் செய்வீர்களா? நன்கு அதிகப்படியான மார்க்குகளை சேர்ப்பீர்களா? வாழ்த்துக்கள்! ஏன்? பாப்தாதாவிடம் அட்வான்ஸ் பார்ட்டி அடிக்கடி வருகிறது ஆனால் நம்முடைய துணை முதன்மையான நிலையை ஏன் உருவாக்கவில்லை? இப்பொழுது என்ன பதில் அளிக்கலாம்? என்ன பதில் கூறுவது? அட்வான்ஸ் ஸ்டேஜ் மற்றும் அட்வான்ஸ் பார்டியின் நடிப்பு இவை இரண்டும் எப்பொழுது சந்திக்கிறதோ அப்பொழுது தான் சமாப்தி ஏற்படும். ஆகையால் அவர்கள் கேட்கின்றனர் அதற்கு என்ன பதில் கூறலாம்? எவ்வளவு வருடத்தில் ஆவீர்கள்? அனைத்தும் கொண்டாடி விட்டீர்கள். சில்வர் ஜூப்ளி, கோல்டன் ஜுப்ளி, டைமண்டு ஜூப்ளி (வெள்ளிவிழா, பொன் விழா, வைர விழா) அனைத்தும் கொண்டாடி விட்டீர்கள். இப்பொழுது அட்வான்ஸ் நிலையின் விழா (Ceremony) கொண்டாடுங்கள். அதனுடைய தேதியை நிர்ணயம் செய்யுங்கள். பாண்டவர்கள் சொல்லுங்கள், தேதியை நிர்ணயம் செய்ய முடியுமா? முதல் வரிசையில் அமர்ந்திருப்பவர்கள் சொல்லுங்கள் தேதி நிர்ணயிக்கப்படுமா, அல்லது திடீரென்று ஆகுமா? என்ன ஆகும்? திடீரென்று ஆகுமா? அல்லது ஆகி விடுமா? சொல்லுங்கள். ஏதாவது சொல்லுங்கள். யோசித்துக் கொண்டு இருக்கிறீர்களர் என்ன? பாப்தாதா நிர்வயர் சகோதரரிடம் கேட்டுக் கொண்டிருக்கிறார். செரிமனி நடக்குமா? இல்லை திடீரென்று ஆகுமா? நீங்கள் தாதியிடம் கேட்டுக் கொண்டிருக்கிறீர்களா? இவர்கள் தாதியைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். தாதி ஏதாவது சொல்வார்களா என்று? நீங்கள் சொல்லுங்கள். ரமேஷ் சகோதரரைப் பார்த்து பாப்தாதா கேட்கின்றார். கடைசியில் இது நடந்து தான் தீரும். பாப்தாதா கேட்கிறார். அந்த கடைசி நாள் கூட எப்பொழுது? ரமேஷ் சகோதரர் கூறுகிறார்: பாபா நீங்கள் தேதியை சொல்லுங்கள், அந்த தேதிக்குள் நாங்கள் செய்து விடுவோம். பாப்தாதா ஒரு வருடத்திற்கு மேலாக நாட்கள் கொடுத்திருக்கிறார். தைரியத்தின் மூலமாக அதிகப்படியான உதவி கிடைக்கும். இதை செய்ய முடியுமல்லவா? இதை செய்து காட்டுங்கள். பிறகு பாபா தேதியை நிர்ணயம் செய்வார். உங்களுடைய கட்டளை

-வேண்டுமெனில் இந்த 2004-ம் வருடத்தை அப்படியே கொண்டாடி விடலாம். இதன் அர்த்தம் இது வரை அந்தளவு ஏற்பாடு செய்யவில்லை என்பதாகும். அப்படியென்றால் அட்வான்ஸ் பார்ட்டிக்கு இன்னும் 1-வருடமாவது இருக்க வேண்டியிருக்கும் அல்லவா? நல்லது. ஏனென்றால் இப்பொழுதிலிருந்தே லட்சியம் வைத்தோமென்றால் செய்து தான் ஆக வேண்டும். அப்பொழுது நீண்ட கால சேமிப்பில் வந்து விடும். ஏனென்றால் நீண்ட காலத்தின் கணக்குக் கூட இருக்கிறதல்லவா? ஒருவேளை கடைசியில் செய்தோமென்றால் நீண்ட காலத்தின் கணக்கு சரியாக இருக்காது. ஆகையால் இப்பொழுதிலிருந்தே தயவு செய்து கவனம் கொடுங்கள். நல்லது. இப்பொழுது எல்லா துறையினருக்கும் கூறுவார்கள். நாங்களும் கேட்க வேண்டும் என்று.

நல்லது. யார் எல்லாம் எந்த துறையை சேர்ந்தவர்கள் வந்து இருக்கின்றீர்களோ, யார் எல்லாம் மீட்டிங் செய்து உள்ளீர்களோ அனைவரும் எழுந்திருங்கள். நல்லது. டீச்சர் சகோதரிகள் கூட வந்து இருக்கின்றீர்கள். அனைவரும் ஒன்றாக சேர்ந்து அமர்ந்து இருக்கிறீர்கள். மிகவும் நல்ல காரியம் செய்து இருக்கிறீர்கள். கிரமத்துறையை சேர்ந்தவர்கள் கை உயர்த்துங்கள். கிரமத் துறையை சேர்ந்தவர்கள் முன் அமர்ந்து இருக்கிறீர்கள். நல்லது. மீடியா துறையை சேர்ந்தவர்கள் கை உயர்த்துங்கள். நல்லது. இதய பிரிவினர் (மருத்துவத் துறை) சேர்ந்தவர்கள் தங்கள் துறையின் மீது தலைப்பு வைத்திருக்கிறார்கள். (தில்வாலே -இதயத்தை கொள்ளைக் கொண்டவர்) அப்படி என்றால் தில்வாலா குழு எழுந்திருங்கள். நல்லது. இவர்கள் அனைவரும் இதயத்தைக் கொள்ளை கொண்டவர்கள். தலைப்பு நன்றாக வைத்து இருக்கிறார்கள் அல்லவா? நல்லது. இவர்கள் திட்டம் மிகவும் நன்றாக உருவாக்கி இருக்கிறார்கள். பாப்தாதாவிடம் செய்தி வந்து சேர்ந்தது. பாப்தாதா என்ன நினைக்கிறார் என்றால் நடைமுறையில் செய்து காட்டிய அனுபவம் சீக்கிரமாக பிரபாவத்தை ஏற்படுத்தும். ஆகையால் எந்த திட்டத்தை உருவாக்கினீர்களோ அது பாப்தாதாவிற்கு பிடித்திருக்கிறது. நன்றாக இருக்கிறது. இந்த சேவையை அதிகரியுங்கள். மேலும் இதன் மூலம் நாலா பக்கமும் பாபாவின் செய்தியை பரப்புங்கள். மிக நன்றாக தைரியம் வைத்துள்ளீர்கள். குழுவை சேர்த்து இருக்கிறீர்கள். இந்த நல்ல

காரியத்தை செய்து இருக்கிறீர்கள். தில்வாலா அவர்களுக்கு பாப்தாதா தலைப்பு கொடுக்கிறார் -அனுபவங்களின் அத்தாரிட்டியில் இருப்பவர்கள். நன்றாக இருக்கின்றது.

நல்லது. எந்த வர்க்கத்தை சேர்ந்தவர்கள் யார் எல்லாம் வந்து இருக்கின்றீர்களோ அனைவரும் எழுந்திருங்கள். மீடியா, வியாபாரி, டிரான்ஸ் போர்ட், ஊரக முன்னேற்ற துறை மற்றும் மருத்துவர்கள் -இதயம் சம்மந்தப்பட்ட மருத்துவர்கள் அனைவரின் மீட்டிங் நடந்து கொண்டு இருக்கின்றது! மீட்டிங் மிகவும் நன்றாக செய்து இருக்கிறீர்கள் ஆனால் பாப்தாதாவின் ஒரு விஷயத்தை இதுவரை எந்த துறையை சேர்ந்தவரும் செய்து காட்டவில்லை ஞாபகம் வருகின்றதா எது வென்று? கீதையின் பகவானை நிரூபணம் செய்து காட்டுவது. இந்த கீதையின் விஷயத்தை விடுங்கள். அதைப் பற்றி பாப்தாதா கூற இருக்கின்றார். அந்த விசயம் மிகவும் சிரேஷ்டமானது ஆனால் மிகவும் கவனமாக நிரூபணம் செய்து காட்ட வேண்டும் என்று முதலில் அப்படிப்பட்ட ஒரு குழுவை தயார் செய்யுங்கள். உங்களுக்கு அவர்கள் துணையாக இருக்கட்டும். மேலும் அவர்கள் மைக் ஆக வேண்டும் நீங்கள் மைட் (சக்திசாலி) ஆக வேண்டும். அப்படிப்பட்டவர்களை முதலில் தயார் செய்யுங்கள். யார் எல்லாம் துறை சேவையை செய்து கொண்டு இருக்கிறீர்களோ அவர்களுக்கு வாழ்த்துக்கள் ஆனால் ஒவ்வொரு துறையின் மூலம் எந்த விசேஷ ஆத்மாக்கள், யார் சேவையின் மூலம் முன்னேற முடியுமோ அவர்கள் இது வரை பாப்தாதாவின் முன் வரவில்லை. எதிரில் தான் வரவில்லை. பட்டியலாவது வரட்டும். இதுவரை பட்டியல் கூட வரவில்லை. அவர்களது குழு ஒவ்வொரு துறையில் இருந்து வந்து இருக்கக்கூடிய குழுவில் வரட்டும். அதுவும் கூட செய்யவில்லை.

சேவையின் பங்கு -கிழக்கு மண்டலம், நேபால் மற்றும் தமிழ்நாடு: மூன்று பேருக்கும் வாய்ப்பு கிடைத்துள்ளது. மூன்று இடத்தின் டீச்சர் சகோதரிகள் எழுந்து நில்லுங்கள். டீச்சர்கள் நிறைய பேர் இருக்கிறீர்கள். அதனால் அவ்வளவு மையங்கள் (நிலையங்கள்) இருக்கும் அல்லவா! டீச்சர்களின் எண்ணிக்கை இவ்வளவு இருக்கும்பொழுது நிலையங்களின் எண்ணிக்கையும் இருக்கும் அல்லவா! நன்றாக இருக்கின்றது. அனைவரையும் விட விஸ்தாரமான மண்டலமாக

உள்ளது. பாபாவின் செய்தி மூன்று இடங்களிலும் சென்றடைந்து விட்டால் எவ்வளவு சேவை தன்னைத்தான் சகஜமாகி விடும்.

அனைத்து குழந்தைகளுக்கும் இப்பொழுது பாப்தாதாவின் சுபமான கட்டளை மேலும் ஸ்ரீமத் என்னவெனில் இது பரமாத்மாவின் காரியம் என்ற செய்தியை பரப்பக்கூடிய ஒரு குழுவை தயார் செய்யுங்கள். பயம் அற்றவர்களாக, தயக்கமற்ற தந்தையை பிரத்தியட்சம் செய்யக்கூடிய உறுதியுடன் செல்லக் கூடிய, அத்தாரிட்டியுடன் சொல்லக்கூடிய ஒரு குழுவை தயார் செய்யுங்கள். இன்றைய உலகில் ஸ்தூலமான அத்தாரிட்டி கூட வேலைக்கு உதவுகிறது. லௌகிக் அதாரிட்டி மேலும் பரமாத்மா அதாரிட்டி இரண்டு அதாரிட்டி உடையவர்கள் பாபாவின் செய்தியை பரப்ப முடியும். அந்த மாதிரி குழுவை தயார் செய்யுங்கள். ஒவ்வொரு துறையினரும் தன்னுடைய துறைகளில் தயார் செய்யுங்கள். யார் வேண்டுமானாலும் செய்யட்டும் ஆனால் அதிகாரத்துடன் சொல்லக்கூடியவர்களை தேர்ந்தெடுங்கள் அவர்களின் செய்தி, அவர்களின் அனுபவம் அதாரிட்டியுடன் பிரத்யட்சம் ஆக வேண்டும். என்ன செய்ய வேண்டும் என்று தெரிந்ததா?

சிறு குழுவை கொண்டு வந்தாலும் அனைவர் முன்னிலையிலும் கொண்டு வாருங்கள். யாரெல்லாம் பல துறைகளை சேர்ந்தவர்கள் அமர்ந்துள்ளவர்கள் சொல்லுங்கள், உங்கள் துறையில் அந்த மாதிரி யாராவது தயாராக உள்ளார்களா? அந்த மாதிரி யாராவது இருக்கிறார்களா? அவர்கள் கை உயர்த்துங்கள். எந்த துறையில் அந்த மாதிரி உள்ளவர்கள் தயாராக இருப்பவர்கள் கை உயர்த்துங்கள். யாராவது இருக்கின்றார்களா? யாரும் இல்லை. இப்பொழுது தயாராகிக் கொண்டு இருக்கிறார்கள். வியாபாரிகள் எழுந்திருங்கள். (யோகினி சகோதரியை பார்த்து) நல்லது! இப்பொழுது ஆன்மீக டிரில் நினைவு இருக்கின்றதா?

ஒரு வினாடியில் தன்னுடைய பூர்வீகமானவர்கள் என்ற நிலையில் வந்து பரந்தாம நிவாசி தந்தையுடன் லைட் ஹவுஸ் (கலங்கரை விளக்கு) ஆகி உலகத்திற்கு ஒளி கொடுக்க முடியுமா? பாரதம் மேலும் அயல் நாடுகளில் கேட்டுக் கொண்டு இருப்பவர்கள், பார்த்துக் கொண்டு இருப்பவர்கள் லைட் ஹவுஸ் ஆகி ஆத்மாக்களுக்கு ஒளி கொடுங்கள்,

ஒளியை வாங்குவதற்கான தைரியத்தை (சகாஷ்) கொடுங்கள், சக்திகளை கொடுங்கள் நல்லது.

நாலா புறத்திலும் உள்ள உலகத்தின் பூர்வீகமான மேலும் பூஜைக்குரிய ஆத்மாக்களுக்கு சதா வள்ளலாகி அனைவருக்கும் ஆசீர்வாதங்களை கொடுக்கக்கூடிய மகாதானி ஆத்மாக்களுக்கு, சதா உறுதியின் மூலமாக சுய மாற்றத்தினால் அனைவருக்கும் மாற்றத்தை செய்விக்கக் கூடிய உலகத்தை மாற்றக்கூடிய ஆத்மாக்களுக்கு, சதா லைட் ஹவுஸ் ஆகி அனைத்து ஆத்மாக்களுக்கு லைட் (ஒளி) கொடுக்கக்கூடிய அருகாமையில் உள்ள ஆத்மாக் களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மேலும் உள்ளத்தின் ஆசீர்வாதங்களோடு நமஸ்தே.

மோகினி சகோதரியிடம்: சான்ஸ் (வாய்ப்பு) எடுக்கக்கூடிய சான்சலர் (வேந்தர்) ஆகிறீர்கள்.

சாந்தாமணி தாதியிடம்: (உடல் நலம் சரியில்லை) கணக்கு முடிந்து கொண்டு இருக்கின்றது. (கிரகசாரம்) உங்கள் மாதிரி ரத்தினத்திற்கு கிரகசாரம் இருக்க முடியாது. ஆரம்பத்தில் இருந்து வரதானங்கள் மூலம் வளர்ந்துள்ளீர்கள். அதனால் முன்னேறிக் கொண்டு இருப்பீர்கள் முன்னேறி கொண்டு இருக்கின்றீர்கள். எந்த ஒரு விசயமும் கிடையாது. குறைவு ஆகாது. முன்னேறுவீர்கள். தாதி ரத்தன் மோகினி, மனோகர்தாதி, மோகினி சகோதரி, ஈஷூ தாதி, முன்னி சகோதரி அனைவரும் பாப்தாதாவின் முன்னால் இருக்கின்றனர். பாருங்கள் நீங்கள் அனைவரும் விசேஷ சகயோகி ஆத்மாக்கள் பாப்தாதா எப்பொழுதும் இருவரையும் (தாதிஜி, தாதி ஜனாகிஜி) நினைவு கொடுக்கின்றாரோ அப்பொழுது நீங்கள் அனைவரும் அவசியம் கூட இருப்பீர்கள். ஏனெனில் சகயோகி இல்லையா? சகயோகி தானே! உங்களின் நடிப்பு (பாகம்) இவர்களை விட அதிக சேவையில் உள்ளது. ஆரம்பத்தில் இருந்து எல்லையற்ற சேவைக்கு நிமித்தமாக நீங்கள் தான் ஆகி உள்ளீர்கள். ஆகையால் உங்கள் அனைவரின் மகத்துவம் மூலம் இவர்களுக்கும் மகத்துவம் உள்ளது. சதா உங்களை பாபாவின் சமீபமான ரத்தினம் என்று புரிந்து கொள்ளுங்கள். புரிந்து கொண்டும் இருக்கிறீர்கள் ஆனால் மேலும் மிக சமீபத்தில் உள்ளீர்கள். சதா அருகாமையில் இருப்பீர்கள். இது உத்திரவாதம் ஆகும். உத்திரவாதம்

தானே! நல்லது. நன்றாக பங்கை செய்து கொண்டு இருக்கிறீர்கள். பெயர் விசேஷ ஆத்மாக்களுடையது வருகிறது ஆனால் நீங்கள் அனைவரும் அதில் அடங்கியுள்ளீர்கள். தனியாக பிரிக்க முடியாது. உங்கள் மூலம் யக்ஞத்திற்கு அழகு இருக்கின்றது. அதனால் தங்களை மிகவும் பெரிய பொறுப்பாளி என்று புரிந்து கொள்ளுங்கள். பொறுப்பாளியாக இருக்கிறீர்கள். பாப்தாதா பொறுப்புடைய ஆத்மாக்கள் என்ற ரூபத்தில் பார்க்கிறார். சரி தானே! அனைவரும் விசேஷமானவர்கள். விசேஷ தன்மையும் கூடவே இருக்கின்றது. அந்த விசேஷ தன்மையின் மூலம் அனைவரையும் நடத்துங்கள். மேலும் முன்னேறுங்கள். நல்லது.

தாதிஜி, தாதி ஜானகிஜியிடம்: நன்றாக இருக்கின்றது. இரண்டு தாதிகளும் மிகவும் நன்றாக பாலனை செய்து கொண்டு இருக்கின்றீர்கள். நன்றாக பாலனை நடந்து கொண்டு இருக்கின்றது. மிகவும் நல்லது. சேவைக்காக நிமித்தமானவர்களாகி உள்ளீர்கள். உங்கள் அனைவர்க்கும் கூட தாதிகளை பார்த்து குஷி ஏற்படுகிறது. குஷி ஏற்படுகிறது இல்லையா? பொறுப்புடன் சுகம் கூட கிடைக்கிறது அல்லவா? அனைவரின் ஆசீர்வாதங்கள் எவ்வளவு கிடைக்கிறது. அனைவருக்கும் குஷி ஏற்படுகிறது. (இரண்டு தாதிகளும் பாப்தாதாவை அணைத்து கொண்டனர்) எப்படி இதைப் பார்த்து குஷி ஏற்படுகிறதோ, அதேபோல் இவர்கள் மாதிரி ஆகி விட்டால் எத்தனை குஷி கிடைக்கும். ஏனெனில் பாப்தாதா நிமித்தமாக ஆக்கியுள்ளார் எனில் ஏதாவது விசேஷதா இருக்கும். அதனால் தான் நிமித்தமாக ஆக்கியுள்ளார். மேலும் இந்த விசேஷத்தன்மைகள் உங்கள் ஒவ்வொருவரிடமும் வந்துவிட்டால் என்ன ஆகும்? உங்களுடைய ராஜ்யம் வந்து விடும். பாப்தாதா சொன்ன தேதி வந்து விடும். இப்பொழுது நினைவு இருக்கின்றது அல்லவா! தேதி நிர்ணயிக்க வேண்டும் என்று ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டும். நான் செய்ய வேண்டும் என்று அனைவரும் நிமித்தமாகி விட்டால் உலகத்தின் புதிய படைப்பு ஆகியே தீரும். நிமித்தமான உணர்வு இது தான் குணங்களின் சுரங்கம். ஒவ்வொரு சமயம் நிமித்தமான உணர்வு வந்து விட்டால் மற்ற அனைத்து குணங்களும் சகஜமாக வந்து விடும். ஏனெனில் 'நிமித்த' உணர்வில் நான் என்பது கிடையாது. நான் என்பது தான் குழப்பத்தில் கொண்டு வருகிறது. நிமித்தமாவது மூலம் என்னுடையது என்பதும் அழிந்து, உன்னுடையது, ஆகி விடும். சகஜயோகி ஆகி விட்டீர்கள் அதனால் அனைவர்க்கும் தாதிகளிடம் அன்பு உள்ளது. பாப்தாதாவிடம்

அன்பு உள்ளது என்றால் அன்பிற்கு பதிலாக விசேஷ தன்மைகளில் சமமமாகுங்கள். இப்படிப்பட்ட லட்சியம் வையுங்கள். விசேஷ தன்மைகளில் சமமாக்குங்கள். யாராக இருந்தாலும் ஏதாவது ஒரு விசேஷத் தன்மையைப் பாருங்கள். விசேஷத் தன்மையைப் பின்பற்றுங்கள். ஆத்மாவை பின்பற்றுவதில் இருவரும் தெரிவார்கள். விசேஷத்தாவை பாருங்கள். அதில் சமம் ஆகுங்கள். நல்லது.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋❋❋❋

## 17.02.2004 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## சிவராத்திரி பிறந்த நாள் உற்சவத்தின் விசேஷ சுலோகம் -அனைவருக்கும் சகயோகம் (ஒத்துழைப்பு) கொடுங்கள் மேலும் சகயோகியாக மாற்றுங்கள். அகண்ட பண்டாரா (யக்ஞம்) தொடர்ந்து நடந்து கொண்டிருக்கட்டும்!

இன்று பாப்தாதா சுயம் தன் கூடவே குழந்தைகளின் வைர சமமான பிறந்த நாள் -சிவஜெயந்தியைக் கொண்டாட வந்துள்ளார். குழந்தைகளாகிய நீங்கள் அனைவரும் தமது பரலௌகீக் மற்றும் அலௌகீக் தந்தையின் பிறந்த நாள் கொண்டாட வந்துள்ளீர்கள். தந்தை உங்கள் பிறந்த நாளைக் கொண்டாட வந்துள்ளார். பாபா குழந்தைகளின் பாக்கியத்தைக் கண்டு புன்சிரிக்கின்றார், ஆஹா! என்னே என் பாக்கியசாலியான குழந்தைகள்! உலகின் அஞ்ஞான இருளை அகற்ற பாபாவின் கூடவே அவதரித்துள்ள குழந்தைகள். முழு கல்பத்தில் வேறு எவரது பிறந்த நாளும் இம்மாதிரி இருக்க முடியாது ஆனால் குழந்தைகள் பாபாவுடன் கூடவே கொண்டாடுகிறீர்கள். இந்த அலௌகீக மிகவும் அன்பான, மிகவும் பிரியமான நன்னாளை பக்த ஆத்மாக்களும் கொண்டாடுகின்றனர் ஆனால் நீங்கள் சந்திக்கிறீர்கள். பக்த ஆத்மாக்கள் வெறும் மகிமை மட்டும் செய்கின்றனர். மகிமையும் செய்கின்றனர், கூப்பிடவும் செய்கின்றனர். பாப்தாதா பக்தர்களின் மகிமை மற்றும் அழைப்பைக் கேட்டு அவர்களுக்கு நம்பர் பிரகாரம் பாவனையின் பலனைத் தரத்தான் செய்கிறார் ஆனால் குழந்தைகள் மற்றும் பக்தர்கள் இருவரிலும் மிகுந்த வேறுபாடு உள்ளது. நீங்கள் செய்துள்ள சிரேஷ்ட கர்மம், சிரேஷ்ட பாக்கியம் ஆகியவற்றின் ஞாபகார்த்தத்தை மிக நன்றாகக் கொண்டாடுகின்றனர். எனவே பாப்தாதா பக்தர்களின்

பக்தியின் லீலையைப் பார்த்து அவர்களுக்கும் வாழ்த்து தெரிவிக்கின்றார். ஏனெனில் நினைவுச்சின்னமெல்லாம் நன்றாகவே காப்பியடித்திருக்கிறார்கள். அவர்கள் கூட (பக்தர்கள்) இதே நாளில் விரதம் இருக்கின்றனர். அவர்களுடைய விரதம் சிறிது நேரத்திற்குத்தான். உணவு முறை மற்றும் சுத்தமாக இருப்பதும் அல்ப காலம் தான் ஆனால் நீங்கள் முழுமையாக தூய்மையாக இருப்பதற்காக விரதம் எடுக்கிறீர்கள். இதில் உணவு, பழக்கம், சொல், செயலில் முழு பிறவிக்காகவும் விரதம் மேற்கொள்கிறீர்கள். எதுவரை சங்கம யுக வாழ்வில் வாழ வேண்டுமோ அதுவரை மனம் சொல் செயலில் முழு பிறவிக்காகவும் விரதம் மேற்கொள்கிறீர்கள். எதுவரை சங்கமயுக வாழ்வில் வாழ வேண்டுமோ அதுவரை மனம் சொல் செயலில் பவித்திரமாய் ஆகத்தான் வேண்டும். நீங்கள் மட்டும் இருந்தால் போதாது, பிறரையும் ஆக்க வேண்டும். பக்தர்களின் புத்தி கூட குறைவானதல்ல, நினைவுச்சின்னத்தை நன்றாக காப்பியடித்துள்ளனர். நீங்கள் அனைவரும் வீணானதை சமர்ப்பணம் செய்து சக்திசாலியாக ஆகியுள்ளீர்கள் அதாவது தனது தூய்மையற்ற வாழ்க்கையை சமர்ப்பணம் செய்து விட்டீர்கள். உங்களுடைய இந்த சமர்ப்பணத்தின் நினைவுச்சின்னமாக பக்தர்கள் பலி இடுகிறார்கள் ஆனால் அவர்கள் தங்களை சமர்ப்பணம் செய்வதில்லை, ஆட்டை பலியிடுகிறார்கள். பாருங்கள், எவ்வளவு நன்றாக காப்பியடித்துள்ளனர், ஆட்டை ஏன் பலி இடுகிறார்கள்? இதைக் கூட நன்றாக காப்பியடித்துள்ளனர், ஆடு என்ன செய்கிறது? மே-மே (நான்-நான்) என்று கத்துகிறது தானே! மேலும் நீங்கள் எதை அர்ப்பணித்தீர்கள்? நான், நான், நான் தேகாபிமானத்தின் நான் என்பதைத் தான். ஏனெனில் இந்த 'நான்' 'நான்' என்பது தான் தேகாபிமானத்தில் கொண்டு வருகிறது. இந்த தேகாபிமானம் அனைத்து தீய குணங்களுக்கும் விதையாக இருக்கிறது.

பாப்தாதா முன்பே கூறி இருக்கின்றார்: என்னவெனில், முழுமையாக அர்ப்பணமாவதில் இந்த நான் என்பது தடையைக் கொண்டு வருகிறது. சாதாரணமான நான் என்கிற உணர்வு, நான் தேகம், தேக சம்பந்தத்தின் நான் என்கிற உணர்வு மற்றும் தேகத்திற்கு வேண்டிய பதார்த்தங்கள் ஆகியவைகளை அர்ப்பணம் செய்வது எளிது. இதை

அர்ப்பணம் செய்து விட்டீர்கள் தானே? இல்லை இதைக் கூட அர்ப்பணம் செய்யவில்லையா? எவ்வளவு நீங்கள் முன்னேற்றம் அடைந்து கொண்டு இருக்கிறீர்களோ அவ்வளவு நான் என்பது கூட மிக சூட்சுமமானதா, ஆகிக் கொண்டே இருக்கிறது. பெரிய ரூபத்தில், மிக வெளிப்படையாக நான், எனது என்பதை அழிப்பது எளிது ஆனால் பரமாத்மாவின் பிறப்புரிமையின் அதிகாரத்தின் மூலம் பெற்ற விசேஷ தன்மைகள் திறமைகள் புத்தியின் வரதானம், ஞான சொரூபமாவதற்கான வரதானம், சேவையின் வரதானம் மற்றும் விசேஷ தன்மைகள், போன்றவைகள் பிரபு எனக்கு வழங்கியது (பிரசாதம்). இவற்றில் என்னுடையது என்று கூறினால் இது தான் நுட்பமான 'நான்' என்பது. 'நான்' என்ன செய்கிறேனோ, 'நான்' என்ன சொல்கிறேனோ, அதுவே சரியானது, அதன்படி தான் நடக்க வேண்டும், இந்த ராயலான 'நான்' என்பது பறக்கும் கலையை சுமையானதாக்கி விடுகிறது. பாபா கூறுகிறார்: 'நான்' என்பதை அர்ப்பணம் செய்ய வேண்டும், பிரபுவின் வரபிசாதத்தில் நான் அல்லது என்னுடையது என்பது இருக்காது. அனைத்தும் பிரபுவின் வரபிரசாதம், பிரபுவின் வரதானம் பிரபுவின் விசேஷத்தன்மை. ஆகவே உங்களுடைய அர்ப்பணம் அவ்வளவு நுட்பமானதாக இருக்கிறது. ஆகையால் சோதனை செய்யுங்கள். சாதாரணமான நான் மற்றும் ராயலான நான் என்ற இரண்டையும் அர்ப்பணம் செய்து விட்டீர்களா? செய்து வீட்டீர்களா? அல்லது செய்து கொண்டிருக்கின்றீர்களா? செய்து தான் ஆக வேண்டும். இறந்து தான் ஆக வேண்டும். சகித்துக் கொண்டு என்று, உங்களிடையே சாதாரணமாய் பேசும்போது நகைச்சுவையாக கூறுகிறீர்கள் இல்லையா? ஆனால் இங்கு இறப்பது என்பது பகவான் மடியில் உயிர் வாழ்வதாகும். இந்த இறப்பு மரணம் கிடையாது. 21-பிறவி தேவ ஆத்மாக்களின் மடியில் பிறவி எடுப்பதாகும். ஆகையால் குஷி-குஷியோடு சமர்ப்பணம் ஆகிறீர்கள் தானே! கதறிக் கொண்டு ஆவதில்லை தானே! இல்லை. பக்தியில் கதறும் ஆட்டை பலியாக ஏற்றுக் கொள்வதில்லை ஆதலால் யார் எல்லைக்குட்பட்ட நான் மற்றும் என்னுடையதில் சந்தோஷமாக சமர்ப்பணம் ஆகின்றார்களோ அவர்கள் அநேக பிறவிகளுக்கு ஆஸ்திக்கு அதிகாரியாகிறார்கள்.

சோதனை செய்யுங்கள்: எந்த விதமான வீணான எண்ணம், வீணான பேச்சு, வீணான நடத்தையை மாற்றம் செய்வதில் சந்தோஷமாக மாற்றம் கொண்டு வருகிறீர்களா அல்லது வலுக்கட்டாயமாக மாற்றம் கொண்டு வருகிறீர்களா?' அன்போடு மாற்றம் செய்கிறீர்களா, அல்லது கஷ்டப்பட்டு மாற்றம் கொண்டு வருகிறீர்களா? எப்போது குழந்தைகளான நீங்கள் பிறவி எடுத்தவுடனேயே தனது வாழ்க்கையில் தொழிலாக இதை ஆக்கி விட்டீர்கள். உலக மாற்றத்தைக் கொண்டு வரும் உலகப் பரிவர்த்தனையாளர்கள். இது உங்கள் அனைத்து பிராமண பிறவியின் தொழில் தானே! உறுதி தானே! கையை உயர்த்துங்கள். கொடியை அசைத்துக் கொண்டிருக்கின்றனர், மிகவும் நல்லது. இன்று கொடி நாள் தானே, மிகவும் நல்லது. ஆகையால் சும்மா அப்படியே கொடியை அசைக்க வேண்டாம். இம்மாதிரி கொடியை அசைப்பது எளிது தான். மனதில் மாற்றத்தைத் கொண்டு வர வேண்டும், தைரியமானவர்கள் தானே! மிகவும் துணிவு இருக்கிறதா? துணிவுள்ளவர்கள் தானே! ஆமாம் அதிகம் துணிவு இருக்கிறது. நல்லது.

பாப்தாதா ஒரு சந்தோஷமான விஷயத்தைப் பார்த்தார். அது எதுவென்று தெரியுமா? பாப்தாதா இந்த வருடத்தில் ஒரு விசேஷ பரிசு ஒன்றை தந்தார். இந்த ஆண்டு எந்த ஒரு காரியத்திலாவது அது சுயமாற்றத்தை கொண்டு வருவதிலோ அல்லது விசேஷமான ஏதேனும் சேவையிலோ மிகத் துணிவோடு இறங்கினால் இந்த ஆண்டில் பாபாவின் அதிகப்படியான உதவி கிடைக்கும் என்கிற வரதானம் கிடைத்துள்ளது. ஆக பாப்தாதா மகிழ்ச்சியான செய்தி அல்லது காட்சியாக எதைப் பார்த்தார்? இந்த முறை சிவஜெயந்தி சேவையில் நாலாபுறமும் நல்ல நல்ல முறையில் துணிவோடு மற்றும் உற்சாகம் ஆர்வத்தோடு முன்னேறிக் கொண்டிருக்கின்றனர். இதற்கு கைதட்ட வேண்டுமா? தட்டுங்கள் நீண்ட கரவொலி எழுப்புகின்றனர். சதா இவ்வாறு கை தட்டுவீர்களா? அல்லது சிவராத்திரிக்கு மட்டும் தானா? எப்பொழுதுமே தட்டிக் கொண்டிருங்கள். நல்லது. மதுபனுக்கு செய்திகளை நாலா புறங்களிலிருந்தும் எழுதுகின்றனர். பாப்தாதாவோ வதனத்திலேயே அவைகளை பார்த்து விடுகின்றார் ஆனால் உற்சாகம் நன்றாக இருக்கிறது. ஒன்றாக கூடி திட்டங்கள் தீட்டி உள்ளனர். இப்படி சேவையில் உலக ஆத்மாக்களிடம் உற்சாகம், ஆர்வம் அதிகரிக்கச் செய்யும் நிமித்தமாக உள்ள தாதியின் பேனா எவ்வளவு அற்புதத்தை

செய்துள்ளது பார்த்தீர்களா? நல்ல ரிசல்ட் கிடைத்துள்ளது. எனவே பாப்தாதா இப்போது ஒவ்வொரு சென்டரின் பெயரையும் கூப்பிட மாட்டார் ஆனால் விசேஷமாக அனைத்து தரப்பு சேவைகளின் முடிவாக பாப்தாதா ஒவ்வொரு சேவாதாரி குழந்தையின் விசேஷத்தன்மை மற்றும் பெயரை மனதில் கொண்டு பல கோடி மடங்கு வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றார். குழந்தைகள் அவரவர் இடத்திலிருந்தபடியே குஷியில் இருக்கின்றனர் என்பதையும் பார்க்கின்றார். வெளிநாட்டிலும் குஷியடைகின்றனர். ஏனெனில் நீங்கள் அனைவரும் அந்த உலகின் ஆத்மாக்களின் இஷ்ட தேவி மற்றும் தேவர்கள் இல்லையா? பாப்தாதா குழந்தைகளின் சபையைப் பார்க்கும்போது மூன்று ரூபங்களில் பார்க்கின்றார்.

தற்போதைய சுயராஜ்ய அதிகாரி, இப்போது கூட நீங்கள் ராஜாக்களே, லௌகீகத்தில் கூட தந்தை குழந்தைகளைப் பார்த்து என் ராஜா என்றழைக்கின்றார். அவர்கள் ஏழையாக இருந்தாலும் சரி, 'ராஜா' குழந்தை என்றே அழைக்கின்றார் ஆனால் தற்போதைய சங்கமயுகத்தில் ஒவ்வொரு குழந்தையையும் அதிகாரி ராஜா குழந்தையாக பார்க்கின்றார். ராஜா தானே? சுயராஜ்ய அதிகாரி. ஆக தற்போதைய சுயராஜ்ய அதிகாரி, எதிர்காலத்தில் உலகையாளும் விஷ்வ அதிகாரி மற்றும் துவாபர யுகத்திலிருந்து கலியுகத்தில் இதுவரை பூஜிக்கத்தக்க நிலையின் அதிகாரி இந்த மூன்று ரூபங்களில் ஒவ்வொரு குழந்தையும் பார்க்கின்றார். சாதாரணமாக பார்ப்பதில்லை, நீங்கள் எப்படி இருந்தாலும் சரி, ஆனால் பாப்தாதா ஒவ்வொரு குழந்தையையும் சுயராஜ்ய அதிகாரி ராஜா குழந்தையாகப் பார்க்கின்றார். இராஜயோகிகள் தானே! இதில் பிரஜாயோகிகள் எவரும் உள்ளனரா என்ன? பிரஜா யோகிகளா? இல்லை, அனைவருமே ராஜயோகிகள். இராஜ யோகிகள் என்றால் ராஜா. இப்படிப்பட்ட சுயராஜ்ய அதிகாரி குழந்தைகளின் பிறந்த நாளைக் கொண்டாட சுயம் தந்தையே வந்துள்ளார். அதில் பாருங்கள், இரட்டை வெளி நாட்டினராகிய நீங்கள் வெளிநாடுகளிலிருந்து பிறந்த நாள் கொண்டாட வந்துள்ளீர்கள். இரட்டை வெளிநாட்டினர் கை தூக்குங்கள் பார்ப்போம். மிக அதிக தூர நாட்டிலிருந்து யார் வந்துள்ளார்? அமெரிக்கா, அல்லது அதை விட தூரத்திலிருந்து எவரும் வந்துள்ளீர்களா? ஆனால் பாப்தாதா எங்கிருந்து வந்துள்ளார். பாப்தாதா பரந்தாமத்திலிருந்து வந்துள்ளார்.

குழந்தைகள் மீது அவ்வளவு அன்பு! ஆக, பிறந்த நாள் எவ்வளவு சிரேஷ்டமானது, அதனால் பகவான் கூட வர வேண்டியுள்ளது. பிறந்த நாள் வாசக பேனர் அனைத்து மொழிகளிலும் உள்ளதை காண்பிக்கின்றனர். ஆம், இது நன்றாகத் தயாரித்துள்ளனர். அனைத்து மொழிகளிலும் எழுதப்பட்டுள்ளது. பாப்தாதா அனைத்து தேசங்களின் அனைத்து மொழிகளையும் சார்ந்த குழந்தைகளுக்கு பிறந்த நாளின் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறார்.

பாருங்கள் பாபாவிற்கு சிவஜெயந்தி கொண்டாடுகின்றனர் ஆனால் பாபா என்னவாக உள்ளார்? புள்ளி! (பிந்து) புள்ளியினுடைய ஜெயந்தி, அவதார நாளைக் கொண்டாடுகின்றனர். எல்லோரையும் விட வைரத்திற்கு சமமான ஜெயந்தி யாருடையது? பிந்துவுடையது. புள்ளி தான் ஆனால் புள்ளிக்கு எவ்வளவு மகிமை பாருங்கள். இதனால் சதா மூன்று புள்ளியை நினைவு வைக்கும்படி கூறுகின்றார். எட்டு, ஏழு என்பதை எழுதுவது கூட கொஞ்சம் கஷ்டப்பட்டு எழுத வேண்டும் ஆனால் புள்ளி வைப்பது எவ்வளவு எளிதானது. மூன்று புள்ளியை சதா நினைவில் வையுங்கள். இந்த மூன்று என்னவென்று நன்றாகத் தெரியும் தானே! நீங்களும் புள்ளி! பாபாவும் புள்ளி புள்ளியின் குழந்தை புள்ளி தானே! இந்த நாடக மேடையில் காரியங்கள் செய்வதற்காக வருகின்றீர்கள். இந்த சிருஷ்டி மேடையில் தான் நாடகம் நடக்கிறது. ஆகையால் நாடகத்தில் என்ன காரியம் செய்தீர்களோ அது முடிந்து விட்டது அதற்கு முற்றுப்புள்ளி வையுங்கள். அதனால் முற்றுப்புள்ளி என்றால் என்ன? புள்ளி! எனவே மூன்று புள்ளியை சதா நினைவில் வையுங்கள். முழு அதிசயத்தைப் பாருங்கள். இப்பொழுது உள்ள உலகத்தில் எல்லோரையும் விட அதிகமான மகத்துவம் எதனுடையது பணம்! பணத்திற்குத் தான் அதிக மகத்துவம் இருக்கிறது இல்லையா! தாய் தந்தையர்கள் கூட முக்கியம் இல்லை. பணம் தான் முக்கியமாக இருக்கிறது. இதில் கூட பாருங்கள் ஒன்றுக்கு பக்கத்தில் புள்ளி வைத்தால் என்னவாகுது? பத்தாகிறது இல்லையா! இன்னொரு புள்ளி வைத்தால் (ஜீரோ) 100-ஆகின்றது. மூன்றாது புள்ளி வைத்தால் 1000-ஆகி விடும். ஆகையால் புள்ளியின் அதிசயம் பார்த்தீர்களா? பைசாவில் கூட புள்ளியின் அதிசயம் உள்ளது. மேலும் சிரேஷ்ட ஆத்மா ஆவதில் கூட புள்ளியின் அதிசயம் (கமால்) உள்ளது. மற்றும் செய்பவர், செய்விப்பவர் கூட புள்ளி தான். ஆகையால் நாலா புறமும் எதற்கு

மகத்துவம் உள்ளது புள்ளிக்கு தானே! புள்ளியை மட்டும் நினைவில் வையுங்கள் மற்றும் விஸ்தாரத்தில் போகாதீர்கள். புள்ளியை நினைவு செய்ய முடியும். பிந்துவாக மாற்றுங்கள். பிந்துவை நினைவு செய்யுங்கள். மேலும் புள்ளி வையுங்கள் அவ்வளவுதான்! இது தான் முயற்சி. இது கஷ்டமா? இல்லை சுலபமா? யார் சுலபமானது என்கின்றீர்களோ அவர்கள் கை தூக்குங்கள். புள்ளி வைப்பது சுலபம். ஏதாவது பிரச்சனை வரும்போது புள்ளி வைக்கின்றீர்களா அல்லது கேள்விக்குறியா? கேள்விக்குறி போடாதீர்கள் புள்ளி வையுங்கள். கேள்வி குறி எவ்வளவு கோணலாக இருக்கிறது, பாருங்கள். எழுதிப்பாருங்கள், கேள்விக்குறி எவ்வளவு கோணலாக உள்ளது மற்றும் புள்ளி எவ்வளவு சுலபம். ஆகையால் புள்ளி வைப்பதற்கு வருகிறதா? எவ்வளவு புத்திசாலி. பாப்தாதா சேவையின் ஊக்கம் உற்சாகத்திற்கு வாழ்த்து தெரிவிக்கின்றார். மிகவும் நன்றாக சேவை செய்கின்றீர்கள். செய்து கொண்டே இருப்பீர்கள் ஆனால் பாபா கூட ஒவ்வொரு சமயமும், ஒவ்வொரு நாளும் உங்களுடைய உலக சேவாதாரி (World Servant) ஆக இருக்கின்றேன் என்று கூறுகின்றார்.

உங்களுக்கு நினைவு இருக்கின்றதா -பிரம்மாபாபா கையெழுத்து எப்படி போடுவார் என்று? உலக சேவதாரி. ஆகையால் உலக சேவாதாரியாக இருக்கின்றீர்கள், ஆனால் வெறும் சிவராத்திரி சேவை மூலம் உலக சேவை முடிந்து விடவில்லை. லட்சியம் வையுங்கள் நான் உலக சேவாதாரியாக இருக்கின்றேன் என்று, ஆகையால் உலக சேவை ஒவ்வொரு மூச்சிலும், ஒவ்வொரு செகண்டிலும் செய்ய வேண்டும். யார் வருகின்றார்களோ, யாருடைய தொடர்பில் இருந்தாலும் அவர்களுக்கு வள்ளலாக மாறி ஏதாவது கொடுத்து தான் ஆகவேண்டும். வந்து விட்டு வெறும் கையோடு போகக் கூடாது. அகண்ட பண்டாராவானது எப்பொழுதும் திறந்தே இருக்க வேண்டும். குறைந்தது ஒவ்வொருவருக்காக சுப பாவனை மற்றும் சுபமான உணர்வு இதை அவசியம் கொடுங்கள். சுபமான உணர்வோடு சம்மந்தத்தில் வாருங்கள். மேலும் சுப பாவனையோடு அந்த ஆத்மாக்களுக்கு சகயோகம் கொடுங்கள். இப்பொழுது எல்லா ஆத்மாக்களுக்கும் உங்களுடைய சகயோகம் (உதவி) ரெம்ப ரெம்ப அவசியமாக உள்ளது. ஆகையால் சகயோகம் கொடுங்கள் மற்றும் சக யோகியாக மாற்றுங்கள். ஏதாவது ஒரு விதத்தில் சகயோகம் மனதினுடையதானாலும், சொல்லின்

மூலமானாலும் தொடர்பிலும் கூட சகயோகம் கொடுங்கள். சம்மந்தம் தொடர்பிலும் சகயோகம் கொடுங்கள். இந்த சிவராத்திரி பிறந்த நாள் பண்டிகையினுடைய விசேஷ சுலோகன் நினைவில் வையுங்கள்- சகயோகம் கொடுங்கள் மற்றும் சகயோகியாக மாற்றுங்கள்! குறைந்தது அருகாமையில் யார் வந்தாலும் சரி, சம்பந்தத்தில் வந்தாலும் சரி, சம்பந்தத்தில் எவரேனும் வரத்தான் செய்கின்றனர். அவர்களுக்கு வேறு உபசாரம் செய்யத் தேவையில்லை, உள்ளத்தை மகிழ்விக்கும் இனிப்பு தாருங்கள். இங்கே ஆனால் ஒவ்வொருவருக்கும் பண்டாராவில் (சமையல் கூடம்) ஆகிறதே அந்த இனிப்பு அல்ல, உள்ளத்தை மகிழ்ச்சியாக்கி விடுங்கள். அந்த இனிப்பு ஊட்டுவீர்களா? அதில் எந்த கஷ்டமும் இல்லையே!

தனிப்பட்ட முயற்சியோ அல்லது நேரமோ செலவழிக்கத் தேவையில்லை. சுப பாவனையுடன். மனதை மகிழ்விக்கும் இனிப்பை எல்லோருக்கும் கொடுங்கள். நீங்களும் மகிழ்ச்சி அடையுங்கள் மற்றவர்களையும் அடையச் செய்யுங்கள். குஷியுடன் இருங்கள், மற்றவரையும் குஷி அடையச் செய்யுங்கள். எப்பொழுதும் உங்கள் அனைவரின் முகமும் சீரியஸை (கடுமையை) வெளிப்படுத்தக்கூடாது. அதிகமான சீரியஸ் நிலை வெளிப்படுத்துவதும் நல்லதல்ல. சதா புன்முறுவலுடன் இருக்க வேண்டும். மிகுந்த கவலையுடன் தன்னை எங்கோ இழந்து விட்ட நிலையில் காணப்படும் நிலையில் இருத்தலாகாது. தன்னை மறந்த நிலையில், பேசிக் கொண்டிருந்தாலும் சரி, பார்வை எங்கோ பார்க்கிறது ஆனால் ஏதோ ஆழ்ந்த உணர்வில் செயல்படுவது போல் முகமலர்ச்சி அற்று செயல்படுவது அழகல்ல. முகத்தை எப்பொழுதும் சீரியஸ் ஆக வைக்கக்கூடாது. இதை எப்படிச் செய்வது, என்ன செய்வது, இவ்வளவு காரியங்கள் செய்ய வேண்டுமே தீவிரமான முயற்சி செய்ய வேண்டியிருக்கிறதே, என்ற அழுத்தத்தில் வந்து விடக்கூடாது. சுமையாக கருதக் கூடாது. நம்முடைய நிலையானது காரியம் எவ்வளவு கடுமையாகவும், சீரியஸாகவும் இருந்தாலும் அந்த அளவிற்கு ஏற்ப நம்முடைய இயல்பான புன்முறுவலும் முகத்தில் வெளிப்பட வேண்டும். அப்படி உங்களால் செய்ய முடிகிறதா? உங்களுடைய ஜடசித்திரங்களை (சிலைகள்) பாருங்கள், எப்பொழுதாவது சீரியஸாக காணப்படுகிறதா? அப்படி முகம் தெரிய வந்தால் அந்த குற்றம் அதை வரைந்த ஓவியனைச்

சார்ந்ததேயாகும். அப்படி உங்களுடைய முகம் சீரியஸாகக் காட்சியளித்தால் உங்களுடைய வாழும் கலை இன்னும் வெளிப்படவில்லை என்றாகிறது. ஆகையால் டீச்சர்கள் என்ன நினைக்கிறீர்கள். நல்லது. உங்களுடைய சேவைக்கு மிக நல்வாழ்த்துக்கள்.

நல்லது. மேலும் உங்களுக்கு பாபா ஒரு நல்ல செய்தியை சொல்ல விரும்புகிறார். பூஜ்ஜிய ஆத்மாக்களாகிய உங்களுக்கு இன்று 36-வகை 'போக்' படைக்கப்படுகிறது ஏன்? உங்களுடைய ஜட சித்திரங்களுக்கு படைக்கிறார்கள் ஆனால் நீங்கள் சாப்பிடுவதில்லை. ஆதலால் இன்று சைத்தன்யமாக 'போக்' செய்வியுங்கள். ஒவ்வொரு குழந்தையும் 36-வகையான 'போக்' எடுத்துக் கொள்வார்கள். 'போக்' பை காணப்படுகிறதா, வெளியே வெளிநாட்டிலே உங்களுடைய சென்டர்களில் இங்கு டி.வி.யில் காணும்போது அதனுடைய வாசனையை எடுத்துக் கொள்ளுங்கள். பாபா உலகத்தில் எல்லா பகுதிகளிலிருக்கும் குழந்தைகளுக்கும் வெளிநாட்டு சென்டர்களில் இருக்கும் குழந்தைகளுக்கும் முதலில் 'போக்' ஊட்டுகிறார். எங்கெங்கிருந்து டீச்சர்ஸ் வந்திருக்கிறீர்களோ எல்லோரும் சாம்பிளாக உங்களுடைய சென்டருக்கு எடுத்துச் சென்று எல்லோருக்கும் பரிமாறுங்கள். உங்களுடைய சுயரூபத்தை வெளிப்படுத்துங்கள். பூஜ்யமான 'போக்' சுவீகாரம் செய்யுங்கள்.

ஒரு நொடியில் உங்களுடைய பூர்வஜ் மற்றும் பூஜிக்கதக்க சொரூபத்தை வெளி கொணருங்கள். உங்களுடைய தேவி, தேவதா சொரூபத்தில் உங்களை நீங்கள் பார்த்துக் கொள்ள முடிகிறதா? ஒவ்வொருவரும் தாங்கள் தேவி தேவதா நிலையில் பூர்வஜ் சங்கமயுகத்திலும் பூர்வஜ் ஆத்மாக்கள் துவாபரயுகத்திலிருந்து பூஜ்யனியமானவர்கள். சத்யுக திரேதாயுகத்தில் ராஜ்ய அதிகாரிகளாக இருந்தீர்கள். உணர்கிறீர்களா? ஆதலால் ஒரு நொடியில் உங்களுடைய எல்லா சங்கல்பங்களையும், முடித்துக் கொண்டு உங்களுடைய பூர்வஜ். பூஜ்ஜினிய சொரூபத்தில் நிலைத்து விடுங்கள்.

போபால் மண்டலத்தின் சேவையின் பங்கு: எழுந்திருங்கள். சேவையினுடைய சிறப்பான பலத்தையும், பழத்தையும்

அனுபவித்தீர்களா? யக்ஞத்தின் சேவை உங்களுடைய கோல்டன் வாய்ப்பாகும். குறைந்ததல்ல. வாயுமண்டலமானது சக்திசாலியான பலத்தை ஏற்படுத்துகிறது. சேவையில் செயல்படும் குழந்தைகளுக்கு எந்த பிராமண ஆத்மாக்களுக்கு சேவை செய்கிறீர்களோ அவர்களுடைய ஆசீர்வாதமும் கிடைக்கிறது. யக்ஞ சேவை வாய்ப்பு கிடைப்பதோ, யக்ஞத்தினுடைய அதிகமான பழத்தையும் பலத்தையும் பெறுவதற்கு என்று அனுபவம் செய்கிறீர்களா? எவ்வளவு சேர்த்து வைத்துக் கொண்டீர்கள், எத்தனை ஜென்மங்களுக்காக? ஒன்று சேர்த்து பையை நிரப்பிக் கொள்ளும் இந்த ஆசீர்வாதங்கள். உங்களுடைய முயற்சியின் வேகத்தை அதிகரிக்கும். லிப்ட் என்ற கிப்ட் உங்களுக்கு கிடைக்கிறது. இதை நிலையாக உறுதி செய்து கொள்வீர்களா? எப்பொழுதும் இந்த ஆசீர்வாதங்களுடன், நிறைவு பெற்றவராக ஆகும் உங்களுடைய சேவைக்கு வாழ்த்துக்கள்.

கல்வித்துறை: கல்வித் துறையைச் சேர்ந்தவர்கள் எழுந்திருங்கள். நல்லது. கல்வியின் மூலமாக ஒவ்வொரு ஆத்மாவிற்கும் நான் யார்? என்ற ஞானத்தை கொடுக்கும் காரியத்தை செய்து கொண்டு தான் இருக்கின்றீர்கள் ஆனால் மேலும் சேவை பாக்கி உள்ளது. குறைந்தது நான் யார்? மேலும் என்னுடைய தந்தை யார்? என்ற ஞானம் அனைவருக்கும் கிடைக்க வேண்டும். நான் யாராக இருக்கின்றேன்? இதை தெரிந்து கொள்ளாமல் இருப்பது ஆச்சரியமான விசயம். நாள் முழுவதும் 'நான்', 'நான்' என்று சொல்கிறார்கள் ஆனால் 'நான்' யார் என்று தெரியவில்லை. அதனால் கல்வித் துறை இப்பொழுது ஒவ்வொரு இடமாகச் சென்று இந்த முதல் பாடத்தை உறுதி செய்யுங்கள். பாவம் இவ்வளவாவது அவர்கள் புரிந்து கொள்ளட்டும். தெரியாதவர்கள் இதை தெரியாமல் இருந்து விடக்கூடாது. அதனால் இரக்க மனம் உடைய ஆத்மாக்கள் தானே! எப்படி பாபா கிருபை காட்டக்கூடியவர், தயை காட்டக்கூடியவர் என்றால் நீங்கள் கூட மாஸ்டர் இரக்கம், தயை காட்டக்கூடியவர்கள் இல்லையா? அதனால் இந்த ஞானத்தின் இரக்கம் காட்டுங்கள். திட்டங்கள் தீட்டி விட்டீர்கள் அல்லவா? புதுப்புது திட்டங்கள், தீட்டுங்கள். சமய அனுசாரமாக சேவையின் நிலை இன்னும் வேகமாகும். ஏனெனில் சமயம் மிகவும் வேகமாக ஓடிக் கொண்டிருக்கிறது. எப்படி சமயம் வேகமாக ஓடிக் கொண்டு இருக்கின்றதோ, சேவை கூட வேகமாக தான் செல்ல

வேண்டும். ஒவ்வொரு துறையும் தனித் தனியாக இருப்பதால் உலகத்தின் அனைத்து தரப்பிலும் உள்ள ஆத்மாக்களுக்கான சேவையின் பக்கம் கவனம் செல்கிறது. அதனால் பாப்தாதாவிற்கு இந்த துறை (விங்) சேவை நன்றாக உள்ளது. மிகவும் நல்லது. இங்கு வந்து சந்திப்பும் கொண்டாடியாகி விட்டது. கூட்டத்தின் சந்திப்பும் முடிந்தது. மேலும் நடைமுறையில் செய்வீர்கள் அல்லவா! வாழ்த்துக்கள். நல்லது.

நாலா பக்கத்திலும் இருந்து அதிகமாக கார்ட் (வாழ்த்து மடல்) மேலும் கடிதங்கள் பாப்தாதாவிடம் வந்து சேர்ந்துள்ளன. உங்கள் அனைவரின் வாழ்த்து மடல் அனைத்து பிராமண ஆத்மாக்களும் பார்த்து குஷி அடைந்து கொண்டு இருக்கிறார்கள். யார் எல்லாம் வாழ்த்து மடல் மேலும் கடிதங்கள் அனுப்பி இருக்கிறீர்களோ, அந்த அனைத்து தேடிக் கண்டுபிடிக்கப்பட்ட செல்லக் குழந்தைகளுக்கு தந்தையின் பிறந்த நாள் மேலும் குழந்தைகளாகிய உங்களின் பிறந்த நாள் வாழ்த்துக்கள். விசேஷமாக எதிரில் அமர்ந்து இருப்பவர்களை விட முதலில் வாழ்த்து மடல், கடிதங்கள் அனுப்பிய உங்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள். இதயத்தின் அடித்தளத்தில் இருந்து அனுப்பியிருக்கிறார்கள் என்றால் இதயத்தின் விசயம் உள்ளத்தை கொள்ளை கொண்டவர் அறிவார். நல்லது. அனேக பாரத தேசத்தின் பல கிளைகளில் ஆர்வம் உற்சாகம் நிறைந்த கடிதங்கள். பாப்தாதாவிற்கான விசேஷ நினைவுக் கடிதங்கள், செய்திகள். தொலைபேசிகள் வந்துள்ளன. எத்தனை பேருடைய பெயர்களை பாபா கூறுவார்? ஆனால் யார் யார் தன்னுடைய உற்சாகம் நிறைந்த செய்திகளைத் தந்துள்ளனரோ, அவர்கள் அனைவருக்கும் பாப்தாதா கண்ணெதிரே கொண்டு வந்து (எமர்ஜ்) தனது உள்ளப்பூர்வமான பதிலுக்கு அன்பு நினைவுகளைக் கூறிக் கொள்கிறார். சேவையில் சதா இவ்வாறு உற்சாகம், ஆர்வத்தோடு பறந்து கொண்டேயிருங்கள். நல்லது.

நாலா புறங்களிலும் உள்ள அலௌகீக தெய்வீக அவதாரம் எடுத்துள்ள குழந்தைகளுக்கு தந்தையின் பிறந்த நாள் மற்றும் குழந்தைகளின் பிறந்த நாளின் ஆசீர்வாதங்கள்! மற்றும் அன்பு நினைவுகள், உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் பாபாவின் உள்ளத்தில் குடி கொண்டுள்ள வலது கரமான சேவாதாரி குழந்தைகள் சதா நிறைந்துள்ளனர். ஆக இம்மாதிரி உள்ளத்து சிம்மாசன பீடத்தில்

வீற்றிருக்கும் சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு சதா பிந்துவின் மகத்துவத்தை உணர்ந்து இருக்கக்கூடிய, அறிந்திருக்கக்கூடிய சிரேஷ்ட பிந்து சொரூப குழந்தைகளுக்கு சதா தங்களது சுவமான ஸ்திதியில் நிலைத்திருந்து அனைவருக்கும் மரியாதை தரக்கூடிய சுவமான்தாரி ஆத்மாக்களுக்கு, சதா வள்ளலின் குழந்தைகள் மாஸ்டர் வள்ளலாகி ஒவ்வொருவருக்கும் தனது அகண்ட பொக்கிஷத்திலிருந்து ஏதேனும் வழங்கக் கூடிய மாஸ்டர் வள்ளலான குழந்தைகளுக்கு பாப்தாதாவின் மிக மிக பல கோடி மடங்கு கோகினூர் வைரத்தை விட அதிகமான பிரபுவின் கண்மணி குழந்தைகளுக்கு பிரபுவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

**அனைத்து தாதிகள் மற்றும் தாதி ஜானகிஜியுடன்:** சக்கரவர்த்தியின் சம்ஸ்காரம் அதிகமாய் உள்ளது. சக்கரவர்த்தியாகி சுற்றுவது (நாடு நாடாக) நன்றாய் இருக்கிறதா? பாபாவை அனைவரும் பார்க்கட்டுமே! பார்க்கத்தான் வேண்டும் ஆனால் அதற்கு குழந்தைகள் சற்று எவரெடியாகலாம் தானே! ஒவ்வொரு சமயத்திலும் எவரெடியென்றால் ஆகி விடும். பார்ப்பார்கள். பேசுவார்கள் கூட ஆஹா! ஆஹா பிரபுவே! என்றும் உணர்ச்சி பொங்குவார்கள் ஆனால் குஷியோடு அல்ல பட்சாதாபப்படும் முறையில், எப்படியாகிலும் நிச்சயம் பேசுவார்கள். அனைவரும்மாக உள்ளீர்களா? சந்தோஷமாய் இருக்கிறீர்கள். உங்களுடைய ஒட்டுமொத்த ஒத்துழைப்பைக் கண்டு அனைவரும் எவ்வளவு குஷி அடைகிறார்கள். நீங்கள் ஏதோ கூறுகிறீர்கள், செய்வதில்லை, ஆனாலும் குஷி தருகிறீர்கள், தூண்கள் இல்லையா? அனைவரும் எவ்வளவு உறுதியான தூண்கள்? தூண்களின் உறுதி காரணமாய் பிறர் மேலும் உறுதியாக முன்னேறி சென்று கொண்டிருக்கின்றனர். குழந்தைகள் சற்று அசைந்தாலும், தூண்கள் அவர்களுக்கு ஆதாரமாகி விடுகின்றன.

**ஹைதரபாத்தின் சகோதரர் கே.எஸ். ராஜு அவர்களுடன்:** இப்போது சீக்கிரம் சீக்கிரமாக அருகில் வந்து கொண்டிருந்தால், அனைத்து காரியங்களும் சரியாய்ப் போய்விடும். தற்போது வேலைகளுக்குப் பின்னால் போக வேண்டாம்! வேலைகள் உங்கள் பின்னால் வரட்டும். சீக்கிரம் சீக்கிரமாய் வர வேண்டும். இவ்வளவு தாமதம் செய்ய வேண்டாம். வேலை அனைத்தும் எளிதாகி விடும். (தங்கள்

கட்டளைப்படி) இங்கே வந்து கொண்டே, சக்தி எடுத்துக் கொண்டிருந்தால் கர்மத்தில் யோகம் உதவிக்கு வரும் சரிதானே! கர்மயோகி அதிகம் அதன் பின்னால் போவது சரி வராது. நிழல் எப்படியோ அப்படி! அதன் பின்னால் போனால் முன்னால் ஓடிக் கொண்டே இருக்கும், திரும்பி நீ முன்னால் சென்றால் அது உன் பின்னால் வரும். அது போலத்தான் இதுவும்.

கர்நாடக உயர்நீதி மன்ற நீதிபதியுடன்: உலக மாற்றத்திற்கான பணி இங்கே நடைபெற்று வருகிறதே, அதில் நீங்களும் சகயோகி ஆத்மா, உங்களது காரியமும் சிறப்பானதே, ஆத்மாக்களுக்கு அறிவு கிடைக்கிறது. அனைவருமே மாற்றத்தை விரும்புகின்றனர். மாற்றத்திற்கான உத்வேகம் இங்குள்ளது. அதில் தாங்களும் நன்கு ஒத்துழைப்பு தருகிறீர்கள். மேலும் சகயோகியாகயிருப்பதால் யோகியாகவும் இருப்பீர்கள். வெறும் சகயோகியாக மட்டுமிராதீர்கள், யோகியாகவும், சகயோகியாகவும் இருங்கள். கர்மயோகி ஆக வேண்டும். கர்மத்தை விட்டு விட வேண்டாம். கர்மம் மற்றும் யோகத்தின் சமநிலை வேண்டும். எவ்வளவு சமநிலை வைப்பீர்களோ அத்துணை ஆசீர்வாதம் கிடைக்கும். மேலும் பிரயத்தனம் (கஷ்டப்பட்டு உழைப்பது) குறைவு. பிராப்தி அதிகம். அவரது துணைவியாரைப் பார்த்து இவரும் கூடவே இருக்கிறார்.

வெளிநாட்டு முக்கிய சகோதரிகளுடன்: தற்போது வெளிநாட்டினருக்கு விசேஷ முறை கிடைக்க வேண்டும்! மிகச் செல்லமானவர்கள் இல்லையா! பாப்தாதா குஷி அடைகிறார். மூலை முடுக்குகளிலெல்லாம் உள்ள ஆத்மாக்கள் வஞ்சிக்கப்பட்டு விடக் கூடாது. இந்த உற்சாகம் ஆர்வத்தோடு செய்கிறீர்கள், பலனும் மிக நன்றாய்க் கிடைத்து வருகிறது. எந்த புகாரும் வர முடியாது. ஆக பாப்தாதாவுக்கும் மகிழ்ச்சி தான். இன்னும் சில நாடுகள் விட்டுப் போயுள்ளன, அவைகளிலும் அக்டோபருக்குள் செய்தி தர திட்டமிடுகின்றனர். நமது சகோதர சகோதரிகள் தான். எனவே இரக்கப்பட்டு தான் ஆக வேண்டும். செய்தி கிடைக்கட்டும், பிறகு அவர்களது பாக்கியம்.

# 2004 அவ்யக்த முரளி

அன்பான பாப்தாதா தனது மலர் கரங்களால் மேடை மீது கொடியேற்றினார். மற்றும் அனைத்து குழந்தைகளுக்கும் 68வது திரிமூர்த்தி சிவஜெயந்தி விழாவின் நல்வாழ்த்துக்களை வழங்கினார்! உங்கள் அனைவரின் உள்ளத்தில் பாப்தாதாவின் நினைவு என்னும் கொடி பறந்து கொண்டு தான் இருக்கின்றது ஆனால் இந்த கொடியை ஒரு நினைவார்த்த ரூபத்தில் ஏற்றிக் கொண்டாடுகிறீர்கள் ஆனால் உங்களது உள்ளத்தில் பாபாவை வெளிப்படுத்தும் கொடி பறந்து கொண்டு இருக்கின்றது. ஒவ்வொருவரின் உள்ளமும் என்ன சொல்கின்றது? ஒவ்வொரு சுவாசமும் என்ன இசைக்கிறது? எனது பாபா (மேரா பாபா) மேலும் பாப்தாதாவும் ஒவ்வொரு வினாடியும் என்ன பாடுகிறார்? எனது இனிமையிலும் இனிமையான குழந்தைகளே! ஒவ்வொரு ஆத்மாவின் உள்ளத்திலும் பாபாவின் பிரத்தியட்சம் என்கிற கொடியை ஏற்றும் அந்த நல்ல நாளை அருகாமையில் கொண்டு வர வேண்டும். எனது பாபா என்று ஒவ்வொரு உள்ளமும் கூற வேண்டும். எதை அடைய வேண்டுமோ அதை அடைந்து விட்டேன், இந்த பாட்டிற்கு நடனம் ஆட வேண்டும், அந்த நாள் வெகு தூரத்தில் இல்லை. ஆஹா பாபா ஆஹா! இந்த முரசொலி சதா நன்றாக ஒலிக்கும். ஆக இன்று பாப்தாதா வெறும் இந்த கொடியை மட்டும் பார்த்துக் கொண்டு இருக்கவில்லை ஆனால் ஒவ்வொரு குழந்தையின் உள்ளத்தில் பாபாவின் பிரத்யட்சதாவின் கொடி அசைந்து கொண்டு இருக்கின்றது என்பதை பார்த்துக் கொண்டு இருக்கிறார். உங்கள் உள்ளத்தில் கொடி ஏற்றப்பட்டுள்ளது. இனிமேல் தான் ஏற்றப்பட வேண்டும் என்பது இல்லை. ஏற்கனவே ஏற்றப்பட்டுள்ளது. ஒரே ஒரு பாபாவே நமது உலகம், அப்படித்தானே! வேறு ஏதேனும் உலகம் உண்டா? பாபா தான் உலகம் பாபாவின் சம்ஸ்காரம் தான் என் சமஸ்காரம். உலகமாகவும் (சன்சார்) இருக்கின்றது, சம்ஸ்காரமாகவும் இருக்கின்றது. அப்படி தானே! உள்நாட்டு வெளி நாட்டுக் குழந்தைகளுக்கு பாபாவின் பிறந்த நாள் கொடியேற்றத்தின் மிக மிக நல்வாழ்த்துக்கள்!

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

## 05.03.2004 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## பலவீனமான சம்ஸ்காரங்களுக்கு, ஈமச்சடங்கு செய்து முடித்து, உண்மையான ஹோலிப் பண்டிகை கொண்டாடுங்கள், அப்போது தான் உலக மாற்றம் உண்டாகும்!

இன்று பாப்தாதா, நாலா பக்கங்களிலுமுள்ள செல்லமான ராஜா குழந்தைகளைப் பார்க்கின்றார். இந்த பரமாத்மாவின் செல்லம், கோடியில் ஒருவராக இருக்கின்ற உங்களைப் போன்ற சிரேஷ்ட ஆத்மாக்களுக்குத்தான் பிராப்தி ஆகிறது. ஒவ்வொரு குழந்தையினுடைய மூன்று ராஜ சிம்மாசனத்தைப் பார்க்கின்றார். இந்த மூன்று மூன்று சிம்மாசனங்களும் முழு கல்பத்தில் இந்த சங்கமயுகத்தில் குழந்தைகளாகிய உங்களுக்குத்தான் பிராப்தி ஆகிறது. மூன்று சிம்மாசனங்களும் தெரிகின்றதா ஒன்று, இந்த பிருகுட்டி எனும் சிம்மாசனம். இதில் ஆத்மா ஜொலித்துக் கொண்டிருக்கிறது. இரண்டாவது சிம்மாசனம் பரமாத்மாவின் மனம் என்னும் சிம்மாசனம். மன சிம்மாசனத்தின் அதிகாரிகள் தானே? மூன்றாவது, வருங்காலத்தின் உலக சிம்மாசனம். மன சிம்மானத்தில் ஆவதன் மூலம் மற்றெல்லாவற்றைக் காட்டிலும் பாக்கியவான் ஆகி விட்டீர்கள். இந்த பரமாத்மாவின் மன சிம்மாசனம் பாக்கியசாலி குழந்தைகளாகிய உங்களுக்குத்தான் பிராப்தியாகிறது. வருங்கால உலக சாம்ராஜ்யத்தின் சிம்மாசனத்தை அடையத்தான் போகிறீர்கள் ஆனால் அதிகாரியாக யார் ஆகிறார்கள்? இந்த சமயத்தில் யார் சுய இராஜ்ய அதிகாரியாகிறார்களோ, அவர்கள் தான் சுய இராஜ்யம் இல்லையேல் விஷ்வ இராஜ்யமும் இல்லை. ஏனென்றால், இந்த சமயத்தில் சுய இராஜ்ய அதிகாரி ஆவதின் மூலமாகவே, விஷ்வ இராஜ்யம் பிராப்தியாகிறது. விஷ்வ இராஜ்யத்திற்கு அவசியமான சம்ஸ்காரம்,

இப்போது தான் தயாராகின்றது. ஆதலால், ஒவ்வொருவரும் தன்னை சுய இராஜ்ய அதிகாரி என்று அனுபவம் செய்கிறீர்களா? வருங்கால இராஜ்யத்தின் மகிமையைப்பற்றி அறிவீர்களா? ஒரு தர்மம். ஒரு இராஜ்யம், சட்டம் மற்றும் ஒழுங்கு, சுகம்-சாந்தி மற்றும் அனைத்து செல்வங்களும் (சம்பத்தி) நிறைந்த இராஜ்யம். நினைவுக்கு வருகிறதா? எத்தனை முறை என்று, ஞாபகம் இருக்கிறதா? தெளிவாக நினைவுக்கு வருகிறதா? அல்லது நினைத்துப் பார்த்தால் தான் ஞாபகத்திற்கு வருகிறதா? நேற்று இராஜ்யம் செய்தீர்கள். நாளை இராஜ்யம் செய்யப்போகிறீர்கள். இப்படித் தெளிவான நினைவு இருக்கிறதா? இப்படித் தெளிவான. நினைவு யாருக்கு வருமென்றால், யார், இப்போது சதா சுய இராஜ்ய அதிகாரியாக இருக்கின்றாரோ, அந்த ஆத்மாவுக்குத்தான். அப்படியானால், சுய இராஜ்ய அதிகாரியா? சதா அதிகாரியா? அல்லது சில சமயங்களில் அவ்வப்போது அதிகாரியா? என்ன சொல்கிறீர்கள்? சதா சுய இராஜ்ய அதிகாரியாக இருக்கின்றீர்களா? இப்போது டபுள் ஃபாரினர்ஸ் (வெளிநாட்டவர்கள்) வந்திருக் கின்றார்கள் அல்லவா? நீங்கள் சதா சுய இராஜ்ய அதிகாரிகளா? பாண்டவர்கள் எப்படி, சதாவா? சதா என்ற வார்த்தைக்குப் பதில் வேண்டும் என்று கேட்கின்றேன் ஏன்? இந்த ஒரு ஜன்மத்தில், இது மிகக் குறைவான சமயம் உள்ள ஜன்மம் தானே! ஆகவே இந்த குறுகிய கால ஜன்மத்திலேயே, சதா சுய இராஜ்ய அதிகாரியாக ஆகவில்லையென்றால், 21-ஜன்மத்திற்கு எப்படி சதா சுய இராஜ்யம் அடைய முடியும்? 21-ஜன்மத்திற்கு இராஜ்ய அதிகாரி ஆக வேண்டுமா? அல்லது எப்போதாவது கொஞ்ச காலம் செய்தால் போதுமா? எது சம்மதம்? சதா ஆகவேண்டுமா? சதா? கழுத்தை யாவது அசைக்கலாமே! நல்லது. 27 ஜன்மத்திற்கு இராஜ்ய அதிகாரி ஆக வேண்டும்; ராஜ்ய அதிகாரி என்றால், ராயல் ஃபேமிலியிலும் (இராஜ குடும்பம்) கூட ராஜ்ய அதிகாரி. கொஞ்சம் சிம்மாசனத் திலும் அமருவீர்கள் தானே ஆனால் அங்கு எவ்வளவு சிம்மாசனத் தின் அதிகார உரிமையோ, அவ்வளவு இராஜ குடும்பத்தினருக்கும் கூட இருக்கிறது. அவர்களையும் இராஜ்ய அதிகாரி என்று சொல் வோமல்லவா! ஆனால், கணக்கு, இப்போதைய சம்மந்தத்தின் தொடர்புடையதாக இருக்கிறது இப்போது சிலசமயம் என்றால் அங்கேயும் கூட சிலசமயம் தான். இப்போது சதா என்றால், அங்கேயும் சதா. ஆதலால் பாப்தாதாவிடமிருந்து சம்பூரண அதிகாரம் பெற வேண்டும். அதாவது நிகழ்காலத்திலும், வருங்காலத்திலும்

முழுமையான 21-ஜன்ம இராஜ்ய அதிகாரி ஆக. வேண்டும் அப்படியானால் டபுள் ஃபாரினர்ஸ் முழு அதிகாரம் அடையக்கூடியவர்களா? அல்லது பாதி அல்லது கொஞ்சம்! என்ன? முழு அதிகாரம் பெற வேண்டுமா? முழுமையாக! ஒரு ஜன்மம் கூட குறையக்கூடாது. அப்படியானால் என்ன செய்ய வேண்டும்? என்ன செய்ய வேண்டியதிருக்கும்?

பாப்தாதா, ஒவ்வொரு குழந்தையையும் சம்பூரண அதிகாரி யாக்குகின்றார். ஆகி விட்டீர்கள் அல்லவா? உறுதியா? ஆவோமா? அல்லது ஆக மாட்டோமா? என்பது கேள்வி ஆகி விட்டீர்களா? அல்லது சில சமயம் ஆவோமா?, மாட்டோமா? என்று கேள்வி எழுகிறதா? ஆகத்தான் வேண்டும். சரி தானே? யார், ஆகத்தான் வேண்டும் என்று நினைக்கிறார்களோ, அவர்கள் கை உயர்த்துங்கள் ஆகத்தான் வேண்டுமல்லவா? நல்லது. நீங்கள் எல்லோரும் எந்த மாலையின் மணி ஆகப் போகிறீர்கள்? 108? இங்கே எத்தனை பேர் வந்திருக்கிறார்கள்? இவர்கள் எல்லோரும் 108'ல் வர வேண்டுமா? இங்கே 1800-பேர் இருக்கிறார்கள். அப்படியானால், 108-மணி மாலையை பெரிதாக்கலாமா? நல்லது. 16-ஆயிரம் நன்றாக இல்லை. 16-ஆயிரத்தில் போவீர்களா என்ன? போக மாட்டீர்கள் தானே! இந்த நிச்சயம், உறுதியாக இருக்கிறது. இப்படி அனுபவம் இருக்கிறது. நாங்கள் ஆகவில்லையேல், வேறு யாரால் ஆக முடியும்? இப்படிப்பட்ட நஷா இருக்கிறதா? நீங்கள் ஆகவில்லையேல், வேறு யாரும் ஆக மாட்டார்கள், இல்லையா? நீங்கள் தான் ஆகப்போகிறீர்கள் அல்லவா? சொல்லுங்கள். நீங்கள் தான் ஆகப் போகிறீர்கள் அல்லவா! பாண்டவர்கள் நீங்கள் தான் ஆகப் போகிறீர்களா? நல்லது. பின்னால் இருப்பவர்கள், நீங்களும் ஆகப் போகிறீர்கள். உங்களுடைய கண்ணாடியில் பார்த்தீர்களா? சாட் சாத்காரம் செய்திருக்கிறீர்களா? பாப்தாதா ஒவ்வொரு குழந்தை யின் நிச்சயத்தைப் பார்த்து, பலியாகி விடுகிறார். வாஹ்! ஒவ்வொரு குழந்தையும் வாஹ்! வாஹ், வாஹ் (ஆகா, ஆகா..) தகுதிக்குரியவர்கள் தானே? வாஹ்! வாஹ்! என்று கூறலாமா ? ஏன்? ஏன் (Why..Why..) (கேள்விக்குறி) இல்லை தானே? அவ்வப்போது கேள்விக்குறியாகி விடுகிறதா? இல்லையா? ஒன்று ஒய் (why), மற்றொன்று ஹாய் (hai), மூன்றாவது கிராய் (cry). ஆகவே நீங்கள் வாஹ், வாஹ்காரர்கள் தானே!

பாப்தாதாவுக்கு டபுள் ஃபாரினர்ஸ் பற்றி பெருமையாக இருக்கிறது. ஏன்? பாரதவாசிகளோ, பாபாவை பாரத்தில் அழைத்து விட்டார்கள், ஆனால் டபுள் ஃபாரினர்ஸ் பற்றி எதற்காக பெருமை என்றால், பாப்தாதாவை டபுள் ஃபாரினர்ஸ் தங்களுடைய உண்மையான அன்பு எனும் கயிற்றால் கட்டிப் போட்டு விட்டார்கள். மெஜாரிட்டி உண்மையானவர்களாக இருக்கிறார்கள். ஒரு சிலர் மறைக்கவும் செய்கிறார்கள். ஆதலால் மெஜாரிட்டி தங்கள் பலவீனத்தை உண்மையாக பாபாவிடம் கூறி விடுகிறார்கள். ஆதலால் பாபாவுக்கு எல்லாவற்றிலும் சிறந்த பொருளாக இருப்பது உண்மை தான். ஆகவே தான் பக்தியில் (God is Truth) உண்மையே கடவுள் என்கிறார்கள். எல்லாவற்றிலும் பிரியமான பொருள் உண்மை. ஏனெனில் எங்கே உண்மை இருக்கிறதோ, அங்கு சுத்தமும் இருக்கும். கிளீன் மற்றும் கிளியர் ஆக இருக்கும். ஆகவே தான் பாப்தாதாவை டபுள் ஃபாரினர்ஸ்களிடம் இருக்கும் உண்மையான அன்பு எனும் கயிறு இழுக்கிறது. சிற்சிலரிடம் கொஞ்சம் கலப்படம் இருக்கிறது ஆனால் டபுள் ஃபாரினர்ஸ் தங்களிடம் உள்ள இந்த விசேஷத்தை ஒருபோதும் கை விடக் கூடாது. உண்மையை! சத்தியத்தின் சக்தி ஒரு லிஃப்ட் செய்யும் வேலையைச் செய்கிறது. எல்லோருக்கும் உண்மை பிரியமானதாக இருக்கிறதல்லவா? பாண்டவர்களுக்குப் பிரியமானதாக இருக்கிறதா? எப்படியோ. இது மதுபன் வாசிகளுக்கு பிரியமானதாக இருக்கிறது. ஆங்காங்கே பொறுப்பிலுள்ள மதுபன் வாசிகள் கை உயர்த்துங்கள். தாதி இவர்களை புஜங்கள் என்று கூறுகின்றார். இப்போது மதுபன் சாந்திவன் எல்லோரும் கை உயர்த்துங்கள். நன்றாக தூக்கி உயர்த்துங்கள். மதுபன் வாசிகளுக்கு உண்மை பிரிய மானதாக இருக்கிறதா? யாரிடம் உண்மை இருக்கிறதோ, அவருக்கு பாபாவை நினைவு செய்வது மிகவும் சகஜமாக இருக்கும் ஏன்? பாபாவும் சத்தியமானவர் தானே! ஆகவே சத்யமான பாபாவின் நினைவு, சத்தியமானவர்களாக யார் இருக்கின்றார்களோ, அவர்களுக்கு சீக்கிரம் வந்து விடுகிறது. கஷ்டப்பட்டு முயற்சி செய்ய வேண்டியதில்லை. ஒருவேளை இப்போதும்கூட, நினைவு கஷ்டமானதாக இருந்தால், ஏதாவதொரு சூட்சும சங்கல்பத்தில், சொப்பனத்தில் கொஞ்சம் உண்மையின் குறை இருக்கிறது என்று புரிந்து கொள்ளுங்கள். எங்கே உண்மை இருக்கிறதோ, அங்கே சங்கல்பம் செய்தவுடன் பாபா ஆஜராகி விடுகிறார். ஆகவே தான்

பாப்தாதாவுக்கு உண்மை மிகவும் பிரியமானதாக இருக்கிறது. ஆதலால் பாப்தாதா எல்லா குழந்தைகளுக்கும் ஜாடையாக என்ன சொல்கிறார் என்றால் 21-ஜன்மத்திற்கும் முழுமையான ஆஸ்தி அடைய வேண்டுமானால், இப்போது சுய இராஜ்யத்தை சோதித்துப்பாருங்கள் என்பது தான். இப்போது சுய இராஜ்ய அதிகாரியாவது, எவ்வளவு எப்படி ஆகிறோமோ, அவ்வளவு அதிகாரம் தான் பிராப்தியாகும். ஆதலால் சோதியுங்கள். எப்பேர்ப்பட்ட மகிமை இருக்கிறது என்றால், ஒரு இராஜ்யம் என்றால் ஒரே இராஜ்யம் தான் இருக்கும். இரண்டு அல்ல. அப்படியானால், தற்போது சுய இராஜ்ய ஸ்திதியில் சதா ஒரு இராஜ்யம் இருக்கிறதா? சுய இராஜ்யம் இருக்கிறதா? அல்லது சில சமயம் பர இராஜ்யமாகவும் ஆகி விடுகிறதா? எப்போதாவது மாயையின் இராஜ்யம் ஒருவேளை இருந்தால் பர இராஜ்யம் என்று சொல்வீர்களா அல்லது சுய இராஜ்யம் என்று சொல்வீர்களா? ஆகவே சதா ஒரு இராஜ்யம். மாயைக்கு அடிமையாகி விடுவதில்லையல்லவா? சில சமயம் மாயைக்கு? சிலசமயம் சுயத்திற்கு? இதன் மூலமாக, முழு ஆஸ்தியும் இப்போது அடைந்து கொண்டிருக்கிறீர்களா? அடையவில்லை. அடைந்து கொண்டிருக்கிறோம் என்றால், சதா ஒரு இராஜ்யம் இருக்கிறதா? என சோதித்துப் பாருங்கள். ஒரு தர்மம், தர்மம் என்றால் தாரணை. அப்படியானால், விசேஷ தாரணை எது? பவித்திரத்தா. ஒரு தர்மம் இருக்கிறது என்பதன் பொருள் சங்கல்பம், சொப்பனத்திலும் பவித்திரமாக இருக்கிறதா? சங்கல்பத்திலும், சொப்பனத்திலும் ஒருவேளை அபவித்திரத்தாவின் (தூய்மையற்ற) நிழல் படிந்திருந்தால் என்ன சொல்வீர்கள்? ஒரு தர்மம் என்றா? பவித்திரத்தா சம்பூரணமாக இருக்கின்றதா? சோதித்துப் பாருங்கள் ஏன் இல்லை? நேரம் வேகமாகச் சென்று கொண்டிருக்கிறது ஆனால் சுய வேகம் ஒருவேளை மெதுவாகச் சென்று கொண்டிருந்தால் குறித்த நேரத்தில் இலட்சியத்தைச் சென்றடைந்து விட முடியாதல்லவா? ஆதலால் அடிக்கடி சோதியுங்கள். ஒரு இராஜ்யம் இருக்கிறதா? ஒரு தர்மம் இருக்கிறதா? சட்டம் ஒழுங்கு இருக்கிறதா (Law and order) அல்லது மாயை தனது அதிகாரத்தைச் செலுத்துகிறதா? பாமாத்மாவின் குழந்தைகள் சட்டம் ஒழுங்குப்படி நடப்பவர்கள். மாயையின் சட்டம் ஒழுங்கு பிரகாரம் அல்ல. ஆதலால் சோதியுங்கள். வருங்கால சம்ஸ்காரம் இப்போதே தெரியட்டும். ஏனென்றால் அந்த சம்ஸ்காரத்தை இப்போது தான் நிரப்ப வேண்டும். அங்கு சென்ற பிறகு நிரப்புவதல்ல.

இங்கேயே தான் நிரப்ப வேண்டும். சுகம் இருக்கிறதா? சாந்தி இருக்கிறதா? அனைத்துச் செல்வங்களும் உடையவர்களாக இருக்கின்றீர்களா? சுகம் இப்போது சாதனங்களில் ஆதாரப்பட்டதாக இல்லையல்லவா? நிரந்தர சாந்தி (அகண்ட) இருக்கிறதா? குறையுடையதாக இல்லையல்லவா? ஏனெனில் சத்யுக இராஜ்யத்தின் மகிமை எது? அகண்ட சாந்தி, அட்டல் சாந்தி (நிலையான) மற்றும் சம்பன்னம். சம்பத்தியால் என்ன நடக்கும்? சம்பன்னத்தா வரும். சர்வ சம்பத்தி இருக்கிறதா? சம்பத்தி -ஞானம், குணம், சக்திகள்! சம்பத்தி இருக்கிறது என்பதன் அடையாளம் என்ன? ஒருக்கால் நான் சம்பத்தியில் சம்பன்னமாக (நிறைந்து) இருக்கிறேன் என்பதன் அடையாளம் எது? திருப்தி. எல்லா பிராப்திகளுக்கும் ஆதாரம் சந்துஷ்டத்தா (திருப்தி). அதிருப்தி (அசந்துஷ்டத்தா) அபிராப்தியின் சாதனம் (அடையவில்லை என்பது) ஆகவே சோதியுங்கள். ஏதாவது ஒரு விசேஷத்தில் கூட குறை இருக்கக் கூடாது. ஆகவே இந்த மாதிரியாக சோதித்துப் பார்க்கிறீர்களா? செய்கிறீர்களா? உங்களுடைய முழு உலக வாழ்க்கையும், இப்போதைய சம்ஸ்காரத்தின் மூலம் உருவாக்க வேண்டும். தற்போதைய சம்ஸ்காரம் தான் வருங்காலத்தில் இருக்கும். ஆகவே, நீங்கள் எல்லாரும் என்ன சொல்கிறீர்கள்? நீங்கள் யார்? விஷ்வ பரிவர்த்தக் தானே? அதாவது உலக மாற்றம் செய்பவர்கள் தானே? அவ்வாறானால், உலக மாற்றத்திற்கு முன்பாக சுய மாற்றம். ஆதலால் எல்லோரும் இந்த சம்ஸ்காரம் தன்னிடம் உள்ளதா என்பதை சோதியுங்கள். இதன் ஆதாரத்தில் நான் 108-மணி மாலையில் இருக்கிறேன் அல்லது முன்பின்னாக இருக்கிறேன் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். இந்த சோதனை ஒரு கண்ணாடி இந்தக் கண்ணாடியில், தன்னுடைய தற்போதைய மற்றும் வருங்காலத்தைப் பாருங்கள். பார்க்க முடியுமா?

இப்போது ஹோலி கொண்டாட வந்திருக்கிறீர்கள் அல்லவா? ஹோலி கொண்டாட வந்திருக்கிறீர்கள் நல்லது. ஹோலியினுடைய அர்த்தம் என்னவென்று வர்ணனை செய்யப்பட்டதல்லவா? செய்யப்பட்டதல்லவா? ஆதலால் பாப்தாதா இன்று விசேஷமாக டபுள் ஃபாரினர்ஸ்களுக்குக் கூறுவது என்னவென்றால், மதுபன் வாசிகள் உடன் இருக்கிறார்கள். இது மிகவும் நல்லது. மதுபன் வாசிகளுக்கும் சேர்த்துக் கூறுகிறோம். யாரெல்லாம் வந்திருக்கிறார்களோ,

பாம்பேயிலிருந்து வந்திருந்தாலும் சரி, டெல்லியிலிருந்து வந்திருந்தாலும் சரி, இப்போது நீங்கள் மதுபன் வாசிகள் தான். டபுள் ஃபாரினர்ஸ் கூட இந்த சமயத்தில் எதைச் சார்ந்தவர்கள்? மதுபன் நிவாசிகள் தானே? மதுபன் நிவாசியாக ஆவது நன்றாக இருக்கிறதல்லவா? ஆகவே எல்லா குழந்தைகளுக்கும், இங்கே எதிரே அமர்ந்திருப்பவர்களாயினும் சரி, அல்லது நாலா பக்கமும் தங்கள், தங்கள் ஸ்தானங்களில் அமர்ந்திருந்து கேட்பவர்களாயினும் சரி, பாப்தாதா ஒரு பரிவர்த்தனையை விரும்பு கின்றார். ஒருவேளை உங்களுக்குத் தைரியமிருந்தால், பாப்தாதா கூறுவார்: தைரியமிருக்கிறதா? தைரியமிருக்கிறதா? தைரியமிருக்கிறதா? செய்ய வேண்டியதிருக்கும். செய்ய வேண்டும். கையை உயர்த்தி விட்டால் மட்டும் போதாது. கை உயர்த்தியது நன்றாகத்தான் இருக்கிறது ஆனால் மனதின் கையை உயர்த்த வேண்டும். இன்றைக்கு வெறும் கையை மட்டும் உயர்த்தக்கூடாது. மனம் எனும் கையை உயர்த்த வேண்டும்.

டபுள் ஃபாரினர்ஸ் அருகாமையில் அமர்ந்திருக்கிறார்கள் அல்லவா? ஆகவே பக்கத்தில் இருப்பவர்களுக்கு மனதில் உள்ளதைக் கூறலாம். பார்க்கும்போது, மெஜாரிட்டி எல்லோருக்கும் பாப்தாதாவிடம், சேவையில் மிக நல்ல அன்பு இருக்கிறது. தந்தையின் அன்பு இல்லாமல் இருக்கவும் முடியாது. மேலும் சேவை செய்யாமல் இருக்கவும் முடியாது. இப்படி மெஜாரிட்டிக்கான சர்டிபிகேட் சரியாக இருக்கிறது. பாப்தாதா நாலா பக்கமும் பார்க்கின்றார் ஆனால் ஆனால்.. வந்து விட்டது. மெஜாரிட்டியினரிடமிருந்து இதே சப்தம் தான் வருகிறது. அதாவது ஏதாவதொரு சம்ஸ்காரம் பழையது, விரும்புவதில்லை என்றாலும் பழைய சம்ஸ்காரம் இன்று வரையிலும் கூட ஆகர்ஷித்து விடுகிறது. ஆகவே எப்போது நீங்கள் ஹோலி கொண்டாட வந்தீர்களோ, அப்போது ஹோலியின் அர்த்தம் என்ன? கடந்தது. கடந்து விட்டது என்பது தான். ஹோ.லி என்றால் முடிந்து விட்டது. எந்த ஒரு பழைய சம்ஸ்காரம் அது 5-சதவிகிதம் இருந்தாலும், 10-சதவிகிதம், 50-சதவிகிதம் அல்லது எவ்வளவு இருந்தாலும் குறைந்தபட்சம் 5-சதவிகிதம் இருந்தாலும் இன்று அந்த சம்ஸ்காரத்தை பஸ்பம் ஆக்கி விடுங்கள். எல்லோருக்கும் எந்த ஒரு சம்ஸ்காரம் தன்னை அவ்வப்போது தொந்தரவு செய்கிறது என்று கருதுகிறீர்களோ, அதை பஸ்பம் ஆக்கி விடுங்கள். ஒவ்வொருவரும் கருதுகிறார்கள்.

கருதுகிறீர்கள் தானே? ஹோலி இரண்டு விதம். ஒன்று பஸ்பமாக்குவது. இரண்டாவது வர்ணம் பூசிக் கொள்வது. (குணவான் ஆவது) இப்படி இரண்டு விதமான ஹோலி இருக்கிறது. மேலும் ஹோலி என்பதன் பொருள் கடந்தது, கடந்து விட்டது என்பது. ஆகவே பாப்தாதா என்ன விரும்புகின்றார் என்றால், இன்று, அப்படி எந்த ஒரு சம்ஸ்காரம் தங்கியிருக்கிறதோ, இதன் காரணமாக உலக மாற்றம் நடக்காமல் இருக்கிறது. ஆகவே இன்று அந்த பலவீனமான சம்ஸ்காரத்தை பஸ்பம் செய்ய வேண்டும். அதாவது அதற்கு ஈமக்கிரியை செய்து விட வேண்டும். எரிப்பதற்கும் கூட ஈமச்சடங்கு என்று கூறுகிறார்கள் அல்லவா? எப்போது மனிதன் இறந்து விடுகிறானோ அந்திமக்கிரியை செய்ய வேண்டும் என்று கூறுகிறார்கள். அதாவது சதா காலத்திற்கும் முடித்துவிட வேண்டும் என்பதாகும். அப்படியானால், இன்று சம்ஸ்காரத்திற்கும் ஈமச்சடங்கு செய்ய முடியுமா? செய்ய முடியுமா? நீங்கள் கூறுகின்றீர்கள். அந்த சம்ஸ்காரம் வர வேண்டாம் என்று தான் நினைக்கிறோம், என்றாலும் வந்து விடுகிறது. என்ன செய்வது? இப்படி நினைக்கிறீர்களா? நல்லது. வந்து விடுகிறது, தவறுதலாக சரி. ஒருக்கால் வேறு யாருக்கோ கொடுக்க வேண்டிய பொருள், உங்களிடம் தவறுதலாக வந்து விட்டதென்றால், என்ன செய்கிறீர்கள். அதை பத்திரமாக அலமாரியில் வைத்து விடலாம் என்று வைத்து விடுகிறீர்களா? சரி. அப்படி வந்து விட்டாலும், மனதில் வைக்கக்கூடாது. ஏனெனில் மனதில் பாபா அமர்ந்திருக்கிறார் அல்லவா? பாபாவுக்குப் பக்கத்தில் அந்த சம்ஸ்காரத்தையும் வைத்தால் நன்றாக இருக்குமா? இருக்காது இல்லையா? ஆதலால் ஒருவேளை தவறுதலாக வந்தாலும், மனதில் கூறுங்கள் பாபா, பாபா, பாபா போதும். முடிந்து விடும். முற்றுப்புள்ளி இடப்பட்டு விடும். பாபா யார்? பிந்தி (புள்ளி). ஆகவே ஃபுல்ஸ்டாப் ஆகி விடும். தனது மனதில் வைத்துக் கொண்டு, பெயரளவில் பாபா எடுத்துக் கொள்ளுங்களேன், பாபா எடுத்துக் கொள்ளுங்களேன் என்று சொன்னால் எப்படி எடுத்துக் கொள்வார்? உங்களுடைய பொருளை எப்படி வாங்குவார்? முதலில் அது உங்களுடையது அல்ல என்று கருதுங்கள். அப்போது எடுத்துக் கொள்வேன். இன்னொருவருடைய பொருளை சும்மா சொன்னவுடனேயே வாங்கி விடுவேனா? அப்படியானால். என்ன செய்யப் போகிறீர்கள்? ஹோலி கொண்டாடலாமா? கொண்டாடலாமா? ஹோ…லி ஹோ…லி. சரி யார் திட எண்ணம் கொள்கிறீர்கள்? சரி.

நீங்கள் அடிக்கடி வெளியேற்றி விட்டால். வெளியேறி விடும். உள்ளே வைத்துக் கொள்ளக் கூடாது. என்ன செய்வது? என்ன செய்வது? வெளியேறமாட்டேன் என்கிறது, இது சரியாகாது. வெளியேறியே தீரும். (பலவீனமான சம்ஸ்காரம்) ஆகவே திட சங்கல்பம் செய்வீர்களா? யார் செய்வார்களோ, அவர்கள் இப்போது கை உயர்த்துங்கள். மனப்பூர்வமாக கை உயர்த்த வேண்டும். வெளிப்படையாக கை உயர்த்தக் கூடாது. மனப்பூர்வமாக (ஒரு சிலர் கை உயர்த்த வில்லை). இவர்கள் கை உயர்த்தவில்லை. மிக நல்லது. வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள். என்ன நடக்கிறதென்றால், ஒரு பக்கம் அட்வான்ஸ் பார்ட்டி பாப்தாதாவிடம் அடிக்கடி கேட்கிறார்கள். எதுவரை? எதுவரை? எதுவரை? இரண்டாவது, பிரகிருதியும் (இயற்கை) இப்போது பரிவர்த்தனை செய்யுங்கள் என்று வேண்டுகோள் விடுக்கிறது. பிரம்மாபாபாவும், எப்போது பரந்தாமத்தின் வாசலைத் திறப்பீர்கள் என்று கேட்கின்றார்? கூடவே செல்ல வேண்டுமல்லவா? பின் தங்கி விடக் கூடாதல்லவா? கூடவே வருவீர்கள் இல்லையா? கூடவே கதவையும் திறக்க வேண்டும். வேண்டுமானால் சாவி கொண்டு பிரம்மாபாபா திறப்பார் ஆனால் கூடவே நீங்களும் இருப்பீர்கள் இல்லையா? ஆகவே, இப்போது மாற்றம் செய்யுங்கள். போதும் கொண்டு வரவே வேண்டாம் (பழைய சம்ஸ்காரம்) என்னுடைய பொருள் அல்ல, வேறொருவருடைய இராவணனுடைய பொருளை ஏன் வைத்திருக்கவேண்டும்? மற்றவருடைய பொருளை வைத்திருப்பார்களா என்ன? அப்படி யானால் இது யாருடையது? இராவணனுடையது தானே! அவருடைய பொருளை நீங்கள் ஏன் வைத்திருக்கிறீர்கள்? வைத்திருக்கலாமா? வைத்திருக்கக்கூடாதல்லவா? உறுதி தானே? உறுதி தானே? நல்லது ஆகவே வர்ணத்தின் (குணம்) ஹோலி தாராளமாகக் கொண்டாடலாம் ஆனால் முதலில் இந்த ஹோலி (பழைய சம்ஸ்கார சம்ஹாரம்) கொண்டாட வேண்டும். உங்களுக்குத் தெரியும் உங்களுடைய மகிமை என்ன? மெர்ஸிபுல் (இரக்கம் உள்ளவர்) அப்படி இருக்கிறீர்களா? நீங்கள் கருணையுள்ள தேவிகள், தேவதைகள் தானே! சரிதானா? அப்படி யானால் இரக்கம் வரவில்லையா? உங்களுடைய சகோதர, சகோதரிகள் எவ்வளவு துன்பத்தில் இருக்கிறார்கள்? அவர்களுடைய துக்கத்தைப் பார்த்து உங்களுக்கு இரக்கம் வர வில்லையா? வருகிறதா இரக்கம்? அப்படியானால் சம்ஸ்காரத்தை மாற்றுங்கள். உலகம் மாறி விடும்.

எதுவரை சம்ஸ்காரம் மாறவில்லையோ அதுவரை உலகம் மாற முடியாது. அப்படியானால் என் செய்யப் போகிறீர்கள்?

இன்று நல்ல செய்தி கிடைத்தது. எல்லோரும் திருஷ்டி வாங்க வேண்டும் என்று நினைக்கிறீர்கள். நல்ல விஷயம் தான். பாப்தாதாவோ குழந்தைகளின் கட்டளையை நிறைவேற்றுபவர் ஆனால்....ஆனால் என்ற வார்த்தையைக் கேட்டு சிரிக்கின்றனர். தாராளமாகச் சிரியுங்கள். திருஷ்டிக்காக என்ன சொல்கிறார்கள்? திருஷ்டி மூலம் சிருஷ்டி மாறுகிறது. ஆகவே இன்றைய திருஷ்டி மூலம் சிருஷ்டியை பரிவர்த்தனை செய்யத்தான் வேண்டும். ஏனென்றால், பாப்தாதா பார்க்கின்றார். சம்பன்னத்தா மற்றும் என்னென்ன பிராப்தி இருக்கிறதோ, இதற்கு வெகு கால அப்பியாசம் தேவை. தேவைப்படும் சமயத்தில் கிடைத்து விடும் என்று சொல்ல முடியாது. முடியாது. வெகுகால இராஜ்ய பாக்கியம் அடைய வேண்டுமென்றால், சம்பன்னமும் வெகு காலத்தியதாக இருக்க வேண்டும். சரி தானே! டபுள் ஃபாரினர்ஸ் மகிழ்ச்சி தானே? நல்லது.

இந்த முறை சாந்திவன் எல்லையற்ற வீட்டில் இருக்கிறீர்கள் அல்லவா? பாருங்கள் ஒவ்வொரு ஸ்தானத்திற்கும் அதனதன் லாபம் இருக்கிறது. மேலே இருப்பதன் லாபம் அதனுடையது. சாந்திவன் லாபம் இதனுடையது. இங்கு பரிவாரத்திற்கு சமீபத்தில் இருக்கிறீர்கள். தாதிகளுக்கு சமீபமாக இருக்கிறீர்கள் ஆனால் அங்கு பாப்தாதாவின் கர்மபூமி சமீபமாக இருக்கிறது ஆனால் நன்றாக இருக்கிறதா? இல்லையா? கொஞ்சம் கொஞ்சம் நினைவு வருகிறது. பாப்தாதாவுக்கு குஷியாக இருக்கிறது அதாவது ஒரே நேரத்தில் ஃபாரினர்ஸின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டிருக்கிறது. ஒரே சமயத்தில் எண்ணிக்கை அதிகமானதன் காரணமாக. மேலே இருப்பதற்கு இடமில்லை என்றாலும் எண்ணிக்கை அதிகமாவது மகிழ்ச்சிக்குரிய விஷயம் தானே! மேலும் ஒரே சமயத்தில் இத்தனை பேர் கூடவே தங்கியிருப்பது, இதுவும் கூட ஒரு அனுபவம் தானே! மேலும் எல்லாவற்றையும் விட மதுபன் வாசிகள் டபுள் ஃபாரினர்ஸ்களுக்கு நன்றி சொல்ல வேண்டும். ஏனெனில், டபுள் ஃபாரினர்ஸ் ஒரே சமயத்தில் விசேஷமாக மதுபன் வாசிகளுக்கு சான்ஸ் (வாய்ப்பு) கொடுத்திருக்கிறார்கள். மதுபன் வாசிகள் கை தட்டுங்கள். பாருங்கள்,

மதுபன் வாசிகள் எவ்வளவு குஷியாக இருக்கிறார்கள். இல்லையென்றால், மதுபன் வாசிகளுக்கு முழு சீசனிலும் சான்ஸ் எங்கே கிடைக்கிறது? டபுள் ஃபாரினர்ஸ் சான்ஸ் கொடுத்திருக்கிறார்கள், ஆகவே தான் நன்றி தெரிவிக்கின்றார். நல்லது.

டபுள் ஃபாரினர்ஸின் சேவை பற்றிய நிகழ்ச்சி (Program) அறிந்து கொண்டோம். நல்ல நிகழ்ச்சி செய்திருக்கிறார்கள். யாரெல்லாம் நிகழ்ச்சிகள் பற்றி செய்தி அனுப்பினார்களோ, அதையெல்லாம் அறிந்து கொண்டோம். மேலும் நன்றாயிருக்கிறது . ஏனெனில் வெளி நாட்டில் பெரிய பெரிய நிகழ்ச்சி செய்தால், வெளி நாட்டிலிருந்து மீடியா மூலமாக (செய்தித்துறை) சத்தம் பாரத தேசம் வந்தடைய முடியும் ஏனெனில் இப்போது பாரதவாசிகள் சோதித்துப் பார்த்திருக்கிறார்கள். அதாவது பாரதத்திலிருந்து மீடியா மூலம் ஃபாரின் சென்றடைய வேண்டும் என்று ஆகவே ஃபாரினர்ஸ் கூட மீடியா மூலம் பாரதத்தில் சத்தம் பரவச் செய்ய வேண்டும். மீடியா சாதனம் மிக நன்றாக இருக்கிறது. மேலும் எந்தெந்த நிகழ்ச்சிகள் செய்திருக்கிறார்களோ, அது பாப்தாதா வுக்கு விருப்பமுள்ளதாக இருக்கிறது. நடைமுறையில் கொண்டு வாருங்கள். நடைமுறையில் கொண்டு வந்தால் சத்தம் பரவும் சரி தானே! நன்றாக இருக்கிறது! மேலும் இன்னொரு விஷயத்தைப் பார்த்தார். அதாவது பாப்தாதாவிடம் ஃபாரினிலிருந்து ஒரு லிஸ்ட் வந்திருக்கிறது. அந்த விஷயம் பற்றி பாப்தாதா ஏற்கனவே கூறியிருந் தார் அல்லவா? ஒவ்வொரு துறையைச் சேர்ந்தவர்களுக்கும் சேவை செய்தீர்கள். மாநாடு நடத்தினீர்கள். இநத் சேவை மூலமாக யாரெல்லாம் சிநேகியாக, சகயோகியாக ஆகியிருக்கின்றார்களோ அவர்களுடைய லிஸ்ட் வேண்டுமென்று கேட்டிருந்தேன் அல்லவா? இன்றைக்கு பாப்தாதாவிடம் நம்பர்-1 லிஸ்ட் வந்து சேர்ந்தது. இதற்காக, நல்வாழ்த்துக்கள். நல்ல முயற்சி செய்திருக்கிறார்கள். யுனைடெட் கிங்டம் (பிரிட்டன்) ஐரோப்பா, மற்றும் வேறு எங்கிருந்து? நல்லது. பாரதவாசிகளும் லிஸ்ட் தயார் செய்ய வேண்டும். பிறகு இன்டர் நேஷனல் சிநேகி, சகயோகிகளின் சம்மேளனம் நடக்கும். ஓரிருவடைய அனுபவத்தைக் கேட்டும் கூட ஆர்வத்துடன் வருகிறார்கள். நம்பர்-1 லிஸ்ட் ஃபாரினிலிருந்து வந்திருக்கிறது. பாப்தாதா குஷி அடைகின்றார். மற்றபடி எல்லோரிடமிருந்தும் கடிதம், வாழ்த்து அட்டைகள் வந்து காண்டே இருக்கின்றன. தற்சமயம் ஈ-மெயில் அதிகம் வருகிறது.

பாரதத்திலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் குழந்தைகள் செய்திகள் அனுப்பியிருக்கிறார்கள். பாரதத்தில் சிவராத்திரி நிகழ்ச்சிகள் வெகு விமரிசையாக கொண்டாடியிருக்கின்றனர். இது பற்றிய செய்தியும் கொடுத்திருக்கிறார்கள். இப்போது காலத்தின் வேகத்திற்கு ஈடாக, புருஷாத்தத்தின் வேகத்தை அதிகப்படுத்துங்கள். நல்லது.

நிறைய நாடுகளிலிருந்து வந்திருக்கிறார்கள் என்று தெரிகிறது. எல்லா நாடுகளிலிருந்தும் முக்கியமான ஃபாரினர்ஸ் வந்திருக்கின்றார்கள் என்றால், அந்தந்ததேசத்தின் முக்கிய டீச்சர் ஒவ்வொருவராக எழுந்து நில்லுங்கள். அவர்களைப் பார்க்கலாம் 77-நாடுகளிலிருந்து வந்திருக்கின்றனர். நல்லது. பாண்டவர்களும் இருக்கிறார்கள். சகோதரிகளும் இருக்கிறார்கள். வாழ்த்துக்கள். ஒவ்வொரு டீச்சரும் தங்கள், தங்களுடைய குரூப்பை அழைத்து வந்திருக்கிறீர்கள். தயார் செய்து இங்கு வரை கொண்டு வந்து விட்டீர்கள். இதற்காக பாப்தாதா உங்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக சொந்தமான (பர்சனல்) வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றார். நல்ல சேவை செய்திருக்கிறீர்கள். நல்லது. எல்லோருக்கும் குரூப் வைஸ் பட்டி நடந்தது. நன்றாக செய்திருக்கிறீர்கள். ஸ்பெஷலாக ஒவ்வொரு குரூப்புக்கும் என்ன பட்டி வைத்தீர்களோ இதில் ஒவ்வொருவருக்கும் தத்தமது துறையில் (டிப்பார்ட்மெண்டில்) இருந்து கூட்டாகச் சேர்ந்திருக்கும்போது மஜாவாக இருக்கிறது. இப்படி எந்த ஒரு விதி வைத்திருக்கிறீர்களோ, அது நன்றாக இருக்கிறது. மிக நன்றாக இருக்கிறது. பிடித்தமாக இருந்ததல்லவா? முதல் முறையாக யுகல் மற்றும் குமார்களின் தனித்தனியாக பட்டி நடந்தது.

குமார்: எழுந்திருங்கள். நன்றாக இருக்கிறது. தனியாக பட்டி நடந்தால் நன்றாக இருந்தது. இம் மாதிரி நடந்து கொண்டே இருக்கிறது நன்றாக இருக்கிறது. குமார் எல்லோரும் "அமர் பவ" என்ற வரதானம் பெற்றவர்கள் தானே! "அமர் பவ" வரதானம் கிடைத்திருக்கிறதல்லவா? கிடைத்ததா? அமரராக வேண்டும். நல்லது.

யுகல்: எழுந்திருங்கள். மிக நன்றாக இருக்கிறது. விஷ்ணுவினுடைய கொடி எல்லோருடைய கையிலும் இருக்கிறது. மிக நல்லது. பாப்தாதாவுக்கு பிடித்தமாக இருந்தது. இனி சதா, பிரவிருத்தியை

பிரவிருத்தி என்றெண்ணாமல், பரவிருத்தி, பரவிருத்தி என்றால் நியாரி மற்றும் பியாரி விருத்தியில் இருக்க வேண்டும். நீங்கள் பிரவிருத்திக்காரர்கள் (இல்லறம்) அல்ல. பரவிருத்தியில் இருக்கும் யுகல் (ஜோடி), மிகவும் நல்லது. நல்வாழ்த்துக்கள்.

அதர் குமார்: எல்லா அதர்குமார்களும் யாரெல்லாம் இருக்கிறீர்களோ, அவர்களுக்கு என்ன நஷா இருக்கிறது? எங்களுடைய கம்பேனியன் (துணை) ஆல்மைட்டி அதாரிட்டி பாபா கம்பேனியனாகவும் இருக்கின்றார், எங்களுடைய கம்பேனியும் பாபாதான். ஆகவே அதர்குமார் சதா இதே நஷாவில் இருக்க வேண்டும். பாபாவுடன் இணைந்தே இருக்கின்றீர்கள் உங்களை தனி மனிதனாக (சிங்கில்) நினைக்கக் கூடாது. கம்பைண்டு. பாப் அவுர் ஆப் (பாபவும் நீங்களும்) கம்பைண்டு, ரெம்பவும் நல்லது.

குமாரிகள்: குமாரிகள் கூட இருக்கின்றார்கள் என்றால் பிரம்மா குமாரிகளாகவும் இருக்கின்றீர்கள். குமாரி என்றால் பிரம்மா குமாரி தான். குமாரிகள் என்ன செய்வீர்கள்? கமால் செய்து காண்பிப்பீர்கள். இப்போது பாப்தாதாவுக்கு சேவையில் வலது கரம் (Right Hand) வலது கரம் தானே! நன்றாக இருக்கிறது. குமாரிகளை பாப்தாதா பார்த்து மிகவும் மகிழ்ச்சி அடைகின்றார். ஏனெனில் இவர்கள் எத்தனையோ ஆத்மாக்கள் நன்மை அடைவதற்கு நிமித்தமாக ஆகப்போகிறீர்கள். விஷ்வ கல்யாணகாரி ஆவார்கள் மிகவும் நல்லது.

மாதாக்களுடன்: மாதாக்கள் ரெம்பவும் கெட்டிக்காரர்களாக இருக்கின்றார்கள் பாருங்கள். பாப்தாதா மாதர்கள் முன்னேறுவதற்குத்தான் சான்ஸ் கொடுத்திருக்கின்றார். கொடுத்த சான்ஸை (வாய்ப்பை) நடைமுறையில் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே நல்வாழ்த்துக்கள். மிக நல்ல சக்தி அவதாரம். உங்களுடைய எண்ணிக்கையை இன்னும் அதிகப்படுத்துங்கள். எல்லா இடங்களிலும் தாய்மார்களின் எண்ணிக்கை தான் அதிகமாக இருக்கிறது. டபுள் ஃபாரினில் கூட மாதாக்களின் எண்ணிக்கை இப்போதும் கூட அதிகமாகத்தான் இருக்கிறது. பாரதத்திலும் மாதாக்களின் எண்ணிக்கை அதிகம். முழு கல்பத்திலும் இப்போது தான் வாய்ப்பு

கிடைத்திருக்கிறதென்றால், இந்த வாய்ப்பை நன்றாகப் பயன்படுத்திக் கொண்டு விட்டார்கள்.

சென்டரில் இருப்பவர்கள் மற்றும் என்.ஜி.ஓ. மீட்டிங்கில் வந்திருக்கின்ற சகோதர சகோதரிகள்: மிக நன்றாக இருக்கிறது. சென்டர் நிவாசி என்றால் புண்ணியக் கணக்கை அதிகப்படுத்துபவர்கள். யாரெல்லாம் வந்து கொண்டிருக்கிறார்களோ, அவர்களுக்கு பாபாவின் அறிமுகம் கொடுத்து அவர்களை பாபாவினுடையவர் களாக ஆக்குகின்றார்கள். இந்த புண்ணியம் சேமிப்பாகிறது. சேமிப்பதற்கு வாய்ப்பு கிடைத்திருக்கிறது எனக் கருதுகிறார்கள். எவ்வளவுக்கெவ்வளவு புண்ணியம் சேமிப்பாகிக் கொண்டிருக்கிறதோ, அப்போது கொஞ்சம் கூட, சொப்பனத்திலும் கூட, ஒருவேளை அதாவது கொஞ்சம் பாவத்தின் ரேகைகள் படிந்திருந்தாலும் கூட, அது இல்லாமல் போய்விடும். ஆதலால் இது புண்ணிய ஆத்மாக்களின் குரூப். நன்றாக இருக்கிறது. குமார்களும் உண்டு. பாண்டவர்கள் சேவையில் நிமித்தமாகியிருக்கிறார்கள். இதுவும் நல்ல வாய்ப்பு கிடைத்திருக்கிறது. சதா சேவையில் விருத்தி செய்யக்கூடிய நிமித்தமானவர்கள் வந்திருக்கிறார்கள். பாண்டவர்கள் மற்றும் சக்திகள் இருவருக்கும் பாப்தாதா சேவைக்காக நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றார். நல்லது.

சிறு குழந்தைகள்: கூட ரெட்ரீட் செய்திருக்கிறார்கள். நன்றாக இருந்தது. குழந்தைகளுக்குப் பிடித்தமானதாக இருந்தது. நன்றாக இருக்கிறது. குழந்தைகள் கமால் செய்து காண்பிப்பார்கள். குழந்தைகள் பெரியவர்கள் செய்யாத அப்படிப்பட்ட சேவை செய்யப்போகிறார்கள். ஏனெனில் குழந்தைகள் மீது எல்லோருக்கும் பிரியம் இருக்கும். ஆகவே, நன்றாகச் செய்திருக்கிறீர்கள். ரெம்ப நல்லது.

ஸ்பார்க் குரூப் வந்திருக்கிறார்கள்: மிக நன்றாக இருக்கிறது. அனுபவி மூர்த்தியாகி அனுபவம் செய்விப்பதற்கு நடை முறையில் ரிசர்ச் (ஆராய்ச்சி) செய்து கொண்டிருக்கிறார்கள். மேலும் இதே மாதிரி அனுபவம் செய்விக்கக்கூடிய ஆராய்ச்சியை அதிகப் படுத்துங்கள். நடைமுறையில் வெற்றியைக் கொண்டு வாருங்கள். இதன் மூலமாக உலகம் உதாரணத்தைப் பார்த்து எளிதாக ஏற்றுக் கொள்வார்கள்.

நல்லது முன்னேறிக் கொண்டே செல்லுங்கள். உதாரணமானவர்களாகி, மற்றவர்களுக்கும் கூட உதாரணமானவர்களாக ஆக்குங்கள் மிகவும் நல்லது.

நல்லது. டபுள் ஃபாரினர்ஸ் டபுள் நஷாவில் இருக்கிறார்கள். ஸ்பெஷலாக கிடைத்ததல்லவா? ஸ்பெஷல் என நினைக்கிறீர்களா? குறைவாக இல்லை தானே! நல்லது.

மதுபன் வாசிகள்: கொஞ்சம் எழுந்திருங்கள். எல்லோரும் நன்றாக கைதட்டினார்கள். பாருங்கள். மதுபன் வாசிகளிடம் எல்லோருக்கும் எவ்வளவு அன்பு இருக்கிறது! மதுபன் நிவாசிகளுடைய சேவையைப் பார்த்து எல்லோரும் குஷி அடைகிறார்கள். பொது ஜனங்களும் கூறுகிறார்கள் இதை யார் நடத்துகிறார்கள் என்று யார் டைரக்ஷன் கொடுக்கிறார்கள் என்று. இது தெரியவே இல்லை. எப்படி இயந்திரம் இயங்குகிறதோ அப்படி. ஆகவே மதுபன் வாசிகளுக்கு இந்த சேவையின் பாக்கியம் ரொம்பவும் பெரிது. மதுபன் வாசிகள், எந்த ஒரு குரூப் வந்தாலும், அவர்களுக்கு மதுபன் வாசிகள் உதாணமாகத் தெரிகிறார்கள். மொழி தெரியாததால் பேசாமல் இருக்கலாம். சென்டரில் உட்கார்ந்து முரளி சொல்லாமல் இருக்கலாம் ஆனால் உதாரணமாக இருப்பது இது எல்லாவற்றிலும் பெரிய சேவை எல்லோரும் திருப்தியடைக்கூடிய சேவை செய்விப்பது இது மிகப்பெரிய சேவை ஆதலால் மதுபன் வாசிகள், ஃபாரினர்ஸ் வந்தாலும், பாரதத்திலிருந்து வந்தாலும் மற்றும் வேறு எங்கு சென்றாலும் மதுபனிலிருந்து வரும் ஒவ்வொரு ஆத்மாவுக்கும் மிகுந்த மரியாதை கொடுக்கிறார்கள். மதுபனிலிருந்து வந்திருக்கிறார்கள் என்பது எல்லோருடைய வாய்மொழியில் வருகிறது. ஆதலால் மதுபன் வாசிகள் குறைந்தவர்கள் அல்ல. சாகார் பாபா என்ன கூறினார், யார் அடுப்படியில் இருக்கிறார்களோ அவர்கள் உள்ளத்தில் இருக்கிறார்கள் என்று மதுபன் வாசிகள் அடுப்படியிலும் இருக்கின்றார்கள் உள்ளத்திலும் இருக்கிறார்கள். பாப்தாதாவுக்கு ஒவ்வொரு மதுபன் நிவாசி மீதும் அன்பு இருக்கிறது. அன்புக்குப் பாத்திரமாயிருக்கிறார்கள். ஏனெனில் சேவை மூலம் திருப்திப்படுத்த வேண்டும் என்ற லட்சியம் வைத்திருக்கிறார்கள். நன்றாக இருக்கிறது. எண்ணிக்கை பாருங்கள். எவ்வளவு அதிகமாக இருக்கிறது. ஆதலால் சேவை மற்றும்

எண்ணிக்கைக்கு நல் வாழ்த்துக்கள். டபுள் ஃபாரினர்ஸ்ர்கள் மகிழ்ச்சியில் திளைக்கிறார்கள். மதுபன் வாசிகளைப் பார்த்து மகிழ்ச்சியடைகிறார்கள்.

நல்லது. பாப்தாதாவின் மகா வாக்கியங்களை நினைவில் வையுங்கள். மறந்துவிடக்கூடாது. இப்போது பழைய சம்ஸ் காரத்தை முடிவு செய்யும் சடங்கு செய்து கொண்டாடுவோம். விருப்பம் தானே! அந்த விழாவில் நீங்கள் அழைக்கப்படுவீர்கள். யார் செய்வார்களோ, அவர்கள் அழைக்கப்படுவார்கள். நல்லது. நாலா பக்கமுள்ள மூன்று சிம்மாசனங்களின் அதிகாரி, விசேஷ ஆத்மாக்களுக்கு சதா சுய இராஜ்ய அதிகாரி விசேஷ ஆத்மாக்களுக்கு சதா இரக்க மனம் உடையவராகி, ஆத்மாக் களுக்கு சுகம் சாந்தியின் அஞ்சலி கொடுக்கக்கூடிய மகா தானி ஆத்மாக்களுக்கு சதா திடத்தன்மை மற்றும் வெற்றியின் அனுபவம் செய்விக்கக்கூடிய பாபா சமானமான ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே.

தாதிகளுடன்: பேஃபிகர் பாதுஷாவாக (கவலையற்ற மன்னராக) இருக்கின்றீர்கள். பாப்தாதா சதா கவலைற்ற மன்னர், ரூபத்திலேயே பார்க்கின்றார். என்ன காரணம்? கவலை ஏன் இல்லை? ஏனெனில் உள்ளம் பெரிதாக இருக்கிறது. எங்கே உள்ளம் பெரிதாக இருக்கிறதோ, அங்கே என்ன நடக்க வேண்டுமோ, அது நடந்து விடுகிறது. எதுவரவேண்டுமோ, அது வந்து விடுகிறது. படா பாபா, படி தில், படா பரிவார் (பெரிய பாபா, பெரிய மனது, பெரிய குடும்பம்).

**பரதாதியுடன்-நிர்மல் சாந்தா தாதி:** ரெம்ப நல்லது. எல்லோரோடும் சேர்ந்து வந்து விட்டீர்கள். நல்லது செய்து விட்டீர்கள். எல்லோரும் நினைவு செய்கிறார்கள் அல்லவா? ரெம்ப நல்லது. மனதில் நிறைய விஷயங்களைப்பற்றி நினைத்துப் பார்க்கின்றார். எல்லாவற்றையும் ஒளிவு மறைவின்றி கூறி விடுகின்றார். ரூஹ்-ருஹான் நிறைய செய்கிறார் அல்லவா? ரூஹ்-ருஹான் அதிகம் செய்கின்றார். ரெம்ப நல்லது. உடம்பை எப்படியோ நடத்திக் கொண்டு செல்கிறார் அல்லவா? இது சரிதான். நல்லது தானே! பழைய சரீரம் பழைய சரீரமாக இருந்தாலும் உங்களைப் பார்த்து குஷி அடைகின்றனர். ஆதி

ரத்தினமல்லவா? எல்லோரும் பார்த்து குஷி அடைகின்றனர். எல்லோரும் உங்களை ரெம்பவும் நினைவு செய்கிறார்கள். நல்லது.

**மனோகர் தாதியுடன்:** எல்லோருக்கும் அவரவர் பார்ட் நன்றாகவே கிடைத்திருக்கிறது. எங்கிருந்தாலும் அந்த இடம் மிகப் பிரசித்தமானதாக ஆகி விடுகிறது. தாதி இருக்கின்றார் என்று எல்லோருக்கும் மகிழ்ச்சி உண்டாகிறது. மதுபனுக்கு அலங்கார மாகஇருக்கின்றீர்கள். அப்படித்தானே! நல்லது.

**வெளிநாட்டின் மூத்த சகோதரிகளுடன்:** இந்த குரூப் மிக நன்றாக தயாராகியிருக்கின்றது. நன்றாகயிருக்கிறது. எல்லோரும் ஆல்ரவுண்டு சேவாதாரிகள். சேவை செய்வது மிக்க மகிழ்ச்சியாக இருக்கின்றதல்லவா? நல்லது. உலகின் எல்லா மூலைகளுக்கும் சத்தம் சென்றடையும் வகையில் பரவச் செய்து விட்டீர்கள் அல்லவா? சரி தான். எல்லோருடைய உடல் நலம் நன்றாக இருக்கிறதா? மிக நல்ல குரூப் பாப்தாதாவுக்கு சேவை பிரியமானது. குழந்தைகளிடம் அன்பு இருக்கிறது ரெம்ப நல்லது யாரெல்லாம் வந்திருக்கிறார்களோ அவர்கள் சேவை செய்வதற்கான திட்டம் நன்றாக தயார் செய்திருக்கிறார்கள் நல்வாழ்த்துக்கள் எல்லோரும் சேர்ந்து, நன்றாகச் செய்திருக்கிறார்கள். நல்லது.

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵

## 20.03.2004 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# இந்த ஆண்டை விசேஷ ஜீவன் முக்தி ஆண்டாக கொண்டாடுங்கள். ஒற்றுமை மற்றும் மனதை ஒருமுகப்படுத்துவதன் மூலம் தந்தையை பிரத்யக்ஷம் செய்யுங்கள்!

இன்று அன்புக்கடல், நாலா பக்கமுமுள்ள அன்பான குழந்தைகளைப் பார்க்கின்றார். தந்தைக்கும் கூட, குழந்தைகளிடம் இதய பூர்வமான அழிவற்ற அன்பு இருக்கிறது. மேலும் குழந்தைகளுக்கும் கூட திலாராம் தந்தையிடம் இதய பூர்வமான அன்பு இருக்கிறது இந்த பரமாத்ம அன்பு, இதய பூர்வமான அன்பு எப்படிப்பட்டது என்று தந்தை மற்றும் பிராமண குழந்தைகளுக்கு மட்டுமே தெரியும், பரமாத்ம அன்புக்குப் பாத்திரமானவர்கள் பிராமண ஆத்மாக்களாகிய நீங்கள் மட்டுமே தான். பக்த ஆத்மாக்கள் பரமாத்ம அன்புக்கு தாகமுடையவர்களாக இருக்கின்றார்கள். கூக்குரல் இடுகிறார்கள். பாக்கியவான் பிராமண ஆத்மாக்களாகிய நீங்கள் அந்த அன்பைப் பெறுவதற்குப் பாத்திரமுடையவர்களாயிருக்கிறீர்கள் குழந்தைகளிடம் ஏன் விசேஷ அன்பு இருக்கிற தென்றால், இந்தச் சமயத்தில் தான் எல்லா பொக்கிஷங்களுக்கும் எஜமானனாக இருப்பவரிடமிருந்து, எல்லா பொக்கிஷங்களையும் பெறுகின்றார்கள் என்பதை பாப்தாதா அறிவார். இந்த பொக்கிஷம் இந்த ஒரு ஜன்மத்திற்கு மட்டுமல்லாமல், அநேக ஜன்மங்கள் வரையிலும், இந்த அழிவற்ற பொக்கிஷம் கூடவே இருக்கும். பிராமண ஆத்மாக்களாகிய நீங்கள் எல்லோரும், உலகிலுள்ள மற்றவர்களைப் போல வெறுங்கையோடு செல்ல மாட்டீர்கள். எல்லா பொக்கிஷங்களும் கூடவே இருக்கும். ஆதலால், இப்பேர்ப்பட்ட அழிவற்ற பொக்கிஷங்களைப் பெறுகிறோம் என்ற நஷா இருக்கிறதல்லவா? மேலும் எல்லா குழந்தைகளும், அழிவற்ற

பொக்கிஷங்களை சேமித்திருக்கிறார்கள் அல்லவா? சேமிப்பின் நஷா, சேமிப்பின் குஷி கூட சதா இருக்கிறது. ஒவ்வொருவருடைய முகத்திலும், பொக்கிஷங்கள் சேமிப்பாகியிருப்பதன் ஜொலிப்பு தென்படுகிறது. என்ன பொக்கிஷம் பாபாவிடமிருந்து கிடைக்கிறது என்பது தெரியுமல்லவா? எப்போதாவது, உங்கள் சேமிப்புக் கணக்கை சோதிக்கிறீர்களா? தந்தை, எல்லா குழந்தைகளுக்கும். ஒவ்வொரு பொக்கிஷமும் நிறைய கொடுக்கின்றார். சிலருக்கு கொஞ்சமாகவும், சிலருக்கு அதிகமாகவும் கொடுப்பதில்லை. ஒவ்வொரு குழந்தையும் அளவற்ற, நிரந்தர, அழிவற்ற பொக்கிஷங்களுக்கு எஜமானன். குழந்தை ஆவது என்பது பொக்கிஷங்களுக்கு எஜமானன் ஆவதாகும். ஆகவே, பாப்தாதா உங்களுக்கு எவ்வளவு பொக்கிஷங்கள் கொடுத்திருக்கின்றார் என்பதை உங்கள் கண் முன்னே கொண்டு வந்து பாருங்கள்.

எல்லாவற்றிலும் முதலாவது பொக்கிஷம் ஞான தனம். அப்படியானால் எல்லோருக்கும் ஞான தனம் கிடைத்திருக்கிறதா? கிடைத்து விட்டதா? அல்லது இனிமேல் தான் கிடைக்க. வேண்டுமா? நல்லது. சேமிப்பாகியிருக்கிறதா? அல்லது கொஞ்சம் சேமிப்பாகியிருக்கிறது. கொஞ்சம் சேமிப்பாகவில்லை. அப்படியா? ஞான தனம் என்றால் புத்திசாலியாகி, திரிகாலதரிசி யாகி, கர்மம் செய்தல். முழு ஞானமுடையவர்களாக ஆக வேண்டும். முழுமையான ஞானம் மற்றும் மூன்று காலங்களையும் பற்றிய ஞானத்தைப் புரிந்து கொண்டு, ஞான தனத்தை காரியத்தில் உபயோகிக்க வேண்டும். இந்த ஞானப் பொக்கிஷத்தை நடைமுறை வாழ்க்கையில், ஒவ்வொரு காரியத்திலும் விதி பூர்வமாக உபயோகிப்பதன் மூலம் வெற்றி கிடைக்கும். அதாவது அநேக பந்தனங்களிலிருந்து முக்தி மற்றும் ஜீவன் முக்தி கிடைக்கிறது. அனுபவம் செய்திருக்கிறீர்களா? சத்யுகத்தில் தான் ஜீவன் முக்தி கிடைக்கும் என்பதல்ல இப்போதும் கூட, இந்த சங்கமயுக வாழ்க்கையில் கூட, அநேக உலகாயத பந்தனங்களிலிருந்து முக்தி கிடைக்கிறது. வாழ்க்கை, பந்தனங்களிலிருந்து விடுதலை பெற்றதாகி விடுகிறது. எத்தனை பந்தனங்களிலிருந்து விடுதலையடைந்திருக்கிறீர்கள் என்பது தெரிகிறதல்லவா? எத்தனை விதமான அய்யோ-அய்யோவிலிருந்து விடுதலை அடைந்து விட்டீர்கள்! மேலும் ஐயோ... ஐயோ... முடிந்து, ஆஹா! ஆஹா! என்று பாட்டு பாடிக் கொண்டிருக்கிறீர்கள் ஒருவேளை ஏதாவதொரு

விஷயத்தில் வாய்மொழியாக மட்டுமல்ல, சங்கல்பத்திலும், சொப்பனத்திலும் கூட மனதில் கொஞ்சம் ஐயோ என்று வந்தாலும், ஜீவன் முக்தி இல்லை. ஆஹா, ஆஹா, ஆஹா! என்பதாக இருக்கிறதா? மாதாக்கள் ஐயோ..., ஐயோ... என்று சொல்வதில்லை தானே! இல்லை. எப்போதாவது சொல்கிறீர்களா? பாண்டவர்கள் சொல்கிறீர்களா? சரி. இல்லை என்று சொல்லுங்கள் ஆனால், மனதில் சங்கல்பத்தில் கூட, ஒருவேளை ஏதாவதொரு விஷயத்தில் ஐயோ என்று சொன்னால், பறக்க முடியாது. ஐயோ என்று சொன்னால் பந்தனம் மற்றபடி பறப்பது என்றால் பறக்கும் கலை அதாவது "ஜீவன் முக்த்", "பந்தன் முக்த்" ஆதலால் சோதித்துப் பாருங்கள். ஏனெனில், பிராமண ஆத்மாக்கள் எதுவரையிலும் பந்தன் முக்த் ஆகவில்லையோ, ஏதாவது, பொன், வைரம் போன்ற சூட்சுமமான ராயல் பந்தனம் என்ற கயிற்றால், கட்டப்பட்டவர்களாயிருந்தால், மற்றெல்லா ஆத்மாக்களுக்காக, முக்தியின் வாசல் திறக்க முடியாது. நீங்கள் பந்தன் முக்த் ஆவதின் மூலமாகவே, எல்லா ஆத்மாக்களுக்கும் முக்தி வாசல் திறக்கும். ஆதலால் வாசல் திறப்பதற்கும், எல்லா ஆத்மாக்களின் துக்கம், அசாந்தியிலிருந்து முக்தி (விடுதலை) அடைவதற்குமான பொறுப்பு உங்கள் மீது உள்ளது. நீங்கள் தான் ஜவாப்தாரி. ஆகவே சோதியுங்கள் -உங்கள் பொறுப்பை எவ்வளவு தூரம் நிறைவேற்றியிருக்கிறீர்கள்? நீங்கள் எல்லோரும் பாப்தாதாவுடன் உலக பரிவர்த்தனைக் காரியம் செய்வதற்காக குத்தகை எடுத்திருக்கிறீர்கள். நீங்கள் குத்தகைதாரர்கள், பொறுப்பாளிகள் அதாவது தந்தை விரும்பினால், என்ன வேண்டுமானாலும் செய்ய முடியும் ஆனால் தந்தைக்கு குழந்தைகளிடம் அன்பு இருக்கிறது. ஆதலால் தனியாகச் செய்ய விரும்பவில்லை. தந்தை அவதரித்தவுடனேயே குழந்தைகளாகிய நீங்கள் எல்லோரும் கூடவே அவதரித்து விட்டீர்கள். சிவராத்திரி கொண்டாடினீர்கள் அல்லவா? அப்படியானால் யாருடைய கொண்டாட்டம்? பாப்தாதாவுக்கு மட்டுமா? உங்கள் எல்லோருக்குமாகவும் கொண்டாடினீர்கள் தானே! தந்தைக்கு, ஆதி முதல், கடைசி வரை நீங்கள் துணைவர்கள். ஆதி முதல் கடைசி வரை தந்தைக்குத் துணைவர்களாக இருக்கிறோம் என்ற நஷா இருக்கிறதா? பகவானுடைய துணைவர்கள்!

ஆதலால் பாப்தாதா இந்த ஆண்டு சீசனில் கடைசிப் பார்ட் செய்து கொண்டிருக்கின்ற இந்த சமயத்தில் குழந்தைகளிடமிருந்து என்ன எதிர்பார்க்கின்றார்? என்பதை சொல்லட்டுமா? என்ன எதிர்பார்க்கின்றார்? செய்ய வேண்டியதாயிருக்கும். வெறுமனே சொன்னால் கேட்போம் என்பதல்ல, செய்யத்தான் வேண்டும். சரிதானா டீச்சர்கள்? டீச்சர்கள் கை உயர்த்துங்கள். டீச்சர்கள் கை விசிறியை அசைத்துக் காட்டுகிறார்கள். வெப்பம் அதிகமாக இருக்கிறது. நல்லது. எல்லா டீச்சர்களும் செய்வார்கள். மேலும் செய்விப்பார்கள். அப்படித்தானே? செய்விப்பீர்களா? செய்வீர்களா? நல்லது. காற்றும் வீசுகிறது. கையும் அசைக்கிறார்கள். காட்சி பார்ப்பதற்கு நன்றாக இருக்கிறது. ரொம்பவும் நல்லது. பாப்தாதா இந்த சீசன் முடியப் போகின்ற விழாவில், ஒரு புது விதமான தீப மாலை விழா (தீபாவளி) கொண்டாட விரும்புகின்றார். ஆகவே, நீங்கள் எல்லோரும் தீபமாலை விழா கொண்டாடுவதற்கு தயாராக இருக்கிறீர்களா? யார் தயாராக இருக்கிறார்களோ, அவர்கள் கை உயர்த்துங்கள். வெறுமனே, ஆம் என்று சொல்லக்கூடாது. பாப்தாதாவை குஷிப்படுத்துவதற்காக கை உயர்த்தக்கூடாது. மனப்பூர்வமாக! நல்லது. பாப்தாதா தன்னுடைய மனவிருப்பத்தை நிறைவேற்றக்கூடிய தீபம் பிரகாசமாக ஒளி வீசுவதைப் பார்க்க விரும்புகின்றார். ஆகவே, பாப்தாதாவின் நம்பிக்கை தீபங்களின் தீபமாலை விழா கொண்டாட விரும்புகின்றார். புரிந்ததா? எப்படிப்பட்ட தீபாவளி? தெளிவாக இருக்கிறதா? பாண்டவர்கள் தெளிவாகப் புரிந்து கொண்டார்களா?

ஆகவே பாப்தாதாவின் நம்பிக்கை தீபம் என்பது என்ன? இதற்கு முந்தைய ஆண்டிலிருந்து இந்த ஆண்டு சீசனும் முடிந்து விட்டது. பாப்தாதா சொன்னார், நீங்கள் எல்லோரும் சங்கல்பம் செய்தீர்கள், நினைவிருக்கிறதா? சிலர், அந்த சங்கல்பத்தை, சங்கல்பம் வரைக்கும் கொண்டு வந்திருக்கிறார்கள், சிலர் சங்கல்பத்தை பாதி முடித்திருக்கிறார்கள். இன்னும் சிலர் யோசிக்கிறார்கள் ஆனால் அந்த யோசனை யோசிக்கும் அளவிலேயே தான் இருக்கிறது. அந்த சங்கல்பம் எது? ஒன்றும் புதிய விஷயமல்ல. பழைய விஷயம் தான் சுய பரிவர்த்தனை மூலம் சர்வ பரிவர்த்தனை! உலகப் பரிவர்த்தனை என்ற விஷயத்தை விட்டுவிடுங்கள் ஆனால் பாப்தாதா சுயபரிவர்த்தனை மூலம் "பிராமண பரிவார் பரிவர்த்தனை" என்பதைப்

பார்க்க விரும்புகின்றார். அப்படி இருந்தால், இது நடக்கும் என்பதை, இப்போது கேட்க விரும்பவில்லை. 'இவர் மாறினால் நான் மாறுவேன்', 'இவர் செய்தால் நான் செய்வேன்' இதில் விசேஷமாக ஒவ்வொரு குழந்தைக்கும் பிரம்மாபாபா என்ன கூற விரும்புகிறார் என்றால், எனக்குச் சமானம் (பிரம்மாபாபா) என்றால், ஹே, அர்ஜுனா என்பதாக ஆக வேண்டும். இதில் முதலில் நான் முதலில் இன்னொருவர் அல்ல. முதலில் நான். இந்த நான் என்பது கல்யாணகாரி நான் ஆகும். மற்றப்படி லௌக்க (எல்லைக்குட் பட்ட நான் என்றால், அந்த நான் கீழே தள்ளி விடக்கூடியது. இதில் ஒரு பழமொழி உண்டு. யார், முதலில் செய்கின்றார்களோ அவர் தான் ‘அர்ஜுனன்’. ‘அர்ஜுனன்’ என்றால் நம்பர்-1 நம்பர்வார் அல்ல, நம்பர்-1. அப்படியானால், நீங்கள் நம்பர் இரண்டில் வர விரும்புகின்றீர்களா? அல்லது நம்பர்-1றில் வர விரும்புகின்றீர்களா? அநேக காரியங்களில் பாப்தாதா பார்த்தார். சிரிப்பு வரக்கூடிய விஷயம், பரிவாரத்தினரைப் பற்றிய விஷயத்தைக் கூறுகிறேன். பரிவார் அமர்ந்திருக்கிறார்கள் அல்லவா? ஏதாவதொரு காரியம் நடந்தால், அந்த சமாச்சாரம் பாப்தாதாவுக்குக் கிடைக்கிறது. அநேக காரியங்கள், அநேக நிகழ்ச்சிகள் எப்படிப்பட்டதென்றால், அதில் விசேஷ ஆத்மாக்கள் நிமித்தமாக இருக்கின்றார்கள். பாப்தாதாவிடம், தாதிகளிடம் விஷயம் வருகிறது. சாகாரத்தில் தாதிகள் இருக்கிறார்கள், பாப்தாதாவிடம் சங்கல்பம் வந்து சேர்ந்து விடுகிறது. அப்படியானால், என்ன சங்கல்பம் வந்து சேர்கிறது? என்னுடைய பெயரும் இதில் இருக்க வேண்டும். நான் எதில் குறைவாக இருக்கிறேன்? என்னுடைய பெயர் ஏன் இல்லை? ஆதலால் பாப்தாதா கூறுகின்றார் ஹே, அர்ஜுனா! என்பதில், உங்களுடைய பெயர் ஏன் இல்லை? இருக்க வேண்டுமா? இருக்க வேண்டாமா? இருக்க வேண்டுமல்லவா? இருக்க வேண்டுமா? அதாவது பிரம்மாபாபா செய்து காண்பித்தார். வேறு யாரையும் பார்க்கவில்லை. இவர் செய்யவில்லை என்றெல்லாம் சொல்லவில்லை. இல்லை, முதலில் 'நான்' இந்த 'நான்' என்பதில் முன்பு கூறியது போல அநேக விதமான ராயல் ரூபத்தில் 'நான்' என்பது வருகிறது என்று ஏற்கனவே சுட்டி காட்டியிருந்தேன் அல்லவா? அதெல்லாம் சமாப்தியாகி விடும். ஆதலால் பாப்தாதாவின் இந்த சீசன் முடிவிலான விருப்பத்தை யாரெல்லாம் தன்னை பிரம்மா குமார், பிரம்மா குமாரி என்று சொல்லிக் கொள்கிறார்களோ, ஏற்றுக் கொண்டிருக்கிறார்களோ, புரிந்து கொண்டிருக்கிறார்களோ, அந்த

ஒவ்வொரு குழந்தையும் அதாவது ஒவ்வொரு பிராமண ஆத்மாவும், எல்லைக்குட்பட்ட பந்தனம், சங்கல்பத்தில் வந்தாலும், அந்த பந்தனத்திலிருந்து விடுதலை அடைய வேண்டும். பிரம்மாபாபா சமானமாக பந்தன் முக்த், ஜீவன் முக்த், பிராமண ஜீவன் முக்த், சாதாரண ஜீவன் முக்த் அல்ல, பிராமண சிரேஷ்ட ஜீவன் முக்திக்கான விசேஷ ஆண்டாகக் கொண்டாட வேண்டும். ஒவ்வொரு ஆத்மாவும், தன்னிடம் எவ்வளவு சூட்சும பந்தனங்கள் இருக்கின்றன என்பதை அறிவார்களோ, அவ்வளவு மற்றவரால், அறிய முடியாது ஆனால் பாப்தாதாவுக்கு தெரியும், ஏனென்றால் பாப்தாதாவிடம் டி.வி. இருக்கிறது. மனமாகிய டி.வி. சரீர டிவி அல்ல. மனம் என்னும் டிவி. சரி. இனி அடுத்த சீசன் வருமா? சீசன் வருமல்லவா? அல்லது லீவு விட்டு விடலாமா? ஒரு வருஷம் லீவு விட்டு விடலாமா? இல்லை. லீவு விட்டு விடலாமா? ஒரு ஆண்டாவது லீவு வேண்டுமல்லவா? இல்லை. லீவு வேண்டாமா? பாண்டவர்கள் கூறுங்கள். ஒரு வருஷம் லீவு விட்டு விடலாமா? தாதிஜி கூறுகிறார்கள் -ஒரு மாதத்தில் 15-நாட்கள் லீவு விடலாம். நல்லது. ரொம்ப நல்லது. எல்லோரும் கூறுகிறார்கள் சரி. யாரெல்லாம் லீவு வேண்டாம் என்று கூறுகின்றார்களோ, அவர்கள் கை உயர்த்துங்கள். லீவு வேண்டாமா? நல்லது மேலே கேலரியில் இருப்பவர்கள் கை அசைக்கவில்லை. நல்லது. ரொம்ப நல்லது. தந்தை எப்போதும் குழந்தைகள் சொன்னால் அதற்கு ஆமாம், ஆமாம் (ஹான்ஜி) என்று தான் கூறுகின்றார். சரி தானே! இப்போது தந்தை சொல்வதற்கு ஹான்ஜி என்று குழந்தைகள் எப்போது சொல்லப் போகிறார்கள்? தந்தையிடமிருந்து ஹான்ஜி வரவழைத்து விட்டீர்கள் இப்போது தந்தை என்ன கூறுகின்றார். என்றால், இப்போது தந்தையும் கூட ஒரு நிபந்தனை விதிக்கிறார். நிபந்தனையை ஏற்கத் தயாரா? தயாரா? எல்லோரும் ஹான்ஜி என்றாவது சொல்லுங்களேன். பக்காவா? கொஞ்சம் இப்படி, அப்படி என்று சாக்குப்போக்கு சொல்ல மாட்டீர்கள் தானே? இப்போது டி.வியில் எல்லோருடைய முகத்தையும் படம் எடுங்கள். நன்றாக இருக்கிறது. எல்லாக் குழந்தைகளும் கூட, ஹான்ஜி. ஹான்ஜி என்று சொல்லக் கூடியவர்கள் தான் என்பதை பார்த்து, தந்தைக்கு மகிழ்ச்சியாயிருக்கிறது.

ஆதலால், பாப்தாதாவின் விருப்பம் என்னவென்றால், இப்படி அப்படி என்று எந்த ஒரு காரணமும் சொல்லக் கூடாது. ஏனென்றால், இந்தக்

காரணம் என்பது பந்தனம் பிரச்சினை (காரணம்) அல்ல. சமாதான சொரூபமாக வேண்டும். கூட இருப்பவர்களையும் கூட செய்விக்க வேண்டும். ஏனென்றால், காலத்தின் நிலைமையைப் பார்க்கின்றீர்கள். பிரஷ்டாச்சாரமான பேச்சுக்கள் எவ்வளவு அதிகமாகிக் கொண்டிருக்கிறது. ஒழுக்கமின்மையும், பாவச் செயல்களும் (பிரஷ்டாச்சார், அத்யாட்சார்) கடைசிக் கட்டத்தை அடைந்து கொண்டிருக்கிறது. சிரேஷ்டாச் சாரத்தின் கொடி முதலில் ஒவ்வொரு பிராமண ஆத்மாவின் மனதிலும் பறக்கட்டும். இதன் பிறகு தான் உலகில் பறக்கும். எத்தனை முறைகள் சிவராத்திரி கொண்டாடியாகி விட்டது! ஒவ்வொரு சிவராத்திரியிலும், உலகில் தந்தையின் கொடி பறக்க விட வேண்டும் என்று சங்கல்பம் செய்தீர்கள். உலகில் பிரத்யக்ஷத்தாவின் கொடியைப் பறக்க விடுவதற்கு முன் ஒவ்வொரு பிராமணரும், தனது மனதில் சதா மன சிம்மாசனத்தில் தந்தையின் கொடி பறக்க விட வேண்டியதாக இருக்கும். இந்த கொடியை பறக்க விடுவதற்காக, குறைந்தபட்சம், இரண்டு விஷயங்களை, கர்மத்தில் கொண்டு வர வேண்டும். கர்மத்தில், சங்கல்பத்தில் அல்ல, புத்தியிலும் அல்ல. உள்ளத்தில், கர்மத்தில், சம்மந்தத்தில், தொடர்பில் கொண்டு வர வேண்டும். கஷ்டமான விஷயமல்ல. பொதுவான விஷயம் தான். அதாவது ஒன்று, சர்வ சம்மந்தம் மற்றும் தொடர்பில் தங்களிடம் ஒற்றுமை. அநேக விதமான சமஸ்காரமாக இருந்தாலும், வேற்றுமையிலும் ஒற்றுமை. இரண்டாவது, எந்த ஒரு சிரேஷ்ட சங்கல்பம் செய்கிறீர்களோ, அது பாப்தாதாவுக்கு பிடித்தமானதாக இருக்கிறது. எப்போது நீங்கள் சங்கல்பம் செய்கிறீர்களோ, அப்போது பாப்தாதா இந்த சங்கல்பத்தைப் பார்த்து கேட்டு, மிகவும் மகிழ்ச்சியடைகின்றார். ஆஹா! ஆஹா, குழந்தைகளே, ஆஹா! எவ்வளவு சிரேஷ்ட சங்கல்பம்! ஆனால் ஆனால் வந்து விடுகிறது! ஆனால் வரக் கூடாது. என்றாலும் ஆனால் வந்து விடுகிறது. சங்கல்பம் மெஜாரிட்டி, மெஜாரிட்டி என்றால் 90-சதவிகிதம், அநேக குழந்தைகளினுடையது (சங்கல்பம்) மிக மிக நன்றாக இருக்கிறது. இன்றைக்கு இந்த குழந்தையினுடைய சங்கல்பம் மிக நன்றாக இருக்கிறது என்பது பாப்தாதாவுக்குத் தெரிகிறது. முன்னேற்றமாகி விடும் என்று ஆனால் பேச்சில் வரும்போது பாதி குறைந்து விடுகிறது. கர்மத்தில் வரும்போது முக்கால் பாகம் குறைந்து விடுகிறது. அதாவது சங்கல்பம் கலப்படம் ஆகி விடுகிறது. காரணம் என்ன? சங்கல்பத்தில்

ஏகாக்கிரத்தா, திடத்தன்மை (உறுதி) இல்லை. ஒருக்கால் சங்கல்பத்தில் ஏகாக்கிரகம் இருந்தால், இது வெற்றிக்கு சாதனம் ஆகி விடும். திடத்தன்மை (உறுதி) வெற்றியின் சாதனம். இதில் வித்தியாசம் வந்து விடுகிறது. காரணம் என்ன? ஒரே ஒரு விஷயத்தை, ரிசல்ட்டில் பாப்தாதா பார்க்கின்றார், அதாவது மற்றவர்களை அதிகமாகப் பார்க்கிறார்கள். நீங்களும் கூட சொல்கிறீர்கள் அல்லவா? ஒரு விரல் மற்றவரைச் சுட்டிக் காட்டினால், நான்கு விரல்கள் தன்னைச் சுட்டிக்காட்டுவதாக இருக்கின்றன. ஆகவே, நான்கைப் பார்க்காமல் இருக்கிறார்கள். ஒன்றை (ஒரு விரல்) அதிகமாகப் பார்க்கிறார்கள். ஆதலால், திடத்தன்மை மற்றும் ஏகாக்கிரஹம், ஒற்றுமை, ஆடிப்போய் விடுகிறது. இவர் செய்தால், நான் செய்வேன். இப்படிப்பட்ட அர்ஜுன் ஆகி விடுகிறார்கள். அதாவது இரண்டாம் நம்பர் ஆகி விடுகிறார்கள். இல்லையென்றால், உங்களுடைய சுலோகனை மாற்றி விடுங்கள். "சுயபரிவர்த்தனை மூலம் விஷ்வ பரிவர்த்தனை" என்பதற்குப் பதிலாக, "விஷ்வ பரிவர்த்தனை மூலம், சுய பரிவர்த்தனை" என்று மாற்றுங்கள் முதலில் இரண்டாவது பரிவர்த்தனை, பிறகு முதலாது பரிவர்த்தனை என்று மாற்றி விடுங்கள். இப்படி மாற்றி விடலாமா? மாற்றி விடலாமா? மாற்ற வேண்டாமா? அப்படியானால், பாப்தாதா ஒரு நிபந்தனை விதிக்கிறார். சம்மதமா? சொல்லட்டுமா? பாப்தாதா ஆறு மாதத்தில் ரிசல்ட் பார்த்த பிறகு வருவார், இல்லையென்றால் வர மாட்டார். எப்போது தந்தை ஹான்ஜி என்று சொன்னாரோ, அதுபோல குழந்தைகளும் ஹான்ஜி என்று சொல்ல வேண்டுமல்லவா? என்ன நடந்தாலும் சரி, பாப்தாதா கூறுகின்றார் அல்லவா? சுய பரிவர்த்தனைக்காக, இந்த எல்லைக்குட்பட்ட நான் என்பதிலிருந்து இறக்க வேண்டும். நான் என்பதில் இறந்து விட வேண்டும். சரீரத்தால் அல்ல. சரீரத்திலிருந்து இறக்க வேண்டாம். நான் (மை-பன்) என்பதிலிருந்து இறப்பு. நான் சரியாக இருக்கிறேன், நான் இப்படி இருக்கிறேன்! நான் என்ன குறைச்சல்? எனக்கு எல்லாம் தெரியும், இப்படிப்பட்ட நான் என்பதிலிருந்து இறந்து விட வேண்டும். இப்படி இறப்பது என்பது இனிமையான இறப்பு. இது இறப்பு அல்ல. 21-பிறவிக்கு இராஜ்ய பாக்கியத்தோடு வாழ்வதாகும். அப்படியானால் சரிதானா? டீச்சர்ஸ் சரிதானா? டபுள் ஃபாரினர்ஸ்? (இரட்டை வெளிநாட்டவர்) டபுள் ஃபாரினர்ஸ் என்ன சங்கல்பம் செய்கிறார்களோ, அதைச் செய்து காட்டுவதில் துணிச்சல் உள்ளவர்களாக இருக்கிறார்கள். இந்த

விசேஷம் அவர்களிடம் உள்ளது. பாரதவாசிகள் மும்மடங்கு துணிச்சலானவர்கள். அவர்கள் டபுள் என்றால் இவர்கள் டிரிப்பிள் (மும்மடங்கு). ஆகவே பாப்தாதா இதைத்தான் பார்க்க விரும்புகின்றார். இப்போது, இந்த முறை தீபாவளி கொண்டாடுங்கள். வேண்டுமானால், 6-மாதங்களுக்குப் பிறகு கொண்டாடுங்கள். எப்போது பாப்தாதா தீபாவளி நிறைவு விழா கொண்டாடுவதைப் பார்க்கின்றாரோ, அதன் பிறகு தன்னுடைய புரோகிராம் தருவார். செய்யத்தான் வேண்டும். நீங்கள் செய்யவில்லை என்றால் இனி வரப் போகிறவர்கள் செய்வார்களா, என்ன? 16108-மணி மாலையில் பழைய ஆத்மாக்களாகிய நீங்கள் தான் வருவீர்கள், புதியவர்கள் பின்னால் வருவார்கள். சரி. யாராவது லாஸ்ட் ஸோ பாஸ்ட் வருவார்கள். யாராவது உதாரணமாக இருக்கக்கூடிய லாஸ்ட் ஸோ பாஸ்ட் வருவார்கள். முதலில் வருவார்கள் ஆனால் கொஞ்சம் பேர் தான். மற்றப்படி நீங்கள் தான். நீங்கள் தான் ஒவ்வொரு கல்பத்திலும் ஆகியிருக்கிறீர்கள். நீங்கள் தான் ஆக வேண்டும். இப்போது எங்கே அமர்ந்திருந்தாலும், ஃபாரினில் இருந்தாலும், உள் நாட்டில் இருந்தாலும் சரி, யார் வெகு காலமாக நிச்சயப்புத்தி உடையவர் களாக இருக்கின்றார்களோ, அவர்கள் அதிகாரிகளேயாவர். பாப்தாதாவுக்கு அன்பு இருக்கிறதல்லவா? யாரெல்லாம் வெகு காலமாக நல்ல புருஷாரத்திகளாக, சம்பூரண புருஷாரத்தி அல்ல, நல்ல புருஷாரத்திகளாக இருந்து வந்திருக்கின்றார்களோ. அவர்களை பாப்தாதா விட்டுவிட்டுப் போக மாட்டார். கூடவே அழைத்துச் செல்வார். ஆதலால் (பக்காவாக) நிச்சயம் செய்து கொள்ளுங்கள். நீங்கள் தான் இருந்தீர்கள். நீங்கள் தான் இருக்கிறீர்கள், நீங்கள் தான் இருப்பீர்கள். சரி தானே! பக்காவாகி விட்டதல்லவா? போதும். சுப எண்ணமுடையவர்களாக, சுப சிந்தனை செய்யக்கூடியவர்களாக, சுப பாவனை, பரிவர்த்தனை செய்யும் பாவனை, உதவி செய்ய வேண்டும் என்ற பாவனை இரக்க மனம் உள்ள பாவனையை மனதில் எழுச்சியுறச் செய்யுங்கள் இப்போது அமிழ்ந்து போய்க் கிடக்கிறது. எழுச்சியுறச் செய்யுங்கள். அறிவுரை நிறைய சொல்லாதீர்கள். மன்னியுங்கள், அறிவுரை சொல்வதில் ஒருவருக்கொருவர் கெட்டிக்காரர்களாக இருக்கின்றனர் ஆனால் மன்னிப்போடு, அறிவுரை கூறுங்கள். முரளி சொல்வது, கோர்ஸ் கொடுப்பது, மற்றபடி நீங்கள் என்னென்ன புரோகிராம் செய்கிறீர்களோ, அதைப்பற்றிய அறிவுரை தாருங்கள் ஆனால் எல்லோருடனும், எப்போது அலுவல்களில் வருகின்றார்களோ,

மேலும் தொடர்ந்து செய்து கொண்டுமிருக்கிறார்கள் ஆனால் பாப்தாதா ஜாடையாக என்ன சொல்கிறார் என்றால், பொதுவாக நிறைய பேருக்கு பலன் கிடைக்கும் வகையில் செய்வதோடு, விசேஷ தன்மையுடையவர்களுக்கும் (குவாலிட்டி) சேவை செய்யுங்கள். இவர்களுக்கு சேவை செய்வதன் மூலம், இவர்களை சகயோகிகளாக ஆக்குங்கள். விசேஷ ஆத்மாக்களை முன்னிலையில் அழைத்து வாருங்கள். சேவை மேடையில் கொண்டு வாருங்கள். குவாலிட்டி, குவாண்ட்டிட்டி (எண்ணிக்கை) இரு சாராருக்கும் சேவை நடக்கட்டும். அதிகம் பேருக்கு சேவை செய்வதாக நினைத்து, விசேஷ ஆத்மாக்களைப் பற்றிக் கவனிக்காமல் இருந்து விடக்கூடாது. ஏனெனில், நேரம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. தந்தையின் பிரத்யக்ஷம் எப்போது ஆகும் என்றால், எப்போது விசேஷ ஆத்மாக்கள் காரியத்திலும் மற்றும் தந்தையைப் பிரத்யக்ஷம் செய்வதிலும் முன்னிலையில் வருவார்களோ அப்போது தான். செய்தி கொடுப்பதும், அவசியம் தான் ஆனால் செய்தி கொடுப்பவர்களாக ஆக்குவதும் அவசியம், இப்போதும் கூட, விதவிதமான துறையைச் சார்ந்தவர்கள் வந்திருக்கிறார்கள். பாப்தாதா கேள்விப்பட்டார். யாரெல்லாம் வந்திருக்கிறார்களோ, அவர்கள் ஒவ்வொருவரும் கை உயர்த்துங்கள்.

**ஸ்போர்ட், அட்மினிஸ்டிரேஷன், யூத், ஐ.டி. குருப் (SPORTS, ADMINISTRATION, YOUTH, I.T.) எல்லா துறையைச் சார்ந்தவர்களையும், பாப்தாதா கையை உயர்த்தச் செய்தார்:** வந்திருப்பவர்கள், எந்தத் துறையைச் சார்ந்தவர்களாயினும், மீட்டிங் செய்திருக்கிறார்கள் ஆனால் பாப்தாதாவிடம் ஒவ்வொரு வர்க்கத்திலிருந்தும் தங்கள் சேவை மூலம் நம்பர்-1 ஐ.பி. ஒருவராவது கொண்டு வந்து சேர்க்கவில்லை. எந்தத் துறையிலிருந்து மைக் (விசேஷமான ஆத்மா) தயார் செய்திருக்கிறார்கள்? எந்த துறையைச் சார்ந்தவர்கள் செய்திருக்கிறார்கள்? கை உயர்த்துங்கள்? யார் செய்திருக்கிறார்கள்? இனி எல்லாத் துறையைச் சார்ந்தவர்களுக்காக, புரோகிராம் நடக்கப்போகிறது. அதில் ஒவ்வொரு துறையிலிருந்தும் விசேஷ ஆத்மாக்களினுடைய (மைக்) சிறு குரூப் முன்னிலையில் மதுபன் கொண்டு வர வேண்டும். இதைச் செய்ய முடியுமல்லவா? எந்தக் குழந்தை தயாராகியிருக்கிறது என்று பாப்தாதா பார்க்கட்டும். பாப்தாதாவின் எதிரில் கொண்டு வர வேண்டாம். முதலில் தாதிகள்

முன்னால் வரட்டும். பிறகு அவர்கள் பாஸ் செய்த பிறகு பாப்தாதா முன்னால் கொண்டு வர வேண்டும். நல்லது. நிறைய கேட்டாகி விட்டது.

நல்லது. இப்போது கேட்பது என்றால், தனக்குள் தேக்கி வைத்துக் கொள்வதாகும். தேக்கி வைப்பது என்பது சொரூபத்தில் கொண்டு வருவது. இப்போது 6-லக்ஷம் பிராமண பரிவாரத்தில் ஒருவர்க்கொருவர் சதா சிநேகி, சகயோகி மற்றும் சதா தைரியம் கொடுப்பவர்களாக இருக்க வேண்டும். நல்லது.

சேவை இராஜஸ்தான், யூ.பி. உதவியாளர்கள்: நன்றாயிருக்கிறதல்லவா? இராஜஸ்தானத்திற்கு நிறைய சான்ஸ் கிடைத்திருக்கிறது. நிறைய புண்ணியம் சேமிப்பதற்காக. பாருங்கள் எண்ணிக்கை எவ்வளவு அதிகமாகி விட்டது. இவ்வளவு ஆத்மாக்களின் புண்ணியம் சேவாதாரிகளின் கணக்கில் சேமிப்பாகி விட்டது. இராஜஸ்தானுக்கு சங்கல்பம் செய்யாமலேயே, புண்ணியத்தின் கோல்டன் லாட்டரி கிடைத்து விட்டது. நல்லது. இராஜஸ்தானுக்கு கிடைத்திருப்பது எல்லோருக்கும் மகிழ்ச்சியாயிருக்கிறது. நல்லது. எல்லோரும் நிறைய நேரம் ஒதுக்கி சேவையை நன்றாகச் செய்தார்கள். மேலும் சேவையில் வெற்றியும் அடைந்து விட்டார்கள். இதற்காக வாழ்த்துக்கள். நல்லது. சபையில் ஏறத்தாழ 25-ஆயிரம் பேர்களுக்கும் அதிகமாக சகோதர, சகோதரிகள் வந்து சேர்ந்திருக்கிறார்கள். நீங்கள் எல்லோரும் கூட, தாதிகளுக்கும், சேவாதாரிகளுக்கும், வாழ்த்துக் களைத் தெரிவித்தீர்கள். இவ்வளவு முயற்சி செய்வித்திருக்கிறார்கள். நன்றாக கை தட்டுங்கள். உட்காருங்கள்.

இப்போது ஒரு நொடியில், மனதிற்கு எஜமானனாகி, மனதை எவ்வளவு நேரம் வேண்டுமோ, அவ்வளவு நேரம் ஏகாக்கிரஹம் (ஒருமுகப்படுத்துதல்) செய்ய முடியுமா? செய்ய முடியுமா? ஆகவே இப்போது இந்த ருஹானி அப்பியாசம் செய்யுங்கள். முற்றிலும் மனம் ஒருமுகப்பட்டிருக்கட்டும். சங்கல்பத்தில் சஞ்சலம் கூடாது. உறுதியான நிலை. நல்லது.

நாலா பக்கமுமுள்ள, அவிநாஷி, அகண்ட கஜானாக்களின் மாலிக், சதா சங்கமயுகி, சிரேஷ்ட பந்தன முக்த், ஜீவன் முக்த் ஸ்திதியில் நிலைத்திருக்கும் சதா பாப்தாதாவின் விருப்பத்தை பூர்த்தி செய்யக்கூடிய சதா ஒற்றுமை, மற்றும் ஏகாக்கிரத்தா, சக்தி சம்பன்ன, மாஸ்டர் சர்வ சக்திவான் ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே.

நாலா பக்கமும் தூரமாக அமர்ந்திருக்கும் குழந்தைகளுக்கு யாரெல்லாம் அன்பு நினைவுகளை அனுப்பியிருக்கிறார்களோ, அவர்களுக்கும் கூட பாப்தாதா மிக மிக அதிகமான, மனப்பூர்வமான அன்பு நினைவுகளை அளிக்கின்றார். கூடவே அநேக குழந்தைகள் மதுபனில் இருந்து உற்சாகமடைந்து சென்றதன் கடிதமும், மிக மிக நன்றாக எழுதி அனுப்பியிருக்கிறார்கள். அந்த குழந்தைகளுக்கும் கூட விசேஷமான அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே.

✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵✵
✵✵✵✵✵✵✵✵

## 15.10.2004 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

## ஒருவரைப் பிரத்யக்ஷம் செய்வதற்காக, ஏக்ரஸ் ஸ்திதியில் இருங்கள். ஸ்வமானில் இருங்கள். எல்லோருக்கும் மரியாதை கொடுங்கள்!

இன்று பாப்தாதா ஒவ்வொரு குழந்தையின் நெற்றியிலும் மூன்று பாக்கிய நட்சத்திரம் பிரகாசித்துக் கொண்டிருப்பதைப் பார்க்கின்றார். ஒன்று, பரமாத்மா பாலனையின் பாக்கியம். இரண்டாவது, பரமாத்மா படிப்பின் பாக்கியம். மூன்றாவது, பரமாத்மா வரதானங்களின் பாக்கியம் இந்த மூன்று நட்சத்திரங்களையும், நெற்றியில் இரு புருவங்களுக்கும் மத்தியில் பார்க்கின்றார் நீங்களும் கூட பிரகாசித்துக் கொண்டிருக்கின்ற உங்களுடைய பாக்கிய நட்சத்திரத்தைப் பார்க்கின்றீர்களா? தெரிகின்றதா? இப்படிப்பட்ட சிரேஷ்ட பாக்கிய நட்சத்திரம் முழு உலகிலும் வேறுயாருடைய நெற்றியிலும் பிரகாசிப்பதைப் பார்க்க முடியாது. இந்த பாக்கிய நட்சத்திரம் உங்கள் எல்லோருடைய நெற்றியிலும் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது ஆனால் பிரகாசத்தில் சிலரிடம் வித்தியாசமாக இருக்கின்றது. சிலருடைய பிரகாசம் மிகவும் சக்திசாலியாகவும், சிலருடைய பிரகாசம் மத்யமாகவும் (நடுத்தரம்) காணப்படுகிறது. பாக்கிய விதாதா பாக்கியத்தை எல்லாக் குழந்தைகளுக்கும் ஒரே சமமாகக் கொடுத்திருக்கின்றார். ஒரு சிலருக்கு விசேஷமாகக் (ஸ்பெஷலாக) கொடுக்கவில்லை. பாலனையும் ஒரே மாதிரிதான். படிப்பும் எல்லோருக்கும் ஒன்றாகவேதான். வரதானமும் எல்லோருக்கும் ஒரே மாதிரியாகவே கிடைத்திருக்கிறது. முழு உலகத்தில் ஒவ்வொரு மூலையிலும் கூட படிப்பு சதா ஒன்றுதான். இதில் விந்தை என்னவென்றால், ஒரே முரளி, ஒரே தேதி, அமிர்தவேளை அவரவருடைய தேசத்திற்கேற்றாற் போன்ற நேரமாக இருந்தாலும், ஒன்றுதான் வாதானமும் கூட ஒன்று தான்.

சுலோகனும் கூட ஒன்றுதான் வித்தியாசமாக இருக்கிறதா என்ன? அமெரிக்காவில் ஒருவிதமாகவும், லண்டனில் வேறு விதமாகவும் இருக்கிறதா? இல்லவே இல்லை. இப்படி இருக்கும் போது, வித்தியாசம் ஏன்?

அமிர்தவேளை பாலனை பாப்தாதா நாலாபக்கமும் ஒரே மாதிரியாகவே செய்கின்றார். நிரந்தர நினைவின் விதியும் கூட எல்லோருக்கும் ஒரே விதமாகவே கிடைக்கிறது. இருந்தாலும் நம்பர் வாராக இருப்பது ஏன்? விதி ஒன்றாக இருக்கும்போது, சித்தி அடைவதில் வித்தியாசம் ஏன்? பாப்தாதாவிற்கு நாலா பக்கங்களிலுமுள்ள குழந்தைகளிடம் உள்ள அன்பும் ஒரே விதமாகவே இருக்கின்றது. பாப்தாதா புருஷார்த்தத்தின் அடிப்படையில் வரிசைக்கிரமத்தில் கடைசி நம்பரில் இருப்பவரிடமும் அதே அன்புதான் வைத்திருக்கின்றார் மேலும் அதே அன்புடன் கூடவே கடைசி நம்பர் உள்ளவர்மீது இரக்கமும் கூட இருக்கிறது. அதாவது இப்படி கடைசி நம்பரில் உள்ளவரும் கூட, தீவிர புருஷார்த்தம் செய்து முதல் நம்பரில் வரவேண்டும் என்பது. நீங்கள் எல்லோரும் கூட தூர தூரமாக இருக்கும் இடங்களிலிருந்தெல்லாம் வந்து சேர்ந்திருக்கிறீர்கள். எப்படி வந்து சேர்ந்தீர்கள்? பரமாத்மாவின் மீதுள்ள அன்பு உங்களை இழுத்துக் கொண்டு வந்ததல்லவா? அன்புக் கயிறில் கட்டுண்டவர்களாக வந்து சேர்ந்து விட்டீர்கள். ஆதலால் பாப்தாதாவிற்கு எல்லோரிடமும் அன்பு இருக்கிறது. இப்படி நினைக்கிறீர்களா? அல்லது பாப்தாதாவிற்கு என்னிடம் அன்பு நிறைய இருக்கிறதா? குறைவாக இருக்கிறதா? என்ற கேள்வி உள்ளுக்குள் இருக்கிறதா? பாப்தாதாவிற்கு, ஒவ்வொரு குழந்தையிடமும், மற்றவரை விட அன்பு அதிகமாகவே இருக்கின்றது. மேலும் இந்த பரமாத்மா அன்புதான் எல்லா. குழந்தைகளினுடைய விசேஷ பாலனைக்கு ஆதாரம் ஒவ்வொருவரும் என்ன நினைக்கிறீர்கள்? பாப்தாதாவிடம், எனக்கு மற்றவரை விட அன்பு அதிகமாக இருக்கிறதா? குறைவாக இருக்கிறதா என்று நினைக்கிறீர்களா? என்னுடைய அன்பு, என்னுடைய அன்புதான் அதிகம் என்று தானே நினைக்கிறீர்கள்! பாண்டவர்கள் அப்படித்தானே நினைக்கிறீர்கள்? ஒவ்வொருவரும் என்னுடைய பாபா என்றுதான் கூறுவார்களே தவிர, சென்டர் பொறுப்பு சகோதரியின் பாபா, தாதியினுடைய பாபா, ஜானகி தாதியினுடைய பாபா, என்று சொல்வார்களா? இல்லை. மேரா பாபா! என்று தான்

கூறுவார்கள். எப்போது என்னுடைய (மேரா) என்று சொல்லி விட்டார்களோ, மேலும் தந்தையும் கூட என்னுடைய (மேரா) என்று சொல்லி விட்டாரோ, அப்போது ஒரு என்னுடைய என்ற வார்த்தையிலேயே குழந்தை, தந்தையினுடையவராகி விட்டார். மேலும் தந்தையும் குழந்தைகளினுடையவராகி விட்டார். கஷ்டப்பட வேண்டியிருந்ததா? கஷ்டமிருந்ததா? ஒரு சிறிதளவாவது? இல்லை. சில சமயம் கஷ்டமாக இருக்கிறது. அப்படியா? கஷ்டமாக இல்லையா? இருந்தது. சரி. கஷ்டமாக இருந்தது என்றால், என்ன செய்கிறீர்கள்? களைப்படைந்து விடுகிறீர்களா? உள்ளத்திலிருந்து, அன்போடு மேரா பாபா என்று சொன்னால், கஷ்டம் எனபது அன்பாக மாறி விடுகிறது. மேரா பாபா என்று சொன்னவுடனேயே, அந்த சப்தமானது தந்தையைக் சென்றடைந்து விடுகிறது. அப்போது தந்தை அதிகப்படியாக உதவி செய்கின்றார் ஆனால் இந்த கொடுக்கல் வாங்கல் (வியாபாரம்) உளப்பூர்வமாக இருக்க வேண்டுமேயல்லாது, வெறும் உதட்டளவிலான வியாபாரமாக இருக்கக் கூடாது. உளப்பூர்வமான வியாபாரம். ஆதலால் நீங்கள் உள்ள பூர்வமாக வியாபாரம் செய்வதில் கெட்டிக்காரர்கள்தானே! வருகிறதல்லவா? பின்னால் அமர்ந்திருப்பவர்களுக்கு வருகிறதா? ஆகவேதான் வந்து சேர்ந்திருக்கிறீர்கள். இருப்பினும் எல்லோரையும் விட தூரதேசிகளா? அல்லது தந்தை தூரதேசியா? அமெரிக்காவோ, இந்த உலகில்தான் உள்ளது ஆனால் தந்தையோ, வேறு உலகிலிருந்து வருகின்றார். அப்படியானால் எல்லோரையும் விட தூரதேசி பாப்தாதாதான். ஒருவர் சூட்சும வதனத்திலிருந்து (ஆகார் வதனம்) ஒருவர் பரந்தாமத்திலிருந்து வருகின்றார். இதனோடு ஒப்பிடுகையில் அமெரிக்கா ஒன்றுமே இல்லை.

ஆதலால் இன்று தூரதேசி தந்தை, இந்த சாகார (ஸ்தூல) உலகிலுள்ள தூரதேசி குழந்தைகளைச் சந்திக்கின்றார் நஷா உண்டாகிறதல்லவா? இன்று எங்களுக்காக பாப்தாதா வந்திருக்கின்றார். என்ற நஷா உண்டாகிறது. பாரதவாசிகள் தந்தையினுடையவர்கள்தான் ஆனால் டபுள் விதேஷிகளைப் பார்த்து, பாப்தாதா விசேஷ மகிழ்ச்சியடைகின்றார். ஏன் மகிழ்ச்சி அடைகின்றார்? பாரதத்தில் பாப்தாதா வருகின்றார் என்பதால், பாரதவாசிகளுக்கு அதிகமாக நஷா இருக்கின்றது என்பது பாப்தாதாவிற்கு தெரியும் ஆனால் டபுள் ஃபாரினர்ஸ் குழந்தைகளிடம் அன்பு இருப்பதன் காரணம், வெவ்வேறு

கலாச்சாரமுடையவர்களாக இருந்தபோதிலும், பிராமண கலாச்சாரமுடையவர்களாக மாறி விட்டார்கள். ஆகி விட்டீர்கள் அல்லவா? இது பாரத கலாச்சரம், நம்முடைய கலாச்சாரம் வேறு என்று இப்போது சங்கல்பத்தில் வருவதில்லை ரிசல்ட்டைப் பார்க்கும்போது, எல்லோரும் ஒரே கலாச்சாரமுடையவரர்களாக ஆகி விட்டது தெரிகின்றது. எந்த நாட்டைச் சேர்ந்தவராக இருந்தாலும் சரி, சரீரத்தைப் பொறுத்தமட்டில், தேசம் வெவ்வேறானதாக இருக்கலாம் ஆனால் ஆத்மா பிராமண கலாச்சரமுடையதாக இருக்கிறது மேலும் டபுள் ஃபாரினர்ஸிடம் உள்ள இன்னொரு விஷயம் பாப்தாதாவிற்கு மிகவும் பிடித்தமானதாக இருக்கிறது. அது என்ன தெரியுமா? (சீக்கிரமாகவே சேவையில் இறங்கி விட்டார்கள்) இன்னும் கூறுங்கள்? (வேலையும் செய்கிறார்கள். சேவையும் செய்கிறார்கள்) இப்படி இந்தியாவிலும் செய்கிறார்கள். இந்தியாவிலும் வேலை செய்கிறார்கள். ஏதாவது நடந்து விட்டால், உண்மையை மறைக்காமல் தங்களுடைய பலவீனத்தைக் கூறி விடுகிறார்கள் (ஸ்பஷ்டவாதி) நல்லது. இந்தியா ஸ்பஷ்டவாதி இல்லையா?

தூரமாக இருக்கலாம் ஆனால் தந்தையிடம் அன்பு இருப்பதன் காரணமாக, அன்பில் மெஜாரிட்டி பாஸ் பாரதத்திற்கு பாக்கியம் உள்ளது ஆனால் தூரத்தில் இருப்பவர்களாக இருந்தாலும் அன்பில் எல்லோரும் பாஸ். அன்பில் சதவிகிதம் உள்ளதா என்று ஒருவேளை பாப்தாதா கேட்டால்? அன்பு என்ற பாடத்தில், தந்தையிடம் எவ்வளவு சதவிகிதம் அன்பு உள்ளது என்று நினைப்பவர்கள் கை உயர்த்துங்கள். 100-சதவிகிதம்? பாரதவாசிகள் கை உயர்த்தாமல் இருக்கிறார்கள். பாரதத்திற்குத் தான் பாக்கியம் கிடைத்திருக்கின்றது. பாரதத்தில் தான் தந்தை வந்திருக்கின்றார். இது எல்லாவற்றையும் விட மிகப் பெரிய பாக்கியம். இதில் தந்தைக்கு அமெரிக்கா பிடித்தமானதாக இல்லை. பாரதம் தான் பிடித்தமானதாக இருக்கிறது. ஆகவேதான் இவர் (அமெரிக்காவின் காயத்ரி பகன்) எதிரில் அமர்ந்திருக்கின்றார். தூரமாக இருந்தாலும் அன்பு நிறைய இருக்கின்றது. பிரச்சினைகள் வருகின்றன. இருந்தாலும் பாபா! பாபா என்று சொல்லிக் கொண்டே, பிரச்சினைகளைக் கடந்து விடுகின்றார். அன்பில் பாப்தாதாவும் கூட பாஸ் செய்து விட்டார். இனி எதில் பாஸாக வேண்டும்? பாஸாகத்தான் வேண்டும். ஆகிக் கொண்டிருக்கின்றீர்கள். ஆகவும் வேண்டும். தற்கால

நிலவரப்படி, பாப்தாதா என்ன விரும்புகின்றார் என்றால், ஒவ்வொரு குழந்தையும் ஸ்வ பரிவர்த்தனை சக்தியின் சதவிகிதம், எப்படி அன்பின் சக்தியில், எல்லோருமே கை உயர்த்தினீர்கள் அல்லவா? கையை எல்லோருமே உயர்த்தினீர்கள் எல்லோருமே உயர்த்தினீர்கள் அல்லவா? அதுபோல கையை ஸ்வ பரிவர்த்தனையில் தீவிர கதி உள்ளதா? இதில் கை உயர்த்தச் சொன்னால், கை, பாதி உயருமா, முழுமையாக உயருமா? கை எவ்வளவு உயரும்? பரிவர்த்தனை செய்து கொண்டுமிருக்கிறீர்கள் ஆனால் நேரம் பிடிக்கிறது. நேரம் நெருங்கிக் கொண்டிருப்பதன் அடிப்படையில், ஸ்வ பரிவர்த்தனை சக்தி எப்படி தீவிரமானதாக இருக்க வேண்டுமென்றால், ஒரு காகிதத்தில் புள்ளி வைப்பதற்கு எவ்வளவு நேரம் ஆகுமோ, அவ்வளவு நேரம் தான் ஆக வேண்டும். புள்ளி வைப்பதற்கு எவ்வளவு நேரம் ஆகும்? ஒரு செகண்டு கூட ஆகாது. சரிதானே? அப்படியானால் அவ்வளவு தீவிர கதி இருக்கிறதா? இதில் கை உயர்த்தச் சொல்லலாமா? இதில் பாதி தான் உயரும். நேரத்தின் வேகம் அதிகமாக இருக்கிறது. ஸ்வ பரிவர்த்தனை சக்தியின் வேகம் அந்த அளவுக்கு தீவிரமாக வேண்டும். எப்போது பரிவர்த்தனை என்று கூறுகின்றீர்களோ, அப்போது பரிவர்த்தனைக்கு முன்பாக ஸ்வ என்ற சொல்லும் சதா நினைவில் இருக்க வேண்டும் பரிவர்த்தனை அல்ல. ஸ்வ பரிவர்த்தனை. பாப்தாதாவிற்கு நினைவு இருக்கிறது. சம்ஸ்கார பரிவர்த்தனைக்காக, குழந்தைகள் தந்தையிடம் ஒரு ஆண்டு காலம் வேண்டும் என்று கேட்டிருந்தார்கள். சம்ஸ்கார பரிவர்த்தனை மூலம், உலக பரிவர்த்தனை செய்வோம் என்று உறுதிமொழியும் கொடுத்தார்கள் நினைவிருக்கிறதா? சம்ஸ்கார பரிவர்த்தனை மூலம் உலக பரிவர்த்தனை என்ற ஆண்டும் கொண்டாடப்பட்டது. உலகத்தின் கதியும் மேலும், மேலும் மோசமாகிக் கொண்டே இருக்கின்றது ஆனால் சம்ஸ்கார பரிவர்த்தனை, அந்த அளவுக்கு தீவிரமாக இருக்கின்றதா? வெளிநாட்டை எடுத்துக் கொண்டால், வெளிநாடு பொதுவாக வேகமாகச் சென்று கொண்டிருக்கின்றது. வேகமாக காரியங்களும் நடக்கின்றன. அப்படியானால் சம்ஸ்கார பரிவர்த்தனையில் இப்படிப்பட்ட வேகம் இருக்கின்றதா? ஆதலால் சம்ஸ்கார பரிவர்த்தனையின் வேகம், தீவிரமாக இருப்பதை பாப்தாதா பார்க்க விரும்புகின்றார். பாப்தாதா என்ன விரும்புகின்றார் என்று எல்லோரும் கேட்கின்றீர்கள் அல்லவா? பாப்தாதா இதைத்தான் விரும்புகின்றார். ஒரு செகண்டில் புள்ளி வைத்து

விட வேண்டும். எப்படி காகிதத்தில் புள்ளி வைக்கிறீர்களோ அதை விட வேகமாக, பரிவர்த்தனையில் அதாவது எது யதார்த்தமானதில்லையோ, அதற்கு புள்ளி வைக்க வேண்டும் புள்ளி வைக்கத் தெரியுமல்லவா? தெரியுமா? ஆனால் ஒரு சில சமயம் கேள்வி வந்து விடுகிறது. புள்ளி வைக்க வேண்டுமென்று தொடங்கி கேள்விக்குறியாக்கி விடுகிறார்கள். இது ஏன்? இது என்ன? இந்த ஏன், என்ன என்பது முற்றுப் புள்ளியை, கேள்விக்குறியாக மாற்றி விடுகிறது பாப்தாதா முன்பே கூறியிருக்கின்றார். ஒய், ஒய் (Why) என்று கூறாதீர்கள்.. பதிலாக ஆஹா! என்று கூறுங்கள். வாஹ் என்று கூறுங்கள். பறந்து செல்லுங்கள். ஒய் என்று சொல்வது எளிதாகி விட்டது. சீக்கிரம் வந்து விடுகின்றது. இனி ஒய் என்று வந்தால், வாஹ், வாஹ் (ஆகா, ஆகா) என்பதாக மாற்றி விடுங்கள். யாராவது ஏதாவது செய்தால், சொன்னால், வாஹ்! டிராமா வாஹ்! இப்படி ஏன் செய்கிறார்? இப்படி ஏன் சொல்கிறார்? என்றல்ல. இவர் செய்தால், நான் செய்வேன், என்பதும் அல்ல.

தற்சமயம் பாப்தாதா என்ன பார்க்கின்றார் என்பதை சொல்லட்டுமா? பரிவர்த்தனை செய்ய வேண்டுமல்லவா? இப்போது ரிசல்ட் பார்க்கும் போது வெளிநாடுகளிலும் சரி, இந்தியாவிலும் சரி, இரண்டிலும் ஒரு விஷயத்தில் ஒரே விதமான அலை வீசிக் கொண்டிருக்கிறது. அது என்ன? இப்படி நடக்க வேண்டும். இது கிடைக்க வேண்டும். இவர் இதைச் செய்ய வேண்டும் எதை நான் சொல்கின்றேனோ, நினைக்கின்றேனோ அப்படித்தான் நடக்க வேண்டும். இந்த வேண்டும். வேண்டும் என்பது சங்கல்ப மாத்திரம் இருந்தாலும் கூட, இந்த வேஸ்ட் எண்ணமானது, பெஸ்ட் ஆக விடாமல் தடுக்கிறது. பாப்தாதா எல்லோருடைய வேஸ்ட் எண்ணம் என்ற சார்ட்டை சற்று நேரம் பார்த்தார். சோதனை செய்தார்? பாப்தாதாவிடம் பவர்புல் மெஷினரி இருக்கிறதல்லவா? உங்களிடம் இருப்பது போன்ற கம்ப்யூட்டர் அல்ல. உங்களுடைய கம்ப்யூட்டர் நிந்தனை கூட செய்யும் ஆனால் பாப்தாதாவிடம் உள்ள செக்கிங் (சோதிக்கும்) மெஷினரி மிகவும் வேகமானது மெஜாரிட்டி குழந்தைகளிடம் வேஸ்ட் சங்கல்பம் முழு நாளில், இடை இடையே கொஞ்சம் நடப்பதை பாப்தாதா பார்த்தார். என்ன நடக்கிறது என்றால், இந்த வேஸ்ட் சங்கல்பத்தின் எடை பாரமாக இருக்கும். நல்ல எண்ணங்களின் (பெஸ்ட் சங்கல்பம்) எடை இலகுவாக இருக்கும். ஆதலால் இடையிடையே நடக்கும் வேஸ்ட் சங்கல்பமானது

புத்தியை பாரமாக்கி விடுகிறது. புருஷார்த்தத்தை பாரமாக்கி விடுகிறது. பாரமானதல்லவா? இந்த பாரம் தன் பக்கமாக இழுத்து விடுகிறது. சுயஉன்னதிக்கு லிப்ட்டாக இருக்கும் சங்கல்ப்பம் இது ஏணி அல்ல, லிப்ட். குறைவாக இருப்பதன் காரணமாக, கஷ்டம் என்ற ஏணிப்படி மூலம் ஏற வேண்டியதாக இருக்கின்றது. ஆதலால் இரண்டு வார்த்தைகளை நினைவில் வையுங்கள். வேஸ்ட் இல்லாமல் செய்வதற்காக (வேண்டாத எண்ணங்களை முற்றிலும். விலக்குவதற்காக) அமிர்தவேளை முதல் இரவு வரை, இரண்டு வார்த்தைகளை சங்கல்பத்திலும், பேச்சிலும், கர்மத்திலும் காரியத்தில் கொண்டு வாருங்கள். பிராக்டிக்களில் (நடைமுறையில்) கொண்டுவாருங்கள். அந்த இரண்டு வார்த்தைகள். ஸ்வமான், சம்மான் என்பதாகும். ஸ்வமானில் இருக்க வேண்டும். ஸ்வமான் நான் யார்? என்ற ஈஸ்வரிய நஷா, சம்மான் (மரியாதை) கொடுக்க வேண்டும். மரியாதை கொடுக்க வேண்டும். ஸ்வமானில் நிலைத்திருக்க வேண்டும். இரண்டிலும் பேலன்ஸ் வேண்டும் சில சமயம் ஸ்வமானில் அதிகமாக இருப்பது, சில சமயம் சம்மான் (மரியாதை) கொடுப்பதில் குறை உண்டாகி விடுவது என்பது கூடாது. அதாவது அவர் மரியாதை கொடுத்தால், நான் தருவேன் என்பதல்ல, நான் வள்ளல் ஆக வேண்டும். சிவசக்தி பாண்டவசேனை வள்ளலின் குழந்தைகள் வள்ளல். அவர் கொடுத்தால், நான் கொடுப்பேன் என்றால் வியாபாரம் ஆகி விட்டது. வள்ளல் என்று சொல்ல முடியாது. நீங்கள் பிஸினஸ்மேனா? வள்ளலா? வள்ளல் ஒருபோதும் வாங்குபவராக இருக்க மாட்டார். தன்னுடைய விருத்தி மற்றும் திருஷ்டியில் (வள்ளல்) என்ற லக்ஷியம் இருக்க வேண்டும். மற்றவரல்ல. நான் சதா ஒவ்வொருவருக்காகவும், அதாவது எல்லோருக்காகவும், அஞ்ஞானியாக இருந்தாலும் சரி ஞானியாக இருந்தாலும் சரி, அஞ்ஞானிகளுக்காக சுபபாவனை வைக்கிறீர்கள் ஆனால் ஞானி ஆத்மாக்கள் தங்களுக்குள்ளே ஒவ்வொரு சமயமும் சுபபாவனை, சுபகாம்னா வேண்டும். விருத்தியில் இப்படி இருக்க வேண்டும். திருஷ்டியும் இப்படி இருக்க வேண்டும். ஆம் திருஷ்டியில் ஸ்தூலமாக பிந்தி (கண்மணி) இருப்பது போல. ஒருபோதும் பிந்தி (மணி) காணாமல் போய்விடுகிறதா, என்ன? கண்களிலிருந்து ஒருவேளை பிந்தி (ஒளிப்புள்ளி) காணாமல் போய் விடுமானால் என்ன ஆகும்? பார்க்க முடியுமா? ஆகவே, எப்படி கண்களில் பிந்தி இருக்கின்றதோ அது போல ஆத்மா மற்றும்

புள்ளியான தந்தை கண்களில் அடங்கியிருக்கின்றார். எப்படி பார்க்கக் கூடிய பிந்தி ஒருபோதும் காணமல் போய் விடாதோ அதுபோல ஆத்மா மற்றும் தந்தையின் நினைவு என்னும் பிந்தி, விருத்தியிலிருந்து, திருஷ்டியிலிருந்து காணாமல் போய் விடாமல் இருக்க வேண்டும். ஃபாலோ ஃபாதர் செய்ய வேண்டுமல்லவா? எப்படி தந்தையின் திருஷ்டி மற்றும் விருத்தியில் ஒவ்வொரு குழந்தைக்காகவும் ஸ்வமான் மற்றும் சம்மான் இருக்கட்டும். சம்மான் (மரியாதை) கொடுப்பதால், இவர் இப்படி ஆகவேண்டும். மாறவேண்டும். நடக்கவேண்டும் என்பதையெல்லாம் எந்த ஒரு சங்கல்பம் நம் மனதில் இருக்கின்றதோ, அது தானாகவே நடந்தேறி விடும். அவர் அப்படி நடக்க ஆரம்பித்து விடுவார். விருத்தி மூலமாக மாறுவாரே தவிர சொல்வதன் மூலம் மாறுவதில்லை. ஆதலால் என்ன செய்யப் போகிறீர்கள்? ஸ்வமான், சம்மான் இரண்டும் நினைவிலிருக்குமல்லவா? அல்லது ஸ்வமான் மட்டுமே நினைவிருக்குமா? சம்மான் கொடுப்பது என்பது சம்மான் பெறுவதாகும். -யாருக்காவது மரியாதை கொடுப்பதென்பது, மரியாதைக்குரியவர் ஆவதாகும் என்று புரிந்து கொள்ளுங்கள். ஆத்மீக அன்பின் அடையாளம் மற்றவரிடமுள்ள குறையை தனது சுப பாவனை, சுபகாம்னா மூலமாகப் பரிவர்த்தனை செய்தல் ஆகும். பாப்தாதா கடைசியாக ஒரு செய்தி அனுப்பியிருந்தார். அதாவது தற்சமயம் குழந்தைகளினுடைய சொரூபம் கருணையுள்ளதாக, இரக்கமனமுடையவராக இருக்க வேண்டும் என்பது. கடைசி ஜன்மத்திலும் கூட உங்களுடைய ஜட சித்திரம் கருணையுடன், பக்தர்களின் மீது இரக்கம் காட்டுவதாக இருக்கிறது. எப்போது சித்திரம் இவ்வளவு கருணையுள்ளதாக இருக்கின்றதோ, அப்போது சைத்தன்யம் எப்படிப்பட்டதாக இருக்கும்? சைத்தன்யம் கருணையின் சுரங்கம் ஆகும். ஆதலால் கருணைச் சுரங்கமாக ஆகி விடுங்கள். யாரொருவர் வந்தாலும் கருணை காட்டுங்கள். இது அன்பின் அடையாளம். செய்ய வேண்டுமல்லவா? அல்லது கேட்டால் மட்டும் போதுமா? செய்யத்தான் வேண்டும். ஆகத்தான் வேண்டும். அப்படியானால் பாப்தாதா என்ன விரும்புகின்றார்? இதற்கு பதில் தடுகின்றார். கேள்வி கேட்டீர்கள் அல்லவா? அதற்கு பாப்தாதா இவ்வாறு பதில் அளிக்கின்றார்.

மற்றபடி பாப்தாதாவிற்கு மகிழ்ச்சி (குஷி) யாக இருக்கிறது. எத்தனை நாடுகளிலிருந்தெல்லாம் வந்திருக்கிறார்கள், பாருங்கள். வெவ்வேறு

தேசங்களிலிருந்து, ஒரு மதுபனில் வந்தடைந்து விட்டார்கள். பாப்தாதா இதற்கு முந்தைய ஆண்டில் ஒரு வேலை கொடுத்திருந்தார். ஞாபகமிருக்கிறதா? நினைவிருக்கிறதா? யாருக்கு நினைவிருக்கிறது? பாண்டவ சக்திகள்? பாப்தாதா கூறினார். இந்த ஆண்டு, ஒரு ஆண்டு முடிந்து விட்டது வாரிஸ் மற்றும் மைக் (விசேஷ பிரமுகர், உலகளவில் பிரசித்தமானவர்) தந்தையின் முன்னே அழைத்துக் கொண்டு வர வேண்டும் என்றார் எத்தனை வாரிசுகள் தயாராகியிருக்கின்றனர். ஆஸ்திரேலியா கூறுங்கள். எத்தனை வாரிசுகள் தயாராகியிருக்கின்றனர். அமெரிக்கா எத்தனை வாரிசுகளை தயார் செய்திருக்கின்றனர்? மைக் தயாராகிக் கொண்டிருக்கிறார்கள். அப்படியா? ஆனால் பாபாவின் முன்னால் வரவில்லை. நீங்கள் வந்து விட்டீர்கள் ஆனால் வாரிஸ், மைக் வரவில்லை. வந்திருக்கிறார்களா? எந்த தேசத்திலிருந்து புதிய வாரிஸ் வந்திருக்கின்றனர்? பழையவர்கள் இருக்கின்றார்கள். எந்த தேசத்திலிருந்தாவது புதிய வாரிசு வந்திருந்தால் கை உயர்த்துங்கள். எத்தனை தேசங்களிலிருந்து வந்திருக்கிறார்கள்? ஒரு சகோதரி வந்திருக்கின்றார். இவர் வாரிசு ஆகி வந்திருக்கின்றார். வாழ்த்துக்கள். மிகவும் நல்லது. எந்த தேசம்? கொலம்பியா! இன்னும் வேறு எந்த தேசத்திலிருந்து வந்திருக்கிறார்கள்? ஒருவர் பிரேஸில் நாட்டிலிருந்து வந்திருக்கின்றார். வாழ்த்துக்கள். இன்னும் வேறு எந்த தேசம்? கனடா, அர்ஜென்டைனா, ஹாங்காங், அமெரிக்கா, நியுஸிலாந்து, ஜெர்மனி ஆகிய நாடுகள். மிக நன்று. வாழ்த்துக்கள். ஹாங்காங்கிலிருந்து நான்கு பேர் வந்திருக்கிறார்கள். நல்லது. பக்கா வாரிசுகளா? நல்லது பிராமணராகி வந்திருக்கின்றனர். சேவை மிக நன்றாக விருத்தியாகியிருக்கின்றது. பாரதத்திலும் சரி, வெளிநாட்டிலும் சரி, சேவையில் நல்ல விருத்தி உள்ளது ஆனால் பாப்தாதா விரும்புகின்றார். விசேஷ காரியம் செய்து காண்பிப்பதற்கு நிமித்தமாகக் கூடிய ஒரு ஆத்மாவை தயார் செய்யுங்கள். இதுவரையிலும் எதைச் செய்ய வேண்டும் என்று நினைக்கிறீர்களோ, அதை செய்வதற்கு சகயோகியாக வேண்டும். அப்படிப்பட்ட ஒரு ஆத்மா தயாராக வேண்டும். புரோகிராம்ஸ் அதிகம் செய்து விட்டீர்கள். எங்கெல்லாம் புரோகிராம் நடந்ததோ, அந்த புரோகிராம் செய்த எல்லோருக்கும் பாப்தாதாவின் நல்வாழ்த்துக்கள். இனி அதாவது புதுமையாகச் செய்து காட்டுங்கள். ஏதாவது உங்கள் சார்பில், உங்களைப் போல, பாபாவைப் பிரத்யக்ஷம்

செய்ய வேண்டும். இது பரமாத்மாவின் படிப்பு, இது வாய் மொழியாக வெளி வரட்டும். பாபா பாபா என்ற சொல் உள்ளத்திலிருந்து வெளிவரட்டும். சகயோகி ஆகியிருக்கிறார்கள் ஆனால் இப்போது ஒரு விஷயம் இன்னும் பாக்கி இருக்கிறது. அது என்ன? இவர்தான் அந்த ஒருவர். இவர் தான் அந்த ஒருவர். இந்த சப்தம் பரவட்டும். பிரம்மா குமாரிகள் நல்ல சேவை செய்கிறார்கள் ஆனால் இவர்தான் அந்த ஒருவர். மேலும் இது பரமாத்மா ஞானம். என்று தந்தையை பிரத்யக்ஷம் செய்பவர் தயக்கமின்றி இப்படி சொல்ல வேண்டும். பரமாத்மா காரியம் செய்வித்துக் கொண்டிருக்கின்றார் என்று நீங்கள் கூறுகின்றீர்கள். பரமாத்மா தந்தையை எல்லோரும் அழைக்கின்றார்கள், இது அவருடைய ஞானம் என்று அவர்கள் கூறட்டும். இப்போது இந்த அனுபவம் செய்வியுங்கள். உங்களுடைய உள்ளத்தில் எப்போதும் என்ன இருக்கிறது? பாபா, பாபா, பாபா இப்படி ஒரு குரூப் வெளியே வரட்டும். நல்லது செய்ய முடியும். இது வரையிலும் சரிதான். பரிவர்த்தனை ஆகியிருக்கிறது ஆனால் கடைசி பரிவர்த்தனை ஒருவர், ஒருவர், ஒருவர். இப்படி எப்போது நடக்கும் என்றால் எப்போது பிராமண பரிவாரம் ஏக்ரஸ் ஸ்திதியுடையவர்காளகி விடுகிறார்களோ அப்போது. இப்போது ஸ்திதி மாறிக் கொண்டே இருக்கிறது. ஏக்ரஸ் ஸ்திதி ஒருவரைப் பிரத்யக்ஷம் செய்யும். சரிதானா? ஆதலால் டபுள் ஃபாரினர்ஸ் உதாரணம் ஆகுங்கள். மரியாதை (சம்மான்) கொடுப்பதில், ஸ்வமானில் இருப்பதில் உதாரண புருஷராகுங்கள். நம்பரில் முன்னேறுங்கள். நாலா பக்கங்களிலும், மோஹாஜீத் பரிவாரம் என்று உதாரணம் காட்டுகிறார்கள்? அந்த மாதிரி, சேவகன் ஆனாலும் வேலையாள் ஆனாலும் எல்லோரும் மோஹஜீத் இப்படி எங்கே போனாலும், அமெரிக்கா போனாலும், ஆஸ்திரேலியா போனாலும், ஒவ்வொரு தேசத்திலும், ஏக்ரஸ், ஏக்மத் ஸ்வமானில் இருப்பவர்கள். மரியாதை (சம்மான்) கொடுப்பவர்கள் இதில் நம்பர் வரட்டும். முடியுமல்லவா? எடுத்துக் கொள்ளுங்கள் நம்பர். நம்பர் எடுத்துக் கொள்ள வேண்டும்? இவர் அமர்ந்திருக்கிறாரல்லவா (நிர்மலா பகன்) நம்பர் எடுத்துக் கொள்ளுங்கள். நம்பர் எடுத்துக் காட்ட வேண்டும். பிறகு பாப்தாதா இரண்டு முறை வருவார். எப்போது முதல் ரிசல்ட் காண்பிக்கிறீர்களோ அப்போது கை தட்டுங்கள் ஆனால் ரிசல்ட் பார்ப்பேன்.

நல்லது. எல்லோரும் பறந்து கொண்டிருக்கிறீர்கள் அல்லவா? பறக்கும் கலையில் உள்ளவர்கள் அல்லவா? கீழும், மேலும் அல்ல. களைப்படைந்து விடுவீர்கள் பறந்து கொண்டேயிருங்கள். பறக்கும் படி செய்யுங்கள். நல்லது, பாப்தாதா பார்த்தார். யார், இங்கு வந்து சேர முடியவில்லையோ, அந்தக் குழந்தைகள் எல்லோரும் யாத் பியார் அனுப்பியிருக்கின்றனர். மேலும் கடிதங்களும் அனுப்பியிருக்கின்றனர். தூரத்தில் அமர்ந்திருந்து பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் ஆனால் பாபா கூறுகின்றார் தூரத்தில் இல்லை. உள்ளத்தில் கிருக்கின்றார்கள். எல்லாவற்றிலும் சமீபமாக இருப்பது உள்ளம்தான். ஆதலால் எங்கே அமர்ந்திருந்தாலும், பார்க்க முடியாத நிலைமையிலிருந்தாலும், உள்ளத்தால் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். சாதனம் மூலமாக பார்க்க முடியாவிட்டாலும், உள்ளத்தின் மூலம் பார்க்க முடியும். ஆதலால் உள்ளத்தால் பார்க்கின்றவர்கள், தூரத்தில் உள்ளவர்கள், எல்லோருமே தந்தையின் மன சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கின்றனர். யாத் ப்யார் (அன்பு நினைவுகள்) உள்ளத்திலிருந்து அனுப்பியிருக்கின்றார்கள். தங்களைப் பற்றிய விபரங்களையும் எழுதி அனுப்பியிருக்கின்றார்கள். பாப்தாதா எல்லோருக்கும் யாத் பியாருடன் கூட இந்த வரதானத்தை அளிக்கின்றார் -நடந்ததை கடந்து விட்டதாகக் கருதி முற்றுப்புள்ளி வைத்து விடுங்கள். பிந்தி ஆகி (ஒளிப்புள்ளி) பிந்துவாக இருக்கின்ற தந்தையை நினைவு செய்யுங்கள். இதைத்தான் எல்லோருக்கும் அவர்கள் அனுப்பியிருந்த நினைவு மற்றும் சமாச்சாரங்களுக்கும் பதிலாக அளிக்கின்றேன். முதலாவது சான்ஸ் டபுள் ஃபாரினர்ஸ் எடுத்துக் கொண்டார்கள். ஆகவே முதல் ஸ்தானத்தில் வரவேண்டும். பாப்தாதாவிற்கு குஷியாக இருக்க வேண்டும். நல்லது.

நாலா பக்கங்களிலும், தந்தையின் கண்களில் அடங்கி யிருக்கின்ற கண்மணிகளான குழந்தைகளுக்கு, சதா ஏக்ரஸ் ஸ்திதியில் நிலைத்திருக்கக் கூடிய குழந்தைகளுக்கு, சதா பாக்கிய நட்சத்திரமாக பிரகாசித்துக் கொண்டிருக்கின்ற பாக்கியவான் குழந்தைகளுக்கு, சதா ஸ்வமான், மற்றும் சம்மான் இரண்டும் கூடவே வைத்திருக்கின்ற குழந்தைகளுக்கு, சதா புருஷாரத்தத்தில், தீவிர வேகம் காட்டக்கூடிய குழந்தைகளுக்கு, பாப்தாதாவின் அன்பு நினைவுகள், ஆசிகள் மற்றும் நமஸ்தே.

**தாதிகளுடன்:** ஆதி ரத்தினங்களோ, மிகக் கொஞ்சப் பேர்தான் இருக்கின்றார்கள். நன்றாகச் செய்தார்

**மனோகர் தாதி:** மிக மிக நினைவு தந்தார். அவர் கான்பூரில் இருக்கின்றார். தியாகம் செய்திருக்கின்றார் ஆனால் நிறைய ஆத்மாக்களின் ஆசிகளைப் பெற்றிருக்கின்றார். நல்லது எல்லா தாதிகளையும் பார்த்து குஷியடைகின்றார்கள் அல்லவா? நல்லது. பார்ட் செய்து கொண்டேயிருக்கின்றார்கள்.

**சபாவை நோக்கி:** பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கின்றார் என்றால், இதையும் கூட பார்த்துக் கொண்டிருக்கின்றார். பார்க்க முடிகிறதல்லவா? நல்லது. பாருங்கள். இந்தியர்கள் தியாகம் செய்திருக்கிறார்கள் அல்லவா? நீங்கள் அயல்நாட்டினர்களுக்கு வாய்ப்பு கொடுத்து விட்டீர்கள். நல்லது. எல்லோருடைய முகங்களும் மலர்ந்து விட்டன. இனி இதே மாதிரி முகத்தை புன்முறுவலுடன் வைத்துக் கொள்ள வேண்டும். இப்போது உங்களுடைய போட்டாவைப் பார்க்கிறீர்கள் அல்லவா? இப்போதைய போட்டா உங்களுக்குத் தெரிவது போல, சதா இப்படியே இருக்கும். சதா இப்படியே இருக்குமா? மாறுமா? சதா உங்களை பாப்தாதாவின் முன்னைனிலயில் பார்க்க வேண்டும். கூடவே பாருங்கள். அப்போது உங்களுடைய முகம் இப்படியே காணப்படும். நல்லது. எல்லோரும் நல்ல விதமாக முயற்சி செய்து கொண்டிருக்கிறீர்கள். மேலும் எல்லோருடைய அன்பும் மிக நன்றாகவே இருக்கிறது. இனி இங்குமங்கும் சென்று கொண்டிருந்தாலும், சாதாரணமாகத் தெரியக் கூடாது. பரிஷ்தாவாகத் தெரிய வேண்டும். நல்லது. தாதிகள் எல்லோரும் சேவையின் ஆர்வத்தில், நினைவின் ஆர்வத்தில் மூழ்கியிருக்கக் கூடியவர்கள். எல்லோரும் மிக நன்றாக இருக்கின்றீர்கள்.

**வெளிநாட்டிலுள்ள சகோதரிகளுடன்:** மீட்டிங் மிக நன்றாக நடந்து கொண்டிருக்கிறது. இனி பிளானை பிராக்டிக்கலில் கொண்டு வரவேண்டும். நன்றாகச் செய்கிறீர்கள். தங்களுக்குள், எல்லோருடைய அபிப்பிராயம், ஆலோசனைகளைப் பெறுவதன் மூலம் ஆசிகள் கிடைத்து விடுகின்றது. ஒன்று, தங்களுடைய லக்ஷியம், இரண்டாவது

ஆசிகள். இப்படி இரண்டு வேலை நடக்கிறது. மற்றபடி ஒவ்வொருவரும் தங்களை பராமரித்து வருகின்றார்கள். நன்றாக நடந்து கொண்டிருக்கிறது. நடந்து கொண்டேயிருக்கும். இதற்காக வாழ்த்துக்கள். எல்லாம் நன்றாக நடந்து கொண்டிருக்கிறதல்லவா? அனுபவியாகி விட்டீர்கள். அனுபவத்தின் மூலம், மற்றவர்களையும் அனுபவிகளாக்கிக் கொண்டிருக்கிறீர்கள். நிர்விக்னமாக நடப்பதற்கு வாழ்த்துக்கள். மேலும் சேவையில் உற்சாகம் நன்றாக இருக்கிறது. பாப்தாதாவிடம் சமாச்சாரம் வந்தது. ஆப்பிரிக்காவின் ஆர்வம், உற்சாகத்திற்கு வாழ்த்துக்கள் முதல் நம்பர் ஆரம்பமாகியிருக்கின்றது. அதற்கு வாழ்த்துக்கள். இந்த மாதிரி எல்லோரும் நம்பர் வாராக செய்ய வேண்டும் ஆனால் முதன் முதலாக ஒருவர் நம்பர் எடுத்துக் கொண்டு விட்டார். பிளான் நன்றாக இருக்கிறது. அங்கே இருப்பவர்கள் மூலமாகவே சேவை செய்ய வேண்டும் என்ற பிளான் மிக நன்றாக இருக்கிறது. ஏனென்றால் மற்ற இடத்திலிருந்து சகயோகிகள் குறைவாகவே கிடைப்பார்கள். மேலும் அங்கே இருப்பவர்களுக்கு, அதைப் பற்றிய அனுபவம் இருக்கும்.

ஆப்பிரிக்காவின் நிஜார் சகோதரர்: பாப்தாதாவிடம் சங்கல்ப பத்திரம் கொடுத்தார். நாங்கள் எல்லோரும் சங்கல்பம் செய்கின்றோம், 2006-மம்மா தினம் வரை ஆப்பிரிக்காவில் அனைவருக்கும் செய்தி கொடுப்போம். யாரும் புகார் சொல்லாத அளவுக்கு செய்தி கொடுப்போம். நல்லது. மிகவும் நல்லது. இதே மாதிரி, இனி யாரெல்லாம் தெரியாமல் இருக்கிறார்களோ, அவர்களுக்கெல்லாம் செய்தி கொடுத்து விட வேண்டும். இந்த பிளான் எல்லாவற்றையும் விட சிறப்பாக இருக்கிறது. மேலும் சகஜ விதியாகவும் ஆகி விட்டது. சேவாதாரிகளும் கிடைப்பார்கள். சேவையும் அதிகரிக்கும். இனி எல்லோரும் செய்ய வேண்டும். லோகல் ஜனங்கள் சேவை செய்தால் இதற்கு நல்ல வரவேற்பு இருக்கும். வாழ்த்துக்கள்.

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺
✺✺✺✺✺✺✺✺

# 02.11.2004 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# சுயம் உபகாரியாகி, அபகாரம் செய்பவர்களுக்கும் உபகாரம் செய்யுங்கள். சர்வ சக்தி, சர்வ குணம் நிறைந்தவராகி, மரியாதை வள்ளல் ஆகுங்கள்!

இன்று அன்புக்கடலானவர், நாலா பக்கங்களிலுமுள்ள தன்னுடைய அன்பான குழந்தைகளைப் பார்த்து மகிழ்ச்சி படைகின்றார். சாகார ரூபத்தில் தூரத்தில் இருப்பவர்களானாலும் அன்பானது எல்லோரையும் தந்தையின் அருகாமையில் அமர்ந்திருக்கும் அனுபவம் செய்வித்துக் கொண்டிருக்கிறது. அன்பானது ஒவ்வொரு குழந்தையையும், தந்தைக்கு அருகாமையில் இருக்கும் அனுபவம் செய்விக்கிறது. குழந்தைகளாகிய நீங்கள் எல்லோரும் தந்தையிடம் உள்ள அன்பின் காரணமாக இங்கு வந்து சேர்ந்திருக்கிறீர்கள். ஒவ்வொரு குழந்தையின் உள்ளத்திலும் பாப்தாதாவின் அன்பு நிறைந்திருப்பதை பாப்தாதா பார்த்தார். ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் 'மேரா பாபா' என்ற அன்பு கீதம் ஒலித்துக் கொண்டிருக்கிறது. அன்பு தான் இந்த தேகம் மற்றும் தேக சம்மந்தத்திலிருந்து விலகியிருக்கச் செய்கிறது. அன்பு தான் மாயாஜீத் ஆக்குகிறது. எங்கே உள்ளபூர்வமான அன்பு இருக்கிறதோ, அங்கு மாயா தூரத்திலிருந்தே ஓடி விடுகிறது. அன்பு என்ற பாடத்தில் எல்லாக் குழந்தைகளும் பாஸாகி விட்டார்கள். ஒன்று அன்பு, இரண்டாவது சர்வ சக்திவான் தந்தையிடமிருந்து பெற்ற சர்வ சக்திகளின் கஜானா. ஆதலால் இன்று பாப்தாதா, ஒரு பக்கம் அன்பைப் பார்க்கின்றார். இன்னொரு பக்கம் சக்தி சேனையிடம் உள்ள சக்திகளைப் பார்க்கின்றார். எவ்வளவு அன்பு நிரம்பி உள்ளதோ அவ்வளவு சர்வ சக்திகளும் நிரம்பி இருக்கின்றதா? பாப்தாதா எல்லாக் குழந்தைகளுக்கும் ஒரே மாதிரியாகவே சர்வ சக்திகளை அளித்திருக்கின்றார். மாஸ்டர் சர்வ சக்திவான் ஆக்கி இருக்கின்றார்.

சிலரை சர்வ சக்திவானாகவும், சிலரை சக்திவானாகவும் ஆக்கவில்லை. நீங்கள் எல்லோரும், உங்களுடைய ஸ்வமான் எது என்று கேட்டால், மாஸ்டர் சர்வ சக்திவான் என்று தானே கூறுகின்றீர்கள். ஆதலால் பாப்தாதா நாலா பக்கங்களிலுமுள்ள குழந்தைகளிடம், நீங்கள் ஒவ்வொருவரும் உங்களிடம் சர்வ சக்திகள் இருக்கும் அனுபவம் செய்கின்றீர்களா? என்று கேட்கின்றார். சதா சர்வ சக்திகளின் மீது அதிகாரம் இருக்கிறதா? சர்வ சக்திகள் பாப்தாதாவின் ஆஸ்தி யாகும். அப்படியானால் அந்த ஆஸ்தியின் மீது உங்களுக்கு அதிகாரம் இருக்கிறதா? இருக்கிறதா? அதிகாரம்? டீச்சர்ஸ் கூறுங்கள். அதிகாரம் இருக்கிறதா? யோசித்துச் சொல்ல வேண்டும். பாண்டவர்கள் அதிகாரிகளா? சதா இருக்கிறதா? சதா இருக்கிறதா? அல்லது சில சமயம் மட்டும் இருக்கிறதா? எந்த சமயத்தில், எந்த சக்தியின் அவசியம் இருக்கிறதோ, அப்போது சக்தி சேனையாகிய உங்களுடைய கட்டளைப்படி அந்த சக்தி ஆஜராகி விடுகிறதா? வேண்டிய சமயத்தில், இதோ வந்து விட்டேன் என்று ஆஜராகி விடுகிறதா? யோசியுங்கள், பாருங்கள். அதிகாரியானவர் கட்டளை இட்டவுடன், எந்த சக்திக்கு கட்டளை இடுகின்றாரோ அது இதோ வந்து விட்டேன் என்று சொல்லுகிறதா? அப்படி இருந்தால் தான் எந்த சமயத்தில், எப்படிப்பட்ட பிரச்சனையானாலும் அதற் கேற்ப சக்தியைப் பிரயோகம் செய்ய முடியும் உதாரணமாக, அடக்கிக் கொள்ளும் சக்தியின் அவசியம் இருக்கிறதென்றால், அந்த சக்திக்கு நீங்கள் கட்டளை இடும்போது உங்கள் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து அந்த சக்தி உங்களிடம் உடனே ஆஜராகி விடுகிறதா.? ஆஜராகி விடுகிறது. ஆஜராகி விடுகிறது என்றால், கை அசைத்துக் காட்டுங்கள் ஆஜராகி விடுகிறதா? சில சமயம் ஆஜராகிறதா? அல்லது எப்போதும் ஆஜராகிறதா? அடக்கிக் கொள்ளும் சக்தி ஆஜராகி விடுகிறது ஆனால் 10-முறை அடக்கிக் கொண்டீர்கள். சரி. 11வது முறையும் அடக்கிக் கொள்ள முடிந்ததா? அல்லது கொஞ்சம் கீழே மேலே ஆகி விட்டதா? சதா மற்றும் சகஜமாக ஆஜராகி விட வேண்டும். சமயம் கடந்த பிறகு வரக்கூடாது. அப்படித்தான் இருக்க விரும்பினோம், ஆனால் இப்படி ஆகி விட்டது என்று சொல்லக்கூடாது. இப்படி இருந்தால், சர்வசக்திகளுக்கும் அதிகாரி என்று சொல்ல முடியும். இந்த அதிகாரத்தை பாப்தாதா எல்லோருக்குமே கொடுத்திருக்கின்றார் ஆனால் பார்க்கும்போது சதா அதிகாரியாக இருப்பதில் நம்பர்வாராக ஆகி விடுகிறது. சதா மற்றும் சகஜமாகவும்,

இயல்பான விதத்திலும், இயல்பாகவும், இருக்க வேண்டும். இதற்கான விதி என்னவென்றால், எப்படி தந்தையை, ஹுஜூர் என்று அழைப்பதோடு, ஹுஜூர், ஆஜர்! என்றும் சொல்கின்றார்கள். ஆஜர்! ஹுஜூர் என்றும் கூறுவதுண்டு ஆதலால் எந்த ஒரு குழந்தை ஹுஜூரினுடைய ஒவ்வொரு ஸ்ரீமத்துக்கும், ஆஜர் ஹஜூர் என்று ஸ்ரீமத்படி நடக்கின்றார்களோ, அவர்களுக்கு முன், சர்வ சக்திகளும் கூட ஹுஜூர்! ஆஜர் என்று தயாராக இருக்கும். ஒவ்வொரு கட்டளைக்கும், ஜி! ஹுஜூர், ஒவ்வொரு அடியிலும் ஜி! ஹஜூர் ஒருக்கால், ஒவ்வொரு ஸ்ரீமத்துக்கும், ஜி! ஹுஜூர் என்று நடக்கவில்லை என்றால், ஒவ்வொரு சக்தியும் கூட, ஒவ்வொரு சமயத்திலும் ஆஜர்! ஹஜூர் என்று நடந்து கொள்ளாது. ஒருவேளை சில சமயங்களில் மட்டும் ஸ்ரீமத் மற்றும் கட்டளையைக் கடைப்பிடிப்பவர்களானால் சக்திகளும் கூட உங்களுக்கு சில சமயம் மட்டுமே, உங்களுடைய கட்டளைப்படி நடக்கும். ஏனெனில் அந்த சமயம் அதிகாரிக்குப் பதிலாக அடிமையாகி விடுகிறீர்கள். ஆதலால் பாப்தாதா இந்த ரிசல்ட்டை சோதித்துப் பார்த்தார். இந்த சோதனையில் என்ன பார்த்தார்? நம்பர்வாராக இருப்பது தெரிந்தது. எல்லோரும் நம்பர்-1 இல்லை. நம்பர் வாராகத்தான் இருக்கிறார்கள். மேலும் சகஜமாகவும் இல்லை. சில சமயம் சகஜமாக இருக்க முடிகிறது. சில சமயம் கொஞ்சம் கஷ்டப்பட்டு சக்தி எமர்ஜ் ஆகிறது.

பாப்தாதா ஒவ்வொரு குழந்தையையும் பாபா சமானமாகப் பார்க்க விரும்புகின்றார். நம்பர்வாராக இருப்பதைப் பார்க்க விரும்பவில்லை. மேலும் உங்கள் எல்லோருடைய லக்ஷியமும் கூட பாபா சமானமாக ஆக வேண்டும் என்பது தான். ஆகவே உங்களை சோதியுங்கள். சர்வ சக்திகளும் இருக்கின்றனவா? சர்வ என்பது பாபா சமானம் ஸ்திதி இருக்கின்றதா? சில சமயம் சுயத்தின் ஸ்திதி, சில சமயம் ஏதாவது பரஸ்திதி வெற்றியடைந்து விடுகிறதா? ஒருவேளை பரஸ்திதி வெற்றியடைந்து விடுகிறது என்றால், இதன் காரணம் தெரியுமல்லவா? ஸ்திதி பலவீனமாக இருக்கும்போது, பரஸ்திதி போராடுகிறது. ஆதலால் சதா சுயஸ்திதி வெற்றியடையும் நிலையில் இருக்க வேண்டும். இதற்கு சாதனம் எது? சதா ஸ்வமான் மற்றும் சம்மான் (மரியாதை) இரண்டிலும் சமநிலை இருத்தல் ஆகும். ஸ்வமான்தாரி ஆத்மா இயல்பாகவே மரியாதை அளிக்கும் வள்ளலாக இருக்கின்றார்.

உண்மையில் யாருக்காவது மரியாதை கொடுப்பது என்பது, கொடுப்பது அல்ல. மரியாதை கொடுப்பது, மரியாதை பெறுவதாகும். மரியாதை கொடுப்பவர் எல்லோருடைய உள்ளத்திலும் இயல்பாகவே மரியாதைக்குரியவராக ஆகி விடுகிறார். பிரம்மாபாபாவைப் பார்த்தீர்களா? ஆதி தேவ் ஆக இருந்தாலும், டிராமாவில், முதல் ஆத்மாவாக இருந்தாலும் சதா குழந்தைகளுக்கு மரியாதை கொடுத்தார். தன்னைவிடவும் அதிகமாக, குழந்தைகளுக்கு மற்ற ஆத்மாக்கள் மூலம் மரியாதை கிடைக்கும்படி செய்தார். ஆதலால் ஒவ்வொரு குழந்தையின் உள்ளத்திலும் பிரம்மாபாபா மரியாதைக்குரியவராக ஆனார். அப்படியானால் மரியாதை கொடுத்தாரா, மரியாதை பெற்றாரா? மரியாதை கொடுப்பது என்றால் மற்றவருடைய உள்ளத்தில் உள்ள பூர்வமான அன்பு எனும் விதை விதைப் பதாகும். உலகின் முன் கூட விஷ்வ கல்யாணகாரி ஆத்மா ஆனார். இது எப்போது அனுபவம் செய்ய முடியும் என்றால், எப்போது ஆத்மாக்களுக்கு அன்புடன் மரியாதை கொடுக்கிறோமோ அப்போது தான். ஆதலால் பாப்தாதா தற்காலத்தில் ஒருவருக்கொருவர் மரியாதை கொடுப்பதன் அவசியத்தைப் பார்த்தார் மரியாதை கொடுப்பவர் தான் விதாத்தா ஆத்மாவாகத் தெரிகின்றார். மரியாதை கொடுப்பவர் தான் பாப்தாதாவின் ஸ்ரீமத்படி (சுப பாவனை, சுப காம்னா) நடக்க வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்ளும் ஆக்ஞாக்காரி குழந்தைகள். மரியாதை கொடுப்பது தான், ஈஸ்வரிய பரிவாரத்தின் உள்ளபூர்வமான அன்பாகும். மரியாதை கொடுப்பவர் ஸ்வமானில் சகஜமாக நிலைக்க முடியும். ஏன்? எந்த ஆத்மாக்களுக்கு மரியாதை கொடுக்கின்றாரோ அந்த ஆத்மாக்களிடமிருந்து எந்த ஒரு உளப்பூர்வமான ஆசீர்வாதம் கிடைக்கிறதோ. அந்த ஆசீர்வாதங்களின் சேமிப்பானது ஸ்வமானை சகஜமாகவும், இயல்பாகவும் நினைவு படுத்துகிறது. ஆதலால் பாப்தாதா நாலா பக்கமும் உள்ள குழந்தைகளுக்கு, விசேஷமாக அண்டர்லைன் (கோடிட்டு காட்டுவது) காட்டுவது செய்கின்றார் -மரியாதை வள்ளல் ஆகுங்கள்.

பாப்தாதாவும் கூட, எந்த ஒரு குழந்தையானாலும், எப்படிப்பட்ட நிலையில் வந்தாலும், பலவீனமுள்ளவராக வந்தாலும், சம்ஸ்காரத்திற்கு வசப்பட்டவராக வந்தாலும், பாவச்சுமையைத் தன்னோடு கொண்டு வந்தாலும், ஈஸ்வரிய பரிவாரத்தின் குழந்தை தான். ஆகவே நீங்கள் மரியாதை கொடுத்தீர்கள் என்றால்

ஸ்வமான்தாரி ஆகி விட்டீர்கள். இப்படி ஃபாலோ ஃபாதர். ஒருவேளை சர்வ குண சம்பன்னமாக, சகஜமாக ஆக வேண்டும் என்று விரும்பினால், மரியாதை வள்ளல் ஆகுங்கள் புரிந்ததா? சகஜமாக இருக்கிற தல்லவா? சகஜமா? கஷ்டமா? டீச்சர்கள் என்ன நினைக்கிறீர்கள், சகஜமா? சிலருக்கு மரியாதை கொடுப்பது சகஜமாகவும், சிலருக்கு மரியாதை கொடுப்பது கஷ்டமாகவும் இருக்கிறதா? எல்லோருக்குமே கொடுப்பது சகஜமாக இருக்கிறதா உங்களுடைய டைட்டில் எது சர்வ உபகாரி. அபகாரம் செய்பவருக்கும் உபகாரம் செய்பவர்கள். ஆகவே சோதியுங்கள். சர்வ உபகாரி திருஷ்டி, விருத்தி, ஸ்திதி இருக்கிறதா? மற்றவருக்கு உபகாரம் செய்வது, தனக்கு உபகாரம் செய்வதாகும். ஆகவே, என்ன செய்ய வேண்டும்? மரியாதை கொடுக்க வேண்டுமல்லவா? தனித்தனியாக ஒவ் வொரு விஷயத்தையும் தாரணை செய்வதற்கு எந்த ஒரு முயற்சி செய்கிறீர்களோ, அதிலிருந்து விடுபட்டு விடுவீர்கள். ஏனென்றால் சமயத்தின் வேகம் தீவிரமாகச் சென்று கொண்டிருக்கிறது. நேரம் (சமயம்) உங்களை எதிர்ப்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கிறது. ஆதலால் நீங்கள் அனைவரும் முயற்சி செய்ய வேண்டும். சமயத்தின் எதிர் பார்ப்பை முடித்து விட வேண்டும். என்ன முயற்சி செய்ய வேண்டும்? தன்னுடைய சம்பூரணத்தா மற்றும் சமானமாவதின் வேகத்தை தீவிரப்படுத்த வேண்டும் செய்து கொண்டிருக்கிறீர்கள் அல்லவா? தீவிரமாக இருக்கிறதா? என்று உங்களுடைய வேகத்தை சோதித்துப் பாருங்கள். மற்றபடி அன்புடன் புதுப்புது குழந்தைகள் வந்து சேர்ந்திருக்கின்றனர். பாப்தாதா புதுப்புது குழந்தைகளைப் பார்த்து மகிழ்ச்சியடைகின்றார். யார் முதன் முதலாக வந்திருக்கிறீர்களோ, அவர்கள் கையை உயர்த்துங்கள். நிறையப் பேர் இருக்கின்றார்கள். நன்றாக வரட்டும் தந்தையின் வீட்டுக்கு, தங்களுடைய வீட்டுக்கு, வாழ்த்துக்கள். நல்லது.

சேவை பொறுப்பு கர்நாடகாவினுடையது: கர்நாடகக்காரர்கள் எழுந்திருங்கள். சேவையில் கோல்டன் சான்ஸ் எடுத்துக் கொண்டதற்கு வாழ்த்துக்கள். பாருங்கள். முதலாம் நம்பர் எடுத்துக் கொண்டால், முதலாம் நம்பரிலேயே இருக்க வேண்டுமல்லவா? புருஷாரத்தத்தில் வெற்றியடைவதில், எல்லாவற்றிலும் முதல் நம்பர் எடுப்பவர்கள். இரண்டாவது நம்பர் எடுக்க வேண்டாம். முதல் நம்பர் தைரியம்

இருக்கிறதா? இருக்கிறதா தைரியம். தைரியம் உங்களுடையது. ஆயிரம் மடங்கு உதவி செய்வது தந்தையினுடையது. நல்ல வாய்ப்பை எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். தங்களுடைய புண்ணியக்கணக்கை மிக அதிகமாக சேமித்துக் கொண்டீர்கள். சரி. கர்நாடகம், மெகா புரோகிராம் செய்தார்களா? செய்திருக்கிறார்களா? செய்யவில்லை. பெங்களூரில் செய்வோம், நல்லது. யாரெல்லாம் பெரிய ஏன் புரோகிராம் செய்திருக்கிறார்களோ, அவர்கள் எல்லாம் எழுந்திருங்கள். எத்தனை புரோகிராம் நடந்திருக்கிறது (8-10 முடிந்திருக்கிறது), ஆகவே பெரிய புரோகிராம் செய்வதற்காக பெரிய அளவில் வாழ்த்துக்களை அளிக்கின்றார். ஜோன் எத்தனை உள்ளது? ஒவ்வொரு ஜோனும் பெரிய புரோகிராம் செய்ய வேண்டும். ஏனெனில் உங்கள் நகரத்தில் குறை சொல்பவர்கள், குறை சொல்ல மாட்டார்கள். பெரிய புரோகிராமில் நீங்கள் பெரிய அளவில் விளம்பரமும் செய்கிறீர்கள் அல்லவா? மீடியா மூலமாகவும், போஸ்டர் மூலமாகவும், ஹோர்டிங் மூலமாகவும் விதவிதமாகச் செய்வதால் குறை சொல்வது குறைந்து விடும். பாப்தாதாவுக்கு இந்த சேவை பிரியமானதாக இருக்கிறது ஆனால், ஆனால் எதற்காக? புரோகிராம் பெரிதாகச் செய்தீர்கள், சரி தான். அதற்கு வாழ்த்துக்கள் ஆனால் ஒவ்வொரு புரோகிராமிலி ருந்தும் குறைந்த பட்சம் 108-மணி மாலையாவது தயார் ஆக வேண்டுமல்லவா? அது எங்கே நடந்தது? குறைந்தபட்சம் 108, அதிகப்படியாக என்றால் 16-ஆயிரம் ஆனால் குறைந்தபட்சம் பாப்தாதா இவ்வளவு சக்தியை உபயோகித்தார். இவ்வளவு செல்வத்தையும் பயன்படுத்தினார். இதனுடைய ரிசல்ட் குறைந்த பட்சம் 108வது தயாராகட்டும். ஏனெனில், முகவரி உங்களிடம் இருக்க வேண்டுமல்லவா? பெரிய புரோகிராமில் யாரையெல்லாம் வரவழைத்தீர்களோ. அவர்களுடைய அறிமுகம் (விவரம்) உங்களிடம் இருக்கிற தல்லவா? அவர்களை மீண்டும் சமீபத்தில் கொண்டு வர வேண்டும். நாங்கள் செய்து விட்டோம் என்று இருந்து விடக் கூடாது ஆனால் எந்த ஒரு காரியம் செய்தாலும், அதன் பலனை எடுக்க வேண்டுமல்லவா? ஆதலால் பெரிய புரோகிராம் செய்தவர்கள் ஒவ்வொரு வரும் பாப்தாதாவுக்கு இந்த ரிசல்ட் கொடுக்க வேண்டும். வெவ்வேறு சென்டர்களுக்குச் சென்று கொண்டிருந்தாலும், வெவ்வேறு நகரங்களில் உள்ள சென்டர்களுக்குச் சென்று கொண்டிருப்பவர்களாயினும் சரி, அந்த விவரம் தயார் செய்ய வேண்டும். சரிதானா? முடியு மல்லவா? கொஞ்சம் கவனம் வைத்தால்

வந்து விடுவார்கள். 108-என்பது ஒன்றுமே இல்லை ஆனால் ரிசல்ட் பாப்தாதா பார்க்க விரும்புகின்றார். குறைந்தபட்சம் மாணவராவது ஆகட்டும். சகயோகம் செய்வதற்கு முன் வரட்டும். இப்படி யார், யார் எத்தனை பேர் வந்திருக்கிறார்கள்? இந்த ரிசல்ட்டை, பாப்தாதா இந்த சீசனில் பார்க்க விரும்புகின்றார். சரிதானா? பாண்டவர்கள் சரிதானா? பார்க்கலாம். நம்பர்-1. யாரென்று? எத்தனை பேர் வந்தாலும் சரி, அவசியம் வர வேண்டும். ஏனென்றால், புரோகிராம் நடந்து விடுகிறது ஆனால் இதன் பிறகு தொடர்பில் சமீபத்தில் கொண்டு வருவதில் கவனம் குறைந்து விடுகிறது. மேலும் வரவழைப்பது கஷ்டமில்லை. மற்றபடி பாப்தாதா குழந்தைகளின் தைரியத்தைப் பார்த்து மகிழ்ச்சியடைகின்றார். புரிந்ததா? நல்லது.

இந்தூர் ஹாஸ்டல் மற்றும் சபாவில் இருக்கும் குமாரிகளுடன்: மிகவும் நல்லது. எத்தனை குமாரிகள் வந்திருக்கிறார் களோ, இவர்களில் எத்தனை பேர் சேவையில் சமர்ப்பண மாவார்கள். குமாரிகள் பாப்தாதாவுக்கு ரைட் ஹேனட்ஸ் (வலது கை) ஆக முடியும். கோல்டன் சான்ஸ் கிடைத்திருக்கிறது. எத்தனை பேர் வந்திருக்கிறார்கள். தெரியுமா? எத்தனை குமாரிகள்? இவர்களுடைய பெயரை எழுதி வையுங்கள். பிறகு இதனுடைய ரிசல்ட் பார்க்க வேண்டும். இத்தனை குமாரிகளில் எத்தனை பேர் ரைட் ஹேன்ட்ஸ் ஆகியிருக்கிறார்கள்? யார் ரைட் ஹேண்ட் ஆவீர்களோ அவர்கள் கை உயர்த்துங்கள். இவர்களை வீடியோவில் படம் எடுங்கள். ஏனென்றால், உங்களுக்குத் தெரியும். சென்டர் திறக்க வேண்டும் என்று நிறைய விண்ணப்பம் வருகிறது ஆனால் ஹேன்ட்ஸ் குறைவாக இருக்கிறார்கள். ஆகவே நீங்கள் கேட்க வேண்டும். ஆதலால் குமாரிகள் சீக்கிரம், சீக்கிரமாக சேவையில் ரைட் ஹேண்ட் ஆக வேண்டும். சின்னச்சின்ன விஷயங்களை விட்டுவிடுங்கள். யார் சேவை செய்ய முடியுமோ, அவர்கள் காலத்தின் கட்டாயப்படி சீக்கிரமாகத் தயாராக வேண்டும். வரதட்சணை தயாராக இருக்கிறது. சென்டர் தான் வரதட்சணை. வரன் இருக்கவே இருக்கிறது. மேலும் வரதட்சணையும் தயார். ஆதலால் தயாராகுங்கள், செய்வீர்கள் அல்லவா? ஆம். பெரியவர்களாக இருப்பவர்கள் வந்து விட முடியும். சீக்கிரமாகவே வர முடியும் என்று நினைப்பவர்கள் கை உயர்த்துங் கள். பாருங்கள். எத்தனை குமாரிகள் கை உயர்த்தியிருக்கிறார்கள்? வீடியோ படம்

எடுத்துக் கொண்டிருக்கிறது. நல்லது. வாழ்த்துக்கள். அட்வான்ஸாகவே வாழ்த்துக்கள்.

நல்லது. எல்லா பக்கங்களிலிருந்தும் எந்த ஒரு அன்பான குழந்தைகள் பாப்தாதாவை மனதில் நினைவு செய்கிறார்களோ, கடிதம், இ-மெயில் மூலமாக நினைவுகளை அனுப்பியிருக்கிறார்களோ, அப்படி நாலரா பக்கங்களிலுமுள்ள குழந்தைகளுக்கு பாப்தாதா தூரமாக இருக்கின்றார்கள் என்று பார்க்கவில்லை, மன சிம்மாசனத்தில் பார்க்கின்றார். எல்லாவற்றிலும் சமீபத்தில் இருப்பது மனம். ஆதலால் பாப்தாதா மனப்பூர்வ மாக நினைவுகளை அனுப்பியவர்களுக்கும், நினைவை அனுப்பவில்லை என்றாலும் நினைவில் இருப்பவர்கள் ஆகிய அனைவருக்கும் மனசிம்மாசனத்தின் அதிகாரியாகப் பார்க்கின்றார். பதில் தருகின்றார். தூரமாக அமர்ந்திருந்தாலும் தீவிர புருஷாரத்தி பவ!

நல்லது. இப்போது எல்லோரும் ஒரு வினாடியில், ஒரு விநாடி, ஒரு நிமிடம் அல்ல, ஒரு வினாடியில் நான் பரிஷ்தா ஸோ தேவதா இந்த டிரில் மனதில் ஒரு விநாடி அனுபவம் செய்யுங்கள். இப்படிப்பட்ட டிரில், ஒரு நாளில் ஒரு வினாடி நேரம் அடிக்கடி செய்யுங்கள். எப்படி தேகாப்பியாசம், சரீரத்திற்கு பலம் தருகிறதோ, அதுபோல மனம் மூலமாக செய்கின்ற டிரில் மனதை சக்திசாலியாக்கும் -நான் பரிஷ்தா இந்த பழைய உலகம், பழைய சரீரம், பழைய சரீர சம்ஸ்காரங்களிலிருந்து விலகியிருக்கின்ற பரிஷ்தா ஆத்மா. நல்லது.

நாலா பக்கங்களிலுமுள்ள அதிக சிநேகம், சதா சநேக சாகரத்தில் அன்போடு மூழ்கியிருக்கின்ற ஆத்மாக்களுக்கு, சதா சர்வ சக்திகளுக்கு அதிகாரி சிரேஷ்ட ஆத்மாக்களுக்கு, சதா பாபா சமானம் ஆகக்கூடிய தந்தைக்குப் பிரியமான ஆத்மாக்களுக்கு, சதா ஸ்வமானில் இருக்கும் ஒவ்வொரு ஆத்மாவுக்கும் மரியாதை அளிக்கக்கூடிய எல்லோருக்கும் மரியாதைக்குரியவராக ஆகக்கூடிய, ஆத்மாக்களுக்கு, சதா சர்வ உபகாரி ஆத்மாக்களுக்கு, பாப்தாதாவின் உள்ளபூர்வ மான அன்பு நினைவுகள் மற்றும் உள்ளப்பூர்வமான ஆசீர்வாதங்களை ஏற்றுக் கொள்வீர்களாக. மேலும் இத்துடன் விஷ்வ மாலிக் ஆத்மாக்களுக்கு நமஸ்தே.

தாதிஜியுடன்: மரியாதை கொடுப்பதில் நம்பர்-1 ஆக பாஸாகியிருக்கிறீர்கள். நம்பர்-1 பாஸ். நல்லது. எல்லா தாதிகளால் மதுபன் அழகாக இருக்கிறது. (சபையைப் பார்த்து) இவர்கள் அனைவருக்கும் தாதிகளின் அழகு பிரியமுள்ளதாக இருக்கிறது அல்லவா? எப்படி தாதிகள் காரணமாக மதுபன் அழகுடையதாக விளங்குகிறதோ, அதுபோல நீங்கள் எல்லோரும், எல்லாம் என்றால் எல்லா தாதிகள் மட்டுமல்ல, தாதிகள் மற்றும் தாதாக்களும் உள்ளனர். ஆதலால் எல்லா தாதிகளும், எல்லா தாதாக்களும் எல்லோரும் இப்படி யோசிக்க வேண்டும், செய்ய வேண்டும். நீங்கள் எங்கே இருக்கிறீர்களோ, அந்த இடம் அழகுடையதாக இருக்க வேண்டும். எப்படி தாதிகள் காரணமாக அழகு உண்டாகிறதோ, அப்படி ஒவ்வொரு இடத்திலும் அழகு இருக்க வேண்டும். ஏனெனில் தாதிகளின் பின்னால் தீதிகளும் இருக்கிறார்கள் அல்லவா? குறைந்தவர்கள் அல்ல. தாதாக்களும் உள்ளனர். தீதிகளும் உள்ளனர். எந்த சென்டரும் கலை இல்லாமல் இருக்கக் கூடாது. அழகுடன் விளங்க வேண்டும். நீங்கள் ஒவ்வொரு வரும் உலகினை அழகுறச் செய்யும் ஆத்மாக்கள் ஆவீர்கள். ஆதலால் எந்த இடத்தில் இருப்பவர்கள் ஆனாலும் சரி, அது அழகுடையதாக காட்சியளிக்கட்டும். சரிதானே? ஏனெனில், உலகில் எல்லைக்குட்பட்ட அழகு இருக்கிறது ஆனால் உங்கள் ஒவ்வொருவரிடமும் எல்லையற்ற அழகு இருக்கிறது. சுயம் குஷி, சாந்தி, அதீந்திரிய சுகத்தின் அழகில் இருப்பீர்களானால், இருக்கும் இடமும் அழகுடையதாக ஆகி விடும். ஏனென்றால் ஸ்திதியால் இடத்திலும், வாயுமண்டலம் பரவுகிறது. ஆதலால் எங்கே நீங்கள் இருக்கின்றீர்களோ, அது அழகுடையதாக இருக்கின்றதா என்று எல்லோரும் சோதித்துப் பாருங்கள். கவலை ஏதும் இல்லை தானே! எல்லோரும் குஷியில் அகமகிழ்ந்து கொண்டிருக்கிறீர்கள். அப்படித்தானே? தாதிகளாகிய உங்களுக்கு இந்த வேலைதானே! ஃபாலோ தீதிகள் மற்றும் தாதாக்கள். நல்லது.

இன்று இந்த ஆண்டில் இந்திய சீசனின் ஆதியாகும். (முதல் சந்திப்பு) ஆகவே நீங்கள் அனைவரும் ஆதியில் வந்து விட்டீர்கள். நல்லது. பாப்தாதா இந்த ஹாலை உங்களுக்காகவே தயார் செய்திருக்கின்றார், நீங்கள் இல்லையேல் ஹால் அழகுடையதாக இருக்காது. பாபா

வந்தாலும் இவர்கள் இல்லாது போனால்! தாதிகளின் அழகு வேண்டும். நல்லது.

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺
✺✺✺✺✺✺✺✺

# 30.11.2004 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# இப்போது தன்னுடைய நடத்தை மற்றும் முகம் மூலம் பிரம்மாபாபா சமான், அவ்யக்த ரூபத்தை காண்பியுங்கள், சாக்ஷாத்தார் மூரத் ஆகுங்கள்!

இன்று பாக்கிய விதாத்தா தந்தை நாலா பக்கங்களிலுமுள்ள தன்னுடைய சிரேஷ்ட பாக்கியவான் குழந்தைகளைப் பார்த்து மகிழ்ச்சியடைகின்றார். முழு கல்பத்திலும், இப்படிப்பட்டதொரு சிரேஷ்ட பாக்கியம் வேறு யாருக்கும் இருக்க முடியாது. ஒவ்வொரு கல்பத்திலும், குழந்தைகளாகிய நீங்கள் தான் இந்த பாக்கியத்திற்கு அதிகாரி ஆகின்றீர்கள். ஒவ்வொரு கல்பத்திலும், பாக்கியத்திற்கு அதிகாரியானது, நினைவுக்கு வருகிறதா? இந்த பாக்கியம் சர்வ சிரேஷ்டமானது ஏன்? ஏனென்றால், சுயம் பாக்கிய விதாத்தா இந்த சிரேஷ்ட பாக்கியத்திற்கான திவ்ய ஜன்மத்தை, குழந்தைகளாகிய உங்களுக்கு கொடுத்திருக்கின்றார். யாருடைய ஜன்மமே பாக்கிய விதாத்தா மூலம் கிடைத்ததோ, அதை விட சிரேஷ்ட பாக்கியம் வேறு எதுவும் இருக்க முடியாது. உங்களுடைய பாக்கியத்தைப் பற்றிய நஷா நினைவில் (ஸ்மிருதியில்) இருக்கிறதா? உங்களுடைய பாக்கியத்தின் லிஸ்ட் தயார் செய்தீர்களானால், அது எவ்வளவு பெரிய லிஸ்ட் ஆக இருக்கும்? பிராமணர்களாகிய உங்கள் பாக்கியவான் வாழ்க்கையில் அடைய முடியாத பொருள் என்பது ஒன்றுமே இல்லை. எல்லோருடைய மனதிலும், அவரவருடைய பாக்கியத்தின் விஷ்ட் ஸ்மிருதியில் வந்து விட்டது. ஸ்மிருதியில் (நினைவில்) கொண்டு வாருங்கள். வந்து விட்டதா ஸ்மிருதியில்? உள்ளம் எந்த கீதத்தைப் பாடுகிறது? ஆஹா! பாக்கிய விதாத்தா! ஆஹா! என்னே என் பாக்கியம்! இந்த சிரேஷ்ட பாக்கியத்தின் விசேஷம் இது தான் -ஒரு பகவானிடமிருந்து மூன்று சம்மந்தங்கள் கிடைக்கின்றது.

ஒருவரிடமிருந்து, ஒருவரிடம் மூன்று சம்மந்தங்கள். இது பற்றி, வாழ்க்கையில் விசேஷமாக மகிமை செய்யப்பட்டிருக்கின்றது. தந்தை, ஆசிரியர், சத்குரு வேறு யாருக்கும், ஒருவரிடமிருந்து, மூன்று சம்மந்தங்கள் மற்றும் பிராப்தி இல்லை. நீங்கள் சொந்தம் பாராட்டி, எங்களுக்குத் தந்தையாகவும், ஆசிரியராகவும், சத்குருவாகவும் இருக்கின்றார் என்று பெருமிதத்தோடு கூறுகின்றீர்கள். தந்தையிடமிருந்து, எல்லா பொக்கிஷங்களும் நிறைந்திருக்கும் சுரங்கம் கிடைத்திருக்கிறது. பொக்கிஷங்கள் என்னென்ன என்ற லிஸ்ட்'ம் கூட ஸ்மிருதியில் (நினைவில்) வந்து விட்டது! என்னென்ன பொக்கிஷங்கள் தந்தையிடமிருந்து கிடைத்திருக்கிறது என்பதை நினைவிற்குக் கொண்டு வாருங்கள். கிடைத்து விட்டதா அல்லது இனிமேல் தான் கிடைக்கப் போகிறதா? என்ன சொல்கிறீர்கள்? பாலக் ஸோ மாலிக், ஆக இருக்கிறீர்கள். ஆசிரியரிடமிருந்து சிரேஷ்ட பதவிக்கான பிராப்தியும் கிடைத்து விட்டது. பொதுவாக, உலகாயத ரீதியிலும் சிரேஷ்ட பதவி என்பது இராஜ்ய பதவி என்று நினைக்கிறார்கள். அப்படியானால், நீங்களோ, இரட்டை இராஜாவாக ஆகி விட்டீர்கள். தற்காலத்தில், சுய இராஜ்ய அதிகாரி மற்றும் வருங்காலத்தில் அநேக ஜன்மங்கள் இராஜ்ய பதவியின் அதிகாரி. படிப்பு ஒரு ஜன்மத்திற்கு அதுவும் கூட மிகக் குறுகிய கால ஜன்மம் ஆனால் பதவிக்கான பிராப்தி அநேக ஜன்மங்கள். மேலும் இராஜ்யமும் கூட அகண்ட (விசாலமான) ஸ்திரமான, விக்னமற்ற (நிர்விக்ன) இராஜ்யம். இப்போதும் கூட சுய இராஜ்ய அதிகாரியாக, கவலையற்ற பாதுஷாவாக இருக்கிறீர்கள். அப்படித்தானே? கவலையற்ற இராஜாவாக ஆகி விட்டீர்களா? (பேஃபிகர் பாதுஷா ) யார் கவலையற்றவர்களாக இருக்கிறார்களோ, அவர்கள் கை உயர்த்துங்கள். கவலையற்றவர்கள், கொஞ்சம் கூட கவலை இல்லையா? பார்க்க வேண்டும். எப்போதாவது, ஏதாவது பொம்மலாட்டம் வந்தால், அப்போது கவலை ஏற்படுகிறதா? மாயையின் பொம்மலாட்டம் உங்களிடம் வருகிறதா அல்லது இல்லையா? அப்போது கொஞ்சம் கொஞ்சம் கவலை உண்டாகிறதா? ஏற்படுவதில்லையா? கொஞ்சம் கவலை, மனதில் கவலை உண்டாகிறதா அல்லது இல்லையா? அப்படி, சிரேஷ்ட பாக்கியமானது இப்போதிருந்தே, கவலையற்ற பாதுஷாவாகா ஆக்கி விடுகிறது. இப்போது, கொஞ்சம் ஏதாவதொரு விஷயம் வந்தாலும், அது மேலும் முன்னேறிச் செல்வதற்கான அனுபவியாக, பரிபக்குவமுடையவராக

ஆக்கக்கூடியதாகும். இப்போது, எல்லோரும் இந்த மாதிரி விதவிதமான விஷயங்களைப்பற்றிய அனுபவம் அடைந்தவர்களாகி விட்டீர்கள் அல்லவா? பயப்படுவதில்லை தானே? ஓய்வாக, சாட்சி எனும் ஆசனத்தில் அமர்ந்து, அந்த பொம்ம லாட்டத்தைப் பாருங்கள் கார்ட்டூன் ஷோ பாருங்கள் ஒன்றுமே இல்லை. கார்ட்டூன் ஷோவே தான் இப்போது சக்திசாலிகளாகி விட்டீர்கள் அல்லவா? இப்போது சக்திசாலிகளாக இருக்கிறீர்களா? அல்லது எப்போதாவது பயப்படுகிறீர்களா? இது காகித்தாலான சிங்கம் ஆகிக் கொண்டு வருகிறது இது வெறும் காகிதம் தான் ஆனால் சிங்கம் போல வருங்காலத்தையும், இப்போதையை கால நிலவரப்படி, அனுபவி மூர்த்தியாகி, பிரகிருதியையும் (இயற்கை) மாயாவையும், வந்து பார், நாங்கள் வெற்றியாளர்கள் என்று சவால் விடுங்கள். வெற்றியடைந்து விட்டதின் சவால் விடுங்கள். (இடையிடையே இருமல் வந்து கொண்டிருக்கிறது) இன்று இசைக்கருவியானது கொஞ்சம் கெட்டுப் போயிருக்கிறது. என்றாலும் சந்திக்க வேண்டுமல்லவா?

பாப்தாதாவிடம் இரண்டு குரூப் அடிக்கடி வருகின்றன. எதற்காக வருகின்றது? நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று இரண்டு குரூப்பும் கூறுகின்றார்கள். ஒரு குரூப், காலம், பிரகிருதி மற்றும் மாயை. இப்போது தனது இராஜ்யம் போகப்போகிறது என்பதை மாயை புரிந்து கொண்டு விட்டது. இரண்டாவது குரூப் -அட்வான்ஸ் பார்ட்டி. இந்த இரண்டு குரூப்பும் தேதி கேட்கிறார்கள். வெளிநாட்டில், ஒரு ஆண்டுக்கு முன்னதாகவே தேதி நிச்சயப்படுத்தி விடுகிறீர்கள் அல்லவா? இங்கே 6-மாதங்களுக்கு முன் தேதி குறிப்பிட்டு விடுகிறார்கள். பாரதத்தில் வேகமாகச் செல்கிறார்கள். 15-நாட்களுக்குள்ளாகவே கூட, ஏதாவது புரோகிராம் செய்வதற்கு தேதி குறித்து விடுகிறார்கள். அப்படியானால், சமாப்தி, சம்பன்னத்தா. பாபா சமான் ஆவது என்பதற்கான தேதி எது? அவர்கள் (இரண்டு குரூப்) பாப்தாதாவிடம் கேட்கிறார்கள். இப்போது, தேதி எது என்று பிராமணர்களாகிய நீங்கள் தான் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். சொல்ல முடியுமா? தேதி குறிப்பிட்டுச் சொல்ல முடியுமா? பாண்டவர்கள் சொல்லுங்கள். மூவருமே சொல்லுங்கள். (பாப்தாதா நிர்வயர் பாயி, ரமேஷ் பாயி, பிரிஜ்மோகன் பாயி ஆகிய மூவரிடம் கேட்கின்றார்). தேதி குறித்துச் சொல்ல முடியுமா? சொல்லுங்கள் முடியுமா? அல்லது திடீரென நடக்குமா? டிராமாவில்

நிச்சயமாகியிருக்கிறது ஆனால் அதை நடைமுறைப்படுத்த வேண்டுமா? அல்லது இல்லையா? அது என்ன வென்று சொல்லுங்கள். நடைமுறையில் (பிராக்டிக்கல்) கொண்டு வர வேண்டுமா? திடீரென நடக்குமா? தேதி முன்கூட்டியே குறிப்பிடப்பட மாட்டாதா? அல்லது குறிப்பிடப்படுமா? முதல் வரிசையில் அமர்ந்திருப்பவர்கள் கூறுங்கள, குறிப்பிடப்படுமா? டிராமாவில், நடைமுறையில் கொண்டு வருவதற்கு, மனதில், தேதி எது என்பது பற்றி சங்கல்பம் செய்ய வேண்டும் என்று சொல்பவர்கள் கை உயர்த்துங்கள். செய்ய வேண்டுமா? இவர்கள் கை உயர்த்த வில்லை. திடீரென நடக்குமா? தேதி குறிக்க முடியுமா? பின்னால் அமர்ந்திருப்பவர்கள், புரிந்து கொண்டார்களா? திடீரென நடக்கும் என்பது சரியா? ஆனால் தங்களை தயார் நிலையில் வைத்துக் கொள்வதற்கு இலக்ஷியம் அவசியம் வைக்க வேண்டும். இலக்ஷியமில்லை என்றால் சம்பன்னம் அடைவதில் அலக்ஷியம் வந்து விடுகிறது. தேதி எப்போது நிச்சயப்படுத்தப்படுகிறதேர், அப்போது தான் வெற்றி கிடைக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். எந்த ஒரு புரோகிராம் செய்வதானாலும் முன் கூட்டியே தேி குறித்து விடுகிறீர்கள் அல்லவா? ஆகத்தான் வேண்டும் (சம்பன்னம்) இந்த சங்கல்பம் செய்ய வேண்டு மல்லவா? அல்லது தானாகவே ஆகி விடுமா டிராமாவில்? என்ன நினைக்கிறீர்கள்? இந்த முதலாவது லைனில் அமர்ந்திருப்பவர் கள் கூறுங்கள். பிரேம் (டெஹ்ராடூன்) சொல்லுங்கள். செய்ய வேண்டும், செய்ய வேண்டும். ஜெயந்தி கூறுங்கள். செய்ய வேண்டும். அது எப்போது செய்வீர்கள்? கடைசியில் செய்வீர்களா அதாவது எப்போது சமயம் வந்து விடுமோ அப்போதா? சமயம் சம்பன்னம் ஆக்கி விடுமா அல்லது நீங்கள் சமயத்தை சமீபத்தில் கொண்டு வருவீர்களா?

ஸ்மிருதியில் (நினைவில்) ஞானமும் இருக்கிறது நஷாவும் இருக்கிறது. நிச்சயமும் இருக்கிறது என்பதை பாப்தாதா பார்க்கின்றார் ஆனால் இப்போது இத்துடன் (அடிஷன்) நடத்தை மற்றும் முகத்தில் தெரிய வேண்டும். புத்தியில் நினைவெல்லாம் இருக்கிறது. ஸ்மிருதியிலும் கூட வருகிறது ஆனால் இப்போது சொரூபத்தில் வரட்டும். பொதுவாக, சாதாரண ரூபத்தில் பார்த்தாலும் கூட, யாராவது ஒருவர் பெரிய அதிகாரியாக இருக்கின்றார், அல்லது யாராவது ஒரு பெரிய செல்வந்தருடைய மகன் உயர்ந்த படிப்பு படித்தவராக இருந்தால், அவருடைய நடை, உடை, பாவனையைப் பார்க்கும்போதே

தனிப்பட்டவராகக் காணப்படுவார். அவரிடம் ஏதாவது தனிப்பட்ட விசேஷம் காணப்படும். ஆகவே உங்களிடம் இவ்வளவு பெரிய பாக்கியத்தின் ஆஸ்தியும் கூட இருக்கிறது. படிப்பு மற்றும் பதவியும் கூட இருக்கிறது. சுய இராஜ்யம் இப்போது கூட இருக்கிறதல்லவா? பிராப்திகள் எல்லாமே இருக்கிறது ஆனால் நடத்தை மற்றும் முகம் மூலமாக பாக்கிய நட்சத்திரம் பிரகாசித்துக் கொண்டிருப்பது தெரியட்டும். இப்போது கூடுதலாக இருக்க வேண்டும். இப்போது, ஜனங்களுக்கு, சிரேஷ்ட பாக்கியவான் ஆத்மாக்களாகிய உங்கள் மூலமாக இந்த அனுபவம் ஆகும், ஆக வேண்டும் என்பதல்ல. இவர்கள் எங்களுடைய இஷ்ட தேவ், இஷ்ட தேவிகள் என்ற அனுபவம் ஆகும். இவர்கள் எங்களுடையவர்கள். பிரம்மாபாபாவைப் பார்த்திருக்கிறீர்கள் அல்லவா? சாதாரண உடலில் இருந்தாலும் கூட, ஆதியில், பிரம்மாபாபாவிடம் என்ன தெரிந்தது? கிருஷ்ணர் தெரிந்தார் அல்லவா? இப்படி, ஆதியில் பிரம்மாபாபாவிடமிருந்து, ஆதியில் இருந்தவர்களுக்கு அனுபவம் இருக்கிறதல்லவா? கடைசியில் அனுபவம் இருக்கிறது. எப்படி காணப்பட்டார்? அவ்யக்த ரூபம் காணப்பட்டதல்லவா? நடத்தையில், முகத்தில் காணப்பட்ட தல்லவா? காணப்பட்டதா? இப்போது பாப்தாதா நிமித்தமான குழந்தைகளுக்கு இந்த ஹோம் ஒர்க் (வீட்டுப்பாடம்) கொடுத்திருக்கின்றார். அதாவது இப்போது பிரம்மாபாபா சமானம் அவ்யக்த ரூபம் காணப்பட வேண்டும். நடத்தை மற்றும் முகம் மூலமாக குறைந்த பட்சம் 108-மாலையின் மணிகளிடமாவது தெரியட்டும்.

பாப்தாதா, பெயர் கேட்கவில்லை. 108-பேர் யார், யாரென்று பெயர் சொல்லப்போவதும் இல்லை ஆனால் அவர்களுடைய நடத்தை மற்றும் முகம் தானாகவே பிரத்யக்ஷம் ஆகும். இந்த ஹோம் ஒர்க் பாப்தாதா நிமித்தமான குழந்தைகளுக்கு விசேஷமாகக் கொடுக்கின்றார். கேட்டீர்களா? முதலாவது லைனில் எல்லோரும் அமர்ந்திருக்கிறார்கள். கேட்டீர்களா? ஆகி விடுமா? சரி. எவ்வளவு காலம் வேண்டும்? நாங்கள் தாமதமாக வந்திருக்கிறோம் என்றெல்லாம் நினைக்க வேண்டியதில்லை. நேரம், காலம் என்ற விஷயமே இல்லை. நாங்கள் வந்து சில ஆண்டுகள் தான் ஆகின்றது என்று சிலர் நினைக்கிறார்கள். யாராயிருந்தாலும், கடைசியில் வந்திருந்தாலும், லாஸ்ட் ஸோ ஃபாஸ்ட் மற்றும் ஃபாஸ்ட் ஸோ ஃபர்ஸ்ட் ஆக வர முடியும்.

இப்படிக்கூட செய்ய முடியும். கடைசியில் வந்தவரும் கூட ஆக முடியும் ஆனால் செய்யத்தான் வேண்டும். ஆகிக் காட்டுவோம் என்று இலக்ஷியம் பக்கவாக வைப்பது அவசியம்.

டபுள் ஃபாரினர்ஸ் கை உயர்த்துங்கள். நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? டபுள் சான்ஸ் எடுத்துக் கொள்வீர்கள் அல்லவா? பாப்தாதா பெயர் அறிவிக்க மாட்டார் ஆனால் அவர்களுடைய முகமே இவர் தான் என்று சொல்லும் தைரியம் இருக்கிறதா? முதலாவது வரிசையை பாப்தாதா பார்க்கின்றார். தைரியம் இருக்கிறதா? தைரியம் இருந்தால், கை உயர்த்துங்கள். தைரியம் இருந்தால்? பின்னால் இருப்பவர்களும் கை உயர்த்தலாம். முதலில் உயர்த்துபவர் அர்ஜுன். நல்லது. பாப்தாதா ரிசல்ட் பார்ப்பதற்காக, என்னென்ன புருஷார்த்தம் செய்து கொண்டிருக்கிறார்கள், யார் யாரெல்லாம் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த ரிசல்ட் பார்ப்பதற்காக 6-மாதம் அவகாசம் தருகின்றார். 6-மாதம் ரிசல்ட் பார்த்து, முடிவு செய்வேன். சரிதானா? ஏனென்றால், பார்க்கும்போது நேரத்தின் வேகம் தீவிரமாகிக் கொண்டிருக்கிறது. படைப்பு வேகமாகச் செல்லக்கூடாது. படைப்பவருடைய வேகம் அதி தீவிரமாக இருக்க வேண்டும் இனியும் கொஞ்சம் வேகத்தை அதிகப் படுத்துங்கள். பறந்து செல்லுங்கள் இப்போது நடந்து கொண்டிருக்கின்றோம் என்றல்ல, பறந்து கொண்டிருக்கிறோம் என்று, பதில் சொல்லச் சொன்னால், மிக நன்றாகப் பதில் சொல்கிறார்கள். நாங்கள் தானே இருக்கிறோம். வேறு யார் இருக்கிறார்கள் என்கிறார்கள். பாப்தாதா குஷியடைகின்றார் ஆனால் இப்போது ஜனங்கள் (ஆத்மாக்கள்) இருக்கிறார்கள் அல்லவா, அவர்கள் கொஞ்சம் பார்க்க விரும்புகிறார்கள். பாப்தாதாவுக்கு நினைவிருக்கிறது. ஆதியில் குழந்தைகள் சேவைக்குச் சென்றபோது, குழந்தைகள் மூலமாக சாட்சாத்காரம் ஆனது. இப்போது சேவை மற்றும் சொரூபம் என்ற இரண்டு பக்கமும் கவனம் தேவை. அப்படியானால் என்ன கேட்டீர்கள்! இப்போது சாட்சாத்கார் மூரத் ஆகுங்கள். சாட்சாத் பிரம்மாபாபா ஆகுங்கள். நல்லது.

இன்று புதுப்புது குழந்தைகள் கூட நிறையப் பேர் வந்திருக்கிறார்கள். தங்களுடைய அன்பு எனும் சக்தி மூலாக, எல்லோரும் வந்து சேர்ந்து விட்டார்கள். ஆதலால் பாப்தாதா, விசேஷமாக, யாரெல்லாம் புதுப்புது

குழந்தைகள் வந்திருக்கிறார்களோ, அவர்கள் ஒவ்வொருவருக்கும் பெயர் சகிதம் (பதம் குணா) ஆயிரம் மடங்கு வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றார். அத்துடன் பாப்தாதா விரதானமும் அளிக்கின்றார். சதா பிராமண வாழ்க்கையில் நிரந்தரமாக இருங்கள் (ஜீதே ரஹோ ) பறந்து கொண்டே இருங்கள். நல்லது.

சேவை பஞ்சாப்: பஞ்சாப்காரர்கள் எழுந்திருங்கள். மிக்க நன்று. இந்த விதியும் கூட நன்றாகச் செய்திருக்கிறார்கள். ஒவ்வொரு ஜோனுக்கும் சான்ஸ் கிடைத்து விடுகிறது. ஒன்று, யக்ஞ சேவையில் ஒவ்வொரு அடியிலும் ஆயிரம் மடங்கு சேமிப்பாகி விடுகிறது. ஏனென்றால், மெஜாரிட்டி எந்த ஒரு கர்மம் செய்தாலும், யக்ஞ சேவை நினைவிருக்கிறது. யக்ஞ சேவை நினைவுக்கு வந்தவுடனே, யக்ஞத்தை படைத்த தந்தையின் நினைவு கூட வந்து விடுகிறது. ஆதலால் சேவையிலும் கூட, மிக அதிகமாக புண்ணியக்கணக்கு சேமித்து விடுகிறார்கள். மேலும் யார் உண்மையான புருஷார்த்தி குழந்தைகளாக இருக்கிறார்களோ, அவர்கள் தங்களுடைய நினைவு சார்ட்டை சகஜமாகவும், நிரந்தரமாகவும் செய்து கொள்ள முடிகிறது. ஏனெனில் இங்கே ஒன்று மகாரதிகளுடனான தொடர்பு தொடர்பின் நிறம் (குணம்) சகஜமாக ஒட்டிக்கொள்கிறது. கவனமாக இருந்தால், 8-10 நாட்கள் தொடர்பில் இருக்கிறார்கள் அல்லவா, இதன் மூலம் நல்ல முன்னேற்றம் கொண்டு வர முடியும். பொதுவாகச் செய்யும் சேவையில் இவ்வளவு லாபம் இல்லை ஆனால் சான்ஸ் இருக்கிறது. ஒன்று சகஜமாக நிரந்தரயோகி ஆவதற்கு, புண்ணியக் கணக்கு சேமிப்பதற்கு, மேலும் பெரியதிலும் பெரிய பரிவாரத்தினருடன் இருக்கின்ற நஷாவில், குஷியில் இருப்பதற்கு சான்ஸ் கிடைக்கிறது. ஆகவே பஞ்சாப்காரர்களுக்கு சான்ஸ் கிடைத்திருக்கிறது. ஒவ்வொரு ஜோனுக்கும் கிடைக்கிறது ஆனால் மூன்று விதமான லாபத்தையும் எடுக்க வேண்டும் என்ற இலக்ஷியம் இருக்க வேண்டும். எவ்வளவு புண்ணியக் கணக்கை சேமித்தீர்கள்? சகஜமாக நினைவில் இருக்கக்கூடிய முன்னேற்றம் எவ்வளவு செய்தீர்கள்? மற்றும் எல்லோருடைய தொடர்பில் அல்லது பரிவாரத்தின் அன்பு, அருகாமையை எவ்வளவு அனுபவம் செய்தீர்கள்? இந்த மூன்று விஷயத்திலும் ஒவ்வொருவரும் தங்களுடைய ரிசல்ட் பார்க்க வேண்டும். டிராமாவில் சான்ஸ் என்னமோ கிடைக்கிறது ஆனால்

சான்ஸ் கிடைத்தவர்கள் சான்ஸ்லர் ஆக வேண்டும். ஆகவே பஞ்சாப் காரர்கள் கெட்டிக்காரர்கள் தானே! நல்லது. எண்ணிக்கையில் அதிகம் பேர் வந்திருக்கிறீர்கள். மேலும் சேவையும் திறந்த உள்ளத்தோடு (வேண்டிய அளவு) கிடைத்திருக்கிறது. வரக்கூடிய எண்ணிக்கை யும் நன்றாக வந்திருக்கிறார்கள். நல்லது வந்திருப்பவர்களைப் பார்க்கும்போது நன்றாக இருக்கிறது.

இன்று, இரண்டு விங் -கிராம சேவை மற்றும் மகளிர் (விங்): மகளிர் மீட்டிங்கில் வந்திருப்பவர்கள் எழுந்திருங்கள். இதில் மெஜாரிட்டி டீச்சர்களா? டீச்சர்ஸ் கை உயர்த்துங்கள். நல்ல சான்ஸ். சேவைக்கு சேவை சேவைக்கு முன்பு பாக்கியம். எல்லோருடைய கூட்டுத் தொடர்பு மூலமாகவும், பாபாவுடனான சந்திப்பு மூலமாகவும் ஆனந்தப்பட வேண்டும். ஆகவே, சேவையும், பாக்கியமும் கிடைத்துவிட்டது. நல்லது. இப்போது ஏதாவது புதிய பிளான் செய்திருக்கிறீர்களா? எதுவாயிருந்தாலும் சரி, மகளிருக்கானாலும் சரி, வேறு எந்த குரூப்பினருக்காக இருந்தாலும் சரி. புதிய திட்டம் வருத்திருக்கிறீர்களா? ஆகவே ஒவ்வொரு குரூப்பிலும், பிராக்டிக்கலாக, நடத்தை மற்றும் முகத்தில், ஏதாவதொரு குணம் அல்லது சக்தியைக் கொண்டு வருவோம் என்று முன்னே வருபவர்களாக இருந்தால், நாங்கள் இந்த குரூப், இந்த குணம் அல்லது சக்தியை பிராக்டிகலாக பிரத்யக்ஷ ரூபத்தில் கொண்டு வருவோம். இப்படி ஒவ்வொரு பிரிவைச் சேர்ந்தவர்களும், ஏதாவதொரு தங்கள் தங்களுக்கான விசேஷத்தை நிச்சயப்படுத்துங்கள். அதைப்பற்றி உங்களுக்குள், எப்படி சேவை பற்றிய ரிசல்ட்டைப் பார்க்கிறீர்கள் அல்லவா, அது போல எழுத்து வடிவத்தினாலும் சரி, கூட்டுதொடர் பிலானாலும் சரி. இதை சோதித்துப் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும். ஆகவே முதலில் நீங்கள் செய்து காட்ட வேண்டும். மகளிர் பிரிவு செய்து காட்டுங்கள். சரிதானா? ஒவ்வொரு குரூப்பும், ஒரு பிளான் செய்ய வேண்டும். மேலும் இவ்வளவு நாட்களில், இத்தனை சதவிகிதம் நடைமுறையில் பிரத்யக்ஷமாகக் கொண்டு வர வேண்டும் என்று காலக்கெடுவையும், முன்னேற்றத்தையும் பற்றி நிர்ணயம் செய்யுங்கள். பிறகு பாப்தாதா விரும்புகிறாரல்லவா, நடத்தை மற்றும் முகம் எப்படி காணப்பட வேண்டுமோ, அது வந்து விடும். ஆகவே நீங்கள் இந்த பிளான் தயார் செய்து பாப்தாதாவிடம் கொடுக்க

வேண்டும். ஒவ்வொரு குரூப்பும் என்ன செய்யப்போகிறீர்கள்? சேவை பிளான் பற்றி குறிப்பு எழுதுகிறீர்கள் அல்லவா? அதுபோல செய்து தர வேண்டும். சரிதானா? செய்து தர வேண்டும். நல்லது. சிறுசிறு குரூப் (கமால்) விந்தை செய்து காட்ட முடியும். சரி. டீச்சர்ஸ் என்ன நினைக்கிறீர்கள்? செய்ய முடியுமா? செய்ய முடியுமா? அப்படியானால் பிளான் செய்யுங்கள் நல்லது சேவைக்கு வாழ்த்துக்கள்.

கிராம சேவை குருப் எழுந்திருங்கள். இதுவரையிலும், கிராம சேவை செய்பவர்கள், எத்தனை கிராமங்களை பரிவர்த்தனை செய்திருக்கிறீர்கள். எத்தனை கிராமத்தில் செய்திருக்கிறீர்கள்? காலத்தின் அழைப்பு. தூய்மையான தங்கமயமான கிராமங்கள் நிறைந்த பாரதம் இந்தத் திட்டத்தில், (முக்கியமாக கிராமத்தில் -மதுவிலிருந்து விடுதலை பெற்ற கிராமம் மற்றும் தூய்மையாக்குவதற்கான சேவை செய்வோம்) நல்லது. நடைமுறைப்படுத்த முடியுமல்லவா? இதனுடைய மொத்த ரிசல்ட், பிரசிடெண்ட் அல்லது பிரதான மந்திரிக்கு அனுப்புகிறீர்களா? (இதுவரை அனுப்பவில்லை) அனுப்ப வேண்டும். ஏனெனில், நீங்கள் கிராமம், கிராமமாகச் சென்று சேவை செய்கிறீர்கள். இது அரசாங்கம் செய்ய வேண்டிய வேலை ஆனால் நீங்கள் இதில் சகயோகிகளாகியிருக்கிறீர்கள். இந்த ரிசல்ட்டைப் பார்த்து, நல்ல சேவை என்ற முறையில் ஏற்றுக் கொள்வார்கள். நல்ல முறையில் இது பற்றிய புல்லட்டீன் ஒன்று தயார் செய்து, முக்கியமானவர்களுக்கெல்லாம் அனுப்ப வேண்டும். புத்தகம் அல்ல. மேகஜீன் அல்ல. புல்லட்டீன். சுருக்கமாக, மொத்த ரிசல்ட் எல்லோருக்கும் அனுப்ப வேண்டும். நன்று. வாழ்த்துக்கள். (இடையிடையே இருமல் வருகிறது) இன்று இசைக்கருவிக்கு சாந்தி வேண்டும். நன்று.

பாப்தாதாவிடம், நாலா பக்கங்களிலிருந்து சேவை பற்றிய ரிசல்ட் வந்து கொண்டேயிருக்கிறது. இந்த சமயத்தில் விசேஷமாக உலகில் உள்ள எல்லோருக்கும் செய்தி (சந்தேஷ்) சென்று சேர்ந்து விட வேண்டும். செய்தி பற்றி அறியாத ஒரு மூலை கூட இருக்கக்கூடாது. இப்போது வெளி நாட்டில் ஒரு பிளான் பிராக்டிக்கலாக செய்து கொண்டிருக்கிறார்கள். அது நன்றாக இருக்கிறது. (ரிசல்ட்) பாப்தாதாவிடம் டபுள் விதேஷி குழந்தைகளிடமிருந்து சமாச்சாரம்

கிடைத்திருக்கிறது. யாரெல்லாம் மெகா புரோகிராம் செய்திருக்கிறார்களோ, (பாரதத்தில்) அவர்களிடமிருந்து, சமாச்சாரம் கிடைத்திருக்கிறது. நாலா பக்கமும் சேவைக்கான ரிசல்ட் வெற்றிகரமாக நடந்து முடிந்திருக்கிறது. குழந்தைகள் எப்படி, சேவை மூலம் சந்தேஷ் (செய்தி) கொடுத்து, ரிசல்ட் வெற்றிகரமாக நடந்திருக்கிறதோ அதுபோலவே வாய்மொழி மூலமாகவும், தொடர்பு மூலமாகவும், அதோடு கூட தங்களுடைய முகத்தின் மூலம் சாக்ஷாத்கார் பரிஷ்தா ரூபமாக்கிக் கொண்டே செல்லுங்கள்.

நல்லது யாரெல்லாம் முதன் முறையாக வந்திருக்கிறார்களோ, அவர்கள் எல்லோரும் கை உயர்த்துங்கள். பின்னால் நிறையப்பேர் இருக்கிறார்கள். நல்லது. டூலேட் போர்டு போடப்படுவதற்கு முன்பே வந்து விட்டீர்கள். நல்லது. சான்ஸ் எடுத்துக் கொள்ளுங்கள். கமால் செய்து காட்டுங்கள். தைரியமாயிருங்கள். பாப்தாதாவின் உதவி ஒவ்வொரு குழந்தைக்கும் துணையாக இருக்கிறது. நல்லது.

பாப்தாதா நாலா பக்கமும் சாகார ரூபத்தில் எதிரில் அமர்ந்திருக்கக்கூடிய குழந்தைகளுக்கும், மேலும் தங்கள் தங்கள் இடத்தில், தேசத்தில், பாபாவுடன் சந்திப்பை கொண்டாடிக் கொண்டிருக்கின்றவர்கள், நாலா பக்கங்களிலுமுள்ள குழந்தைகளுக்கு நிறைய சேவை செய்திருக்கிறார்கள். அன்புக்கும், புருஷார்த்தத்திற்கும் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றார் ஆனால் புருஷாரத்தத்தில் தீவிர புருஷாரத்தியாகி, இப்போது ஆத்மாக்களின் துக்கம், அசாந்தியிலிருந்து விடுவிக்கும் தீவிர புருஷாரத்தி ஆகுங்கள். துக்கம், அசாந்தி, பிரஷ்டாச்சாரம், மிக அதிகமாகிக் கொண்டேயிருக்கிறது. இப்போது இந்தக் கொடுமையான நிலைக்கு முற்றுப்புள்ளி வைத்து, எல்லோருக்கும் முக்திதாம் செல்வதற்கான ஆஸ்தியை தந்தையிடமிருந்து கிடைக்கும்படி செய்யுங்கள். இப்படி, சதா திட சங்கல்பம் உள்ள குழந்தைகளுக்கு யாத் பியார் மற்றும் நமஸ்தே!

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋

## 15.12.2004 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# பாப்தாதாவின் விசேஷ விருப்பம் -ஒவ்வொரு குழந்தையும் ஆசீர்வாதம் கொடுக்க வேண்டும் மேலும் ஆசீர்வாதம் பெற வேண்டும்!

இன்று பாப்தாதா நாலா பக்கங்களிலுமுள்ள கவலையற்ற பாதுஷாக்களின் சபையைப் பார்க்கின்றார். இந்த ராஜசபை முழு கல்பத்திலும், இந்த சமயத்தில் தான் இருக்கிறது. ஆன்மீகப் பெருமிதத்தில் இருப்பதன் காரணமாக, கவலையற்ற பாதுஷாவாக (சக்கரவர்த்தி) இருக்கிறீர்கள். காலையில் விழித்தெழுந்தாலும் கவலையில்லை, இங்குமங்கும் சென்றாலும், கர்மம் செய்தாலும் கவலையில்லை. மேலும் தூங்கும்போதும், கவலையற்ற தூக்கத்தில் தூங்குகிறீர்கள். இப்படி அனுபவம் செய்கிறீர்கள் அல்லவா! கவலை இல்லாமல் இருக்கிறீர்களா? ஆகி விட்டீர்களா? அல்லது ஆகிக் கொண்டிருக்கிறீர்களா? ஆகி விட்டீர்கள் அல்லவா? கவலை இல்லாதவர்கள் மேலும் பாதுஷாவாக இருக்கிறீர்கள். சுய இராஜ்ய அதிகாரியாக, இந்த கர்மேந்திரியங்கள் மீது ஆட்சி செய்கின்ற கவலையற்ற பாதுஷா, அதாவது சுயம் இராஜ்ய அதிகாரி. ஆகவே, இப்படிப்பட்ட சபை குழந்தைகளாகிய உங்களுடையதாக இருக்கிறது. ஏதாவது கவலை இருக்கிறதா? இருக்கிறதா ஏதாவது கவலை? ஏனெனில் உங்கள் கவலைகளையெல்லாம் தந்தையிடம் கொடுத்து விட்டீர்கள்? ஆதலால் பாரம் இறங்கி விட்டதல்லவா? கவலையும் முடிந்து விட்டது. மேலும் கவலையற்ற பாதுஷாவாகி, விலைமதிக்க முடியாத வாழ்க்கையை அனுபவம் செய்து கொண்டிருக்கிறீர்கள். எல்லோருடைய தலையின் மீதும் தூய்மையின் ஒளிக்கிரீடம் இயல்பாகவே பிரகாசிக்கிறது. கவலையற்றவர் மீது ஒளிக்கிரிடம் இருக்கிறது. ஒருக்கால், ஏதாவது கவலை இருந்தால், ஏதாவது

பாரத்தை தன்மீது சுமத்திக் கொண்டால், தலைமீது என்ன இருக்கும் என்று தெரியும் அல்லவா? பாரமுள்ள கூடை இருக்கும். ஆகவே யோசித்துப் பாருங்கள், கிரீடம் மற்றும் கூடை இந்த இரண்டையும் கண் முன் கொண்டு வாருங்கள் இதில் எது பிடித்தமானதாக இருக்கிறது? கூடை விருப்பமுள்ளதாக இருக்கிறதா? அல்லது கிரீடம் விருப்பமானதாக இருக்கிறதா? டீச்சர்கள் கூறுங்கள். எது நன்றாக இருக்கிறது? கிரீடம் நன்றாக இருக்கிற தல்லவா? எல்லோரும் கர்மேந்திரியங்கள் மீது ஆட்சி செய்கின்ற பாதுஷாக்கள். தூய்மை, ஒளிக்கிரீடதாரியாக ஆக்குகிறது. ஆகவே தான். உங்களுடைய ஞாபகார்த்தமாக இருக்கின்ற ஜட சித்திரங்களில், இரட்டைக்கிரீடம் காண்பிக்கப்பட்டிருக்கிறது. துவாபர யுகத்திலிருந்து அநேகர் பாதுஷாவாக ஆகியிருக்கிறார்கள். ராஜாக்களாகவும் நிறைய பேர் ஆகியிருக்கிறார்கள். என்றாலும் இரட்டைக்கிரீடதாரியாக ஆனவர்கள் யாருமில்லை, கவலையற்ற பாதுஷா, சுய இராஜ்ய அதிகாரியாகவும் ஒருவரும் ஆகவில்லை. ஏனெனில் தூய்மையின் (பவித்திரத்தா) சக்தி மாயாஜீத், கர்மேந்திரிய ஜீத், வெற்றியாளர் (விஜயி) ஆக்கி விடுகிறது கவலையற்ற பாதுஷாவின் (சக்கரவர்த்தி) அடை யாளம் தானும் திருப்தியாயிருப்பார் மேலும் மற்றவர்களையும் திருப்திபடுத்துபவர். எப்போதும் எல்லாமே மகஇருக்கிறது என்பதால், அதிருப்தி என்பது ஒருபோதுமில்லை. எங்கே எல்லாவற்றையும் அடையாமலிக்கிறார்களோ, அங்கே அதிருப்தி இருக்கும். அப்படி ஆகி விட்டீர்களா? சதா சர்வ பிராப்தி சொரூபமாக, திருப்தியாக இருக்கிறோமா என்று சோதித்துப் பாருங்கள். தேவதைகளாயிருப்பவர்களுக்கு அவர்கள் அடைய வேண்டிய பொருள் எதுவுமே இல்லை என்று புகழ் பாடுகிறார்கள் ஆனால் இந்தப்புகழ் பிராமணர்களுடைய பொக்கிஷத்தில் என்பது தான் சரியானது. திருப்தி வாழ்க்கையின் சிரேஷ்ட சிருங்காரம். சிரேஷ்டமான மதிப்பும் இதற்குண்டு. ஆகவே திருப்தியான ஆத்மாக்கள் தானே! (சந்துஷ்ட ஆத்மா). பாப்தாதா, இப்படிப்பட்ட கவலையற்ற பாதுஷாக்களைப் பார்த்து மகிழ்ச்சியடைகின்றார். ஆஹா! என்னுடைய கவலையற்ற பாதுஷாக்களே ஆஹா! வாஹ்! வாஹ்! அப்படித்தானே! கவலையே இல்லை என்பவர்கள் கையை உயர்த்துங்கள் கவலை இல்லையா? கவலை வருவதில்லையா? இல்லையா? நன்று கவலையில்லாமலிருப்பதற்கான விதி, சகஜமானது. கஷ்டம் இல்லை

வார்த்தையில் ஒரு எழுத்து வித்தியாசம் தான் உள்ளது அத்தனை சுலபமானது. வார்த்தை ‘மேரா' என்பதை 'தேரா’ என்பதாக மாற்றி விட வேண்டும். (என்னுடையது என்பதற்குப் பதிலாக உங்களுடையது என்பதாக மாற்றி விடுவது) என்னுடை யதல்ல. உங்களுடையது. இந்தி பாஷையில் மேரா என்று எழுதுங்கள். தேரா என்று எழுதுங்கள். இந்த இரண்டுக்குமிடையேயுள்ள வித்தியாசம். மே மற்றும் தே. (நான் மற்றும் நீங்கள்) ஒரு எழுத்து தான் என்றாலும் எவ்வளவு பெரிய வித்தியாசம்! அப்படியானால் நீங்கள் எல்லோரும் மேரா மேராவைச் சேர்ந்தவர்களா? அல்லது தேரா, தேரா வா? மேரா (என்னுடையது) என்பதை தேரா (உங்களுடையது) என்று பரிவர்த்தனை செய்து விட்டீர்களா? செய்யவில்லையென்றால், செய்து விடுங்கள். மேரா, மேரா என்று சொல்பவர்கள் அடிமையாகுபவர்கள் கவலைப்படப்போகிறவர்கள் மாயைக்கு அடிமையாகிறவர்கள், கவலைப்படத்தான் வேண்டுமல்லவா? கவலைப்படுபவர்கள் என்றாலே மாயைக்கு அடிமையாகக் கூடியவர்கள். அப்படியானால், நீங்கள் மாயாஜீத், மாயைக்கு அடிமை அல்ல. ஒருவேளை கவலை வருகிறது, சில சமயம் கவலையை ருசித்தும் பார்க்கிறீர்கள். ஏனெனில் 63-பிறவிகள் கவலைப்பட்டுப் பழக்கமாகி விட்டிருக்கிறது. ஆதலால் சில சமயம் எழுச்சியடைகிறது. ஆதலால் பாப்தாதா என்ன சொன்னார்? ஒவ்வொரு குழந்தையும் கவலையற்ற பாதுஷா ஒருவேளை இப்போதும் கூட எங்கேயாவது, ஒரு மூலையில் ஏதாவது கவலையை வைத்திருந்தால் கொடுத்து விடுங்கள். உங்களிடம் ஏன் அந்த பாரத்தை வைத்துக் கொள்கிறீர்கள்? பாரம் சுமந்து பழக்கமாகி விட்டதா? பாபா கூறுகின்றார். சுமையயை என்னிடம் கொடுத்து விட்டு, பாரமற்றவர்களாக (இலகுவாக) ஆகி விடுங்கள். டபுள் லைட் டபுள் லைட் நன்றாக இருக்கிறதா? சுமை நன்றாக இருக்கிறதா? ஆகவே நல்ல முறையில் சோதித்துப் பார்க்க வேண்டும். அமிர்தவேளையில் எழுந்திருக்கும்போது, உள்ளுணர்விலும் கூட ஏதாவது பாரம் (பாரம், கவலை) இன்னு மிருக்கிறதா என்று விசேஷமாக தற்சமயத்தில் சோதித்துப் பார்க்க வேண்டும். உள்ளுணர்வில் மட்டுமல்ல, சொப்பனத்திலும் கூட பாரமான அனுபவம் இருக்கக்கூடாது. டபுள் லைட்டாக இருக்கத்தான் விரும்புகிறீர்கள் அல்லவா? ஆதலால் அமிருத வேளையில் சோதித்துப் பார்ப்பதற்காக இந்த வீட்டுப்பாடம் கொடுக்கின்றேன். சோதிக்கத் தெரியுமல்லவா? சோதிப்பதோடு நிறுத்தி

விடக்கூடாது, சோதித்த பிறகு மாற்றிக் கொள்ளவும். வேண்டும். என்னுடையது என்பதை, உங்களுடையது என்று மாற்றிக் கொள்ள வேண்டும். மேரா, தேரா. ஆகவே சோதியுங்கள், மாற்றுங்கள். ஏனெனில் பாப்தாதா அடிக்கடி கூறுகின்றார், சமயம் மற்றும் சுயம் (தன்னை) இரண்டையும் பார்க்க வேண்டும். சமயத்தின் வேகத்தையும் பாருங்கள், சுயத்தின் வேகத்தையும் கூட பாருங்கள். சமயம் இவ்வளவு வேகமாகச் சென்றுவிட்டது. எனக்குத் தெரியவே இல்லை என்று பிறகு சொல்லக் கூடாது. சிலர் இப்படி நினைக்கிறார்கள். இப்போது முயற்சி செய்வதில் வேகம் சற்று குறைவாக இருந்தாலும் கடைசியில் தீவிரப்படுத்தி விடலாம் என்று நினைக்கின்றனர் ஆனால் வெகுநாட்களாக செய்துவரும் முயற்சி தான் கடைசி நேரத்தில் துணையாக இருக்கும். பாதுஷா ஆகித்தான் பாருங்களேன். யாராவது ஆகியிருக்கிறார்களா? யாரும் ஆகவில்லை. முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். நடந்து கொண்டிருக்கிறது. சம்பன்னம் ஆகி விடலாம் ஆனால் இப்போது நடக்கக்கூடாது, செய்யக் கூடாது, பறக்க வேண்டும். இப்போது பறக்கக்கூடிய வேகம் வேண்டும். இறக்கைகள் கிடைத்து விட்டதல்லவா? ஆர்வம், உற்சாகம் மற்றும் தைரியம் என்ற சிறகுகள் எல்லோருக்கும் கிடைத்திருக்கின்றன. மேலும் தந்தையின் வரதானமும் இருக்கிறது. வரதானம் நினைவிருக்கிறதா? தைரியம் என்ற ஒரு அடி உங்களுடையது. ஆயிரம் மடங்கு உதவி தந்தையினுடையது. ஏனெனில் குழந்தைகளிடம் தந்தைக்கு உள்ளத்தில் நிறைந்த அன்பு இருக்கிறது அன்பான குழந்தைகளுடைய தந்தை, குழந்தைகள் கஷ்டப்படுவதை பார்க்க முடிவதில்லை. அன்பில் மூழ்கியிருந் தால், கஷ்டப்பட்டு முயற்சி செய்ய வேண்டிய அவசியம் இருக்காது. கஷ்டப்பட்டு முயற்சி செய்வது பிரியமானதாக இருக்கிறதா? களைத்துப்போய் விட்டீர்கள். 63-பிறவிகள் வீணாக அலைந்து திரிந்து, முயற்சி செய்து களைத்து விட்டீர்கள். இப்போது தந்தை அன்பின் காரணமாக, அலைச்சலிலிருந்து விடுவித்து மூன்று சிம்மாசனங்களுக்கு அதிகாரியாக்கி விட்டார். மூன்று சிம்மாசனங்களைப் பற்றித் தெரியுமா? தெரிவது மட்டுமல்ல, சிம்மாசனத்தில் அமர்ந்து கொண்டிருக்கிறீர்கள். அகால் தக்த் நிவாசி (பிருகுட்டி சிம்மாசனம்) தந்தையின் இதய சிம்மாசனம் மற்றும் வருங்கால விஷ்வ இராஜ்ய சிம்மாசனம். மூன்று அதிகாரம்: ஆகவே பாப்தாதா எல்லா குழந்தைகளையும் சிம்மாசனத்தில் அதிகாரிகளாகப்

பார்க்கின்றார். இப்படிப்பட்ட பரமாத்மாவின் இதய சிம்மாசனம் முழு கல்பத்திலும் வேறு எப்போதும் அனுபவம் செய்ய முடியாது. பாண்டவர்கள் என்ன நினைக்கிறார்கள்? பாதுஷாவாக இருக்கிறீர்களா? கை உயர்த்துங்கள். சிம்மாசனத்தை விட்டு இறங்கி விடக்கூடாது. தேக அபிமானத்தில் வந்து விட்டால், மண்ணில் விழுந்து விட்டதாக அர்த்தம். இந்த தேகம் மண். சிம்மாசனத்திற்கு அதிகாரி ஆகி விட்டால் பாதுஷா ஆகி விட்டீர்கள் என்று பொருள்.

பாப்தாதா எல்லா குழந்தைகளினுடைய புருஷாரத்தத்தின் சார்ட்டை சோதித்துப் பார்த்தார். நான்கு பாடங்களில் யார், யார் எவ்வளவு தூரம் வந்து சேர்ந்திருக்கிறார்கள் என்று பார்த்தார். பாப்தாதா ஒவ்வொரு குழந்தையின் சார்ட்டை சோதிக்கும்போது, பாப்தாதா என்னென்ன பொக்கிஷங்கள் கொடுத்திருந்தாரோ, அதை எவ்வளவு சேமித்திருக்கிறார்கள் என்று சேமிப்புக் கணக்கை சோதித்தார். ஏனென்றால், பொக்கிஷங்களை தந்தை எல்லோருக்கும் ஒரே மாதிரியாகவே தந்திருக்கின்றார். ஒரு சிலருக்கு குறைவாகவும், ஒரு சிலருக்கு அதிகமாகவும் கொடுக்கவில்லை. பொக்கிஷங்கள் சேமிப்பாகி யிருக்கிறது என்பதற்கான அடையாளம் என்ன? பொக்கிஷம் என்றால் எது என்பது தெரியுமல்லவா? எல்லாவற்றிலும் மிகச் சிறந்த பொக்கிஷம் எது? எல்லாவற்றிலும் பெரிய பொக்கிஷம் சிரேஷ்ட சங்கல்பம் என்ற பொக்கிஷம். சங்கல்பமும் ஒரு பொக்கிஷமே இப்போதும் கூட இது தான் மிகப் பெரிய பொக்கிஷம். ஏனென்றால் தற்சமயத்தில் எப்படிப்பட்ட பிராப்தி அடைய வேண்டுமானாலும், வரதானம் பெற வேண்டுமானாலும், அவ்வளவு இப்போது செய்து கொள்ள முடியும். இப்போதில்லையேல், எப்போதுமில்லை. ஏனெனில், சங்கல்பம் என்ற பொக்கிஷத்தை வீணாக்குவது என்பது, தன்னுடைய பிராப்தியை இழப்பதற்கு ஒப்பாகும். இதேபோல ஒரு வினாடி நேரத்தை வீணாகக் கழித்து பயனளிக்கும் வகையில் உபயோகிக்கவில்லையென்றால், அதிகமாக இழந்து விட்டதற்கொப்பாகும். இத்தோடு ஞானம் எனும் பொக்கிஷம், குணம் என்னும் பொக்கிஷம், சக்திகள் எனும் பொக்கிஷம் மேலும் ஒவ்வொரு ஆத்மாவும் பரமாத்மாவிடமிருந்து பெற்ற ஆசிகள் எனும் பொக்கிஷம். எல்லாவற்றிலும் மிக சுலபமான புருஷாரத்தம் -ஆசீர்வாதம் கொடுப்பது மற்றும் ஆசிர்வாதம் பெறுவது, சுகம் கொடுப்பது, சுகம் பெறுவது,

துக்கம் கொடுக்காமலும், துக்கம் அடையாமலும் இருப்பது. துக்கம் கொடுக்காமலிருக்கலாம் என்றாலும் பிறர் மூலமாக தனக்கு துக்கம் அனுபவமானாலும், துக்கப்படுபவராக ஆகி விடுகிறோம் அல்லவா? ஆதலால் ஆசீர்வாதம் கொடுங்கள். சுகம் கொடுங்கள், சுகம் அடையுங்கள். ஆசீர்வாதம் கொடுக்கத் தெரியுமா? தெரியுமா? பெறுவதற்குத் தெரியுமா? யாருக்கு ஆசீர்வாதம் கொடுக்கத் தெரியும், பெறத் தெரியும் என்று நினைக்கிறார்களோ அவர்கள் கையை உயர்த்துங்கள். நல்லது. எல்லோருக்கும் தெரியும். தெரிகிறது எல்லோருக்கும். நல்லது. டபுள் ஃபாரினர்ஸ்க்கு கூட தெரிகிறதா? வாழ்த்துக்கள் கொடுக்கவும் தெரியும், வாங்கவும் தெரியும். ஆதலால் வாழ்த்துக்கள் எல்லோருக்கும் வாழ்த்துக்கள். அதாவது பெறவும் தெரியும், கொடுக்கவும் தெரியும் என்றால், பிறகு என்ன வேண்டும்? ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டேயிருங்கள். ஆசீர்வாதம் கொடுத்துக் கொண்டேயிருங்கள். சம்பன்னம் ஆகி விடுவீர்கள் யாராவது சாபம் கொடுத்தால் என்ன செய்வீர்கள்? ஏற்றுக் கொள்வீர்களா? உங்களுக்கு ஒருவர் சாபம் கொடுக்கிறார் என்றால், பெற்றுக் கொள்வீர்களா? ஒருவேளை சாபத்தை ஏற்றுக் கொண்டீர்கள் என்றால் அப்போது உங்களுக்குள்ளே சுத்தம் இருக்குமா? சாபம் பொல்லாதது தானே? நீங்கள் பெற்றீர்கள். நீங்கள் ஏற்றுக் கொண்டீர்கள் என்றால், உங்களுக்குள்ளே சுத்தம் இல்லையல்லவா? அதாவது கொஞ்சம் குறை இருந்தாலும், முழுமையாக முடியாதல்லவா? கெட்ட பொருளை யாராவது கொடுத்தால் பெற்றுக் கொள்வீர்களா? ஒருவர் மிக அழகான பழம் ஒன்றைக் கொடுக்கும்போது சபித்தால் பழம் அழகாயிருக்கிறது என்பதற்காகப் பெற்றுக் கொள்வீர்களா? பெற்றுக் கொள்ள மாட்டீர்கள் தானே? அல்லது பழம் நன்றாக இருக்கிறது கொடுக்கின்றார் என்று ஏற்றுக் கொள்வீர்களா? இல்லையல்லவா? ஒருபோதும் யார் சாபம் கொடுத், தாலும் உங்கள் மனதில் தாரணை செய்யாதீர்கள். இது சாபம். என்று புரிகிறது என்றால் உள்ளே தாரணை செய்யாதீர்கள். இல்லையென்றால் குறை ஏற்பட்டுவிடும். ஆதலால் இப்போது இந்த ஆண்டு, இன்னும் இந்தப் பழைய ஆண்டில் கொஞ்ச நாட்கள் இருக்கின்றன. உங்களுடைய மனதில் திட சங்கல்பம் செய்யுங்கள் இப்போதும் கூட, யாருடைய சாபம் மனதில் இருந்தாலும் வெளியேற்றி விடுங்கள். மேலும் நாளை முதல் ஆசீர்வாதம் கொடுங்கள். ஆசீர்வாதம் பெறுங்கள். சம்மதம் தானே? நல்லது தான் என்று நினைக்கிறீர்களா?

அல்லது செய்யத்தான் வேண்டுமா? நல்லது தான், ஆனால் யார் செய்யத்தான் வேண்டும். என்று நினைக்கிறீர்களோ. என்ன நடந்தாலும் சரி, செய்யத்தான் வேண்டும் என்று நினைப்பவர்கள் கை உயர்த்துங்கள். செய்யத் தான் வேண்டும்.

சினேகி, சகயோகி யார் வந்திருந்தாலும் அவர்கள் கை உயர்த்துங்கள். யார், முதல் முறையாக வந்திருக்கிறார்கள்? நன்று. ஒரே வரிசையில் உட்கார்ந்திருக்கிறார்கள். யாரெல்லாம் சிநேகி, சகயோகிகளாக இருக்கிறார்களோ அவர்களுக்கு பாப்தாதா. வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றார். ஏனென்றால், சகயோகிகளாக இருக்கின்றீர்கள், சினேகியாகவும் இருக்கின்றீர்கள், என்றாலும் இன்றைக்கு ஒரு அடி முன்னே எடுத்து வைத்து தந்தையின் வீட்டுக்கு வந்திருக்கிறீர்கள். ஆதலால் உங்களுடைய வீட்டுக்கு வந்து சேர்ந்ததற்காக வாழ்த்துக்கள். நல்லது. யார், சிநேகி, சக யோகியாக வந்திருக்கிறார்களோ, அவர்களும் கூட ஆசீர்வாதம் கொடுப்பீர்கள். ஆசீர்வாதம் பெறுவீர்கள் அப்படித்தானே? புரிந்து கொண்டீர்களா? தைரியம் இருக்கிறதா? உதவி கிடைக்கும். நன்றாக உயரமாக கை உயர்த்துங்கள் நன்று. ஆகவே நீங்களும் சம்பன்னம் ஆகி விடுவீர்கள். வாழ்த்துக்கள். நல்லது. யார் ரெகுலர் காட்லி ஸ்டுடண்டாக (இறை மாணவர்கள்) பிராமண வாழ்க்கையில் பாப்தாதாவை சந்திப்பதற்காக முதன் முறையாக வந்திருக்கிறார்கள் மற்றும் தங்களை பிராமணர் என்று புரிந்து கொண்டிருக்கிறார்கள். யார் தங்களை ரெகுலர் ஸ்டூண்ட் என்று கருதுகிறார்கள் மேலும் செய்யத்தான் வேண்டும் என்று நினைக்கிறார்களோ அவர்கள் கை உயர்த்துங்கள். ஆசீர்வாதம் கொடுப்பீர்கள், ஆசீர்வாதம் பெறுவீர்களா? செய்வீர்களா? டீச்சர்ஸ் கை உயர்த்துகிறார்களா? கேபினில் உள்ளவர்கள் கை உயர்த்தவில்லை. இவர்கள் நினைக்கிறார்கள், நாங்கள் கொடுத்துக் கொண்டேயிருக்கிறோம் என்று இப்போது செய்யத்தான் வேண்டும் என்ன நடந்தாலும் சரி, தைரியம் வையுங்கள். திட சங்கல்பம் வைத்திடுங்கள். ஒருவேளை எப்போதாவது யாருடைய சாபத்தின் பிரபாவம் இருந்தாலும், அதற்குப் பதிலாக 10-மடங்கு ஆசீர்வாதம் அதிகமாகக் கொடுத்து அதை முடித்து விடவேண்டும். ஒரு சாபத்திற்கு 10-மடங்கு ஆசீர்வாதம் கொடுத்து, அதை வலுவில்லாமல் செய்து விட வேண்டும். பிறகு தைரியம் வந்து விடும். நஷ்டம் தனக்கு

ஏற்படுகிறதல்லவா? மற்றவரோ, சாபம் கொடுத்து விட்டுச் சென்று விட்டார் ஆனால் யார் சாபத்தை தனக்குள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்களோ, அப்போது துக்கப்படுபவர் யார்? பெற்றுக் கொண்டவரா அல்லது கொடுத்தவரா? கொடுப்பவர்கள் இருக்கிறார்கள் ஆனால் பெற்றுக் கொள்பவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். கொடுப்பவரோ அலக்ஷியமாக இருக்கிறார்கள்.

இன்று பாப்தாதா தன்னுடைய உள்ளத்தின் விருப்பங்களை வெளிப்படுத்துகின்றார். பாப்தாதாவுக்கு எல்லாக் குழந்தைகளுக்காகவும், ஒவ்வொரு குழந்தையிடமும், இந்த தேசத்தவரானாலும், வெளி நாட்டினரானாலும், சகயோகியாக இருந்தாலும், ஏனெனில் சகயோகிகளுக்கும் கூட அறிமுகம் கிடைத்திருக்கிறதல்லவா? அறிமுகம் கிடைத்திருக்கிறதென்றால் பிராப்தியும் செய்து கொள்ளத்தான் வேண்டும் அல்லவா? ஆதலால் பாப்தாதாவுக்கு இதே விருப்பம் தான். ஒவ்வொரு குழந்தையும் ஆசிகளைக் கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டும். ஆசீர்வாதங்களின் பொக்கிஷத்தை எவ்வளவு சேமிக்க முடியுமோ, அவ்வளவு சேமித்துக் கொண்டே இருக்க வேண்டும். ஏனெனில் இந்த சமயத்தில் எவ்வளவு ஆசீர்வாதங்களை ஒன்று சேர்க்கிறீர்களோ, சேமிக்கிறீர்களோ, அந்த அளவுக்கு எப்போது பூஜைக்குரியவர் ஆகிறீர்களோ, அந்த அளவு ஆத்மாக்களுக்கு ஆசீர்வாதம் கொடுக்கக்கூடியவர்களாக இருப்பீர்கள். நீங்கள் இப்போது மட்டும் ஆசீர்வாதம் கொடுப்பதல்ல, துவாபர யுகத்திலிருந்து பக்தர்களுக்கு ஆசீர்வாதம் கொடுக்கவேண்டும். ஆதலால் அவ்வளவு ஆசீர்வாதங்களை சேமிக்க வேண்டும். ராஜா குழந்தைகள் அல்லவா? பாப்தாதா ஒவ்வொரு குழந்தையையும் ராஜா குழந்தையாகவே பார்க்கின்றார். குறைவாக அல்ல. நல்லது.

சேவைக்கான வாய்ப்பு -டெல்லி ஜோனுக்கு கிடைத்துள்ளது: நல்லது. டெல்லிக்காரர்கள் எல்லோரும் எழுந்திருங்கள். நல்லது. டெல்லியின் பெயரைக் கேட்டதுமே எல்லோருக்கும் மகிழ்ச்சியாயிருக்கிறது அல்லவா? ஏனெனில், ஒவ்வொரு கல்பத்திலும் இது உங்களுடைய ராஜதானி அப்படிப்பார்த்தால், டிராமாவில் ராஜதானி டெல்லி தான் அதுமட்டுமல்ல சேவையின் ஆரம்பமும் கூட டெல்லியிலிருந்து தான்

தொடங்கியது. ஆதி முதல் விதவிதமான சேவைக்கான புதுப்புது யுக்திகளும் கூட, டெல்லிக்காரர்களிடமிருந்து தான் வெளி வந்தது. மற்றவர்களும் கண்டுபிடித்திருக்கிறார்கள் ஆனால் டெல்லிக்காரர்களும் கூட திட்டம் தயார் செய்திருக்கிறார்கள். இப்போது இந்த சேவையிலும், யக்ஞத்திலும் சேவை செய்வதற்கான வாய்ப்பு உங்களுக்குக் கிடைத்திருக்கிறது. யக்ஞ சேவைக்கான பலன் மிகப் பெரியது. ஏனென்றால், யக்ஞ சேவை என்பது பிராமண ஆத்மாக்களுக்கு செய்யும் சேவை பக்தியில் 8-10 பிராமணர்களுக்கு உணவு அளிக்கிறார்கள். கொஞ்சம் இப்படிச் செய்தாலும், மிகப் பெரிய புண்ணியம் கிடைத்து விட்டதாகக் கருதுகிறார்கள் ஆனால் இங்கே 10-ஆயிரம், 12-ஆயிரம், 8-ஆயிரம் பிராமணர்களுக்கு சேவை செய்வதற்கான வாய்ப்பு கிடைக்கிறது யக்ஞ பிதாவினுடைய யக்ஞ சேவை. பிராமண போஜனத்திற்கு, அணு, அணுவிலும் மதிப்பு மிக்கது. ஆதலால் பிராமணர்களாகிய உங்களுக்கு, பிரம்மா போஜன் எவ்வளவு அன்புடன் கிடைக்கிறது. இந்த பிரம்மா போஜனம் ஒன்றும் குறைவானதல்ல. யாருக்காவது பாக்கியத்தில் பிரம்மா போஜனம் நடக்கிறது என்றால், இதற்கான பலன் என்ன கிடைக்கும் என்ற அவருக்குத் தெரிவதில்லை ஆனால் அவசியம் கிடைக்கும். ஆதலால் தான் பக்தியில் கூட சிவனுடைய பண்டகசாலை நிறைந்திருக்கிறது என்றால் எமனும் கிட்ட நெருங்க மாட்டான், தூரமாக ஓடிப்போவார்கள் என்று கூறுகின்றார்கள். ஆகவே சாப்பிடுபவர்களுக்கு, எவ்வளவு பலன் கிடைக்கும்! நன்று டெல்லியில் சேவைக்கான திட்டம் வகுத்துக் கொண்டே இருக்கிறார்கள் ஆனால் ஒரு விசேஷத்தைப்பற்றி பாப்தாதாவுக்குத் தெரிந்தது. நன்றாகவும் இருக்கிறது. டெல்லிக்காரர்கள் தங்களுக்கு நிமித்தமாகியிருக்கின்ற பிரசிடெண்டுக்கு மிக நல்ல சேவை செய்திருக்கிறார்கள். அவர் நிமித்தமாகி மற்றவர்களுக்கும் கூட செய்தி கொடுத்துக் கொண்டேயிருக்கின்றார். ஆகவே நல்ல மைக் தயார் செய்திருக்கின்றார்கள் அல்லவா? சக்திவாய்ந்த மைக் இனி டெல்லிக்காரர்கள் சேவைக்கான புதுத்திட்டம் தீட்ட வேண்டும். அல்லது வேறு எந்த ஜோனும், பாம்பேயும் கூட செய்ய முடியும். ஒவ்வொரு ஜோனும், ஏதாவதொரு புதிய சேவைக்கான யுக்தி கண்டுபிடிப்பவர்களாக இருக்கிறார்கள். இப்போது மெகா புரோகிராமும் நடந்து முடிந்து விட்டது. இதுவும் பொதுவானதாகி விட்டது. பாருங்கள் இது விசேஷமாக உங்களுடைய தாதியினுடைய கண்டு பிடிப்பு. மேலும்

எவ்வளவு சகஜமாக நடந்து கொண்டிருக்கிறது. முதலில் ஒரு லக்ஷம் பேர்களை ஒன்று சேர்ப்பது என்பது மிகவும் கடினமானது என்று நினைத்தார்கள் ஆனால் எங்கெல்லாம் செய்தார்களோ, அதை மனப்பூர்வமாக செய்திருக்கிறார்கள் நல்ல பலன் கிடைத்திருக்கிறது. பாப்தாதா பெயர் குறிப்பிடப் போவதில்லை. ரிசல்ட்டைப் பார்க்கும்போது எவ்வளவு பெரிய மனதோடு செய்திருக்கிறார்களோ, அவ்வளவு பலனும் கிடைத்திருக்கிறது. வெற்றி கிடைக்கத்தான் வேண்டும். வெற்றி பிராமண ஆத்மாக்களின் கழுத்து மாலை ஜன்ம சித்த அதிகாரம் (பிறப்புரிமை) ஆகவே டெல்லிக்காரர்களும் கூட, இப்போது இன்னும் சற்று புதுமையாகச் செய்ய வேண்டும் சரிதானா? ஆம் டெல்லியில் நூதனமாக சாதனை செய்பவர்கள் கூட நிறைய இருக்கிறார்கள் நன்றாக இருக்கிறது. ஒவ்வொரு வர்க்க சேவையாளர்களும், எந்த ஒரு சேவை செய்திருந்தாலும், நன்றாகவே செய்திருக்கிறார்கள். இன்னும் மிக நல்ல விதமாகவும் செய்வார்கள். நன்றாகவும் செய்திருக்கிறார்கள். மிகவும் நல்ல விதமாகவும் நடந்து கொண்டே இருக்கும். கடைசியில் அமைதியின் சக்தியானது அறிவியலின் சக்தியின் மீது வெற்றிக் கொள்ளத் தான் போகிறது. இப்போது விஞ்ஞானிகளும் கூட தொடர்பில் வந்து கொண்டிருக்கிறார்கள். தொடர்பிலும், சம்மந்தத்திலும் வருபவர்கள் யாராயினும், அறிமுகம் கிடைத்து விடுகிறது. நல்ல காரியம் நடக்கிறது என்பதைப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஞான ரத்தினத்தின் மணியானது புத்தியில் படிந்திருக்கிறது. இதற்கான பலன் அவசியம் கிடைக்கும் ஞானத்தின் சிறு மணியும் கூட விநாசம் ஆவதில்லை. அவிநாஷி பலன் (அழிவற்றது) இப்போது டெல்லிக்காரர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதைப் புரிந்து கொண்டார்களா? இன்னும் மைக் தயார் செய்யுங்கள் நான்கைந்து தயார் செய்திருக்கிறார்கள். பாப்தாதாவிடம் லிஸ்ட் வந்திருக்கிறது ஆனால் இனியும் தயார் செய்ய வேண்டும். எல்லா ஜோன்களிலிருந்தும் வந்திருப்பவர்கள் எல்லோரும் சேவை செய்ததன் பலனோடு வந்திருக்கிறீர்கள் அல்லவா?

சிநேகி, சகயோகி யாரெல்லாம் வந்திருக்கிறார்களோ, அவர்கள் எழுந்திருங்கள்: கொஞ்சம் எழுந்து நில்லுங்கள். உட்கார்ந்தபடியே வெகுநேரம் இருந்து களைத்துப் போயிருப்பீர்கள். இப்போது எழுந்து

நில்லுங்கள் நல்லது. மிக நல்ல நல்ல குழந்தைகள் வந்திருக்கிறார்கள். நீங்கள் யாருடைய மெசஞ்சராக ஆகியிருக்கிறீர்கள் என்று புரிந்து கொண்டிருக்கிறீர்களா? காட்லி மெசஞ்சர் (இறை தூதுவர்) ஆகியிருக்கிறீர்கள். கடவுளைப் பற்றிய அறிமுகம் கொடுக்கிறீர்கள் அல்லவா? எவ்வளவு செய்கிறீர்களோ, அவ்வளவு அதற்கான பலன் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. யாரும் பறித்து விட முடியாது. நல்ல செய்தி என்ன வென்றால், யாரெல்லாம் இறை தூதுவர்களாகி மற்றவர்களுக்கு செய்தி தருகிறீர்களோ அவர்களுக்கெல்லாம் தங்களுடைய புதிய உலகிற்கான கேட் பாஸ் கிடைத்து விட்டது. கேட் பாஸ் மட்டும் தான் கிடைத்திருக்கிறது இப்போது சீட்டில் அமருவதற்கான பாஸ் பெற வேண்டும். நல்லது. யாரைச் சந்தித்தாலும், அவர்களுக்கு நல்ல பாதையைக் காட்டுகிறீர்கள் அல்லவா? அதாவது புண்ணியமான சேவை செய்கிறீர்கள் அல்லவா? ஆதலால் புண்ணியக் கணக்கு ஒருபோதும் இல்லாமல் அழிந்து போய் விடாது. ஆதலால் நீங்கள் புண்ணியாத்மா ஆகி விட்டீர்கள் ஆனால் இப்போது புண்ணிய ஆத்மாவாக இருப்பதோடு நின்று விடக்கூடாது. கொஞ்சத்தில் திருப்தி அடைந்து விடுபவர்களா? கொஞ்சத்தில் மகிழ்ச்சி அடைபவர்களா அல்லது எல்லாவற்றையும் பிராப்தி செய்யக்கூடியவர்களா? எல்லாவற்றையும் அடைய வேண்டும் புண்ணிய ஆத்மா ஆகி விட்டீர்கள். புண்ணிய கர்மமும் செய்திருக்கிறீர்கள். செய்து கொண்டுமிருக்கிறீர்கள். இன்னும் அதிகமாக தொடர்ந்து செய்து கொண்டே இருப்பீர்கள் ஆனால் தந்தையின் விருப்பம் எதுவோ அப்படி ஆக வேண்டும். என்னுடைய குழந்தை ராஜா குழந்தையாகி விட வேண்டும். சுய இராஜ்ய அதிகாரியாகி விட வேண்டும். அப்படி ஆவீர்கள் தானே! ஆக வேண்டுமல்லவா! ஆக வேண்டுமா? கழுத்தையாவது அசையுங்கள். மிக நன்றாகச் செய்தீர்கள். நீங்கள் விருந்தாளிகள் அல்ல. விருந்தோம்புபவர்கள். உங்களுடைய வீட்டில் வந்திருக்கிறீர்கள். இவ்வளவு பெரிய வீடு உங்களுக்குப் பிடித்தமானதாக இருக்கிறதா? பிடித்திருக்கிறதா? உங்களுடையது என்றால் வந்து கொண்டே இருக்க வேண்டும். இங்குள்ள வழக்கம் என்ன தெரியுமா? யாரெல்லாம் வருகிறார்களோ, அவர்கள் இங்கிருந்து போகத்தான் வேண்டும் எனினும் எப்போது போகின்றார்களோ, அப்போது தாதி கோ சூன், கம் சூன் (சீக்கிரமாகவே செல்லுங்கள், வெகு சீக்கிரமாகவே வாருங்கள்) என்று கூறி டோலி வழங்குவார்கள். உங்களுக்கும் கிடைக்கும். ஆகவே,

கோ-சூன், கம் சூன் உங்களுடைய வீட்டிற்கு வந்து கொண்டே இருக்க வேண்டும். ஏனெனில் வரத்தான் வேண்டும் வர வேண்டுமல்லவா? மிகவும் நன்று எல்லா குழந்தைகளும் கூட உங்களைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறார்கள். ஏனென்றால், சேவைக்கான பிரத்யக்ஷ பலனைக் கொண்டு வந்திருக்கிறார்கள் அல்லவா? ஆதலால் எல்லோருக்கும் குஷியாக இருக்கிறது. யார் உங்களை அழைத்து வந்திருக்கிறார்களோ, அவர்கள் மகிழ்ச்சியடைகிறார்கள். மேலும் 10-ஆயிரம் பிராமண ஆத்மாக்கள் சார்பாக உங்களுக்கு வாழ்த்துக்கள். நல்வாழ்த்துக்கள். எல்லோரும் நன்றாக இருக்கிறீர்களா? ஆரோக்கியமாக இருக்கிறீர்களா? நன்றாக வரட்டும். முதலாவது குரூப்பில் வந்திருக்கிறீர்கள். முதலாவது குரூப்பிற்கு மகத்துவம் இருக்கிறதல்லவா? நல்லது அமருங்கள். களைத்துப் போய் விட்டிருப்பீர்கள்.

வியாபாரத் துறை (பிஸினெஸ் விங்): வியாபாரத் துறையைச் சார்ந்தவர்கள் எழுந்திருங்கள். பிஸினெஸ் விங்காரர்கள் எப்படிப்பட்ட மைக் தயார். செய்திருக்கிறீர்கள்? செய்திருக்கிறீர்களா? செய்திருக்கிறீர்கள் அல்லவா? ஏனென்றால் பிஸினெஸ் விங் காரர்களுக்கு, வியா பாரம் செய்வதற்கான பழக்கம் இருக்கிறது. ஆகவே தந்தையுடன் வியாபாரம் செய்வதற்கும் கூட வியாபாரத் துறையினருக்கு மிகவும் சகஜமாக இருக்கிறது. நன்றாக இருக்கிறது. எப்போதிருந்து வர்க்க சேவை ஆரம்பமானதோ, அப்போ திருந்து ஒவ்வொருவருக்கும் சேவையை விஸ்தரிப்பதற்கான ஆர்வம், உற்சாகம் நன்றாகவே இருக்கிறது. இப்போதும் கூட பாப்தாதா கூறினார் அல்லவா? ஒவ்வொரு விஷயத்திலும் பாப்தாதா தீவிரமாகச் செய்வதை எதிர்பார்க்கின்றார்கள். புருஷார்த்தத்திலும், தீவிரம் சேவையிலும் தீவிரம். ஓடி ஆடி சேவை செய்கிறீர்கள் செய்தியும் கிடைக்கிறது ஆனால் இப் போது கால வேகத்தின் பிரமாணமாக, இன்னும் கொஞ்சம் வேகத்தை அதிகரிக்க வேண்டும். ஏனென்றால் திடீரென எதுவும் நடக்கக்கூடும் அப்போது யாரும் எனக்கு சொல்லவில்லை என்று புகார் செய்யக் கூடாது. எந்த ஒரு ஆத்மாவும், எனக்குத் தெரியாமல் போய்விட்டது என்று புகார் கூறக்கூடாது என்று பாப்தாதா நினைக்கின்றார். மற்றபடி பாப்தாதாவுக்கு சேவை சமாச்சாரம் கிடைத்துக் கொண்டு தான் இருக்கிறது. நன்றாகச் செய்து

கொண்டிருக்கிறார்கள். அவரவருடைய பகுதியில் ஏதவாது ஒரு புரோகிராம் செய்து கொண்டு தான் இருக்கிறார்கள் அல்லவா? நாலா பக்கமும் தூள் பறக்கட்டும். பிரபு சந்தேஷ், பிரபு சந்தேஷ் என்ற செய்தி நாலா பக்கமும் பரவட்டும். நல்லது.

சோஷியல் விங்: சோஷியல் விங்கில், யாரெல்லாம் சோஷியல் ஓர்க்கர்களாக இருக்கிறார்களோ, அவர்கள் எல்லோருக்கும் எந்தெந்த இடம் குறிக்கப்பட்டிருக்கிறதோ, அவர்களுக்கெல்லாம் செய்தி கொடுத்து விட்டீர்களா? யாராக இருந்தாலும், எந்த தேசம், நகரமாக இருந்தாலும், அது அவரவருடைய பொறுப்பு. அவரவருடைய வர்க்கத்தினருக்குச் செய்ய வேண்டிய சேவைக்கான பொறுப்பு அவரவரைச் சார்ந்தது. செய்தி சொல்லப்படாமல் யாரும் விடுபட்டு போய் விடக்கூடாது. செய்கின்றீர்கள் என்பது பாப்தாதாவுக்குத் தெரியும். நாலா பக்கமும் புரோகிராம் தயார் செய்திருக்கிறீர்கள் ஆனால் அந்தந்த நாட்டில், அவரவருடைய வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள், சேவை செய்யாமல் மீதம் மிருந்து விடக்கூடாது. ஒவ்வொரு இடத்திலும் செய்து கொண்டுதானிருக்கிறீர்கள். நடந்து கொண்டே இருக்கிறதல்லவா? பாப்தாதா கூறினார்: ரிப்போர்ட் வந்து சேர்கிறது. செய்து கொண்டிருக்கிறீர்கள். இன்னும் கொஞ்சம் வேகத்தை தீவிரப்படுத்துங்கள். ஏனென்றால், பாப்தாதா காலத்தின் வேகத்தை அறிந்து ஜாடையாக எச்சரிக்கை செய்கிறார். மற்றபடி சேவை நன்றாகவே செய்கிறீர்கள். வாழ்த்துக்கள். இன்னும் கூட மற்றப்படி சேவை நன்றாகவே சேவை செய்து கொண்டே இருப்பீர்கள்.

டிரான்ஸ் போர்ட் விங்: எத்தனை ஆத்மாக்களை இலக்குவரை சென்றடையச் செய்தீர்கள்? ஏனெனில், டிரான்ஸ் போர்ட்டுக்கு இலக்குவரை கொண்டு சேர்ப்பதற்கான பொறுப்பு இருக்கிறது. பாப்தாதா குஷி அடைகின்றார். சேவை செய்வதற்கான ஆர்வம் நன்றாக இருக்கிறது எல்லோருக்கும் நல்ல வாய்ப்பு கிடைத்து விடுகிறது. சேவை மீட்டிங்கும் நடந்து விடுகிறது. அத்தோடு சந்திப்பும் நடந்து விடுகிறது. டபுள் வருமானம் ஆகி விடுகிறது. எல்லா வர்க்கத்தைச் சேர்ந்தவர்களும் கெட்டிக்காரர்கள். இரட்டை வாய்ப்புள்ளவர்கள். இப்போது மனசா சேவையையும் கூட தீவிரப்படுத்துங்கள். ஏனென்றால், வாய்மொழி மூலமான சேவை, முழு உலகத்திற்கும்

சென்றடைவதற்கு காலதாமதமாகிறது. ஆதலால் மனசா சேவை வேகமான சேவை மேலும் சக்திவாய்ந்த சேவையுமாகும். உழைப்பும் குறைவு சக்திசாலி ஸ்திதி உண்டாக்க வேண்டும். ஆகவே சதா மனசா, வாச்சா, கர்மனா ஆகிய மூன்று விதமான சேவையும் ஒரே நேரத்தில் ஒன்றாகச் செய்ய முடியும். கர்மனா என்றால் சம்மந்தம் மற்றும் தொடர்பில் யாரெல்லாம் வருகிறார்களோ, அவர்களுடைய சம்மந்தத்தில் வருவதும் கூட கர்மனா (செயல்) ஆகும். சம்மந்தம் மூலமாகக் கூட அதிக சேவை நடக்கிறது. ஆகவே எல்லா வர்க்க சேவையாளர்களும் எப்படி திட்டம் தீட்டுகிறீர்களோ, சேவைக்கான சாதனத்தை உருவாக்குகிறீர்களோ, அப்படி தங்கள், தங்களுடைய வர்க்கத்திற்கு, மனசா சேவை செய்வதற்கான விதியையும் தயார் செய்யுங்கள். ஆத்மாக்களுக்கு விசேஷ மனசா சேவையும் கூட செய்ய வேண்டும். நல்லது. வாழ்த்துக்கள் நல்ல சேவை. எல்லா வர்க்க சேவையாளர்களுடைய சேவையின் ரிசல்ட் நன்றாக இருக்கிறது என்று பாபா கூறி விட்டார்.

யூத் குரூப்: யூத் குரூப்புக்கு வாழ்த்துக்கள். பாருங்கள் கொஞ்ச நாட்களி லேயே ஆர்டர் கிடைத்தவுடன் வந்து சேர்ந்து விட்டீர்கள். இதற்கு விசேஷமான வாழ்த்துக்கள். நல்லது. இங்கே வந்து விட்டீர்கள் ஆனால் மனசா சேவை செய்தீர்களா? இங்கே விசேஷ ஆத்மாக்கள் வரவேண்டியதாக இருந்தது அவர்களுடைய வருகைக்காக, இங்கே அமர்ந்தவாறே மனசா சேவை செய்தீர்களா? ஏதோ ஒரு காரணமாகவோ, காரணமில்லாமலோ வர முடியவில்லை ஆனால் மனசா சேவை மூலமாக அந்த ஆத்மாக்களுக்கு ஏதாவது கிடைக்கச் செய்தீர்களா அல்லது மீட்டிங் மட்டுமே செய்தீர்களா? அந்த ஆத்மாக்களுடைய நினைவு இங்கே இருந்திருக்குமல்லவா? வர வேண்டியதாக இருந்தது. சேர்ந்திருக்க வேண்டும். யூத் குரூப் இன்னும் அதிகமாகிக் கொண்டே இருக்க வேண்டும் பாரதத்தின் பிரச்சினைகள் தீரட்டும். இளைஞர்களுடைய கடமை என்னவென்றால், அவரவர் இடத்தைச் சார்ந்த இளைஞர்களை பிராமணர்கள் ஆக்கி விட வேண்டும். ஒழுங்கீனமான நிலையிலிருந்து காப்பாற்றுங்கள். சிரேஷ்டாச்சாரியாக ஆக்குங்கள். இப்போது பாருங்கள். அரசாங்கம் வரையிலும் சப்தம் சென்றடைந்து விட்டது ஆனால் தெளிவான ரிசல்ட் அவர்களுடைய புத்தியில் இன்னும் சற்று தெளிவாகட்டும். அவர்களை இன்னும் சற்று

சமீபத்தில் கொண்டு வர வேண்டும். ஒவ்வொரு நகரத்திலும், அந்த இடத்திலுள்ள ஒழுங்கீனமான, சண்டைச்சச்சரவில் ஈடுபடக் கூடிய இளைஞர்கள் குரூப் இருக்கிறதல்லவா, அவர்களுக்கு சேவை செய்வதற்கு ஏதாவதொரு யுக்தி கண்டு பிடிக்க வேண்டும். யாராவது இப்படிப்பட்ட குரூப்பிற்கு சேவை செய்து, பரிவர்த்தனை செய்து காண்பியுங்கள். ஒவ்வொரு நகரத்திலும் யூத் குரூப் இருக்குமல்லவா? ஆகவே ஒவ்வொரு நகரத்தைச் சேர்ந்தவர்களும், ஏதாவது இரண்டு, மூன்று குரூப்புகளுக்கு சேவை மூலம் பரிவர்த்தனை செய்து காட்டட்டும். இது மற்றவர்களுடைய கவனத்திற்கும் வர வேண்டும். எப்படி ஜெயில் சேவை செய்ததன் மூலமாக அநேகர் மாறி விட்டார்கள். பிறகு அவர்கள் இங்குமங்கும் சென்று அனுபவத்தைக் கூறினார்கள் அல்லவா? இதேபோல ஏதாவதொரு யூத் குரூப்பினுடைய அசோஸியேசனில் (மாணவர் சங்கம்) சென்று, அவர்களுக்கு சேவை செய்து அவர்களை மாற்ற வேண்டும். பிறகு இப்படிப்பட்ட மாறி விட்ட இளைஞர் குரூப், இன்னொரு இளைஞர் குரூப்பிற்குச் சென்று, தங்கள் அனுபவத்தைக் கூறட்டும். செய்து கொண்டிருக்கிறார்கள். நன்றாக இருக்கிறது ஆனால் இப்போது இப்படிப்பட்ட உதாரணத்தை வெளிக் கொணருங்கள். தீவிர சண்டைக்காரனாக இருக்கும் ஒருவரை மாற்றிக் காண்பியுங்கள். பிரசித்தமானவராக இருக்க வேண்டும். இருக்கிறதா தைரியம்? இப்படிப்பட்ட பரிவர்த்தனை செய்து காண்பியுங்கள். எப்படி பாப்தாதா கூறுகின்றாரோ, அப்படி மைக் தயார் செய்யுங்கள். அப்படிப்பட்ட தீவிர சண்டைக்காரரை சாந்திமயமானவராக ஆக்கி, உதாரணமாக காட்டுங்கள். இப்படிப்பட்ட குரூப்பைக் கொண்டு வாருங்கள். தயார் செய்து, அப்படிப்பட்ட குரூப்பைக் கொண்டு வரவேண்டும். பாருங்கள். எவ்வளவு இளைஞர்கள் வந்திருக்கிறார்கள்! நிறைய பேர் வந்திருக்கிறார்கள் நல்ல நல்ல இளைஞர்கள் வந்திருக்கிறார்கள். எல்லா தரப்பினரும் இருக்கிறார்கள். வெளிநாட்டினரும் இருக்கிறார்கள். நன்றாக இருக்கிறது. இப்போது இந்த ஓசை அலைகளாகப் பரவட்டும். கொஞ்சம், கொஞ்சம் சேவை செய்து கொண்டு தான் இருக்கிறீர்கள். சேவை செய்யாமல் உட்கார்ந்திருக்கவில்லை தான் ஆனால் எப்படி வெடிகுண்டு சப்தம் கேட்டால் செய்தி வேகமாக பரவுகிறதல்லவா, அதுபோல ஆத்மீக பாம் (Atmic bomb) போடுங்கள். ஆட்டம் பாம் (Atom bomb) அல்ல. ஆத்ம பாம்.

நல்லது. நிறைய வாழ்த்துக்கள். நேரம் தவறாமல் வந்து சேர்ந்ததற்கு வாழ்த்துக்கள் நல்லது.

**டபுள் விதேஷி:** கையை அசைத்துக் காண்பியுங்கள். டபுள் விதேசிகளுக்கு பாப்தாதா டபுள் வாழ்த்துக்கள் அளிக்கின்றார். ஏனெனில், மெஜாரிட்டி டபுள் விதேஷிகளினுடைய விசேஷம் என்னவெனில், டபுள் காரியம் செய்பவர்கள். லௌகீக காரியம் செய்கிறார்கள். சென்டரையும் நடத்துகிறார்கள் சென்டரை நடத்துபவர்களாகவும் இருக்கலாம். சென்டரில் சகயோகிகளாக வும் இருக்கலாம் என்றாலும் டபுள் வேலை செய்கிறார்கள். மெஜாரிட்டி இப்படி பாரதத்திலும் இருக்கிறார்கள் ஆனால் இங்கே மெஜாரிட்டி இப்படி இருக்கிறார்கள் மேலும் பாப்தாதா சில சமயம் விடாப்பிடியாக சீன் பார்க்கின்றார். பாப்தாதாவிடம் நேச்சுரல் டி.வி இருக்கிறது. இது டி.வி. அல்ல, எப்படி ஓடிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கின்றார். காலை சிற்றுண்டி (நாஷ்தா) சாப்பிட்டார்கள். இதைச் செய்தார்கள் அதைச் செய்தார்கள், ஓடி விட்டார்கள். நன்றாக இருக்கிறது. இப்படி புருஷாரத்தத்திலும் டபுள் மார்க் வாங்க வேண்டும். மார்க் வாங்கக்கூடியவர்கள் தான். பரிவர்த்தனையும் கொண்டு வந்திருக்கிறார்கள். இன்னும் செய்வதற்கு ஆர்வமும் நன்றாக இருக்கிறது. பாப்தாதாவுக்கு, டபுள் விதேஷிகளினுடைய இயற்கையான சுபாவம் பிடித்தமானதாக இருக்கிறது. வெளி நாட்டவர்களுக்கு மனம் களங்கமில்லாமல் இருக்கிறது. எது நடந்தாலும் சரி, மறைக்க மாட்டார்கள். தெளிவாகக் கூறி விடுவார்கள். கீழே விழுந்து விட்டாலும், மறைக்க மாட்டார்கள். முன்னேறினாலும் கூட அப்படியே கூறி விடுவார்கள். ஆகவே சுத்தமான மனமுடையவர்களாக இருப்பது பாப்தாதாவுக்கு பிரியமானதாக இருக்கிறது. நன்றாக இருக்கிறது. டபுள் முபாரக் (இரட்டை வாழ்த்துக்கள்), உங்களைப் பார்த்து எல்லோரும் மகிழ்ச்சி அடைகிறார்கள். ஏதாவதொரு குரூப்பில் (பாப்தாதாவுடனான சந்திப்பு) இரட்டை வெளிநாட்டினர் இல்லையென்றால், குறையாகவே இருக்கிறது. ஆகவே தான் அவர்கள் இருப்பது நன்றாக இருக்கிறது. ஒவ்வொரு குரூப்பிலும் வந்து கொண்டே இருக்கட்டும். அழகாக இருக்கிறதல்லவா? ஒவ்வொரு குழந்தையும், இந்த தர்பாரின் அலங்காரம். ஆகவே பறந்து கொண்டே இருக்க வேண்டும். நடக்கக்கூடாது, ஓடவும் கூடாது, உயரம் தாண்டுதலும் போதாது பறக்க

வேண்டும். பறக்கக்கூடியவர்கள். பாருங்கள் இரட்டை வெளிநாட்டினர் ஸ்தூலத்திலும் கூட பறக்காமல் வந்து சேர முடியாது. பறந்து தான் வர வேண்டியதாக இருக்கிறது. ஆகவே சம்பன்னம் ஆவதற்கான இலக்கை எட்டுவதிலும் கூட பறக்கும் கலையில் இருக்க வேண்டும். நல்லது வாழ்த்துக்கள். நன்று.

இப்படி அல்ல அதாவது யார் எந்த ஒரு வர்க்கத்திலும் எழுந்திருக்கவில்லையென்றால், அவர்களுக்கு வாழ்த்துக்கள் இல்லை என்பது அல்ல. அவர்களுக்கும் ஆயிரம் மடங்கு வாழ்த்துக்கள். மேலும் யார் தூரத்தில் அமர்ந்து கேட்கின்றவர்கள், சிலர் பார்க்கின்றவர்கள், சிலர் பார்த்துக் கொண்டும், கேட்டுக் கொண்டுமிருப்பவர்கள் இருவருக்கும் நாலா பக்கங்களிலுமுள்ள குழந்தைகளுக்கும் மிக மிக அதிகமான வாழ்த்துக்கள் மேலும் நினைவு. ஏனெனில், ஒவ்வொரு சீசனிலும் ஒவ்வொரு குரூப்பிலும், எல்லோரும் கடிதம் நிறைய அனுப்புகிறார்கள். இந்தக் கடிதங்கள் பாப்தாதாவிடம் வந்து சேர்கின்றன. அப்படியே இருந்து விடுவதில்லை. வந்து சேர்ந்து விடுகின்றது. சிலர் அன்புக்கடிதங்கள் எழுதி அனுப்புகிறார்கள், சிலர் தங்களுடைய புருஷார்த்தம் பற்றி எழுதி அனுப்புகிறார்கள். சிலர் சேவை பற்றி எழுதி அனுப்புகிறார்கள். சிலர் உறுதிமொழிப் பத்திரம் எழுதி அனுப்புகிறார்கள். உறுதிமொழி கூட மிக நல்ல விதமாகக் கொடுக்கிறார்கள். ஆகவே, பாப்தாதாவிடம் எல்லாத் தரப்பினரிடமிருந்தும், எல்லா விதமான கடிதங்களும் வந்து சேர்ந்து விடுகின்றன. உங்களைப் போன்று கடிதங்களை நான் படிப்பதில்லையல்லவா? என்றாலும் அவை உள்ளத்தில் வந்து சேர்ந்து விடுகின்றது. கடிதங்களின் தபால் அலுவலகம் பாப்தாதாவினுடைய மனம். ஆதலால் அங்கு வந்து சேர்ந்து விடுகிறது.

நல்லது. பாப்தாதாவினுடைய விருப்பத்தை கோடிட்டுக் கொண்டு விட்டீர்களா? யார் செய்திருக்கிறார்களோ, அவர்கள் கை உயர்த்துங்கள். செய்து விட்டீர்கள் நன்று. பாப்தாதா 6-மாதம் வீட்டுப் பாடம் கொடுத்தார். நினைவிருக்கிறதா? டீச்சர்களுக்கு நினைவு இருக்கிறதா? இந்த ரிசல்ட் புது வருடம் மிக சீக்கிரமாக ஆரம்பித்து விடப்போகிறது. ஆதலால் ஒரு மாதத்தில் இந்த திட சங்கல்பத்தைப் பார்க்கலாம். 6-மாத ஹோம் ஒர்க் அவரவருடையது. அந்த ஒரு மாத திட சங்கல்பம் எப்படி இருக்கிறது

என்ற ரிசல்ட்டைப் பார்க்கலாம். சரிதானா? டீச்சர்ஸ் ஒரு மாதம் சரிதானா? பாண்டவர்கள் சரிதானா? நல்லது யார் முதன் முறையாக மதுபன் வந்திருக்கிறார்களோ, அவர்கள் கை உயர்த்துங்கள். மிகவும் நல்லது. பாருங்கள் பாப்தாதாவுக்கு சதா புதுக் குழந்தைகள் மீது தான் பிரியமாக இருக்கிறது ஆதலால் யாரெல்லாம் புதியவர்களாக இருக்கிறீர்களோ அவர்கள் ஒவ்வொரு நாளும் தங்களுடைய புதுமையைப் பற்றி சோதிக்க வேண்டும். இன்றைய தினம் என்னிடம் என்ன புதுமையைக் கொண்டு வந்தேன் என்று சோதித்துப் பார்க்க வேண்டும். எந்த விசேஷ குணத்தை, எந்த சக்தியை தனக்குள் விசேஷமாக தாரணை செய்தேன் என்று சோதித்துக் கொண்டே இருக்க வேண்டும். தன்னை இந்த விதமாக சோதித்துப் பரிபக்குவத்தைக் கொண்டு வந்து கொண்டேயிருந்தால், பத்திரமாக இருப்பீர்கள். அமரராக இருப்பீர்கள். ஆகவே அமரராக இருக்க வேண்டும். அமரபதவியும் அடையத் தான் வேண்டும். நல்லது.

நாலா பக்கமும் உள்ள கவலையற்ற பாதுஷாக்களுக்கு, சதா ஆன்மீக பெருமிதத்தில் இருக்கும் ஆத்மாக்களுக்கு சதா பிராப்தியடைந்த பொக்கிஷங்களை சேமிப்புக் கணக்கில் அதிகரித்துக் கொண்டேயிருக்கின்ற தீவிர புருஷாரத்தி ஆத்மாக்களுக்கு சதா ஒரே சமயத்தில் மூன்று விதமான சேவை செய்யக்கூடிய சேவாதாரி குழந்தைகளுக்கு பாப்தாதாவின் அன்பு நினைவுகள், ஆயிரமாயிரம் மடங்கு அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே.

**ஜெய்ப்பூரில் 19ம் தேதி மெகா புரோகிராம் இருக்கிறது. அந்த சமாச்சாரம் பாப்தாதாவிடம் கூறப்பட்டது:** பாப்தாதா சமாச்சாரத்தைக் கேட்டார். இராஜஸ்தானின் இராஜதானியில் மெகா புரோகிராம் நடக்கவிருக்கிறது. பூனாவிலும் மிக நன்றாக நடந்தது. மங்களூரிலும் மிக நன்றாக நடந்தது. எல்லா இடங்களிலும் நன்றாக நடந்ததாகக் கூறினார்கள். இன்னும் எது நடக்கவிருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும். நன்று. ஜெய்ப்பூர் திருவிழா இன்னும் அதிகமாக இராஜஸ்தானில் அலை ஓசையை அதிகமாகப் பரவச் செய்யும். ஏனெனில் எங்கே தலைமையகம் உள்ளதோ, அந்த தலைமையகத்தின் ஓசையும் கூட தலைமையானதாகவே இருக்க வேண்டுமல்லவா? ஆகவே, நல்லது. தங்களுக்குள் மீட்டிங் செய்து கொண்டிருக்கிறார்கள். எல்லோரும் சேர்ந்து செய்வீர்கள் அல்லவா? வெற்றி என்பது கழுத்து மாலையாக

இருக்கவே இருக்கிறது. தைரியமிருக்கிறது. விசேஷமாக மதுபனுடைய உதவியும் இருக்கிறது. பாப்தாதாவின் உதவி என்பது இருக்கவே இருக்கிறது. ஆதலால் சதா வெற்றி தான். இது நிச்சயிக்கப்பட்டது என்ற நிச்சயத்தின் பேரில் முன்னேறிக் கொண்டே இருங்கள் சரிதானா? பூனாவைச் சேர்ந்தவர்களுக்கும் மிக அதிகமான வாழ்த்துக்கள். மேலும் மங்களூரில் சின்னஞ் சிறியவர்களாயிருந்தும், அற்புதம் செய்து காட்டினார்கள். சிறியவர்கள் என்றால் அல்லாவுக்குப் பிரியமானவர்கள் என்பதை நிரூபித்து நல்ல ரிசல்ட் காண்பித்தார்கள். ஆதலால் எல்லோருக்கும் வாழ்த்துக்கள். வாழ்த்துக்கள். நன்று.

❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋❋
❋❋❋❋❋❋❋❋

## 31.12.2004 ஓம் சாந்தி அவ்யக்த பாப்தாதா மதுபன்

# .இந்த ஆண்டு ஆரம்பத்திலிருந்தே, 'பேகத்' (எல்லையற்ற) வைராக்கிய விருத்தியை எழுச்சியுறச் செய்யுங்கள். இது தான் முக்திதாமின், நுழைவு வாயிற்கதவைத் திறக்கும் சாவியாகும்!

இன்றைக்கு, புது உலகைப் படைக்கும் பாப்தாதா, தன்னுடைய குழந்தைகளோடு, புத்தாண்டை கொண்டாடுவதற்காகவும், பரமாத்ம சந்திப்பைக் கொண்டாடுவதற்காகவும், குழந்தைகளிடம் உள்ள அன்பின் காரணமாக, தன்னுடைய தூர தேசத்திலிருந்து, சாகார வதனத்தில் சந்தித்து மகிழ்வதற்காகவும், வந்திருக்கின்றார். உலகில் புத்தாண்டு வாழ்த்துக்களை ஓரிருவருக்குத்தான் கொடுக்கின்றார்கள் ஆனால், பாப்தாதா குழந்தைகளாகிய உங்களுக்கு புதுயுகம் மற்றும் புது ஆண்டு என்ற இரண்டுக்கும் வாழ்த்துக்களை அளிக்கின்றார். புத்தாண்டு ஒரு நாளைய கொண்டாட்டம் தான் ஆனால் புது யுகத்தை நீங்கள் சங்கமயுகத்தில் சதா கொண்டாடி மகிழ்ந்து கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் எல்லோரும் பரமாத்ம அன்பின் ஆகர்ஷணத்தால் ஈர்க்கப்பட்டு, இங்கு வந்து சேர்ந்து விட்டீர்கள் ஆனால் எல்லோரைக் காட்டிலும், தூர தேசத்திலிருந்து வந்திருப்பவர் யார்? டபுள் விதேஷியா? அவர்களோ, அப்படியிருந்தாலும், இந்த சாகார தேசத்தில் தானே இருக்கின்றார்கள்! ஆனால் தூரதேசியான பாப்தாதா எவ்வளவு தூரத்திலிருந்து வந்திருக்கின்றார்? எத்தனை மைல் தூரத்திலிருந்து வந்திருக்கின்றார் என்ற கணக்கு சொல்ல முடியுமா? ஆனாலும் தூரதேசியான பாப்தாதா நாலா பக்கங்களிலுமுள்ள குழந்தைகளை, அவர்கள் டைமண்ட் ஹாலில் அமர்ந்திருந்தாலும், மதுபனில் (அபுமலை மீதுள்ள பாண்டவ பவன்) அமர்ந்திருந்தாலும், ஞானசரோவரில் அமர்ந்திருந்தாலும், கேலரியில் அமர்ந்திருந்தாலும் மேலும் உள் நாட்டிலும்,

வெளிநாடுகளிலும் இருந்து கொண்டு, பாப்தாதாவுடன் சந்திப்பை கொண்டாடி மகிழ்ந்து கொண்டிருப்பவர்களாயிருந்தாலும், அனைவரும் தூரத்திலிருந்து எவ்வளவு அன்புடன் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். கேட்டுக் கொண்டும் இருக்கிறார்கள் என்பதை பாப்தாதா பார்க்கின்றார். ஆகையால் நாலா பக்கங்களிலுமுள்ள குழந்தைகளுக்கு புது யுகம் மற்றும் புத்தாண்டுக்காக ஆயிரம் மடங்கு (பதம்குணா) வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்! குழந்தைகளுக்கு, புது யுகம் கண்களுக்கு எதிரிலேயே இருக்கிறதல்லவா? அவ்வளவு தான். இன்றைக்கு சங்கம யுகத்தில் இருக்கிறீர்கள். நாளை புது யுகத்தில் இராஜ்ய அதிகாரியாகி, இராஜ்யம் செய்வீர்கள். இவ்வளவு சமீபமாக இருக்கும் அனுபவர் ஆகிக் கொண்டிருக்கிறதா? இன்று, நாளையைப் பற்றிய விஷயம் தான். நேற்று இருந்தது, நாளை மீண்டும் அப்படி ஆகப்போகிறது. தங்களுடைய நவயுகத்தின், கோல்டன் யுகத்தின் கோல்டன் டிரஸ் எதிரில் காணப்படுகிறதா? எவ்வளவு அழகானது! தெளிவாகத் தெரிகிறதல்லவா? இன்றைக்கு சாதாரண ஆடையில் இருக்கிறீர்கள். நாளை நவ யுகத்தின் அழகான ஆடையில் பிரகாசமாக காணப்படுவீர்கள் புத்தாண்டு தினத்திலோ, ஒரு நாளைக்காக, ஒன்றிரண்டு பேருக்கு வெகுமதி அளிக்கின்றார்கள் ஆனால் நவயுகத்தைப் படைக்கும் பாப்தாதா உங்கள் அனைவருக்கும் பல ஜன்மங்கள் உங்கள் கூடவே. இருக்கக்கூடிய கோல்டன் உலகத்தை காணிக்கையாகக் கொடுக்கின்றார். இது அழியக்கூடிய பொக்கிஷம் அல்ல. அழியாத வெகுமதியை தந்தை, குழந்தைகளுக்கு கொடுத்து விட்டார் நினைவிருக்கிறதா? மறந்து போய் விடவில்லை தானே? ஒரு நொடிப்பொழுதில் வந்து, போக முடியும். உடனுக்குடன் சங்கமயுகத்தில், உடனுக்குடன் உங்களுடைய கோல்டன் உலகத்தைச் சென்றடைந்து விட முடிகிறதா? அல்லது தாமதமாகிறதா? உங்களுடைய இராஜ்யம் நினைவிற்கு வந்து விடுகிறதல்லவா?

இன்றைய தினத்தை, விடை கொடுத்தனுப்பக்கூடிய தினம் (31.12.2004) என்று சொல்லப்படுகிறது. மேலும் 12-மணிக்குப் பிறகு வாழ்த்துக்களை அளிக்கின்ற தினம் என்று சொல்லப்படுகிறது. அப்படியானால் விடை கொடுக்கும் தினத்தில், ஆண்டுக்கு, விடை கொடுப்பதோடு கூடவே நீங்கள் எல்லோரும் ஆண்டு மட்டுமல்லாது, வேறு எதற்கு விடை கொடுத்து விட்டீர்கள்? சோதித்துப் பார்த்தீர்களா? சதா காலத்திற்குமாக

விடை கொடுத்தீர்களா? அல்லது கொஞ்ச நாட்களுக்காக மட்டும் விடை கொடுத்தீர்களா? பாப்தாதா முன்பே கூறினார் அல்லவா? காலத்தினுடைய வேகம் அதி தீவிரமாகச் சென்று கொண்டிருக்கிறது. ஆகவே தங்களுடைய புருஷாரத்தத்தின் வேகம் அவ்வளவு தீவிரமாக இருக்கிறதா என்று, முழு வருஷத்தினுடைய ரிசல்ட்டை சோதித்துப் பார்த்தீர்களா? அல்லது சில சமயம் இப்படி, சில சமயம் அப்படி என்று இருந்ததா? இன்றைய உலகத்தின் நிலைமையைப் பார்த்து, இப்போது உங்களிடம் விசேஷமாக இரண்டு சொரூபத்தை எழுச்சியுறச் செய்யுங்கள். ஒன்று எல்லோருக்காகவும் கருணையுள்ளம் உடையவராகவும், கல்யாணகாரியாகவும் இருக்கும் சொரூபம். இரண்டாவது ஒவ்வொரு ஆத்மாவுக்காகவும், சதா வள்ளலின் குழந்தையான மாஸ்டர் வள்ளல். உலகத்திலுள்ள ஆத்மாக்கள் முற்றிலும் சக்தி இழந்தவர்களாக, துக்கமடைந்தவராக, அசாந்தியில் கூக்குரல் இடுகிறார்கள். தந்தையின் முன்பாகவும், பூஜ்ய ஆத்மாக்களாகிய உங்கள் முன்பாகவும், கொஞ்ச நேரத்திற்காவது, சுகம் கொடுங்கள், சாந்தி கொடுங்கள், சந்தோஷத்தைக் கொடுங்கள், தைரியம் கொடுங்கள் என்று கெஞ்சிக் கேட்கிறார்கள். தந்தைக்கு குழந்தைகளினுடைய துக்கத்தை, கவலையைப் பார்க்க முடிவதில்லை. கேட்க முடிவதில்லை. ஆகவே பூஜ்ய ஆத்மாக்களாகிய உங்கள் எல்லோருக்கும் இரக்கம் வரவில்லையா? கெஞ்சுகிறார்கள் கொடுங்கள்! கொடுங்கள்! கொடுங்கள்! ஆகையால் வள்ளலின் குழந்தைகள் கொஞ்சம் அஞ்சலியாவது (சுப சங்கல்பம் வழங்குதல்) கொடுத்து விடுங்கள். தந்தையும் கூட குழந்தைகளாகிய உங்களைத் துணைவராக்கி, மாஸ்டர் வள்ளலாக்கி, தனது வலது கரமாக்கி, இந்த சமிக்ஞையைக் கொடுக்கின்றார் -இவ்வளவு உலகிலுள்ள ஆத்மாக்கள் அனைவருக்கும் முக்தி கொடுக்க வேண்டும். முக்தி தாமுக்குச் செல்ல வேண்டும் ஆகையால், ஹே! வள்ளலின் குழந்தைகளே! உங்களுடைய சிரேஷ்ட சங்கல்பத்தின் மூலமாக, மனோ சக்தி மூலமாக, வாய் மொழி மூலமாக, சம்மந்தம் தொடர்பு மூலமாக, சுபபாவனை, சுப அபிலாஷை மூலமாக, வாயுமண்டல (வைப்ரேஷன்) அதிர்வலை மூலமாக வேறு ஏதாவது யுக்தி மூலமாக முக்தி அடையும் படி செய்யுங்கள் முக்தி கொடுங்கள் என்று கூக்குரலிடுகிறார்கள். ஆகையால் பாப்தாதா தன்னுடைய வலது கரங்களுக்கு (ரைட் ஹேண்ட்) கூறுகின்றார். கருணை காட்டுங்கள்.

இன்று வரையிலும் கணக்குப் பாருங்கள். மெகா புரோகிராம் நடத்தியிருக்கிறீர்கள் மாநாடுகள் நடத்தியிருக்கிறீர்கள் பாரதத்தில் மற்றும் வெளிநாடுகளில் சென்டர்ஸ் திறந்திருக்கிறீர்கள் ஆனால் உலகம் முழுவதிலுமுள்ள மொத்த ஜனத் தொகையின் அடிப்படையில் எத்தனை சதவிகித ஆத்மாக்களுக்கு முக்திக்கான வழியைக் காண்பித்திருக்கிறீர்கள்? கணக்குப் பாருங்கள். நீங்கள் பாரதத்திற்கு மட்டும் கல்யாணகாரியா? அல்லது வெளிநாட்டில் 5-கண்டங்களில் எங்கெல்லாம் சேவா கேந்திரங்கள் திறந்திருக்கிறீர்களோ, இவற்றின் கல்யாணகாரியா? அல்லது விஷ்வ கல்யாணகாரியா? உலக மங்கள காரியத்தில், ஒவ்வொரு குழந்தையும் தந்தையின் கரங்கள். வலது கரங்கள் தானே! யாருக்காவது, ஏதாவது கொடுக்க வேண்டுமென்றால், கைகளாலேயே கொடுக்க வேண்டும் அல்லவா? ஆகையால், பாப்தாதாவுக்கு நீங்கள் கைகள் கைகள் தானே? ஆதலால் பாப்தாதா வலது கைகளாக இருப்பவர்களிடம் கேட்கின்றார். எத்தனை சதவிகிதம் பேருக்கு மங்களம் செய்திருக்கிறீர்கள்? எத்தனை சதவிகிதம் பேருக்கு செய்திருக்கிறீர்கள்? சொல்லுங்கள். கணக்குப் பாருங்கள். பாண்டவர்கள் கணக்குப் பார்ப்பதில் கெட்டிக்காரர்கள் அல்லவா? ஆகையால், பாப்தாதா கூறுகின்றார். இப்போது சுய புருஷாரத்தம் மற்றும் சேவையின் பல வித விதிகள் மூலமாக புருஷாரத்தம் தீவிரமாகச் செய்யுங்கள். சுய ஸ்திதியில் கூட நான்கு விஷயங்களை சோதித்துப் பாருங்கள் -இதற்குத்தான் தீவிர புருஷாரத்தம் என்று சொல்லப்படுகிறது.

ஒரு விஷயத்தை முதலில் சோதியுங்கள் நிமித்தபாவனை உள்ளதா? ஏதாவது ராயல் ரூபத்தில் நான் என்பது இருக்கிறதா? என்னுடையது என்பது இல்லை தானே? சாதாரண ஜனங்களுக்கு நான், எனது என்பது சாதாரணமானதாக, முக்கியத்துவம் இல்லாததாக இருக்கிறது ஆனால் பிராமண வாழ்க்கையில், என்னுடையது மற்றும் நான் என்பது சூட்சுமமாகவும், ராயலாகவும் இருக்கிறது இதற்கான பாஷை என்னவென்று தெரியுமா? இதெல்லாம் இப்படித்தான் இருக்கிறது. இப்படி நடந்து கொண்டு தான் இருக்கிறது. இப்படியெல்லாம் நடக்கும் நடந்து கொண்டு தான் இருக்கிறது. பார்த்துக் கொண்டு தான் இருக்கிறோம். ஆகவே, ஒன்று நிமித்த பாவனை. ஒவ்வொரு

விஷயத்திலும் நிமித்த பாவனை வேண்டும். சேவையிலானாலும், ஸ்திதியிலானாலும், சம்மந்தம், தொடர்பில் ஆனாலும், முகத்திலும், நடத்தையிலும் நிமித்தம் என்ற பாவனை இருக்க வேண்டும் மேலும் இதனுடைய விசேஷம் வேறாக இருக்கிறது. அதாவது நிமித்த பாவம், நிர்மான் (நான் ஒரு கருவி தான் மற்றும் பணிவுத் தன்மை). மூன்றாவது நிர்மாண் அதாவது படைத்தல் என்பது புதிய சம்ஸ்காரத்தைப் படைப்பது. புதிய உலகைப் படைப்பது என்பதைக் குறிக்கும். நான்காவது நிர்வாண். இது முக்தியைக் குறிக்கும். எப்போது வேண்டுமோ, அப்போது சாந்திதாம் என்றும் நிர்வாண தாம் என்றும் முக்தி தாம் என்றும் அழைக்கப்படுகின்ற இடத்திற்குச் சென்றடைதல். நிர்வாண ஸ்திதியில் நிலைத்து விட வேண்டும். ஏனென்றால், எப்போது சுயம் (தான்) நிர்வாண் ஸ்திதியில் இருப்பீர்களோ, அப்போது தான் மற்றவர்களையும் நிர்வாண் தாமத்தில் சேர்ப்பிக்க முடியும். நிர்வாண்தாமத்திற்கு அனுப்பி வைக்க முடியும். இப்போது எல்லோரும் முக்தியை விரும்புகிறார்கள். விடுவியுங்கள், விடுவியுங்கள் என்று கூக்குரல் இடுகிறார்கள். ஆதலால் இந்த நான்கு விஷயங்களும் நல்ல சதவிகிதத்தில் நடைமுறை வாழ்க்கை யில் இருக்க வேண்டும். அதாவது தீவிர புருஷாரத்தி. அப்போது தான் பாப்தாதா கூறுவார் வாஹ்! (ஆஹா) வாஹ்! குழந்தை வாஹ்! நீங்களும் கூறுவீர்கள் வாஹ்! பாபா வாஹ்! வாஹ்!! டிராமா வாஹ்!! வாஹ்! புருஷாரத்தம் வாஹ்!! ஆனால் இப்போது என்ன நடக்கிறது என்று தெரியுமா? தெரியுமா? சில சமயம் வாஹ்! என்று கூறுகிறீர்கள். சில சமயம் ஒய் (Why-ஏன்) என்று கூறுகிறீர்கள். வாஹ்! என்பதற்குப் பதிலாக ஓய்? பிறகு ஒய்? என்பது ஐயோ என்றாகி விடுகிறது. ஆதலால் ஒய்? அல்ல வாஹ்! உங்களுக்கும் கூட எது நன்றாக இருக்கிறது? வாஹ் நன்றாக இருக்கிறதா? அல்லது ஒய்? நன்றாக இருக்கிறதா? எது நன்றாக இருக்கிறது? வாஹ்! எப்போதாவது ஒய்? என்று கூறுகிறீர்களா? தவறாக வந்து விடுகிறது.

டபுள் ஃபாரினர்ஸ் ஒய்-ஒய் என்று கூறுகிறீர்களா? சிற்சில சமயங்களில் அப்படிக் கூறி விடுகிறீர்கள். யார் ஒருபோதும் ஒய் என்று கூறுவதில்லையோ அவர்கள் கை உயர்த்துங்கள். டபுள் ஃபாரினர்ஸ்! நன்று. பாரதவாசிகள் யார் வாஹ், வாஹ் என்று சொல்வதற்குப் பதிலாக ஏன்? என்ன? என்று சொல்கிறார்களோ அவர்கள் கை உயர்த்துங்கள். ஏன்? என்ன என்று கூறுகிறீர்களா? உங்களுக்கு அனுமதி கொடுத்தது

யார்? உங்களுக்கு யார் அனுமதி கொடுத்தார்கள்? சம்ஸ்காரம் கொடுத்ததா? பழைய சம்ஸ்காரம் உங்களுக்கு ஒய் என்று கேட்பதற்கு அனுமதி கொடுத்திருக்கிறது. இப்போது தந்தை கூறுகின்றார் வாஹ்! வாஹ்! என்று கூறுங்கள். ஒய், ஒய் என்று கூறாதீர்கள். ஆகவே இந்த புத்தாண்டில் என்ன செய்யப் போகிறீர்கள்? வாஹ்! வாஹ்! என்று சொல்வீர்களா? அல்லது சிற்சில சமயம் ஒய் என்று கூறுவதற்கு அனுமதி கொடுத்து விடலாமா? ஒய் என்று கூறுவது நன்றாக இல்லை. வாஹ்! வாஹ்! எவ்வளவு நன்றாக இருக்கிறது. ஆம் என்று கூறுங்கள். வாஹ்! வாஹ்! வாஹ்!! நல்லது. தூர தேசத்தில் உள்ளவர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். பாரதத்திலும் கூட வெளிநாடுகளிலும் கூட குழந்தைகளிடம் கேட்கின்றேன். வாஹ்! வாஹ்! (wah) என்று சொல்கிறீர்களா? அல்லது ஒய், ஒய் (why) என்று சொல்கிறீர்களா? இப்போது விடை கொடுக்கும் தினம் அல்லவா? இந்த ஆண்டில் விடை கொடுப்பதற்கான கடைசி நாள் ஆகவே எல்லோரும் சங்கல்பம் செய்யுங்கள். ஒய் என்று சொல்ல மாட்டோம். நினைக்கவும் மாட்டோம். கேள்விக்குறி அல்ல, ஆச்சரியக்குறியும் அல்ல. முற்றுப்புள்ளி கேள்விக்குறி போடுங்கள். எத்தனை கோணலாக இருக்கிறது! அதே சமயம் புள்ளி எத்தனை எளிதாக இருக்கிறது. போதும். கண்களில் தந்தை பிந்துவை அடக்கிக் கொள்ளுங்கள். எப்படி கண்களில் பார்ப்பதற்கான புள்ளி அடங்கியிருக்கிறதல்லவா? அதே போலவே சதா கண்களில் பிந்து பாபாவை அடக்கி விடுங்கள். அடக்கத் தெரியுமா? வருமா? அல்லது பொருத்த முடியவில்லையா? கீழும், மேலும் ஆகி விடுகிறதா? அப்படியானால் என்ன செய்வீர்கள்? விடை யாருக்குக் கொடுப்பீர்கள்? ஒய்க்கு கொடுப்பீர்களா? ஒருபோதும் ஆச்சரியத்தின் அடையாளம் கூட வரக்கூடாது. இது எப்படி? இப்படிக் கூட நடக்குமா என்ன? இப்படி நடக்கக் கூடாது. ஏன் இப்படி நடக்கிறது? கேள்விக்குறி அல்ல. ஆச்சரியக்குறியும் அல்ல. தந்தை மற்றும் நான், போதும். அநேக குழந்தைகள், இதெல்லாம் நடக்கிறதல்லவா என்று கூறுகின்றார்கள். பாப்தாதாவுக்கு மிகவும் இனிமையான விஷயங்களை ஆன்மீக சம்பாஷணையின்போது கூறுகின்றார்கள் நேரில் சொல்ல முடியாதல்லவா? ஆதலால் ரூஹ்-ரிஹானில் (அமிர்தவேளை ஆன்மீக சம்பாஷனை) எல்லாவற்றையும் கூறி விடுகிறார்கள். சரி ஏதாவது நடக்கிறது, ஆனால் நீங்கள் நடக்க வேண்டாம். நீங்கள் பறக்க வேண்டும். அப்படி இருக்கும்போது நடக்கும் விஷயங்களை ஏன்

பார்க்கிறீர்கள்? பறந்து விடுங்கள் பறக்கச் செய்யுங்கள். சுப பாவனை, சுப காம்னா இடையில் ஒய்வ வராத அளவுக்கு சக்திசாலி ஆகி விடுங்கள். சுபபாவனை, சுப காம்னாவைத்தவிர அசுப பாவனையாளர்களையும் கூட சுப பாவனையில் மாற்றக்கூடிய அளவுக்கு, அவ்வளவு சக்திசாலியாக இருக்க வேண்டும். நல்லது. மாற்ற முடியாதா? அடுத்தது. ஒருவேளை உங்களுடைய சுபபாவனை, சுப காம்னா, அவிநாஷியாக இருக்குமானால், அவ்வப்பொழுதல்ல. அவிநாஷியாக இருந்தால், உங்கள் மீது அசுப பாவனையின் பிரபாவம் உண்டாகாது ஆனால் கேள்விகளில் வந்து விடுகிறீர்கள். இது ஏன் இப்படி நடக்கிறது? இப்படி எதுவரை நடக்கும்? எப்படி நடக்கும்? இதன் காரணமாக சுபபாவனையின் சக்தி குறைந்து விடுகிறது இல்லையேல், சுபபாவனை, சுப காம்னா, என்ற சுப சங்கல்ப சக்தியில், அதிக சக்தி இருக்கிறது. பாருங்கள். நீங்கள் எல்லோரும் பாப்தாதாவிடம் வந்திருக்கிறீர்கள் முதல் நாள் என்ன நடந்தது என்பதை நினைவில் கொண்டு வாருங்கள் பாப்தாதா என்ன செய்தார்? பதீதமானவர் வந்தாலும், பாவியாயிருப்பவர் வந்தாலும், சாதாரணமானவர் வந்தாலும், விதவிதமான விருத்தியுள்ளவர் (உள்ளுணர்வு) வந்தாலும், விதவிதமான பாவனையுள்ளவர் வந்தாலும், பாப்தாதா என்ன செய்தார்? சுபபாவனை வைத்தார் அல்லவா? நீங்கள் என்னுடையவர், மாஸ்டர் சர்வ சக்திவான், மன சிம்மாசனத்தின் அதிகாரி என்ற சுபபாவனை வைத்தார் அல்லவா? சுப காம்னா வைத்தார் அல்லவா? இதனாலல்லவோ தந்தையினுடையவர் ஆனார்கள்! நீ பாவி, ஏன் வந்தாய்? என்று தந்தை சொன்னாரா? சுபபாவனை வைத்தார். என்னுடைய குழந்தை மாஸ்டர் சர்வ சக்திவான் குழந்தை எப்போது தந்தை எல்லோர் மீதும் சுபபாவனை வைத்தாரோ, சுப காம்னா வைத்தாரோ உங்களுடைய மனம் என்ன சொன்னது? மேரா பாபா! தந்தை சொன்னார் என்னுடைய குழந்தை! இந்த மாதிரியாக சுப பாவனை, சுப காம்னா வைத்தால் என்ன தென்படும்? என்னுடைய முந்தைய கல்பத்தின் இனிய சகோதரர், எனது இனிய சகோதரி என்று பரிவர்த்தனை ஆகி விடும்.

ஆதலால் இந்த ஆண்டு கொஞ்சம் எப்படியாவது செய்து காட்ட வேண்டும். சும்மா கை தூக்கக் கூடாது. கை உயர்த்துவது ரொம்ப சுலபம். மனம் என்னும் கை உயர வேண்டும். ஏன்? நிறைய காரியம் இன்னும் பாக்கி இருக்கிறது. பாப்தாதாவின் பார்வை உலக

ஆத்மாக்களின் மீது உள்ளது. மிகவும் இரக்கமாக இருக்கிறது. இப்போது பிரகிருதியும் (இயற்கை) கூட துன்பப்படுகிறது, என்ன செய்வது? ஆத்மாக்களை துன்பப்படுத்துகிறது. மேலும் தந்தை குழந்தைகளைப் பார்த்து இரக்கப்பட வேண்டியதாகி விடுகிறது. உங்கள் எல்லோருக்கும் இரக்கம் வரவில்லையா? செய்தி கேட்டு சும்மா இருந்து விடுகிறீர்கள். இத்தனை ஆத்மாக்கள் போய்விட்டனர் என்று மட்டும் நினைக்கிறீர்கள். அந்த ஆத்மாக்களுக்கு தந்தையின் அறிமுகம் கிடைக்காமல் வஞ்சிக்கப்பட்டு விட்டார்கள். இனி மேலாவது வள்ளல் ஆகுங்கள். கருணை காட்டுங்கள். இது எப்போது நடக்கும்? எப்போது இந்த ஆண்டின் ஆரம்ப முதலே தன்னில் எல்லையற்ற வைராக்கிய விருத்தியை எழுச்சியுறச் செய்வீரகளோ அப்போது இரக்கம் வரும். பேகத் வைராக்கிய விருத்தி (உள்ளுணர்வில் எல்லையற்ற வைராக்கியம் வரவேண்டும்) இந்த தேகம், தேக அபிமானத்தினுடைய நினைவு, இதுவும் எல்லையற்ற வைராக்கியத்தில் குறை இருப்பதால் தான். சின்னஞ்சிறு உலகாயத விஷயங்கள் ஸ்திதியை தடுமாறச் செய்கிறது. காரணம் என்ன? பேகத் வைராக்கிய விருத்தி குறைவாக இருக்கிறது. கவர்ச்சி இருக்கிறது. வைராக்கியம் இல்லை. ஆகர்ஷணம், பற்று உள்ளது எப்போது முற்றிலும் பேகத் வைராகி ஆகி விடுவீர்களோ, விருத்தியிலும் (உள்ளுணர்வு) வைராகி, திருஷ்டியிலும் பேகத் வைராகி, சம்மந்தம், தொடர்பில் சேவையில் எல்லாவற்றிலும் பேகத் வைராகி அப்போது தான் முக்தி தாமத்தின் வாயில் கதவு திறக்கும். இப்போதோ, எந்த ஆத்மாக்கள் வருகின்றார்களோ, அவர்கள் மீண்டும் ஜன்மம் எடுப்பார்கள், பிறகு துன்பப்படுவார்கள் இப்போது முக்தி தாமத்தின் வாயில் கதவு திறப்பதற்கு நீங்கள் தான் நிமித்தமாயிருக்கிறீர்கள் அல்லவா? பிரம்மாபாபாவின் துணைவர்கள் தானே! ஆகையால், கதவைத் திறக்கும் சாவி, பேகத் வைராக்கிய விருத்தி தான். இன்னும் கதவில் சாவி போடவில்லை. சாவி தயாரிக்கவே இல்லை. பிரம்மாபாபாவும் எதிர்பார்த்து காத்திருக்கின்றார். அட்வான்ஸ் பார்ட்டியும் கூட எதிர்பார்த்து காத்துக் கொண்டிருக்கிறார்கள். பிரகிருதியும் கூட எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. மிகவும் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறது. இப்போது சொல்லுங்கள், ஹே, மாஸ்டர் சர்வ சக்திவான்களே! சொல்லுங்கள் என்ன செய்ய வேண்டும்?

இந்த ஆண்டு ஏதாவது புதுமை செய்து காட்டுவீர்கள் அல்லவா? புத்தாண்டு என்று சொன்னால் புதுமையும் செய்ய வேண்டுமல்லவா? இப்போது பேகத் வைராக்கியத்திற்கும், முக்திதாம் செல்வதற்கும் சாவி தயார் செய்யுங்கள். நீங்கள் எல்லோரும் கூட முதலில் முக்தி தாமுக்குத்தான் போக வேண்டுமல்லவா? பிரம்மாபாபாவிடம் வாக்குக் கொடுத்திருக்கிறீர்கள். கூடவே செல்வோம். கூடவே வருவோம், கூடவே இராஜ்யம் செய்வோம். கூடவே பக்தியும் செய்வோம். ஆகவே இப்போது தயாராகுங்கள். இந்த ஆண்டில் செய்து விடுவீர்களா? இன்னொரு ஆண்டும் வேண்டுமா? இந்த ஆண்டில் மிக கவனத்தோடும், அடிக்கடியும் செய்வோம் என்று நினைப்பவர்கள் கை உயர்த்துங்கள். செய்வீர்களா? அப்படியானால் அட்வான்ஸ் பார்ட்டி உங்களுக்கு மிகுந்த வாழ்த்துக்களை வழங்குவார்கள். அவர்களும் கூட களைத்துப் போய்விட்டார்கள். நல்லது. டீச்சர்ஸ் என்ன சொல்கிறீர்கள்? முதலாவது வரிசையில் உள்ளவர்கள் என்ன சொல்கிறீர்கள்? முதன் முதலில் முதல் வரிசையில் இருக்கும் பாண்டவர்கள் மற்றும் முதல் வரிசையில் உள்ள சக்திகள் யார் செய்வார்களோ அவர்கள் கை உயர்த்துங்கள். பாதி அல்ல. பாதி உயரம் தூக்கினால், பாதி தான் செய்வீர்கள் என்றாகி விடும். கையை நீளமாக உயர்த்துங்கள். நல்லது வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள். டபுள் விதேஷிகளையும் கூட உயர்த்தும்படி செய்ய வேண்டும். டபுள் விதேஷி! ஒருவருக்கொருவர் பாருங்கள், யார் கை உயர்த்தவில்லை! தூரத்திலிருந்து பார்க்கும் போது தெரியவில்லையல்லவா? நல்லது. இந்த சிந்தி குரூப்பும் கூட கை உயர்த்துகிறார்கள். விந்தையாக இருக்கிறது. (கமால்). நீங்களும் கூட செய்வீர்களா? சிந்தி குரூப் செய்வீர்களா? அப்படியானால் இரு மடங்கு வாழ்த்துக்கள். மிக்க நன்று ஒருவருக்கொருவர் உதவி செய்து சுப பாவனையோடு சைகை செய்கிறார்கள். கூடவே கை கோர்த்து செய்யத்தான் வேண்டும். நல்லது.

(சபையில் யாரோ குரல் எழுப்பினார்கள்) எல்லோரும் அமருங்கள். நத்திங் நியூ. நல்லது. மதுபன் வாசிகள் கை உயர்த்துங்கள். நல்லது. மேலேயும் கூட (பாண்டவ பவன்) யார் கேட்டுக் கொண்டிருக்கிறார்களோ, அவர்கள் கை உயர்த்துகிறார்கள். இந்த தேசத்திலும், வெளி நாட்டிலும் உள்ளவர்கள் கை உயர்த்துகிறார்கள். நல்லது. கூட்டாக இருப்பதில் சக்தி இருக்கிறது. ஒருவருக்கொருவர்

சுபபாவனைக்கான சைகை, பேசக்கூடாது. பேசினால் சண்டை வந்து விடும். சுபபாவனையோடு சைகை செய்யுங்கள். சுபபாவனைக்கான சைகை கொடுக்கத் தெரியுமா? சுபபாவனைக்கான சைகை கொடுக்க முடியுமா?

நல்லது. பாப்தாதா மகிழ்ச்சியடைகின்றார். இந்த டைமண்ட் ஹாலை பாப்தாதா தான் செய்வித்தார். இதை பயன்படுத்திக் கொண்டிருக்கிறீர்கள். ஆதலால் வெற்றியடைவீராக! (ஸபல்தா பவ) சங்கல்பமும் கூட தோல்வியடையக்கூடாது. ஏனெனில் உங்களுடைய ஒரு சுப சங்கல்பம், உலகத்திற்கு மங்களம் செய்விக்கக்கூடியதாகும். அவ்வளவு விலை மதிக்க முடியாதது. ஒரு வினாடி நேரம் உலக மங்களகாரியத்திற்கு ஆதாரமாயிருக்கிறது. ஆகையால் பயன்படுத்துங்கள். வெற்றி மூர்த்தி ஆகுங்கள் (ஸ்பல்தா மூரத்), ஆதலால் சோதியுங்கள் எந்த ஒரு வினாடி கடந்து விட்டதோ, எந்த ஒரு சங்கல்பம் செய்தீர்களோ, பயனுள்ளதாக இருந்ததா? இன்றைக்கு எல்லோரும் மெஜாரிட்டி தரை விரிப்பில் அமர்ந்திருக்கிறீர்கள். இவர்கள் பட்ராணிகள். அவர்கள் கோச் ராணிகள் கோச் ரானே, நாற்காலி ரானே. நாற்காலி ராணிகள் மற்றும் பட்ராணி. ஆனந்தமாயிருக்கிறதல்லவா! களைத்துப் போய் விடவில்லையல்லவா? ஏனெனில் இன்றைக்கு அதிக நேரம் இருக்கிறதல்லவா! மேலும் 3-மணி முதல் இடம் பிடிக்கிறார்கள். பாப்தாதா எல்லாவற்றையும் பார்க்கின்றார். யார் 3-4 மணிக்கு ஹாலில் நுழைந்தார்களோ அவர்கள் கை உயர்த்துங்கள் டிவியில் பாருங்கள் எத்தனை பேர்? எல்லோருமே கை உயர்த்துகிறார்கள். சிலர் 3-மணி, சிலர் 4-மணிக்கு வந்திருக்கிறார்கள் 3-மணிக்கு வந்தவர்களுக்கு திரிலோக நாத் என்ற வரதானம் உள்ளது. பக்தியில் நிறைய செய்திருக்கிறார்கள் அல்லவா? ஆதலால் ஆண்டில் ஒரு முறை இங்கேயும் கூட வந்து விடுகிறார்கள். உங்களுடைய இராஜ்யத்தில் இதெல்லாம் இருக்காது ஆனால் அங்கே தந்தை வர மாட்டார். நீங்களும் வர மாட்டீர்கள் எங்கே அமருவீர்கள்! இப்போது ஆனந்தப்படுங்கள் தரைவிரிப்பில் நீங்கள் அமர்ந்திருக்கவில்லை. பாப்தாதா உங்களை மன சிம்மாசனத்தில் பார்க்கின்றார் ஆனால் காட்சி மிக நன்றாக இருக்கிறது. எல்லோரும் பிந்துவாகி அமர்ந்திருக்கிறார்கள் குளிர் அதிகமாக இருக்கிறதா? குளிர் ஓடி விட்டதல்லவா! நல்லது.

இப்போதே ஒரு வினாடியில் பிந்துவாகி, பிந்து தந்தையை நினைவு செய்யுங்கள். மேலும் வேறு விஷயமிருந்தாலும் அதற்கு முற்றுப்புள்ளி வைத்து விடுங்கள். புள்ளி வைக்க முடியுமா? அவ்வளவு தான். ஒரு நொடியில் நான் பாபாவினுடையவன். பாபா என்னுடையவர். நன்று.

சேவை வாய்ப்பு மகாராஷ்டிராவுக்கு: நல்லது. கோல்டன் சான்ஸ் கிடைக்கிறது. ஒவ்வொரு ஜோனுக்கும் (மண்டலம்) கோல்டன் சான்ஸ் கிடைக்கிறது. இந்த 15-20 தினங்கள் உண்மையான பிராமணர்களுக்கு சேவை செய்து தங்களுடைய புண்ணியக் கணக்கில் நிரப்பி விடுகிறீர்கள். ஏனெனில் நல்ல சேவை செய்தால் எல்லோருடைய உள்ளத்திலிருந்தும் என்ன வருகிறது? மிக நன்றாக, மிக நன்றாக மிகவும் நன்றாகச் செய்கிறார்கள் என்பது, இந்த ஆசிகள் புண்ணியக் கணக்கில் சேமிப்பாகி விடுகிறது. இதில் யாரும் புண்ணியக் கணக்கை சேமிப்பது மிகவும் சகஜமானது. யோக பலத்தின் காரணமாக நடக்கிறது ஆனால் இந்தக் காரியம் செய்து கொண்டிருக்கும்போது, புண்ணியக் கணக்கு சேமிப்பாக வேண்டுமானால், கர்ம யோகி ஸ்திதியில் யக்ஞ சேவை செய்தால் உங்கள் கணக்கு முழுமையாகவே நிரம்பிவிடும். இது சகஜ விதி மகாராஷ்டிரம் இருக்கிறது. மகாராஷ்டிரத்தின் எண்ணிக்கை மகாவாக (மிக அதிகம்) இருக்கிறது. சென்டர்களும் நிறைய இருக்கின்றன. கீதாபாடசாலைகளோ எண்ணிக்கையில் அடங்காது நல்லது. பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கின்றார். யாரெல்லாம் தன்னுடைய சுய விருப்பப்படி தன்னை சேவையில் வாழ்க்கையை அர்ப்பணித்து விடுகிறார்களோ அந்த அர்ப்பணமாகிய குழந்தைகளுக்கு, சரீர நிர்வாகத்திற்கான சாதனம், நிச்சயமாக சுலபமாகவே கிடைத்து விடுகிறது. சாப்பிடுங்கள், அருந்துங்கள், பிரபுவின் புகழ் பாடுங்கள், சேவை செய்கிறார்கள். உரையாற்றுகிறார்கள் கோர்ஸ் கொடுக்கிறார்கள். இதெல்லாம் என்ன? பிரபுவின் புகழ் தானே பாடுகிறார்கள் ஆகவே பருப்பு, ரொட்டி (உணவு) கொடுப்பதற்கு பாப்தாதா கட்டுப்பட்டிருக்கிறார். 36-வித உணவு கொடுக்க மாட்டார். அது சிற்சில சமயம் கிடைக்கும்படி செய்வார். ஆகவே மிகவும் நல்லது. டிரஸ்டியாக இருந்து கொண்டும் சேவை செய்கிறார்கள். ஒருவேளை டிரஸ்டி என்றால், பாப்தாதா. ஒருபோதும் பட்டினி போட மாட்டார். பருப்பு, ரொட்டி அவசியம் கொடுப்பார். ஏனெனில் பாப்தாதா பசியோடு

இருக்கிறாரா? பாப்தாதா பசியோடு இருப்பதில்லை. எல்லோரும் 'போக்' படைக்கிறார்கள். நீங்கள் எல்லோரும் 'போக்' படைக்கிறீர்கள் அல்லவா? இதில் கெட்டிக்காரத்தனம் காட்டுவதில்லையல்லவா? ஒரு கரண்டி ஸ்வீகாரம் செய்விப்பது, மற்றதெல்லாம் மறந்து விடுவது அப்படி அல்ல. ஒருவேளை, டிரஸ்டியாக இருந்தாலும் கூட பாப்தாதா கட்டுப்பட்டவராக இருக்கின்றார். அப்படியானால் மகாராஷ்டிரா எவ்வளவு மகா வாக (பெரிதாக) இருக்கிறதோ அவ்வளவு வாரிசுகளும் மகான்களாக இருக்கிறார்களா? இருக்கிறார்கள் அல்லவா? இந்த ஆண்டு அந்த லிஸ்ட்'படி கொண்டாடலாம் அந்த வாரிசுகளுடைய செரிமனி செய்யலாம். டீச்சர்களுக்குத் தெரியுமல்லவா? பார்க்கலாம் இதில் நம்பர்-1 எந்த ஜோன் என்று பார்க்கலாம். மகாராஷ்டிராவாக இருக்கலாம் அல்லவா? மிகவும் நல்லது. பக்கா வாரிஸ் யார்? எத்தனை பேர்? மேலும் இந்த ஆண்டு யார், மெகா புரோகிராம் செய்தார்களோ அவர்கள் நன்றாகவே செய்தார்கள். எத்தனை புரோகிராம் நடந்திருக்கிறது. எங்கெல்லாம் நடந்திருக்கிறது? (15-16) இடங்களில் நடந்திருக்கிறது. பாப்தாதா பார்த்தார். சிற்சில புரோகிராம்கள் ஜோன் முழுவதும் சேர்ந்து செய்திருக்கிறார்கள் ஆனால் சிற்சில புரோகிராம்கள் ஒரு சென்டர் அல்லது அக்கம் பக்கமுள்ள அவர்களுடைய தொடர்பில் உள்ளவர்கள் செய்திருக்கிறார்கள். அவைகள் எவை? (மங்களூர், சம்பல்பூர், பிளாஸ்பூர், பூனா மெஹசானா) அப்படியானால் விந்தையல்லவா? இவர்கள் வந்திருக்கிறார்களா? யார் வந்திருக்கிறார்கள்? பூனாவிலிருந்து வந்திருப்பவர்கள் எழுந்திருங்கள். பூனா டீச்சர்ஸ் எழுந்திருங்கள். பூனாவும் விந்தையாக செய்திருக்கிறது. சரி தான். நல்ல சர்டிபிகேட் கிடைத்திருக்கிறது நல்லது மெஹசானா செய் திருக்கிறது. வாழ்த்துக்கள். பிளாஸ்பூர் சகோதரர்கள் வந்திருக்கிறார்களா?: அவர்களுக்கு வாழ்த்துக்கள் சம்பல்பூரிலிருந்து யாராவது வந்திருக்கிறார்களா? மிக குறைவாக வந்திருக்கிறார்கள். அவர்களுக்கும் வாழ்த்துக்கள். தைரியத்துடன் செய்திருக்கிறார்கள் வெற்றியும் அடைந்தார்கள் வெற்றிக்கு வாழ்த்துக்கள். நல்லது. இதெல்லாம் நடந்தது. இப்போது பாப்தாதா என்ன எதிர்பார்க்கின்றார்? எல்லா வர்க்கத்தினுடைய சேவை நடந்தது ஆனால் ஒவ்வொரு வர்க்கத்திலிருந்தும், யாரெல்லாம் ஆரம்பத் திலிருந்து கடைசிவரையிலும் செய்திருக்கிறார்களோ, பாப்தாதா எதிர் பார்த்தது என்ன? மைக் அழைத்து வர வேண்டும் என்று நம்பர் வாராக மைக்

(பிரசித்த பிரமுகர்) அழைத்து வந்திருந்தார்கள். எல்லோரும் சக்திசாலிகள் அல்ல, கொஞ்சப்பேர் மீடியமாக இருப்பவர்கள் ஆனால் இனி பாப்தாதா விரும்புவது இவ்வளவு நாட்கள் வர்க்க சேவை செய்தீர்கள். இவற்றில் ஒவ்வொரு ஜோனிலிருந்தும் ஐ.பி. எத்தனை பேர், வி.ஐ.பி. எத்தனை பேர் தயாராகியிருக்கிறார்கள். அதாவது இவர்களில் யாராவது, இந்த ஞானத்தை ஏற்றுக் கொள்கிறேன் என்று கூறியிருப்பவர்களாக இருக்க வேண்டும். மிக நல்ல காரியம் செய்கிறீர்கள் என்று வெறும் மகிமை மட்டும் செய்பவர்கள் அல்ல. இப்படி வேறு யாரும் செய்ய முடியாது என்று சொன்னாலும் போதாது, இந்த ஞானத்தை ஏற்றுக் கொள்கிறேன் என்று கூற வேண்டும். இப்படிப்பட்ட ஞானவான் குரூப்பை பாப்தாதா பார்க்க விரும்புகின்றார். தெளிவாகி விட்டதா? ஆகவே இந்த ஆண்டு கடைசியில், கடைசி குரூப்பிற்கான சமயம் வருமல்லவா? அப்போது இந்த ஞானத்தை ஏற்கிறேன் என்று சொல்லக்கூடிய ஐ.பி இருந்தாலும், அந்த குரூப்பை பாப்தாதா எதிரில் அழைத்து வர வேண்டும். அவர்கள் சேவை செய்யட்டும். அவர்களை சேவைக்கு நிமித்த மாக்கலாம். சரிதானா? இது வரக்கூடிய அடுத்த ஆண்டுக்கான ஹோம் ஒர்க் வர்க்க சேவை செய்பவர்களுக்கு, ஏனென்றால், ஏதாவதொரு வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் வந்து கொண்டு தான் இருக்கிறார்கள்.

ஜூரிஸ்ட் மற்றும் கல்ச்சுரல் விங் வந்திருக்கிறார்கள். நல்லது. எப்போது நாட்டியம், நாடகம் (கல்ச்சுரல் புரோகிராம்) செய்து காண்பிக்கின்றீர்களோ, அப்போது எதை நிரூபிக்கிறீர்கள்? எந்த ஒரு கல்ச்சுரல் புரோகிராம் செய்தாலும் உங்களுடைய நடத்தை, முகம் மற்றும் கர்மம் மூலமாக எந்த குணம் தெரிகிறது? இவர்கள் நல்ல குண சித்திர நடிகர்கள் என்பது தெரிகிறதா? ஆம் என்று சொல்கிறீர்களா? இல்லை என்று சொல்கிறீர்களா? ஆம் என்றால் கை அசைத்துக் காட்டுங்கள். இரண்டு இலக்ஷியங்களையும் வைக்கிறோம். ஏனென்றால் கல்ச்சுரல் புரோகிராம் எல்லோருமே செய்கிறார்கள் ஆனால் நீங்கள் புரோகிராம் செய்கிறீர்கள், அதில் வெறும் நடிப்பு மட்டுமல்ல, ஒழுக்கம், நீதி, நேர்மை அடங்கியிருப்பதாக புரோகிராம் இருக்க வேண்டும். இதனால் என்ன நடக்கும்? பார்ப்பவர்களுக்கு சகஜமாகவே ஆகர்ஷணம் ஏற்படும். அதாவது நாமும் அப்படி நடக்க வேண்டும் என்று நினைப்பார்கள். ஆகவே, இந்த விதி மூலம், ஏனென்றால், அநேகர்

ஞானம் கேட்க விரும்புவதில்லை. நேரடியான ஞானம் கேட்க மாட்டார்கள் ஆனால் உங்கள் நாட்டியப் புரோகிராம் மூலம், குணத்தைக் கற்றுக் கொள்வார்கள். இப்படிச் செய்து கொண்டிருக்கிறீர்கள். இனி, இன்னும் இலக்ஷியம் வைக்க வேண்டும். அதாவது புரோகிராம் பார்க்கின்றவர்களுக்கு, குறைந்தபட்சம் ஒழுக்க நெறியின் மதிப்பை உணர்ந்து, அதன்படி நடப்பது தான் நல்லது என்ற படிப்பினையாவது கிடைக்கட்டும், ஆகர்ஷணமும் இருக்க. வேண்டும். செய்யவும் வேண்டும். மற்றபடி நன்றாகவே செய்கிறீர்கள். எந்த ஒரு வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் செய்கிறார்களோ, பாப்தாதா ஒவ்வொரு வர்க்கத்தினருடைய புருஷாரத்தம் மற்றும் ரிசல்ட்டைப் பார்த்து மகிழ்ச்சியடைகின்றார். மேலும் இந்த வர்க்கத்தினருடைய சேவைக்குப் பிறகு அநேக சகோதரர்கள், சகோதரிகளுக்கு சேவை மைதானத்தில் முன்னே வருவதற்கான வாய்ப்புக் கிடைத்திருக்கிறது மேலும் நிறைய சேவை செய்து கொண்டுமிருக்கிறார்கள். ஆகையால், பாப்தாதாவுக்கு வர்க்க சேவை பிடித்தமானதாக இருக்கிறது. எல்லோரும் செய்து கொண்டிருக்கிறார்கள். சில சமயம் வர்க்கம், சில சமயம் வேறு சில வர்க்கத்தினர் வந்து கொண்டிருக்கிறார்கள், எல்லோரும் நன்றாக இருக்கின்றீர்களா? மிகவும் நன்றாக இருக்கிறீர்களா? அல்லது நன்றாக இருக்கிறீர்களா? மிகவும் நன்றாக இருக்கிறீர்கள்? தீவிர புருஷாரத்திகளா? புருஷாரத்திகளா? எப்படி இருக்கிறீர்கள்? நன்றாக நடந்து கொண்டிருக்கிறீர்களா? அல்லது பறந்து கொண்டிருக்கிறீர்களா? என்ன செய்யலாம்? இப்போது பறக்க வேண்டும் பறக்கும்படி செய்ய வேண்டும் நடக்கக்கூடிய நேரம் முடிந்து விட்டது அதாவது மாட்டு வண்டி சீசன் முடிந்து விட்டது. மோட்டார்கார்கள் வந்து விட்டன. ஆரம்பத்தில் மாட்டு வண்டியில் தான் சென்று கொண்டிருந்தனர். ஆகவே இப்போது நடந்து செல்லக்கூடிய நேரம் முடிந்து விட்டது. இப்போது பறக்க வேண்டும். நல்லது உட்காருங்கள்.

**ஜூரிஸ்ட் விங் (நீதித்துறை):** நல்லது. நல்ல, நல்லவர்கள் வந்திருக்கிறார்கள். வாழ்த்துக்கள். இப்போது இப்படி கொஞ்சம் நடை முறையில் நீதிபதி, வக்கீல்கள் இருக்கிறார்கள் அல்லவா, இவர்களில் பேச்சுத் திறமையுள்ளவர்கள் இருப்பார்கள் அல்லவா. இப்போது நீங்களும் கூட ஆன்மீகம் பற்றிய பேச்சுத் திறமையைக் காட்டுங்கள். இதன் மூலம் சாதாரண நீதிபதி, சாதாரண வக்கீல் அகிய இவர்களுக்கும்,

ஆன்மீக வாதிகளான நீதிபதி, ஆன்மீக வாதிகளான வக்கீல் ஆகியோருக்கிடையே உள்ள வித்தியாசம் தெரியட்டும். ஆகி விடும். பாப்தாதாவும் கேள்விபட்டார். கீதையின் பகவான் யார் என்பதைப் பற்றி யோசித்துக் கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். யோசியுங்கள். இதில் யாரையாவது நிமித்தமாக்க வேண்டியதிருக்கும். யாராவது நீதிபதியோ, தர்மாத்மாவோ, இப்படி இரண்டு குரூப்பிலும் (நீதிபதி, தர்மாத்மா) நான்கைந்து பேரை தயார் செய்யுங்கள். சேவையில், மைதானத்தில் வர வேண்டும். உங்களுக்குள் மீட்டிங் செய்யுங்கள். எல்லா நீதிபதிகளும் சேர்ந்து, கலந்து பேசி ஏதாவது பிளான் செய்வது பற்றி யோசியுங்கள். மேலும் தர்மாத்மாக்கள் இருக்கிறார்கள் இரு சாராரும் சேர்ந்து முடிவு செய்யுங்கள். பிறகு ஏதாவது செய்ய முடியும், ஆகி விடும். ஆகத்தான் வேண்டும். யாரெல்லாம் வந்திருக்கிறீர்களோ, அவர்களுக்கெல்லாம் கூட விசேஷமான வாழ்த்துக்கள்.

டபுள் விதேஷி நிறைய பேர் வந்திருக்கிறார்கள். டபுள் விதேஷிகளோ, சாந்திவன் மற்றும் மதுபன் இரண்டுக்கும் விசேஷமான அலங்காரம். பாப்தாதா பார்க்கின்றார். ஒவ்வொரு குழந்தையும் விசேஷமாக டபுள் ஹீரோ. இரத்தினமும் கூட மற்றும் ஹீரோ பார்ட் செய்பவர்களாகவும் இருக்கின்றார்கள். ஆதலால் ஒவ்வொரு விதேஷியும் டபுள் ஹீரோ. பாருங்கள் எத்தனை தேசங்களில், அங்கேயே தயாராகி, அங்கேயே சேவை செய்கிறார்கள். கேட்டீர்கள் அல்லவா? எத்தனை நாடுகளிலிருந்து வந்திருக்கிறார்கள். (45-நாடுகள்) நல்லது. 45-நாடுகளிலிருந்தும் வந்திருப்பவர்கள் கை உயர்த்துங்கள் யார், யார் வெவ்வேறு நாடுகளிலிருந்து வந்திருக்கிறீர்களோ, அவர்களில் ஒவ்வொருவர் கை, உயர்த்துங்கள். மேலும் அங்கேயே சேவை செய்கிறார்கள். சிறு குழந்தையும் கூட கை அசைக்கின்றது. வாழ்த்துக்கள். 45-நாடுகளுக்கும் பதமாபதம் வாழ்த்துக்கள். சிறு குழந்தைகளுக்கான ரிட்ரீட் நடக்கிறது. இந்த குழந்தைகளினுடைய குரூப்பைப் பாருங்கள். இவர்கள் எல்லோரும் எவ்வளவு நன்றாக இருக்கிறார்கள்! எத்தனை நாடுகளிலிருந்து குழந்தைகள் வந்திருக்கின்றனர். 15-நாடுகளிலிருந்து 28-குழந்தைகள் வந்திருக்கின்றனர். பாட்டு பாடுங்கள். குழந்தைகள் பாடிக்காட்டினர். ("நான் பாபாவுக்காக, பாபா எனக்காக...") நல்லது. எல்லாக் குழந்தைகளும் அமிர்தவேளை செய்கிறீர்களா? எந்தக் குழந்தைகள்

அமிர்தவேளை செய்கிறார்களோ, அவர்கள் கை உயர்த்துங்கள். சிற்சில சமயம் செய்பவர்கள் கை உயர்த்துங்கள். சிற்சில சமயம் செய்பவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். நல்லது. சண்டை சச்சரவு செய்கிறீர்களா? யார் சண்டை இடுவதில்லை. அவர்கள் கை உயர்த்துங்கள். இனி இங்கிருந்து சென்ற பிறகு சண்டை செய்யக் கூடாது. ஏனெனில், பிரம்மா குமாரர்கள் அல்லவா? ஆகவே பிரம்மா குமார், "நான் பாபாவுக்காக, பாபா எனக்காக" என்று சொன்னால் சண்டை செய்யக் கூடாது. இல்லாவிட்டால் பாபா எனக்காக என்பது இருக்காது. இனி மேல் சண்டை இடுவீர்களா? இப்போது பரிவர்த்தனை செய்வீர்கள். இப்போது டீச்சர்கள், இவர்கள் சண்டைசெய்கிறார்களா? இல்லையா? என்பது பற்றி ரிப்போர்ட் கொடுக்க வேண்டும். மற்றபடி வாழ்த்துக்கள். நல்லது என்றாலும் நல்ல புருஷாரத்தம் செய்திருக்கிறார்கள். ஆதலால் பதம் குணா வாழ்த்துக்கள்

வெளிநாட்டின் யூத் குரூப் வந்திருக்கிறார்கள். சகோதரர் பாபாவின் சைன்போர்டு காண்பிக்கின்றார். மிகவும் நல்லது. கை தட்டுங்கள் ரிசல்ட் பார்க்கும்போது, யூத் குரூப் புருஷாரத்தத்தில் மிக ஆழமான இரகஸ்யங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று பாப்தாதா கேள்விப்பட்டார். புருஷாரத்தத்தில் யாரெல்லாம் சூட்சுமத்தில் சென்றிருக்கிறார்கள் என்றால் சதா புருஷாரத்தத்தில் மேலும், மேலும் முன்னேறிக் கொண்டே இருக்க வேண்டும். பின் தங்கி விடக்கூடாது. முன்னேறிக் கொண்டே இருக்க வேண்டும். மேலும் பறந்து கொண்டே இருக்க வேண்டும். வாழ்த்துக்கள். வாழ்த்துக்கள். நல்லது.

தாதி ஜானகி அவர்கள் பாப்தாதாவிடம் கேட்டார், உலகத்திலுள்ள கோடிக்கணக்கான ஆத்மாக்களுக்கு இந்த ஆண்டில் செய்தி எப்படிக் கிடைக்கச் செய்வது? மேரா பாபா! என்ற அனுபவம் எப்படி ஆகும்? இதற்காக என்ன பிளான் செய்ய வேண்டும். இதற்காக ஒரு குரூப் தயார் செய்யுங்கள். இந்த விஷயத்தைப் பற்றிச் சிந்திக்கக்கூடிய ஒரு சிறு குரூப் தயார் செய்யுங்கள். ஏனெனில் விதி ஏற்கனவே சொல்லியாகி விட்டது. ஒவ்வொருவரும், மனசா சங்கல்பம் மூலமாகவோ, விருத்தி வைப்ரேஷன் மூலமாகவோ, வாணி மூலமாகவோ, சம்மந்தம் தொடர்பு மூலமாகவோ நடத்தை, முகம் மூலமாகவோ, செய்த சேவையின் ரிசல்ட் ஒரு முழு நாளில் என்னவாக இருந்தது என்பதைப் பற்றி குறிப்பு

எழுத வேண்டும். பிறகு ஒரு குரூப் தயார் செய்யுங்கள். அதாவது சேவை செய்யாமல் இருக்க முடியாது என்று நினைப்பவர்கள். இவர்களைப் பார்த்து மற்றவர்கள் பின்பற்றுவார்கள் ஆனால் சுய ஸ்திதி மற்றும் சேவை ஸ்திதியில் பேலன்ஸ் இருக்க வேண்டும். இதனால் சேவை அதிகமாகும். மேலும் மற்றவர்களுக்கும் ஆர்வம் உண்டாகும். இவர்கள் பேலன்ஸாக இருக்கிறார்கள் என்றும் சேவை மட்டும் செய்பவர்களாயிருந்தால், இவர்கள் பேசுபவர்கள் என்று சொல்கிறார்கள் ஆனால், சுய ஸ்திதி மற்றும் சேவைக்கான விதி மூலம் சேவை செய்வோம் என்று தானாகவே முன் வரக்கூடியவர்களின் ஒரு குரூப் தயார் செய்யுங்கள். உதாரணமாக முன்மாதிரியாக இருக்கக்கூடிய ஒரு குரூப் தயாரானால், சொல்வது போல, ஒரு விளக்கு மூலம் தீபாவளி ஆகி விடும். இதுபோல ஒரு குரூப் மூலம் விருத்தியாகிக் கொண்டே இருக்கும். நல்லது.

எல்லோருக்கும் இந்த ஆண்டுக்கான ஹோம் ஒர்க் ஞாபகத்தில் இருக்கிறதல்லவா? பாப்தாதா கூறினார். அல்லவா? இந்த ஆண்டு எதற்கு விடை கொடுக்க வேண்டும். மேலும் வாழ்த்துக்களை அளிக்க வேண்டும் என்பது நினைவில் இருக்கிறதல்லவா? இப்போது பாப்தாதா ஒரு மாத ரிசல்ட் பார்க்க விரும்புகின்றார். இங்கே, இத்தனை சதவிகிதம் சேவை செய்தோம் என்று எழுதினால் மட்டும் போதும். 40-சதவிகிதம், 50-சதவிகிதம், 20-சதவிகிதம், 10-சதவிகிதம் என்று சதவிகிதம் மட்டும் எழுதினால் போதும் வெறும் நீளமாக இப்படி, அப்படி என்று எழுத வேண்டாம். பிறகு பாப்தாதா முதல் நம்பரில் இருப்பவர்களுக்கு பரிசு கொடுப்பார் ஆனால் ஸ்வ மற்றும் சேவையில் பேலன்ஸ். திருப்தி மற்றும் மகிழ்ச்சிக்கிடையேயான பேலன்ஸ். (சந்துஷ்டத்தா, பிரசன்னத்தா) சரி. எல்லோரும் ரிசல்ட் எழுதுவார்கள். சதவிகிதம் மட்டும் எழுத வேண்டும். மீட்டி தாதி, யோகயுக்த் தாதி... நீளமாக எழுத வேண்டாம். சதவிகிதம் மட்டும் எழுதினால் போதும். ஏனெனில் படிப்பதற்கு நேரம் இருக்காது. பிறகு பரிசு கொடுப்பேன். முழு பிராமண பரிவாரத்தில் நம்பர்-1 யார் வருகிறார்களோ. அவர்களுக்கு பாப்தாதா பரிசு கொடுப்பார். ஒரு மாத ரிசல்ட். ஒரு மாதம் சீசன் நடக்கவிருக்கிறது. சரிதானா? பிடித்திருக்கிறதா? புரிந்து கொண்டீர்களா? மாதாக்கள் புரிந்து கொண்டார்களா? டீச்சர்கள் புரிந்து

கொண்டார்களா? பின்னால் இருப்பவர்கள் புரிந்து கொண்டீர்களா? பின்னால் இருப்பவர்கள் கை உயர்த்துங்கள். நல்லது.

இப்போது நாலா பக்கங்களிலுமுள்ள எல்லா நவயுகத்தின் மாலிக் குழந்தைகளுக்கு, நாலா பக்கமுமுள்ள புத் தாண்டைக் கொண்டாடும் ஆர்வமும், உற்சாகமுள்ள குழந்தைகளுக்கு சதா பறந்து கொண்டே இருக்க வேண்டும் மேலும் பறக்கச் செய்து கொண்டே இருக்க வேண்டும். இப்படிப்பட்ட பறக்கும் கலையிலுள்ள குழந்தைகளுக்கு சதா தீவிர புருவாரத்தம் மூலம் விஜய மாலையில் மணியாக ஆகக்கூடிய விஜியி ரத்தினங்களுக்கு பாப்தாதாவின் புத்தாண்டு மற்றும் புது யுகத்திற்கான ஆசிகள் அத்துடன் ஆயிரம் மடங்கு (பதம் குணா) ஆசிகளை தாம்பாளத்தில் நிரப்பி, வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள், ஒரு கை அசைத்து மகிழ்ச்சியைத் தெரிவியுங்கள்.

இனி என்ன செய்ய வேண்டும்? தாதிஜியுடன்: உடல் நலம் எப்படி இருந்தாலும், மிக நன்றாக சமாளித்துக் கொண்டிருக்கிறீர்கள். நன்றாக சமாளிக்கிறீர்கள். தாதிகளாகிய உங்களுடைய ஒற்றுமை, முகம், நடத்தையைப் பார்த்து எல்லோருடைய பரிபாலனம் நடக்கிறது. தந்தை ஆரம்ப நாள் முதலே, துணையாக கூடவே இருக்கின்றார். இருந்து கொண்டேயிருக்கின்றார். நல்லது. ஜானகி தாதியுடன் -வெளிநாடு நன்றாக இருக்கிறதா? ஒன்றும் பெரிய விஷயமில்லை. எல்லாம் சரியாகி விடும்.

இராஜஸ்தான் டீச்சர்கள்: யார் வந்திருக்கிறார்களோ அவர்கள் எழுந்திருங்கள். மூன்று சகோதரிகள் வந்துள்ளனர். திரிமூர்த்தி வந்திருக்கின்றனர். சகஜமாகி விட்டதல்லவா? சகஜமாக நடந்ததா? தைரியம் ஆதிகமாகி விட்டது. இப்போது ரெம்ப கஷ்டம் என்று சொல்ல மாட்டீர்கள். இப்போது 10-மடங்கு செய்ய வேண்டும். 10-மடங்கு செய்து காண்பிக்க வேண்டும். இராஜஸ்தான், ஃபரிஷ்தான். இராஜஸ்தானை ஃபரிஸ்தானாக ஆக்கத்தான் வேண்டும். ஆதலால் தைரியத்துடன் முன்னேறிக் கொண்டே இருங்கள். இனி சப்தம் நாலா பக்கமும் பரவச் செய்ய வேண்டும். இப் போது சப்தம் பரவச் செய்திருக்கிறீர்கள். இனி எந்தெந்த வி.ஜ.பி.களின் முகவரி இருக்கிறதோ, அவர்களை சிநேக மிலனில் அழையுங்கள். இப்போது இரும்பு சூடாக இருக்கிறது. இதை

என்ன செய்ய வேண்டுமோ அப்படிச் செய்து விடலாம். அதாவது ஜெய்ப்பூருக்கு அருகாமையிலுள்ள ஒவ்வொரு இடத்திலும் அவர்களை அழைத்து சிநேக மிலன் நடத்த வேண்டும். இதேபோல இராஜஸ்தான் முழுவதிலும் அவ்வப்போது சிநேக மிலன் நடத்துங்கள். பிரம்மா போஜன் அருந்தச் செய்யுங்கள். பிராமணர்களுக்கும் வைக்கத்தான் வேண்டும் என்றாலும் வி.ஐ.பி.க்களுக்கு வையுங்கள். ஐ.பி.க்களை உற்சாகப்படுத்தி விட்டீர்.களானால், இராஜஸ்தான் முன்னேறி விடும். மற்றபடி நன்றாகவே செய்தீர்கள். வாழ்த்துக்கள். சகஜமாக ஆகி விட்டது. வாழ்த்துக்கள். (பாபாவுக்கு முபாரக்) தாதிகளுக்கு வாழ்த்துக்களைத் தெரிவியுங்கள். நன்றாகச் செய்து விட்டீர்கள். இப்படி எல்லோரும் சேர்ந்து செய்ய வேண்டும். இந்த ஆண்டில் இரண்டு, மூன்று புரோகிரோம் செய்யுங்கள். ஒன்று இவர்கள் செய்யட்டும். இன்னொன்று அவர்கள் செய்யட்டும் அப்படி. நல்லது.

**நிர்மல் சாந்தா தாதியுடன்:** உங்களுடைய முகம் அழகாக இருக்கிறது. நோயாளியைப் போல தெரியவில்லை. நான் நோயாளியா என்ன? நன்றாக இருக்கிறேன். மிகவும் நல்லது.

ருக்மணி சகோதரியுடன்: இவர்களும் கூட மிக நன்றாக முயற்சி எடுத்துக் கொள்கிறார்கள். களைப்பு அடைந்து விடவில்லை தானே! மனப்பூர்வமாக சேவை செய்தீர்கள். இதற்கு வாழ்த்துக்கள். வாழ்த்துக்கள்

**இரவு 12-மணிக்குப் பின் பாப்தாதா எல்லாக் குழந்தைகளுக்கும் புத்தாண்டிற்கான (2005) ஆண்டுக்கான வாழ்த்துக்களை அளித்தார்!** நாலா பக்கங்களிலுமுள்ள எல்லா பிரியமான, செல்ல மான, மன சிம்மாசனத்தின் அதிகாரிகளான, சுய இராஜ்ய அதிகாரிகளான குழந்தைகளுக்கு புத்தாண்டு மற்றும் புது யுகத்திற்கான வாழ்த்துக்கள். வாழ்த்துக்கள். சதா இந்த ஆண்டு எல்லோருக்கும் வாழ்த்துக்களைத் தெரிவிக்க வேண்டும். மேலும் வாழ்த்துக்களைப் பெறவும் வேண்டும். இதே இலக்ஷியத்தோடு, இலக்ஷணத்தை தாரணை செய்து பறந்து கொண்டே இருக்க வேண்டும். பறக்கச் செய்து கொண்டே இருக்க வேண்டும். வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்! வாழ்த்துக்கள்!!

✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺✺
✺✺✺✺✺✺✺✺

ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

பொருளடக்கம்

☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂☂
☂☂☂☂☂☂☂